# இந்திய மொழிகள் – ஓர் அறிமுகம்

முனைவர் இரா. முரளிதரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

UG 7253

# இந்திய மொழிகள்-ஓர் அறிமுகம்

ஆசிரியர்

முனைவர் இரா, முரளிதரன்
பேராசிரியர்,
மொழியியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்.
தஞ்சாவூர் 613 001

ISBN : 978-81-7090-476-2

SARASWATHI MAHAL LIBRARY SOCIETY THANJAVUR
07 FEB 2019

**தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு எண் : 433**

நூல் : இந்திய மொழிகள் - ஓர் அறிமுகம்

ஆசிரியர் : முனைவர் இரா. முரளிதரன்

மொழி : தமிழ்

பொருள் : மொழிகள்

பதிப்பு : முதற் பதிப்பு-2017 (ஆவணி)

பக்கம் : 220

தாள் : டிஎன்.பி.எல்.மேப்லித்தோ 18. 6 கிலோ

அளவு : டெம்மி 1/8

நூற்கட்டு : சாதாக் கட்டு

விலை : **ரூ. 250-00**

படிகள் : 500

வெளியீடு : தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**முனைவர் க. பாஸ்கரன்**
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

**தொலைபேசி**
அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
நிகரி : 04362-226159

# அணிந்துரை

பூக்களின் வண்ணங்களும் வடிவங்களும் மாறுபட்டிருப்பினும் தோட்டத்துக்குள் அணி வகுக்கும்போது அவற்றன் மணமும நிறமும் ஒன்றையொன்று இயைந்து ஈர்ப்பதுபோல மொழியாலும், பேச்சாலும், பழக்க வழக்கங்களாலும் மாறுபட்டு விளங்கிடினும் புரிந்துணர்வில், தோழமையுணர்வில் ஒரே நாடு என்ற குடையின்கீழ் மொழியெல்லாம் மனிதத்தை உணர்த்தி நிற்பதை வெளிப்படுத்தும் பெருமைமிக்க நாடாக நம் இந்தியத் திருநாடு விளங்குகிறது. மாநிலத்துக்கு மாநிலம் தாய்மொழியென ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ள மொழிகள் உரிய மக்களால் ஏற்றிப் போற்றிக்கொள்ளப்பெறும் நிலை அவர்கள் தங்களது மொழிமேல் கொண்டுள்ள ஆழமான அன்பினை வெளிப்படுத்தி நின்றாலும் நாடு என்றாகும் நிலையில் அனைத்து மொழியுணர்வும் ஒன்றாகி ஒலிப்பதையும் பெருமிதத்தோடே குறிப்பிட இயலும். அவ்வகையில் அனைத்து மொழிகள் குறித்த பார்வை இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும் எனலாம்.

செவ்வியல் பண்புடைய மொழிகளுள் தமிழ் மொழியானது இலக்கணத்தாலும், இலக்கிய வடிவங்களாலும் முத்தமிழ்க் கலைக்கூறுகளாலும் தனித்துவம் பெற்று விளங்கி வரும் நிலையும் சிறப்புக்குரியதாகும். எனினும், வழக்கொழிந்த பல மொழிகள் குறித்து பலரும் அறியாத நிலையில் அவற்றை மீட்டுருவாக்கம் செய்யத்தக்க முயற்சிகள் குறித்த ஆக்கமான கருத்துக்களும் பல்வேறு தளங்களில் ஆராயப்பட வேண்டும். 'இந்திய மொழிகள்-ஓர் அறிமுகம்' எனும் இந்நூல்வழி வளமான மொழிகள் முதல் அறியப்படாத மொழிகள் வரைப் பல மொழிகளையும் பன்முக நிலையில் அறிமுகம் செய்யும் முயற்சியினை நூலாசிரியர் முனைவர் இரா. முரளிதரன் மேற்கொண்டுள்ளார்.

இதுபோன்ற முயற்சி தொடர வேண்டுமெனவும் எஞ்சியுள்ள இந்திய மொழிகள் குறித்த தகவல்களை அறிமுகப்படுத்த வேண்டுமெனவும் வேண்டி நூலாசிரியருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

07.09.2017
தஞ்சாவூர்.

க. பாஸ்கரன்

# நன்றியுரை

இந்திய நாட்டில் பல்வேறு மொழிகள் வழக்கில் உள்ளன. இவற்றுள் பழமையானவை சில, இலக்கியம் கண்டவை சில, இலக்கியம் காணாதவை பல. இந்நிலையில் இந்திய நாட்டு மொழிகளைப பற்றிப் பலர் பேசக் காணலாம். இன்றைய உலகில் மூவாயிரத்திற்கும் அதிகமான மொழிகள் காணப்படுகின்றன என மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் குறிப்பாக 22 மொழிகளை விரிவாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும் என்ற எண்ணம் என் இதயத்தின் அடித்தளத்தில் உருவாகியது. இவ்வெண்ணத்தின் வெளிப்பாடுதான் **'இந்திய மொழிகள்-ஓர் அறிமுகம்'** என்ற நூல். இந்திய மொழிகளில் குறிப்பாக அட்டவணைப்படுத்தப்பட்ட 22 மொழிகளைப் பலரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த நூல் ஆக்கம் பெற்றுள்ளது. மாணவர்களும் தமிழ் ஆர்வலர்களும் பயன்பெறும் வண்ணம் எளிமையாகவும் அரசியல் சட்டப்படி அட்டவணைப்படுத்தப்பட்ட இந்திய மொழிகள் இருபத்திரண்டின் இயல்புகள் இந்த நூலில் விளக்கப்படுகின்றன.

இந்நூல் உருவாவதற்கு முதல் காரணமான மாண்பமை துணைவேந்தர் **முனைவர் க. பாஸ்கரன்** அவர்களுக்கும் பதிவாளர் **முனைவர் ச. முத்துக்குமார்** அவர்களுக்கும் இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக நிதியுதவி நல்கிய தமிழக அரசுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இப்பணிக்குத் துணை புரிந்த நூல்கள் பல. இவை கிடைப்பதற்குத் துணைபுரிந்த நூல் நிலையங்கள் சில. வேண்டும்பொழுதெல்லாம் நூல்களைத் தந்துதவிய அனைவருக்கும் என் நன்றி. இந்த நூல் அச்சாக்கத்திற்கு உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர் முனைவர் க. இரவீந்திரன் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலினைத் தட்டச்சு செய்துதவிய திரு கோ. நடராசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

மேலும். இந்நூலுக்கான மேலட்டையினை வடிவமைப்பு செய்துதவிய திரு ச. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. முரளிதரன்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | என்னுரை | ... | 6 |
| 1. | அசாமி | ... | 11 |
| 2. | வங்காளம் (பெங்காலி) | ... | 22 |
| 3. | போடோ | ... | 33 |
| 4. | தோக்ரி | ... | 36 |
| 5. | குஜராத்தி | ... | 41 |
| 6. | இந்தி | ... | 50 |
| 7. | கன்னடம் | ... | 59 |
| 8. | காஷ்மீரி | ... | 75 |
| 9. | கொங்கணி | ... | 80 |
| 10. | மைதிலி | ... | 92 |
| 11. | மலையாளம் | ... | 100 |
| 12. | மணிப்புரி | ... | 113 |
| 13. | மராத்தி | ... | 120 |
| 14. | நேபாளி | ... | 131 |
| 15. | ஒரியா | ... | 139 |
| 16. | பஞ்சாபி | ... | 145 |
| 17. | சமகிருதம் | ... | 154 |
| 18. | சந்தாலி | ... | 167 |
| 19. | சிந்தி | ... | 172 |
| 20. | தமிழ் | ... | 179 |
| 21. | தெலுங்கு | ... | 198 |
| 22. | உருது | ... | 209 |
| | துணைநூற்பட்டியல் | ... | 218 |

# என்னுரை

பாருக்குள்ளே நல்ல நாடாம் நம் பாரத நாட்டில் எண்ணங்கள் பலவாயினும், வண்ணங்கள் பலவாயினும், மொழிகள் பலவாயினும் அனைவரும் இந்தியர் என்பதில் பெருமிதம் கொண்டு இணைந்து உலகு வியக்கும் பல சாதனைகளைப் புரிந்துவருவது நம் பாரத நாடாகும்.

இப்பாரத மண்ணில் எத்தனை எத்தனையோ சமயங்கள், அச்சமயங்களின் சங்கமங்கள், எத்தனையோ மக்கள் வகைகள், அவர்களின் சங்கமங்கள் போலவே எத்தனையோ மொழிகள், அம்மொழிகளின் சங்கமமாய் பலப்பல கிளைமொழிகள், பெரு மொழிகள், சின்னஞ்சிறு மொழிகள் எனப் பல்வேறு வகைகளைக் கொண்டு மொழிகளின் காட்சிசாலையாய்த் திகழ்கிறது.

1981ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 1600க்கும் அதிகமான மொழிகள் உள்ளன என்றும், இவற்றுள் 300க்கும் அதிகமான மொழிகள் சந்தேகத்திற்கு உரியவையாகவும், 52 மொழிகள் இந்திய மொழிகளே அல்லன என்றும் கருதும் மொழியியலாளர்களின் கருத்துப்படி 1302 மொழிகள் உள்ளன என்பர். இவ்வாறு சிறந்த மொழிகளைத் தன்னகத்தே கொண்டதோடு சீர்மிகு செம்மையான செவ்வியல் மொழிகளான சம கிருதம், தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைத் தன்னகத்தே கொண்டு வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத பெருமையையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

சம கிருத மொழி கிரீக், இலத்தீன், ஹீப்ரு ஆகிய செவ்வியல் மொழிகளுடன் வைத்து எண்ணப்படுவது; இருப்பினும், அவற்றைவிட சிறந்த மொழியாகவும் கருதப்படுகிறது. பழமையிலும் இலக்கிய இலக்கண பரிமாணங்களிலும் இதேபோன்று இன்னோரன்ன பிறவற்றிலும் செவ்வியல் மொழிகளைவிட முன்னிற்பது சம கிருதமே ஆகும்.

மற்றொரு செவ்வியல் மொழியான தமிழ்மொழி செவ்வியல் மொழிக்குரிய எல்லா பண்புகளையும் தன்னகத்தே கொண்டு வாழையடி வாழையாகச் சீர்மிகு சிறப்போடு 2500 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் மொழி. சிறந்த இலக்கியங்கள், செம்மையான இலக்கணங்கள்

பெரும் காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் எனப் பழமையான இலக்கியங்களைப் பெற்ற மொழி. இலத்தீன், சம கிருதம் போன்ற மொழிகளைப் போலன்றி நிலைத்து நின்று இறவாப் புகழுடன் இன்றும் மக்கள் வாழ்வில் தவழ்ந்து எண்ணத்திலும் உணர்விலும் கலந்து வாழும் மொழியாகத் திகழ்கிறது.

திராவிட மொழிக் குடும்பத்தின் இலக்கிய மொழிகளில் ஒன்றான கன்னடமொழி கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலேயே பண்பட்டதொரு மொழியாக இருந்துள்ளது. இம்மொழிப் பற்றிய குறிப்புகள் கிறி து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே காணமுடிகிறது. தற்போது செவ்வியல் மொழி அந்த தும் கிடைக்கப் பெற்றுள்ளது.

தமிழ்மொழியின் கிளைமொழி எனப்படும் மலையாளம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் நன்கு வளர்ச்சியடைந்த மொழியாயிற்று. 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் வரவால் மேலும் வளர்ந்தது. குறுகிய நூற்றாண்டுகளிலேயே தனக்கென தனி அடையாளத்தோடு படைப்புகள் பல கண்டு தனித்தொரு மொழியாக மலையாளம் விளங்குகிறது.

திராவிட மொழிகளில் தெலுங்கு மொழிக்குச் சிறந்த இடமுண்டு. இந்தியாவில் இந்திக்கு அடுத்தபடியாக இது பேசப் படுகின்றது. இம்மொழியின் இனிமையைக் கூறவிழைந்த பாரதி ‘சுந்தரத் தெலுங்கு’ என்றும், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை ‘கன்னடமும் களிதெலுங்கும்’ என்றும் குறிப்பிடுகின்றார். கன்னட மொழியைத் தொடர்ந்து தெலுங்கு மொழியும் செவ்வியல் மொழி அந்த தினைப் பெற்றுள்ளது சிறப்புக்குரியது.

அசாமி மொழியானது அசாம் மாநிலத்தின் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் உள்ளது. பிராகிருத மொழிகளிலிருந்து கிளைத்து வந்த மொழிகளுள் இதுவும் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது.

இந்தி மொழி சுமார் ஆயிரம் ஆண்டு பழமையினை உடையது. இந்தியாவின் அதிகமான இடங்களில் பேசப்படுவதோடு மத்திய அரசின் ஆட்சி மொழியாகவும், அரசியல் மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. பல்வேறு மொழிச் சொற்கள் இதில் கலந்து விளங்குவதால் ‘இந்தி நவீன கலப்புப் பொதுமொழி’ என டி.டி.கோசம்பி கூறுகிறார்.

உருது மொழி, இது கரிபோலியிலிருந்து உருவானது. இம்மொழியில் பெர்சியன் மொழியின் தாக்கம் உள்ளது. பெர்சியன் அராபிக் எழுத்தால் எழுதப்படும் இம்மொழி சிறந்த இலக்கியங்களை

தன்னகத்தே கொண்டுள்ளது. இந்திக்கும் உருதுக்கும் பெரிய அளவில் வித்தியாசம் இல்லை. எனினும் 1800க்குப் பின்னரே இம்மொழி உருது என்று அழைக்கப்பட்டது.

ஒரியா மொழி ஒரிசா மாநிலத்தின் ஆட்சிமொழி. இம்மொழி ஓட்ரி என்றும் உத்கலீ என்றும் அழைக்கப்படுகிறது. இது பிராகிருத மொழிகளுள் ஒன்றான மகதி மொழியிலிருந்து உருவானது.

கொங்கனி மொழி மராத்தியின் ஒரு வகை ஆகும். இரண்டிற்கும் பொதுவான மொழி பிராகிருதம் ஆகும். இருப்பினும் இரண்டிற்கும் அதிகமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இம்மொழிக்கு தாமடீபன் எனும் ஆங்கிலேயர் முதல் இலக்கியத்தை எழுதினார். இம்மொழி தேவநாகரி, கன்னடம், உரோமன் ஆகிய மூன்று மொழி எழுத்துக்களாலும் எழுதப்பட்டு வருகிறது.

கிழக்கு மொழிகள் நேப்பாளி மொழி எனப்படுவன. இது நேப்பாள நாட்டு மொழியாகும். இதனைக் கா குரா என்றும் கோர்க்காலி என்றும் பர்பாத்தியா என்றும் அங்குள்ள மக்கள் அழைப்பர். நாட்டின் பெயரால் வந்த பெயர் நேபாளி.

குஜராத் மாநிலத்தில் வாழும் மக்களின் மொழி குஜராத்தி. இது சௌரசேனி பிராகிருதம் கௌர்ஜர அபபிரம்சம் என்ற இரண்டு மொழிகளின் சொற்கள் நிறைந்தது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலேயே இம்மொழி தனித்து வழங்கத் தொடங்கிற்று. குஜராத் எனும் மாநிலப் பெயர் ஏற்பட்டபின் இம்மொழி நன்கு வழங்கலாயிற்று.

மராத்தி மொழி இந்தியாவிலுள்ள பழமையான மொழிகளுள் ஒன்றாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இம்மொழி உருவாகிவிட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர். வர்காதி, தேசி, கொங்கணி என்னும் மும்மொழிகள் ஒன்றான மகர்ராஷ்டிரா மொழியிலிருந்து மராத்தி மொழி தோன்றியது. தொடக்கத்தில் மோடி எழுத்துக்களாலும் பின்னர் தேவநாகரி எழுத்துக்களாலும் எழுதப்பட்டது. தற்போது தேவநாகரி எழுத்தே நடைமுறையில் உள்ளது.

மணிப்புரி மொழி மணிப்பூர் மாநிலத்தின் முக்கிய மொழியாக உள்ளது. திபெத் பர்மிய மொழியின் கிளைமொழி இது. இம்மொழியில் படைப்பிலக்கியங்கள் குறைவாகவே இருந்தபோதிலும் மக்கள் பேச்சுவழக்கில் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

வங்காள மொழி மேற்கு வங்காளத்திலும், வங்காள தேசத்திலும் பேசப்படுகிறது. இவ்விரு இடங்களிலும் ஆட்சி மொழியாகவும், அலுவல் மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் இம்மொழி இருந்து

வருகிறது. வங்காள மொழி முதலில் குடில எழுத்துக்களால் எழுதப் பட்டது. காலப்போக்கில் அதிலிருந்து மாறி தேவநாகரி எழுத்துக்களை மேற்கொண்டு வளர்ந்துள்ளது.

சிந்து பகுதியில் பேசப்படும் மொழி சிந்தி. சிந்தி மாகாணத்தைச் சமாவம்ச அரசர்கள் ஆண்டபோது சிந்தி மொழி செல்வாக்கு அடைந்தது. அவர்களுக்குத் தாய் மொழியாகவும் இருந்துள்ளது. இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகால வரலாற்றுடைய மொழியாகச் சிந்தி மொழி வளர்ந்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் டோக்ரி என்ற இன மக்கள் தோக்ரி மொழியைப் பேசுகின்றனர். ஜம்மு காஷ்மீர் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தேசிய மொழிகள் ஏழனுள் இதுவும் ஒன்று. இது பழமையான மொழி. இந்திய மொழிகளில் இது புதுமையாகத் தெரிகிறது. 1969 இல் இது தேசிய அளவில் சாகித்ய அகாடமியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

போடோ மொழி திபெத் பர்மிய மொழியினங்களைச் சேர்ந்த கிளை மொழியாகும். இது இந்தியாவில் அசாம் மாநிலத்தில் அதிக அளவில் பேசப்பட்டு வருகிறது. பிரம்மபுத்திரா நதியின் வடக்குப் பகுதியில் வாழும் அசாமியர்கள் இதனைப் பேசிவருகின்றனர். அவர்களுக்கு இது பேச்சு மொழியாக மட்டுமே உள்ளது.

மைதிலி மொழி வடஇந்தியாவில் பேசப்படும் மொழிகளுள் குறிப்பிடத்தக்க மொழியாகும். இது பீகார் மாநிலத்தில் பேசப்படுகிறது. இம்மொழியின் இனமொழியாகப் பீகாரி கூறப்படுகிறது. மைதிலி பேசும் மக்கள் பீகார் மாநிலத்தில் மிதிலை பகுதியில் உள்ளனர்.

பஞ்சாபி மொழி ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி எனக் கூறுவர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டில்தான் இம்மொழி உருவானது என்ற கருத்து நிலவுகிறது. முகமதியர் படையெடுப்பினால் அதிகாரம் யாவும் அவர்கள் கையில் இருந்தன. அதனால் நாட்டை ஆளும் நோக்கில் இம்மொழிக்குச் சிறப்புச் செய்து மொழி வளரப் பாடுபட்டனர். இம்மொழி பேசும் மக்கள் சீக்கிய மதத்தைப் பின்பற்றினர். சீக்கிய குருமார்கள் பல இலக்கியங்களை இம்மொழியில் படைத்துள்ளனர்.

இந்திய அரசு தேசிய மொழிகளாக ஏற்றுக்கொண்ட 18 மொழிகளில் காஷ்மீரி மொழியும் ஒன்றாகும். இம்மொழி 'காசுர்' என்றும் அழைக்கப்படுகிறது. இது காஷ்மீர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பேசப்படுகிறது. ஆனால் இது காஷ்மீரில் ஆட்சி மொழியாகவோ, கல்வி மொழியாகவோ இல்லாமல் பேச்சு வழக்கில் மட்டும் உள்ளது.

சந்தாலி மொழி முண்டா மொழிகளில் முக்கிய மொழி. இது ஆ ட்ரோ ஆசியாடிக் குடும்பத்தைச் சேர்ந்தது. முண்டா மொழிகளில் எழுத்து மொழியாக இருப்பது சந்தாலி மொழி மட்டுமே ஆகும்.

மேற்கண்ட 22 மொழிகளும் இந்திய அரசியலமைப்புச் சட்ட 8ஆவது அட்டவணை மொழிகள் ஆகும். இம்மொழிகளை அனைவருக்கும் அறிமுகப் படுத்த வேண்டும் என்ற நோக்கில் (இதில் சில பலருக்கும் அறிமுகம் அல்லாத அறியப்படாத மொழிகள் உள்ளன) இம்மொழிகளைப் பற்றிய அறிமுகமாகப் பல தகவல்கள் இங்குத் திரட்டிக் கொணரப்பட்டுள்ளன. இம்முயற்சியைத் தொடர்ந்து இனிவரும் காலங்களில் எஞ்சியுள்ள இந்திய மொழிகளுக்கும் இது போன்றதொரு தகவல்களை அறிமுகப்படுத்தினால் அது அனைத்துத் துறைகளைச் சார்ந்த மாணவர்களுக்கும் அரிய தகவல்களை அளிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இரா.முரளிதரன்

## 1. அசாமி

| | |
|---|---|
| தாய்மொழியாகக் கொண்டோர் | : இந்தியா, பங்களாதேஷ் |
| பகுதி | : அசாம், அருணாச்சல பிரதேசம், நாகலாந்து, வடகிழக்கு இந்தியாவின் சில பகுதிகள், சிறு அளவில் புனே, மகாராஷ்டிரா, உத்திரப் பிரதேசம், டில்லி, பெங்களூர், கர்நாடகா, கொல்கத்தா, மேற்கு வங்காளம். |
| பேசப்படுவோர் எண்ணிக்கை | : 16 மில்லியன் (2007) |
| மொழிக் குடும்பம் | : இந்தோ ஐரோப்பிய<br>இந்தோ ஈரானிய<br>இந்தோ ஆரிய<br>கிழக்குப்பகுதி<br>பெங்காலி அசாமி<br>அசாமி |
| பேச்சுவழக்கு | : காம்ரூபி, கோல்பரியா |
| எழுத்துமுறை | : அசாமி எழுத்துமுறை, அசாமி ப்ரெய்லி |
| அலுவல்நிலை மொழி | : இந்தியா (அசாம்) |

அ ஸாமி அல்லது அஸாமியா ஒரு கிழக்கு இந்தோ ஆரிய மொழி. முக்கியமாக அசாமி மாநிலத்தில் பேசப்படுகிறது. இது அசாமின் அதிகாரப்பூர்வ மொழியாக உள்ளது. 13 மில்லியனுக்கும் அதிகமானோர் இம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இம்மொழி அருணாச்சலப் பிரதேசப் பகுதியிலும் மற்ற வடகிழக்குப் பகுதிகளிலும் பேசப்படுகிறது. நாகாமி , அசாமியைச் சேர்ந்த ஒரு கிரியோல் மொழி. இம்மொழி அதிகமாக நாகலாந்து பகுதிகளிலும், அசாமின் சில பகுதிகளிலும் பேசப்படுகிறது. நாஃபாமீ அசாமி சார்ந்த அருணாச்சலப் பிரதேசத்தில் பயன்படுவது ஆகும். அசாமி பேசுவோர் மிகக் குறைந்த அளவு பங்களாதேஷ் பகுதியில் உள்ளனர்.

மற்ற கிழக்கு இந்தோ ஆரிய மொழிகளுடன் இணைந்து அசாமி கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்கு முன் மகதி பிராகிருதத்திலிருந்து தோன்றியது. பின்னர் இது வளர்ச்சியடைந்து பலவிதமான வட்டார வழக்குகளாக உருவானது. இவை வேதிக் மற்றும் சம கிருதத்திலிருந்து மாறுபட்டு காணப்பட்டன. இதன் சகோதரி மொழிகளாகப் பெங்காலி,

ஒரியா, மைதிலி, சிட்டாகோனியன், சில்ஹெட்டி (கிளியோட்டி), ஆங்கிகா மற்றும் பிகாரி மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அசாமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. அசாமி எழுத்து இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் ஆங்கிலத்தைப் போன்றே எழுதப்படுகிறது. அனைத்து மெய்யெழுத்துக்களையும் ஒன்றுடன் ஒன்று இணைக்க முடியும். உயிர் எழுத்து ஒவ்வொன்றும் சுயாதீனமாகவோ அல்லது மெய்யெழுத்தையோ, மெய்யெழுத்துக் கொத்தையோ சார்ந்து இருக்கும்.

அசாமி என்ற வார்த்தை ஆங்கிலம் போன்ற ஒரே தத்துவத்தின் மீது அமைக்கப்பட்ட ஜப்பானிய அல்லது வியட்நாமை சேர்ந்தது. ஆங்கில வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட அசாமி வார்த்தை பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு மற்றும் அதனைச் சேர்ந்த பகுதியினரால் அறியப்படுகிறது. இந்த மக்கள் அந்த மாநிலத்தை 'ஆக்ஸம்' என்றும் மொழியை 'ஆக்ஸாமியா' என்றும் அழைத்தனர்.

**வரலாறு**

மகதி பிராகிருதம் பகுதிவாரியாக நான்கு அப்பப்ராம்ஸா வட்டார மொழியை தோற்றுவித்தது. அவை ராதா, வங்கா, காமரூபா மற்றும் வரேந்திரா. இந்த காமரூபா வட்டார மொழி கிழக்கிலிருந்து வடக்கு கங்கை மற்றும் வடக்கு வங்காளத்திலும் வடபெங்காலி மற்றும் அசாம் பள்ளத்தாக்கிலும் அசாமியர்களால் பரவியது.

இது பொதுவாக அசாமி மற்றும் கமடாபுரி வழக்கு ஆகியவை காமரூபா பேச்சு வழக்கு, கிழக்கு மகதி பிராகிருதம் மற்றும் அப்பபிராம்சா ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டதாக நம்பப்படுகிறது. இதனால் சில ஆசிரியர்கள் அசாமி மற்றும் மகதி பிராகிருதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். இந்தோ ஆரிய மொழிகளில் உள்ள காமரூபா ஏழாம் நூற்றாண்டில் பெங்கால் மற்றும் ஒரிசாவை வேறுபடுத்திக் காட்டியது. இந்த மாற்றங்கள் காரணமாக இந்தோ ஆரிய மொழி பேச்சாளர்கள் அல்லாத மக்கள் இம்மொழியை ஏற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இதற்கு ஆதாரம் பிராகிருதத்தினுடைய காமரூபா கல்வெட்டுகளில் காணப்படுகிறது. ஒரு முழுமை வாய்ந்த இலக்கிய வடிவம் 14 ஆம் நூற்றாண்டில் கமாட்டா அரசவையில் தோன்றியது. இதேபோல் மாதவ் கந்தாலியார் இராமாயணம் அசாமியில் (சப்தகாந்தா இராமாயணம்) கச்சாரி அரசரின் கிழக்கு அரசவையில் மொழிபெயர்க்கப் பட்டது. 15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டிலிருந்து பாடல்கள், நாடகங்கள், முதல் உரைநடை ஆகியவை உருவாயின. இலக்கிய மொழி அசாம் மேற்கு வட்டார மொழியை அடிப்படையாகக் கொண்டு 17 ஆம்

நூற்றாண்டில் அஹோம் அரசவைக்குச் சென்றது. பின்னர் இது மாநில மொழியானது. பலவிதமான உரைநடைகள் உருவாயின. கோ வாபி (2003 இன் படி) மத வாழ்க்கைப் பற்றிய உரைநடை, மந்திர தந்திரங்கள் பற்றிய உரைநடை, தொன்மையான உரைநடை, மருத்துவம், சோதிடம், கணிதம், நடனம், இசை, இலக்கிய மரபு உரைநடை மற்றும் அனைத்துத் தரப்படுத்தப்பட்ட உரைநடையும் சேர்க்கப்பட்டுள்ளன. இலக்கிய மொழி கிழக்கு மொழியாக வியாபிக்க வரும் நிலையில் பிரிட்டிஷ் அரசு அதன் நோக்கங்களுக்காக அதை ஏற்று 19 ஆம் நூற்றாண்டில் வழக்கமான இலக்கிய வடிவமாக அது மாறியது. அரசியல் மற்றும் வர்த்தக மையமாக இருபதாம் நூற்றாண்டின் மையப் பகுதியில் குவாஹாதி மாற்றப்பட்டு அதன் இலக்கிய வடிவம் தற்போது கிழக்குப் பகுதிக்கு மாற்றப் பட்டுள்ளது.

முற்றிலும் வேறுபட்ட அசாமி வகைகள் ஆரம்ப தொகுப்புகள் பதினான்காம் நூற்றாண்டில் இருக்கும் என்றாலும் முந்தைய மொழி நினைவுச் சின்னங்கள் காமரூபா அரசவையில் ஐந்திலிருந்து பனிரெண்டாம் நூற்றாண்டு வரை காணப்பட்டது. அசாமின் மொழி அம்சங்கள் 9 ஆம் நூற்றாண்டில் சேர்யபாதா என்ற புத்த வசனங்களால் அறியப்பட்டது. இது அப்பபிராம்சா காலத்தில் 1907 இல் நேபாளில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் ஆரம்ப தொகுப்புகள் 14 ஆம் நூற்றாண்டில் கமாட்டா அரசர் துர்லப்நாராயன், கேன் வம்சத்தினராலும், மேலும் சப்தகாந்தா இராமாயணம் மாதவ் கந்தாலி ஆகியோராலும் தொகுக்கப்பட்டது. சேர்யதபாதா காலத்தில் அசாமியில் சீன திபெத்திய மற்றும் ஆ ட்ரோ ஆசியாடிக் குடும்பத்தில் உள்ள வடகிழக்கு இந்தியா ஆகியவற்றிலும் மொழியின் குறிப்பிடத்தக்க பண்புகள் பகிர்ந்து காணப்பட்டன.

**ஒலியியல்**

அசாமியின் ஒலி அமைப்பு 8 உயிர் எழுத்துக்கள், பத்து ஒத்த ஓசையுடைய எழுத்துக்கள் மற்றும் 21 மெய்யெழுத்துக்களைக் கொண்டுள்ளது.

Vowels

| | Front | | | Central | | | Back | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | IPA | ROM | Script | IPA | ROM | Script | IPA | ROM | Script |
| Close | i | i | ই/ঈ | | | | u | u | উ/ঊ |
| Near-close | | | | | | | ʊ | ū | ও |
| Close-mid | e | e | এ' | | | | o | o | অ' |
| Open-mid | ɛ | ê | এ | | | | ɔ | ô | অ |
| Open | | | | a | a | আ | | | |

## மெய்யெழுத்துக்கள்

Consonants

| | | Labial | | | Alveolar | | | Velar | | | Glottal | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | IPA | ROM | Script | IPA | ROM | Script | IPA | ROM | Script | IPA | ROM | Script |
| Nasal | | m | m | ম | n | n | ন/ণ | ŋ | ng | ঙ/ং | | | |
| Stop | voiceless | p | p | প | t | t | ত/ট | k | k | ক | | | |
| | aspirated | pʰ | ph | ফ | tʰ | th | থ/ঠ | kʰ | kh | খ | | | |
| | voiced | b | b | ব | d | d | দ/ড | g | g | গ | | | |
| | murmured | bʱ | bh | ভ | dʱ | dh | ধ/ঢ | gʱ | gh | ঘ | | | |
| Fricative | voiceless | | | | s | s | চ/ছ | x | x | শ/ষ/স | ɦ | h | হ |
| | voiced | | | | z | z | জ/ঝ/য | | | | | | |
| Approximant | | w | w | ব | l, ɹ | l, r | ল, র | | | | | | |

**காற்று நிறுத்தங்கள்**

அசாமி ஒலியில் இந்தியக் குழு மொழிகளில் ஒரு சிறப்புத் தன்மை வாய்ந்த பல் வளைகிற வேறுபட்ட எழுத்தில் பற்றாக்குறை உள்ளது. வரலாற்று ரீதியாகப் பல் மற்றும் வளைகிற தொடர் காற்று நிறுத்தங்கள் இணைக்கப்பட்டன. அசாமி இந்திய மொழிகள் அல்லாத வடகிழக்கு இந்தியா (திபெத்திய சீன மற்றும் மன் கேமர் பகுதியிலிருந்து வந்தது) மொழிகள் போன்று காணப்படுகிறது. இது பெங்காலியுடன் சற்று ஒத்துக் காணப்படுகிறது.

**உரசொலி**

அசாமி மற்றும் சில்ஹெட் ஆகிய கிழக்கு இந்தோ ஆரிய மொழிகளுடன் முற்றிலுமாக /x/ அல்லது /x/ ஆகியவற்றில் மாறி காணப்படுகிறது. வரலாற்று ரீதியாக மியாசீறொலி /x/ மற்றும் /ന/ (ஆரம்பத்தில் அல்லது) காணப்படுகிறது. இவை கிழக்கு இந்தோ ஆரிய மொழிகள் மத்தியில் சாதாரணமாக இருக்கின்றன. சீறொலிகள் குறுக்கி உரசொலி தோன்றி அசாமி என்ற பெயரில் தெளிவாக உள்ளது. சில அசாமி ஒலி மாற்றம், பிரதிபலிப்பதில் < அக்ஸோமியா > அல்லது < ஆக்ஸோமிய > பதிலாக < மஸோமியா > அல்லது < அஸாமியா > என ஒலிகள் மாற்றப்பட்டு உச்சரிக்கப்படுகின்றன. உரசொலி குறைந்து மேற்கு கோல்பரியா வட்டார மொழி கிழக்குப் பகுதிகளிலும் குறைந்தே காணப்பட்டது.

**நாசி ஒலிகள்**

அசாமி மற்றும் பெங்காலி மாறாக மற்ற இந்தோ ஆரிய மொழிகளுடன் ஒப்பிடும்போது இவற்றில் நாசி ஒலிகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதிகமான மொழிகளில் இந்த நாசி ஒலிகள் அதிக அளவில் கட்டுப்படுத்தப் படுகின்றன. அசாமியிலும் அவ்வாறே உள்ளது. இருப்பினும் சொல் ஆரம்பத்தில் நாசி ஒலி காணப்படுவதில்லை.

**உயிர்மெய் சரக்கு**

கிழக்கு இந்திய மொழிகளான அசாமி, பெங்காலி, சில்ஹெட் மற்றும் ஒரியா ஆகியவற்றில் நீண்ட உயிர் காணப்படுவதில்லை. ஆனால் பரந்த உயிர்த் தொகுப்பு வட்டம் காணப்படுகிறது. அசாமியில் நான்கு பின் வளைவு வட்டங்கள் காணப்படுகின்றன. அதாவது, கோல செவிடு, கோலா கருப்பு, குலா மடியில், குலா காற்றாடி. இவ்வாறு இடை உயிர்க் குறியீடு இம்மொழியில் முக்கியமாகக் கருதப்படுகிறது.

**எழுத்து முறை**

நவீன அசாமி, அசாமி எழுத்து, வரலாற்று ரீதியில் காம்ரூபி எழுத்து, அதன் வம்சாவளியில் பண்டைய குப்தா எழுத்து ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இது மிகவும் நெருக்கமாக மைதிலியின் மைதிலக்ஷார் எழுத்து மற்றும் பெங்காலி எழுத்தைக் கொண்டுள்ளது. இது ஆரம்பகாலத்தில் ஒரு வலுவான இலக்கிய பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. எடுத்துக்காட்டாக இம்மொழியைப் பிரகடனங்கள், நிலமானியங்கள், இடைக்கால அரசர்களின் செப்புத் தகடுகள் ஆகியவற்றில் காணலாம். அசாமி அதன் சொந்த எழுத்தில் சான்ச்சி மரப் பட்டைகளில் மத நூல்கள் மற்றும் செய்திகள் எழுதப் பட்டிருந்தன. அசாமியின் இன்றைய எழுத்துமுறையில் உச்சரிப்பு காணப்படுவதில்லை. அசாமியின் இரண்டாவது அகராதியில் தரமான சம கிருதத்தின் அடிப்படையில் உச்சரிப்புகள் அறிமுகப்படுத்தப் பட்டன.

**உயிரெழுத்துகள்**



**மெய்யெழுத்துகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ক | খ | গ | ঘ | ঙ | চ | ছ | জ |
| kô | khô | gô | ghô | ngô | prôthôm sô | ditiyô sô | bôrgiyô zô |
| k | kh | g | gh | ng | s | sh | z |
| [k] | [$k^h$] | [g] | [$g^ɦ$] | [ŋ] | [s] | [sh] | [z] |
| ঝ | ঞ | ট | ঠ | ড | ঢ | ণ | ত |
| jhô | niô | murdhônyô tô | murdhônyô thô | murdhônyô dô | murdhônyô dhô | murdhônyô nô | dôntyô tô |
| zh | y | t | th | d | dh | n | t |
| [zh] | [j] | [ʈ] | [$ʈ^h$] | [ɖ] | [$ɖ^ɦ$] | [n] | [t̪] |
| থ | দ | ধ | ন | প | ফ | ব | ভ |
| ôntyô thô | dôntyô dô | dôntyô dhô | dôntyô nô | pô | phô | bô | bhô |
| th | d | dh | n | p | ph | b | bh |
| [$t^h$] | [d̪] | [$d̪^ɦ$] | [n] | [p] | [$p^h$] | [b] | [$b^ɦ$] |
| ম | য | ৰ | ল | ৱ | শ | ষ | স |
| mô | ôntôsthô zô | rô | lô | wô | talôibbô xô | murdhônyô xô | dôntyô xô |
| m | z | r | l | w | x/s | x/s | x/s |
| [m] | [z] | [ɹ] | [l] | [w] | [x~s] | [x~s] | [x~s] |
| হ | ক্ষ | ড় | ঢ় | য় | | | |
| [illegible] | khyô | dôre rô | dhôre rô | ôntôsthô yô | | | |

## உயிர்மெய் எழுத்துக்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ক্ক | ঙ্ক | ল্ক | ষ্ক | স্ফ | ঞ্খ | স্খ | ঙ্গ | ঙ্ঘ | দ্ঘ |
| kkô | ṅkô | lkô | ṣkô | sphô | ñkhô | skhô | ṅgô | ṅghô | dghô |
| শ্চ | চ্ছ | ঞ্ছ | ঞ্জ | জ্ঞ | ল্ট | ণ্ঠ | ষ্ঠ | ণ্ড | ষ্ণ |
| ścô | cchô | ñchô | ñjô | jñô | lṭô | ṇthô | ṣthô | ṇḍô | ṣṇô |
| হ্ন | ক্ষ্ণ | প্ত | স্ত | ক্ত | ঘ্ন | ম্ন | শ্ন | স্ন | হ্ন |
| hnô | kṇô | ptô | stô | ktô | gnô | mnô | śnô | snô | hnô |
| ত্থ | ন্থ | ষ্থ | ন্দ | ব্দ | ম্প | ল্প | ষ্প | স্প | ম্ফ |
| tthô | nthô | ṣthô | ndô | bdô | mpô | lpô | ṣpô | spô | mphô |
| ষ্ফ | দ্ব | ম্ব | হ্ব | দ্ভ | ম্ভ | ক্ম | দ্ম | হ্ম | ম্ম |
| ṣphô | dbô | mbô | hbô | dbhô | mbhô | kmô | dmô | hmô | mmô |

www.omniglot.com

## எண்கள்

**Numerals**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ০ | ১ | ২ | ৩ | ৪ | ৫ | ৬ | ৭ | ৮ | ৯ |
| শূণ্য | এক | দুই | তিনি | চাৰি | পাঁচ | ছয় | সাত | আঠ | ন |
| sũnya | ek | dui | tini | cāri | pāc | cay | xāt | āth | na |
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

## உருபனியல் மற்றும் இலக்கணம்

அசாமி மொழி பின்வரும் உருபனியல் அம்சங்களைக் கொண்டுள்ளது.

★ பாலினம் மற்றும் எண் இலக்கண முறையில் குறிக்கப்படவில்லை.

★ மூன்றாம் நபர் பிரதியில் பாலின வேறுபாடு கிடையாது.

★ செயல்படுபொருள் உள்ளவை செயல்படு பொருள் இல்லாதவற்றினின்று வேறுபடுத்திக் காட்டப்படுகிறது.

★ எழுவாய் வழக்கு தனியாகக் குறிக்கப்பட்டுக் காட்டப்படுகிறது.

★ உறவுமுறை பெயர்ச்சொற்கள் தனிப்பட்ட மறுபெயர்களைக் கொண்டு காட்டப்படுகின்றன.

★ வினை உரிச்சொல் வினை வேர்ச்சொற்களிலிருந்து வருகிறது.

★ செயப்பாட்டு வினை கட்டமைப்பு மரபு வழக்கை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.

**வட்டார மொழி**

அசாமில் பல வட்டார மொழிகள் உள்ளன. பனிகாந்த் காகாட்டி இரண்டு பெரிய வட்டார மொழிகளை அடையாளப் படுத்துகின்றார். அவை 1. கிழக்கு, 2. மேற்கு வட்டார மொழிகள்.

கிழக்கு வட்டார மொழிகள் ஒரே மாதிரியானவை. இது கௌகாத்தியில் எங்கும் பேசப்படுகிறது.

மேற்கு வட்டார மொழிகள் பலவகைப்பட்டவை. எனினும் சமீபத்திய மொழியியல் ஆய்வு கிழக்கிலிருந்து மேற்கு வரை நான்கு வட்டாரக் குழுக்கள் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளன. அவை

★ கிழக்குக் குழுவின் சிவசாகர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள பகுதி

★ மத்திய குழுவின் நாகாயான் சோனித்பூர் மாரிகான் மாவட்டம் மற்றும் அதைச் சார்ந்த பகுதிகள்.

★ காம்ரூபி குழுவின் ஆரம்ப கால காம்ரூபி பகுதி.

★ கோல்பரியா குழுவின் கோல்பரா பகுதி.

**பகுதி அல்லாத வட்டாரம்**

அசாமியில் சாதி அல்லது தொழில் சார்ந்த வட்டாரம் இல்லை. 19ஆம் நூற்றாண்டில் கிழக்கு வட்டார மொழிகள் நிலையான பேச்சு வழக்காக இருந்தது. ஏனெனில் அதிகமான இலக்கிய செயல்பாடு இருந்தது. மேலும் கிழக்கு கௌகாத்தியிலிருந்து சாதியா வரை ஒரே மாதிரியான பேச்சு வழக்குகள் பின்பற்றப்பட்டன. ஆனால் மேற்கத்திய பேச்சுவழக்கில் பலவகை காணப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியச் செயல்பாடுகள் (அரசியல் மற்றும் வர்த்தகம்) ஆகியவை அனைத்தும் கௌகாத்திக்கு மாற்றப்பட்டன. அதன் விளைவாக நிலையான பேச்சு வழக்கு கிழக்குக் கிராமப்புறப் பகுதிகளிலும் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும் பரவியது. அதிகமான இலக்கியச் செயல்பாடுகள் லிக்கிட்டோ பாக்ஸா எனப்பட்டன. சிலப் பகுதி

வட்டார மொழிகள் அதிகமாக நாவல்கள் மற்றும் பிற படைப்புகளில் பயன்படுத்தப் படுகின்றன.

**சில ஆரிஜனல் சமூகம் சார்ந்த வட்டார மொழிகள்**

★ நிலையான வட்டார மொழிகள் சுற்றியுள்ள பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்தன.

★ பாகாத்தியா மொழி வழக்கு அதிகமாகக் கண்ணியமாகவும் சாட்ரா அடிப்படை பேச்சு வழக்கு வேறுபட்ட பெயரளவில் பெரளவு இல்லாத வினைச் சொற்கள் அமைப்பையும் கொண்டுள்ளது. மறைமுக மற்றும் பெயப்பாட்டு வினை ஆகியவையும் உள்ளன. இவற்றின் சில சிறப்பம்சங்கள் மிக சாதாரண சந்தர்ப்பங்களில் பேச்சு வழக்கில் பயன்படுத்தப் படுகின்றன.

★ மீனவர் சமுகம் கிழக்கு மற்றும் மத்தியப்பகுதியில் பேசும் ஒரு வட்டார மொழியும் காணப்படுகிறது.

★ டாரங் மாவட்டத்தில் வாழும் சோதிட இனத்தவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட பேச்சுவழக்கு உள்ளது. மற்றும் ரித்திகோவா பித்தர்பான்தியா ஆகியவற்றை இரகசிய வழிபாட்டுத் தலமாகக் கொண்ட வைஷ்ணவ குழுக்களுக்கும் குறிப்பிட்ட பேச்சு வழக்கு இருந்தது.

★ மு லீம் சமூகத்தினருக்குத் தனித்துவமான ஒலிப்பு அம்சங்கள் கொண்டு தன் சொந்த விருப்பம் மற்றும் மத அடிப்படையில் கிழக்கு அசாம் பகுதியில் வட்டார மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

★ நகர்ப்புற வளரிளம் மற்றும் இளைஞர்கள் (எ கா. கௌகாத்தி) கவர்ச்சியான, கலப்புள்ள உள்ளூர் மொழிகளைப் பயன்படுத்தினர்.

பாரம்பரிய பேச்சு சமூகத்தினர் இரண்டாவது மொழியாக அசாமியைக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் இந்தப் பேச்சுவழக்கு அதிகமாக உச்சரிப்பு, தொனி, அழுத்தம், சொற்றொகுதி, சொல்லகராதி ஆகியவற்றை முதல் மொழிகளில் கொண்டிருந்தது. (மைசிங் கிழக்கு அசாமி, போடோ மத்திய காம்ரூபி, கிழக்கு கோல்பிரியா ஆகியவை) அசாமி மொழிக்குத் தொடர்புடைய இரண்டு (பிட்கின்/கிரியோல் ) சுயாதீனக் குழுக்களுடன் இணைந்து செயல்படுகின்றன. இது நாகா குழுக்கள் மூலம் பயன்படுத்தப்படுகிறது. நஃபேமி இது அருணாச்சலப் பிரதேசத்தில் பயன்படுகிறது.)

**இலக்கியம்**

அசாமி மொழி இலக்கியம் ஒரு வளர்ந்துவரும் வலுவான இலக்கியமாக உள்ளது. இம்மொழியின் முதல் சிறப்பு 8வது மற்றும் 12 ஆம் நூற்றாண்டின் இடையில் உருவாக்கப்பட்ட சேர்யபாடாவில் காணப்படுகிறது. முதல் படைப்பு நீதிமன்ற கவிஞர்களால் 14 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டது. மிகச் சிறந்த படைப்பு மாதவ் கந்தாலியின் சப்தகாந்தா இராமாயணம் ஆகும். மிகப் பிரபலமான நாட்டுப்புறப் பாடல் ஓகாபாலி மிகச்சிறந்த கைவினையாகக் கருதப் படுகிறது. பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் வைஷ்ணவ இலக்கியத்தில் ஒரு மலர்ச்சி காணப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நவின இலக்கியப் படைப்புகள் தோன்றின.

## 2. வங்காள மொழி (பெங்காலி)

| | |
|---|---|
| தாய்மொழியாக | : பங்களாதேஷ் மற்றும் இந்திய மாநிலங்களான மேற்கு வங்காளம், திரிபுரா, தெற்கு அசாம். |
| பேசப்படும் இடங்கள் | : பங்களாதேஷ், மேற்கு வங்கம், அசாம், திரிபுரா, ஒரிசா, பீகார், ஜார்கண்ட் |
| பகுதி | : டெல்லி, மும்பை, பெங்களூர், புனே, ஹைதராபாத், சென்னை |
| பேசுவோரின் எண்ணிக்கை | : 230 மில்லியன் |
| மொழிக் குடும்பம் | இந்தோ ஐரோப்பிய<br>இந்தோ ஈரானிய<br>கிழக்கு இந்தோ ஆரிய<br>பெங்காலி அசாமி<br>பெங்காலி |
| ஆரம்ப வடிவங்கள் | பழைய பெங்காலி<br>பெங்காலி |
| எழுத்துமுறை | பெங்காலி எழுத்துக்கள்<br>இந்திய பெங்காலி ப்ரெய்லி<br>பங்களாதேஷ் பெங்காலி ப்ரெய்லி |
| வட்டாரம் | பெங்காலி வட்டாரம் |
| அதிகாரப்பூர்வ, உத்யோகபூர்வ மொழி | பங்களாதேஷ், இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தைத் தொடர்ந்து மேற்கு வங்காளம், திரிபுரா, அசாம் (பராக் பள்ளத்தாக்கு), அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், ஜார்கண்ட் (இரண்டாம்) |
| வரிசைமுறையில் பெங்காலி | பங்களா அகாதமி, இந்திய பர சிம்பங்கா, பங்களா அகாதமி பெங்காலி/banga:li/ அல்லது பங்களா / ba:nla / பங்களா, பெங்காலி. |

இது இன்றைய வங்களாதேசம் மற்றும் மேற்கு வங்காளம், திரிபுரா மற்றும் தெற்கு அசாம் ஆகியவற்றின் பிராந்திய மொழியாக உள்ளது. பெங்காலி எழுத்தைப் பயன்படுத்தி எழுதுவோர் மற்றும் பேசுவோரின் எண்ணிக்கை சுமார் 220 முதல் 250 மில்லியன் வரை உள்ளது. பெங்காலி மிகவும் அதிகமாகப் பேசப்படும் மொழிகளில் ஒன்று. உலகில் அதிகமாக பேசப்படும் மொழிகளில் பெங்காலி 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. வங்காள தேசியக் கீதம், இந்திய தேசியக்கீதம், இந்திய தேசியப் பாடல் ஆகியவை பெங்காலி மொழியில் எழுதப்பட்டவை யாகும்.

மற்ற கிழக்கு இந்தோ ஆரிய மொழிகள் சேர்த்து பெங்காலி போன்ற மகதி பிராகிருதம் மற்றும் பாலி போன்ற வட்டார கிளைமொழி அல்லது குழு உருவாக்கப்பட்டன. ஆனால் அவை ஒரே மாதிரியானவை அல்ல. இவை மத்திய கிழக்கு இந்தோ ஆரிய மொழிகளில் இருந்து கி.பி. 1000 1200 இல் உருவானது மற்றும் பாரம்பரிய சம கிருதத்திலிருந்து உருவானது. இலக்கிய பெங்கால் சம கிருதத்தைப் போன்றே உச்சரிப்பைத் தழுவி எழுத்துப் பிழையின்றிப் பாதுகாத்தல் போன்றவை பெங்காலி இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. நவீன பெங்காலி இலக்கியம் 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் நாடியா மற்றும் மேற்குமத்திய வட்டாரப் பகுதிகளில் வளர்ச்சி அடைந்தது.

பெங்காலி மொழி இயக்கம் மிகவும் வலுவானதாகக் கிழக்கு வங்காளப் பகுதியில் இருந்தது. இதன் விளைவாகச் சிறந்த மொழி உணர்வு வங்காள மக்களிடையே ஏற்பட்டது. பிப்ரவரி 21, 1952 அன்று பல மாணவர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் டாக்கா பல்கலைக்கழக வளாகத்தில் எதிர்ப்புகளின் போது கொல்லப்பட்டனர். இந்நாள் வங்காள மாநிலத்தில் மொழி இயக்க தினமாக அனுசரிக்கப்படுகிறது. 1999 நவம்பர் 17 அன்று யுனெ கோ மொழிக்காகப் பலர் தங்கள் உயிரை இழந்துள்ளனர் என்றால் அது பெங்காலி மொழியே ஆகும் என அறிவித்தது. அசாம் மக்கள் தொகையில் ஒரு கணிசமான பகுதியினர் பேசும் மொழி பெங்காலியாக இருந்தபோதிலும் அதை அதிகாரப்பூர்வ மொழியாக ஆக்குவதற்குச் சில எதிர்ப்பு இருந்து வந்தது. ஆனால் குறிப்பிட்ட மக்கள் பெங்காலி மொழியில் பேசுகின்றனர்.

**வரலாறு**

மற்ற கிழக்கு இந்தோ ஆரிய மொழிகளைப் போல பெங்காலி கிழக்கு மத்திய இந்தோ ஆரிய மொழிகளான மகதி பிராகிருதம் மற்றும் பாலி மொழியிலிருந்து தோன்றியது. முந்தைய பதிவு செய்யப்பட்ட மொழிகளில் கவுதமபுத்தர் காலத்தில் கி.பி. பத்தாயிரத்திற்கும்

முற்பகுதியில் ஜெயின் பிராகிருதம் அல்லது அர்த்தமகதி, அரை மகதி உருவானது. அர்த்தமகதி பிராகிருதம் அனைத்து வடஇந்திய மொழிகளைப் போலவே 'அப்பப்ராம்ஸா' (ஊழல் இலக்கண) மொழிகள் என்று அழைக்கப்படுகின்றது. கிழக்குத் துணை கண்டத்தின் உள்ளூர் அப்பராம்ஸா மொழி, புர்வி அப்பராம்ஸா அல்லது அப்ஹாட்டா (அர்த்தமற்ற ஒலிகள்) இறுதியில் இதையொட்டி அசாமி, பெங்காலி மொழிகளில் பிஹாரி மொழிகள் மற்றும் ஒரியா மொழிகளில் மூன்று குழுக்கள் அமைத்துக் கொண்ட வட்டார மொழிகள் உருவாயின. வெவ்வேறு வகைகள் ஒருங்கிணைந்த சில வட்டார மொழிகளை ஆசிரியர்கள் எழுதுகின்றனர். அவர்கள் மொழி நிலையானது இல்லை என்றும் வாதிடுகின்றனர்.

பொதுவாகப் பெங்காலி மொழி வரலாற்றில் மூன்று காலங்களுக்குமான அடையாளங்கள் உள்ளன.

1. பழைய பெங்காலி (900/1000 1400) நூல்களுள் பிரதிப்பெயர் தோற்றம், பக்திப் பாடல்கள் ஆகியவை உள்ளன. எழுத்து மற்றும் மொழி ஆகியவை இந்தக் காலக்கட்டத்தில் காமாருபி பிராகிருத மொழியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்தாக்கம் அசாம், வங்காளம், பீகாரின் சிலப் பகுதிகள் மற்றும் ஒரிசா ஆகிய பகுதிகளில் இருந்தது. இப்பகுதிகள் (இப்போது அசாம் என அழைக்கப்படுவது) காம்ரூபி பேரரசின் கீழ் இருந்தது.
2. மத்திய பெங்காலியில் (1400 1800) முக்கிய நூல்களில் ஒன்றான சண்டிதாஸின் ஸ்ரீகிருஷ்ணகீர்த்தனை முக்கியத்துவம் பெற்றிருந்தது. மேலும் வார்த்தை இறுதி அசை கெட்டு மறைதல் /O/ ஒலி, கலவை சொற்களின் பரவல், பாரசீக செல்வாக்கு ஆகியவையும் மிகுந்திருந்தன. சில அறிஞர்கள் இந்தக் காலத்தை முந்தைய மற்றும் பிந்தைய நடுத்தர காலமாகப் பிரித்தனர்.
3. நவீன பெங்காலி (1800 முதல்) சொற்கள் மத்தியில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. (எ கா) தஹர் தார் = தனது/ அவள் அவன் = அவள் செய்தது.

மத்திய பெங்காலி காலத்தின்போதும் மேலும் வங்க மறுமலர்ச்சி காலத்திலும் சம கிருதத்தின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. நவீன பெங்காலி சொல்லகராதியில் மகதி பிராகிருதம் மற்றும் பாலி மொழியும் மற்றும் சம கிருதம், சில தொடர்பற்ற மொழிகளிலுள்ள வார்த்தைகளும் சேர்த்து கடனாகப் பெறப்பட்டு அமைக்கப்பட்டிருந்தன.

18 ஆம் நூற்றாண்டு வரை பெங்காலி இலக்கணத்தை ஆவணப்படுத்த எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

முதன்முதலில் பெங்காலியில் எழுதப்பட்ட பெங்காலி அகராதி/ இலக்கணம், Vocabolario em idioma Bengalla,. e Portuguez dividido en duas partes என இரண்டு பிரிவாக 1734 மற்றும் 1742 இடையே போர்த்துக்கீசிய மதப் போதகரான மானுவல்டா அ ஸம்கோ என்பவரால் எழுதப்பட்டது. நத்தானியேல் பிரேசேஹால்ஹெட் என்ற பிரிட்டிஷ் இலக்கணவாதி நவீன பெங்காலி இலக்கணத்தை எழுதினார் (வங்காள மொழி இலக்கணம்) ராம் மோகன்ராய் என்ற சீர்திருத்தவாதி மேலும் ஒரு வங்க மொழி இலக்கணத்தை எழுதினார்.

**புவியியல் பகிர்வு**

பெங்காலி மொழி இன்றைய வங்காள தேசம், அதனை உள்ளடக்கிய பங்களாதேஷ், மற்ற இந்திய மாநிலங்களான மேற்கு வங்காளம், திரிபுரா மற்றும் தெற்கு அசாம் பகுதியின் சொந்த மொழியாகும். இந்திய யூனியன் பிரதேசங்கள், அந்தமான் நிக்கோபார் தீவுகளில் அதிகமாகப் பேசப்படுகிறது. மத்திய கிழக்கு, ஜப்பான், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மாலத்தீவு, ஆ திரேலியா, கனடா, ஐக்கிய ராஜ்யம் ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க பெங்காலி பேசும் சமூகங்கள் உள்ளன.

**அதிகாரப்பூர்வ நிலை**

பெங்காலி, பங்களாதேஷின் தேசிய மற்றும் அதிகாரப்பூர்வ மொழியாக உள்ளது. பெங்காலி இந்தியக் குடியரசால் அறிவிக்கப்பட்ட 23 மொழிகளில் ஒன்றாகும். மேலும் இந்திய மாநிலமான மேற்கு வங்கம், திரிபுரா, அசாம் ஆகியவற்றின் அதிகார மொழியாக உள்ளது. இந்திய யூனியன் பிரதேசமான அந்தமான், நிக்கோபார் தீவுகளின் ஒரு முக்கிய மொழி ஆகும்.

பெங்காலி இரண்டாவது முக்கிய மொழியாக 2011 செப்டம்பர் முதல் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ளது. மேலும் இது இரண்டாவது உத்தியோகப் பூர்வ மொழியாகப் பாகி தானின் கராச்சி நகரில் உள்ளது. கராச்சி பல்கலைக்கழகத்தின் பெங்காலி துறையில் பெங்காலி இலக்கியம் இளநிலை மற்றும் முதுநிலை அளவில் பல வழக்கமான திட்டங்களை வழங்கிவருகிறது. டிசம்பர் 2002 இல் சியராலியோனி மற்றும் அப்போதைய ஜனாதிபதி அகமது தேஜான் காஃபா என்பவர் பெங்காலியை உத்தியோகப்பூர்வ மொழியாக அறிவித்தார். சியோலியோனி அமைதிப்படை ஐக்கிய நாடுகள் படையில் துருப்புகள் பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட 5300 குழுக்களுக்கு உத்தியோகப் பூர்வ மொழியாக அங்கீகாரம் அளித்தது.

பங்களாதேஷ் மற்றும் இந்தியாவின் தேசியகீதங்கள் நோபல் பரிசு பெற்ற கவிஞரான இரவீந்திரநாத் தாகூரால் வங்காள மொழியில் எழுதப்பட்டது. 2009 ஆம் ஆண்டிலிருந்து பங்களாதேஷ் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவற்றின் பெங்காலி மொழி ஐக்கிய நாடுகள் சபையால் உத்தியோகப்பூர்வ மொழியாக அழைக்கப்பட்டது.

**வட்டார மொழி**

பெங்காலி பேச்சில் சில பிராந்திய வேறுபாடுகள் தொடர்ந்து அமைகின்றன. மொழியியலாளர் சுனித்குமார் சாட்டர்ஜி நான்கு மொழிக் குழுக்களை ஏற்படுத்தினார். அவை

1. ரார் (Rarh)
2. பாங்கா (Banga)
3. காமரூபா (Kamarupa)
4. வரேந்திரா (Varendra)

பின் மேலும் பல மாறுபட்ட குழுக்களும் உருவாகின. தென்மேற்கு வட்டார (ரார் அல்லது நாடியா கிளை) மொழி நவீன தரமான பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வட்டாரக் குழு அதிகமாக கிழக்கு மற்றும் தென்கிழக்கு வங்காளத்தில் பிரிவுகள் 1. பாரிசல் பிரிவு (Barisal division), 2. சிட்டகாங் பிரிவு (Chittagon division), 3. தாக்க பிரிவு (Dhaka division), 4. பங்களாதேஷின் சில்ஹெட் பிரிவு (Sylhet division) ஆகிய பிரிவுகள் உள்ளன.

பெங்காலியில் சில வகைகள் காணப்படுகின்றன. குறிப்பாகச் சிட்டகோனியன் (Chittagonian) மற்றும் சக்மா பங்களா (Chakma Bangla) ஆகிய வட்டார மொழிகள் பேச்சாளர் குரல் உயர்த்தி சுருதி வேறுபாடுகளுடன் சில மொழிகள் காணப்படுகின்றன. ஆனால் ராஜ்பாங்ஸி, காரியாதார் மற்றும் மால் போன்றவை பொதுவாகத் தனி மொழிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல் ஹாலாங்கும் ஒரு தனிமொழியாக மேலும் வடபெங்காலியை ஒத்தும் காணப்படுகிறது.

19, 20 ஆம் நூற்றாண்டுகளின் தொடக்கத்தில் பெங்கார தர நிர்ணயத்தில் வங்காள கலாச்சார மையமாகக் கல்கத்தா நகரத்தை பிரிட்டிஷ் நிறுவியது. வங்காளத்தில் மேற்கு வங்காளம் மற்றும் கிழக்கு வங்காளம் என்ற நிலையான அமைப்பைக் கொண்ட மேற்கு மத்திய வட்டாரமொழியை நாடியா மாவட்டம் கொண்டுள்ளது. இது வங்காள எல்லையில் உள்ளது. மேற்கு வங்க மொழியில் பேசுவோர் சில மாறுபட்ட பொருளுடைய வார்த்தைகளையும் பேசுகின்றனர்.

உதாரணமாக இரு வார்த்தைகளைக் கூறலாம். Salt (உப்பு) என்பது மேற்கில் கன்னியா திரியைக் குறிக்கிறது. ஆனால் கிழக்கில் lobon என்பது 'உப்பு' எனப்படுகிறது.

**பேச்சு மற்றும் இலக்கிய வகைகள்**

பெங்காலியில் வேறுபட்ட சொற்களில் தொடரியல் சம்பந்தப்பட்ட எழுத்து இரண்டு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளன.

**1. சாதுபாஷா (Shadhuhasha)**

*(சாது பத்தினி அல்லது முனிவர்; பாஷா மொழி)* என்னும் எழுத்து வடிவிலான மொழி இருந்தது. வினை ஏற்றத் தாழ்விற்காக மற்றும் ஒரு பாலி, சம கிருதத்திலிருந்து பெறப்பட்ட சொல்லகராதி காணப்படுகிறது. இந்திய தேசியக்கீதமான 'ஜனகனமன' இசை சாதுபாஷாவில் உருவானது. எப்படியாகிலும் சாதுபாஷாவின் நவீன எழுத்து முறை பொதுவானது இல்லை. சில உத்தியோகப்பூர்வ குறியீடுகள், ஆவணங்கள் அத்துடன் குறிப்பிட்ட இலக்கிய விளைவுகள் அடைவதற்கான தடை அசாதாரணமானது.

**2. Cholitobhasha : Manno Cholit**

தற்போதைய பெங்காலி பேச்சுவழக்கு என மொழியியலாளர்களால் அறியப்படுகிறது. Cholits என்பதன் பொருள் பெங்காலியில் 'தற்போதைய' அல்லது 'இயங்கும்' எனவும், பாஷா (bhasha) என்பது 'மொழி' எனவும் பொருள்படும். பெங்காலி எழுத்துமுறையில் பேச்சு வழக்கு, வினை வடிவங்கள் ஆகியவை சுருக்கப்பட்டது. இந்த வடிவம் *ப்ரிசந்த்மித்ரா (அலேலர் காரர் துலால் 1857)*, *ப்ரம்மதாசவுத்ரி (ஷாபுஜ்பாத்ரா, 1914)* என்ற ரவீந்திரநாத்தாகூரின் பிந்தைய எழுத்துக்கள் யாவும் 19 ஆம் நூற்றாண்டினை நோக்கி வந்தது. இது நாடிய மாவட்டத்தில் மேற்கு வங்கத்தில் சாந்திப்பூர் பகுதியில் பேசப்படும் பேச்சுவழக்கின் மாதிரியாக இருந்தது. இந்தப் பெங்காலி வடிவம் அடிக்கடி நாடியா மாவட்டம், சாந்திப்பூர் பகுதி மற்றும் நாடியா வட்டார மொழி, தென்மேற்கு/மேற்கு மத்திய வட்டார மொழியாகச் சாந்திப்பூர் தொகுதியிலும் பேசப்படுகிறது.

**ஒலியியல்**

நிலையான பெங்காலி 29 மெய் மற்றும் 7 உயிரெழுத்துகளையும், 6 நாசி உயிர் எழுத்துக்களையும் கொண்டுள்ளது. இதற்குப் பின் அனைத்து ஒலியியல் அரிச்சுவடி உருவாக்கப்பட்டது.

## உயிரெழுத்துக்கள்

**Vowels**

| | Front | Central | Back |
|---|---|---|---|
| Close | i<br>i | | u<br>u |
| Close-mid | e<br>e | | o<br>o |
| Near-open | æ<br>ê | | ɔ<br>ô |
| Open | | a<br>a | |

## மெய்யெழுத்துக்கள்

| | | Labial | Dental/ Alveolar | Retroflex | Palatoalveolar | Velar | Glottal |
|---|---|---|---|---|---|---|---|
| Nasal | | mɔ<br>mō | | nɔ<br>nō | | ŋɔ<br>ngō | |
| Plosive | voiceless | pɔ~ɸɔ<br>pō | t̪ɔ<br>tō | ʈɔ<br>ṭō | tʃɔ~tsɔ<br>chō | kɔ~xɔ<br>kō | |
| | aspirated | ɸɔ~pʰɔ<br>fō/phō | t̪ʰɔ<br>thō | ʈʰɔ<br>ṭhō | tʃʰɔ~tsʰɔ<br>chhō | kʰɔ~xɔ<br>khō | |
| | voiced | bɔ<br>bō | d̪ɔ<br>dō | ɖɔ<br>ḍō | dʒɔ~dzɔ<br>jō zō | gɔ<br>gō | |
| | aspirated | bʱɔ~βɔ<br>bhō | d̪ʱɔ<br>dhō | ɖʱɔ<br>ḍhō | dʒʱɔ~dzɔ<br>jhō | gʱɔ<br>ghō | |
| Fricative | | (wɔ)<br>(wō) | sɔ<br>sō | | ʃɔ<br>shō | | ɦɔ<br>hō |
| Approximant | | | lɔ<br>lō | | | | |
| Rhotic | | | rɔ<br>rō | ɽɔ<br>ṛō | | | |

**எழுத்து முறை**

பெங்காலி எழுத்து முறை ஒரு அபுககிடா. இந்த எழுத்துக்கள் உயிரெழுத்துக்களில் மெய் மற்றும் எழுத்துக்கள் உயிர் குறித்தது என்றால் இது ஒரு உள்ளார்ந்த உயிர் மெய்யாகக் கருதப்படுகிறது. பெங்காலி எழுத்து முறை வங்காளம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. கிழக்கு இந்தியாவில் அசாம், மேற்கு வங்காளம், திரிபுரா பகுதிகளிலும் இந்த எழுத்துமுறை பயன்படுத்தப் படுகிறது. பெங்காலி எழுத்துமுறை பிராமி எழுத்திலிருந்து சில மாற்றம் பெற்று கி.பி. 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டிருக்கும் என நம்பப்படுகிறது. அசாமி எழுத்து, பெங்காலி எழுத்து முறையிலிருந்து ஒருசில சிறிய வேறுபாடுகளை மட்டுமே கொண்டு காணப்படுகிறது.

பெங்காலி கிரிப்ட் பதினொரு தொல்பொருள் அல்லது ஒன்பது உயிர் மற்றும் இரண்டு உயிரெழுத்துக்கள் சேர்ந்து வரும் எழுத்து, மெய் மற்றும் மற்ற மாற்றிகளைக் குறிக்கும் 39 அடையாளங்கள் ஆகியவையும் எழுத்தில் உள்ளன. இடது மற்றும் வலது பக்கத்திலிருந்து கொடுக்கப் படும் இடைவெளிகள் கடிதங்கள் மற்றும் வார்த்தைகளைப் பிரிக்கப் பயன்படுகின்றன. பெங்காலியில் கிடைமட்ட எழுத்துக்கள் மேல் மற்றும் கீழ் எழுத்துக்களை இணைப்பதற்குப் பயன்படுகின்றன. இது மாத்ரா என அழைக்கப்படுகிறது.

பெங்காலி எழுத்து ஒரு அபுகிடா என்பதால் மெய் தொல் பொருள் பொதுவாக ஒலிகளைக் குறிப்பதில்லை. ஆனால் இது ஒரு உள்ளார்ந்த உயிர் எடுத்துச் செல்லப்படுவதனால் இயல்பு அசை இல்லை. இந்த உள்ளார்ந்த உயிரில் உயிர் பின்னால் ஒலிக்கும். இன்னும் திறந்த வகைகளில் 'கருத்து' அல்லது (mon) 'மனம்' என [ ] அல்லது பொதுவாக மீண்டும் உயிர் இருக்கிறது. திடமாக இணைக்கப்பட்ட எந்தவொரு உள்ளார்ந்த உயிர் இல்லாமல் ஒரு மெய் ஒலி சேர்ந்தால் அது நெடில் (hosonto). எனினும் இது நெடிலுக்குப் பொதுவானவை அல்ல. மற்றும் முக்கியமாக உச்சரிப்பில் ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெங்காலி மெய் தொல்பொருள் என்ற அழகிடா இயல்பு எனினும் அது நிலையானது அல்ல. பெரும்பாலும் இறுதி அசையில் மெய் தொல்பொருள் ஒரு Hosonto குறிப்பிடப்படுகிறது.

சில மெய்யெழுத்துக்கள் சில உயிரெழுத்துக்களைத் தொடர்ந்து வந்து, ஒலி உள்ளார்ந்த வடிவங்களை முன், பின், மெய் அடையாளம், மெய்யெழுத்து உயிரெழுத்தை எப்படியெல்லாம் அமைப்பது கீழே, மேலே எனப் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தி உணரப்படுகின்றன. இந்த எழுத்து வடிவம் கார் (Kar) என அழைக்கப்படுகிறது. இது சங்கேத

உயிர் வடிவங்களைச் சார்ந்துள்ளது. இதனால் தனித்து நிற்க முடியாது. உதாரணமாக வரைபடம் (மைல்), உயிர் தொடர்ந்து மெய் பிரதிபலிக்கிறது. நான் (ஐ) என்பது நாள்கர என்பதில் சங்கேத குறியீடு குறிப்பிடப்படுகின்றது. இதில் மெய் இயல்பு நிலை முன்வைக்கப் படுகிறது. இதேபோல் சில வடிவங்கள் (மா), (மி), (மு), (மிரி), (மி மை) (மோஜ்) (மோ) மற்றும் (மௌ) ஆகியவை ஒத்த மெய்யெழுத்துக்களையும் மற்றும் 7 உயிர் எழுத்துக்களையும் மற்றும் இரண்டு ஒரே உச்சரிப்புள்ள உயிரெழுத்துக்களையும் கொண்டுள்ளன.

பெங்காலி உயிர் எழுத்து இரண்டு படிவங்களைக் கொண்டுள்ளது. அவை சுருக்கப்பட்ட படிவம் மற்றும் சுயாதீன படிவம் ஆகும்.

உயிர் எழுத்து எந்த ஒரு மெய்யெழுத்திலிருந்தும் தனிமைப்படுத்தப் பட்டு உயிர் சுயாதீனமாகப் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக (moj) ஏணி மற்றும் (Hilsa) ஹில்சா மீன் ஆகியவற்றில் உயிர் சுயாதீன வடிவம் பெற்றுப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு வார்த்தை ஆரம்பத்தில் ஒரு உயிர் எப்போதும் அதன் சுயாதீன படிவத்தைப் பயன்படுத்தி உணரப் படுகிறது.

பெங்காலியில் நிறுத்தற்குறிகளைத் தவிர மற்றும் (down stroke) தாரி மற்றும் ஒரு முற்றுப்புள்ளி ஆகியவையும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கத்திய எழுத்துமுறை (லத்தீன், சிரில்லிக்) போன்ற எழுத்துக்கள் கண்ணுக்குத் தெரியாதது போல் அல்லாமல் பெங்காலி எழுத்து வடிவங்கள் பெரிதாகக் கிடைமட்டமாக இடது வலமாக எழுதும் முறையில் அமைந்துள்ளது. இது மாத்ரா (மேல்கோடு) எனப்படும். இந்த 'மாத்ரா' எழுத்தில் முன்னிலை பெற்றும் பெறாமலும் இருக்கும். உதாரணமாக இந்த எழுத்து 'வடி' அல்லது எண் '3' ஆகியவை மட்டும் இந்த 'மாத்ரா' மேல்கோடு இருப்பதும் மற்றும் இல்லாததை வேறுபடுத்தும். அதேபோன்று எழுத்து 'வசடி' மற்றும் உயிர் எழுத்து c-யும் இதையே குறிக்கிறது. இந்த மாத்ரா என்பது எழுத்துக்களின் வடிவம், அகலம், உயரம் (கண்ணுக்குத் தெரியாத செங்குத்து இடைவெளியையும்) உணர்த்துகிறது.

ஒரு சீரான நிலையான வரிசையாக ஒப்பிடுவது (அகராதி, குறியீடு, கணினி வரிசைத் திட்டம்) பற்றியும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதில் வங்காளம் மற்றும் இந்திய நிபுணர்கள் இதற்கான தீர்வை நோக்கி வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.

**இலக்கணம்**

பெங்காலியில் குறைந்தபட்ச மாற்றம் வகுக்கும் பாலினம் நிர்ணயிக்கப்படவில்லை. எனினும் பெயர்ச்சொல் மற்றும் பிரதிப்

பெயர்ச் சொல் மிதமாகக் குறைந்து சொற்றொடரின் செயல்பாட்டைப் பொறுத்து மாற்றம் பெற்றுள்ளது. ஆனால் வினைச் சொற்களில் பாலினம் மற்றும் பெயர்ச் சொற்களைப் பொறுத்து எந்தவித மாற்றமும் காணப்படவில்லை.

**வார்த்தை ஒழுங்கமைவு**

ஒரு முக்கிய மொழியாகப் பெங்காலி பெயர் பொருள் வினை வார்த்தை ஒழுங்கமைவு ஆகிய அமைப்பில் அமைந்திருந்தாலும் கருத்தில் சில மாற்றங்கள் ஏற்படுவது பொதுவானது. ஆங்கிலம் மற்றும் பிற ஐரோப்பிய வார்த்தைகளில் பயன்படுத்தப்படும் முன் இடைச் சொற்களுக்குப் பதிலாகப் பெங்காலியில் பின் இடைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் பெயர் உரிச்சொல் எண்கள், பெயரடைகள், தன்மை ஆகியவற்றையும் கொண்டு பெயர்ச்சொல் குறிக்கப்படுகிறது.

ஆம்/இல்லை கேள்விகள் அடிப்படையில் எந்தவித வார்த்தை ஒழுங்கமைவும் காணப்படுவதில்லை. அதற்குப் பதிலாக வாய்வழி இறுதி அசை குறைந்த தொனியும் அசை வீழ்ச்சி அடைந்த ஒரு தொனியும் காணப்படும். இறுதியாக ஆம்/இல்லை வினா அமைப்பில் வார்த்தை அமைப்பு வாக்கியத்தின் முதலிலோ அல்லது முடிவிலோ அமைந்திருக்கும்.

WH கேள்விகள் பொதுவாக முதல் அல்லது இரண்டாவது வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்த வார்த்தை அமைப்பு முதலிலேயே உருவாகின்றன.

**பெயர்ச் சொற்கள்**

பெயர்ச்சொல் மற்றும் பிரதிப்பெயர்ச் சொற்கள், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவற்றைக் கொண்டு காணப்படுகின்றன. ஒவ்வொரு பெயர்ச் சொல்லும் அதற்கு அடுத்தடுத்து வரும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகிறது. மற்றும் சுட்டிடைச் சொற்கள், ஒருமை, பன்மை ஆகியவற்றில் எண்களையும் சார்ந்தே உள்ளன.

**வினைச்சொற்கள்**

வினைச்சொற்கள் இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத சொற்கள் ஆகியவையாகும். முற்றுப்பெற்ற அல்லது வரையறுக்கப்பட்ட வினைச் சொற்கள் குறிப்பது (முதல், இரண்டாம், மூன்றாம்) நபரையும், மற்றும் காலங்கள் (நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம்) ஆகியவற்றையும்,

அம்சம் (சற்றுமுன் நிகழ்ந்த, நிகழப் போகின்றவற்றையும், நேர்மை (தெரிந்த, பிரபலமான, சாதாரண) என்றும் வரையறுக்கப்படுகின்றன. ஆனால் சில வார்த்தைகள் சில அமைப்பு, மனநிலை, கட்டாயம் ஆகியவற்றினால் சில மாற்றங்களைப் பெற்றுக் காணப்படும். சில முன்னொட்டுகளை மாற்ற வேண்டிவரும்.

ஆனால் முன்னொட்டுகளில் பகுதிக்குப் பகுதி வார்த்தை அமைப்பில் சில மாறுபாடுகள் காணப்படும். இந்தோ ஆரிய மொழிகளில் பூஜ்யத்துடன் இணைக்கும் சில எழுத்துக்கள் பெங்காலியில் காணப்படுவது இல்லை.

**சொற்களஞ்சியம்**

பெங்காலி மொழி அதிகமாக 100,000க்கும் மேற்பட்ட தனிச் சொற்களைக் கொண்டுள்ளது. இதில் 50,000 வார்த்தைகள் நேரடியாக சம கிருதத்திலிருந்து பெறப்பட்டுள்ளன. 21,100 வார்த்தைகள் சொந்த வார்த்தைகளாக உள்ளன. மற்றும் சில வார்த்தைகள் வெளிநாட்டுச் சொற்களை உள்ளடக்கியதாக உள்ளன. எனினும் இந்தப் புள்ளி விவரங்கள் அவற்றின் உண்மையான பயன்பாட்டைக் குறிப்பிடவில்லை. இவற்றில் 67 விழுக்காடு வார்த்தைகள் நவீன இலக்கியம் படைப்பதற்கும், சொல்லகராதியில் 25 விழுக்காடு மற்றும் சொல் உற்பத்தியில் 8 விழுக்காடு பயன்படுத்தப்படுகின்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பியர்கள் முகலாயர்கள், பாரசீகர்கள் மற்றும் கிழக்கு ஆசியாவின் தொடர்பால் பெங்காலி மொழியில் பல வெளிநாட்டு வார்த்தைகள் உள்வாங்கப்பட்டிருந்தன. வெளி நாட்டிலிருந்து கடன்வாங்கப்படும் வார்த்தைகள் பொதுவாக 3 வகைகளைக் கொண்டுள்ளன. பல உள்நாட்டு மொழிகள், பாரசீகம், மத்திய கிழக்கிலிருந்து பல நூற்றாண்டுகளாக ஆதிக்கம் பெற்று வந்த வார்த்தைகள், குறிப்பாக முகலாய பேரரசின்கீழ் பல துருக்கிய அரபு மற்றும் பாரசீக வார்த்தைகளை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர். இவற்றை அகராதியில் இணைக்கப்பட்ட பின்னர் கிழக்கு ஆசிய ஐரோப்பிய பயணிகள் வருகை மற்றும் சமீபத்திய ஐரோப்பிய காலனித்துவ காலத்தில் போர்த்துக்கீசியம், பிரெஞ்சு, டச்சு மற்றும் குறிப்பிடத்தக்க ஆங்கில வார்த்தைகளும் அதிகமாகக் கலந்து காணப்பட்டன.

## 3. போடோ

பேசப்படும் இடம் : இந்தியா மற்றும் நேபாளின் சிறு பகுதி.

இனம் : போடோ , மெக்.

தாய்மொழியாகக் கொண்டோர் : 1.3 மில்லியன் (2001)

மொழிக் குடும்பம் : சைனோ திபெத்திய
திபெத்திய பர்மன்
பிரம்மபுத்ரன்
போடோ கோச்
போடோ காரோ
போடோ

போடோ அல்லது மெக், திபெத்திய பர்மன் மொழியைச் சேர்ந்தது. போடோ இன மக்கள் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளிலும் நேபாளிலும் வாழ்கின்றனர். இது இந்தியாவின் அதிகாரப்பூர்வ மொழியாக அசாமிலும் மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 22 அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் ஒன்றாகவும் உள்ளது. போடோ எழுத்து தேவநாகரி எழுத்தைப் பயன்படுத்தி எழுதப்படுகிறது. ஆரம்பத்தில் ரோமன் எழுத்திலிருந்தும், 1963 முதல் தேவநாகரியிலிருந்தும் போடோ பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**வரலாறு மற்றும் மொழி வகைப்பாடு**

போடோ மொழி திபெத்தோ பர்மிய மொழிக் குடும்பத்தின் கிளையாகும். போடோ மொழிக்குழு அசாம் பர்மிஸ குழுக்களுக்குக் கீழ் உள்ளது. இது அசாமின் டைமாஸா மொழி, மேகாலயாவின் காரோ மொழி, திரிபுராவின் கோக்போராக் மொழி ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. போடோ மொழி பேசப்படும் அசாம் பகுதியிலிருந்து தூப்ரி பகுதிக்கும், மேற்கில் சாதித்யா மற்றும் கிழக்குப் பகுதிக்கும் பரவியது. பெங்காலின் ஜல்பைபுரி மாவட்டங்களில் போடோ 'மெக்' என்று அறியப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி போடோ மொழி பேச்சாளர்களின் எண்ணிக்கை 1,184,569 ஆகும். போரோ என்ற வார்த்தை மொழியையும் இனத்தையும்

குறிக்கிறது. மேலும் இதன் உச்சரிப்பு இரண்டு அசை கொண்ட ஒரு உயர்தொனியில் உச்சரிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் பேசப்படும் வட்டார மொழி பொதுவாக மூன்று முக்கிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

1. மேற்கு போரோ வட்டாரம் ( வனாபாரி WBD)
2. கிழக்கு போரோ வட்டாரம் (சான்சரி EBD)
3. தெற்கு போரோ வட்டாரம் (ஹசாரி SBD)

கிழக்கு போரோ வட்டார மொழி கோக்ராஜ்ஹார் மற்றும் போங்காய்கான் மாவட்டங்களிலும் கிழக்கு போரோ வட்டார மொழி முக்கியமாக பார்பெட்டோ மாவட்டத்திலும் பேசப்படுகிறது. அதே போல் நல்பாரி, காம்ரூப் டேர்ரங் ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது. மேற்கத்திய போரோ பேச்சுவழக்கு நிலையான பேச்சுவழக்கு நிலையையும் அதேபோல் நல்பாரி, காம்ரூப் டேர்ரங் ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது. மேற்கத்திய போரோ பேச்சு வழக்கு நிலையான பேச்சுவழக்கு நிலையையும் அதேபோல் வளர்ச்சி பெற்ற எழுத்து வடிவத்தையும் பெற்றுள்ளது. இந்த இரண்டு வட்டாரங்களுக் கிடையே பேச்சொலி மற்றும் சொற்கோவையில் சில வேறுபாடுகள் இருக்கின்றன.

**ஆரம்ப காலத்தில்**

போரோ மொழி தொன்மையான மற்றும் வளமான மொழி என்றாலும், இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தம் வரை இலக்கியம் எழுதப்படவில்லை. கிறித்தவ மிஷனரிகள் தங்கள் மதத்தைப் போதிக்கும் நோக்கத்துடன் போரோ பேசும் பகுதிகளுக்குச் சென்று போதனை செய்தும், மதம், கதைகள், பாடல்கள், இசை பற்றிய புத்தகங்களை வெளியிட்டனர். இந்த மிஷனரிகள் இலக்கணம் மற்றும் அகராதியையும் வெளியிட்டனர். சிட்னி என்டல் என்பார் கச்சாரி இலக்கணத்தின் வெளியமைப்பை 1884 இல் தொகுத்தளித்தார். இந்த இலக்கணம் டேர்ரங் மாவட்ட பேச்சுவழக்கை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சிட்னி மேலும் போடோக்களுக்கு ஒரு தனிக் கட்டுரையையும் எழுதினார். இந்தத் தனிக்கட்டுரை கச்சாரிய எனப்பட்டது. 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புத்தகத்தில் போடோக்களின் சமூக பழக்கவழக்கங்கள், விவசாயம், நடைமுறைகள், விழாக்கள், உணவுப் பழக்கம், வாழ்க்கைச் சுழற்சிச் சடங்குகள், கைவினை மற்றும் ஐவுளிகள் போன்ற அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. மேலும் இந்தப் புத்தகத்தில் போடோ நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், இலக்கணம் ஆகியவையும் உள்ளன.

ஜே.டி.ஆண்டர்சனின் போடோ நாட்டுப்புறக் கதைகள் மற்றும் பாடல்கள் சேகரிப்பு (1895) எனும் நூலில் 17 போடோ நாட்டுப்புறக் கதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. போடோ மொழியிலும் அசல் பதிக்கப்பட்டுள்ளது.

**வரலாறு**

சமூக அரசியல் விழிப்புணர்வு இயக்கம் 1913 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதன் பின் போடோ பேசும் பகுதிகளில் அனைத்து ஆரம்பப் பள்ளிகளிலும் இம்மொழி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது இம்மொழி மேல்நிலைகளிலும் அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும் இது அசாம் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மொழியாகவும் உள்ளது. போடோ மொழி 1996 இல் கௌகாத்தி பல்கலைக்கழகத்தில் முதுநிலை இலக்கியப் படிப்பில் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின் ஒரு சிறப்பான பெருமையை அடைந்துள்ளது. போடோ மொழியில் ஏராளமான கவிதைப் புத்தகங்கள், நாடகம், சிறுகதைகள், நாவல்கள், சரிதைகள், பயணப் புத்தகங்கள், குழந்தை இலக்கியம், இலக்கண விமர்சனங்கள் ஆகியவையும் உள்ளன. இந்த மொழி மற்ற சமூகங்களையும் குறிப்பாக பெங்காலி, கோக்ராஜ்ஹரைச் சுற்றியுள்ள பகுதி, உடல்குரி மாவட்டத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் இன்றும் போடோவின் தூய மொழி கேட்கப்படுகிறது.

பூமியின் ஆரம்பகால தோற்றத்திலிருந்தே போடோ கலாச்சாரத்தை அதன் சமூகம் அங்கீகரித்துள்ளது. போடோ கலாச்சாரம் அதன் மூல காரணமான பௌத்த மதத்திலிருந்து வந்துள்ளது. இவர்கள் இன்றும் சூரியன், மேகம், காற்று, தண்ணீர், பூமி ஆகியவற்றை வணங்குகின்றனர். பௌத் அல்லது பௌத்த மதத்தின் உச்சம் கடவுள் ஆகும்.

**எழுத்து முறை**

இந்த எழுத்து அதிகாரப்பூர்வமாகத் தேவநாகரி எழுத்தில் பயன்படுத்தப் படுகிறது. இம்மொழி இலத்தீன் எழுத்து மற்றும் அசாமி எழுத்தில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. சில ஆராய்ச்சியாளர்கள் இம்மொழி தற்போது தியோதாய் எழுத்தில் எழுதப்படுவதாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இது போடோ மற்றும் தேவநாகரியிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. கலாகுரு பிஷ்ணுபிரசாத் ராபா தியோதாய் எழுத்தில் உள்ள சில மாதிரிகளைச் சேகரித்தார். இத்தகவல்கள் அனைத்தும் திமாபூர் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது. இது கச்சாரி பகுதியின் கலை மற்றும் கட்டிடக்கலையினையும் குறிக்கிறது.

## 4. தோக்ரி மொழி

| | |
|---|---|
| பேசப்படும் இடம் | : இந்தியா, பாகி தான் |
| பகுதி | : ஜம்மு, இமாச்சலப்பிரதேசம், குர்தாஷ்பூர்/ பதான்காட், பஞ்சாப். |
| தாய்மொழியாகக் கொண்டோர் | |
| எண்ணிக்கை | : 4 மில்லியன் (1996 2001) |
| மொழிக் குடும்பம் | : இந்தோ ஐரோப்பிய<br>இந்தோ ஆரிய<br>வடமேற்கு<br>மேற்கத்திய பஹாரி<br>தோக்ரி |
| எழுத்துமுறை | : தேவநாகரி, தக்ரி, பாரசீக அரபு எழுத்து. |

தோக்ரி இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. 5 மில்லியன் மக்களால் பேசப்படுகிறது. இந்தியா, பாகி தான், ஜம்மு மற்றும் காஷ்மீர், இமாச்சல்பிரதேசம் ஆகிய பகுதிகளில் பேசப்படுகிறது. மற்றும் வடக்கு பஞ்சாப் பகுதிகளிலும் பேசப்படுகிறது. தோக்ரி மொழி பேசுவோர் 'தோக்ரா' என்று அழைக்கப்படுகின்றனர். தோக்ரி மொழி பேசும் பகுதி துக்கர் என்று அழைக்கப்படுகிறது. காஷ்மீரி முதல் பஞ்சாப், உருது ஆகியவை பேசப்படும் பகுதிகளில் இன அடையாள மோதல்கள் ஏற்பட்டு வட்டார மொழிகள் மற்றும் பேச்சு வழக்கு அம்பலமாகியது. மேற்கத்திய பஹாரி மொழி அதாவது தோக்ரி மற்றும் இமாச்சலி ஆகியவை பஞ்சாபி வட்டார மொழியாக இருக்க வேண்டும் எனக் கோரினர். மேற்கத்திய பஹாரி மொழி (ரம்பானி போன்றவை) காஷ்மீரின் வட்டார மொழியாக இருந்தவை. இந்த மொழிகள் அனைத்தும் நிலையான இலக்கண அடிப்படையையும், பல வட்டார மொழிகளையும் கொண்டுள்ளன. தோக்ரி மேற்கத்திய பஹாரி மொழிக் குழுக்களில் ஒன்றாக இருக்கிறது. மொழி பஹாரி உள்ள பாகி தானி என்றும் குறிப்பிடப்படுகிறது. வழக்கமாக இந்தோ ஐரோப்பிய மொழிகளில் தோக்ரி தொனி இருக்கிறது. மேற்கத்திய பஹாரி மொழியிலும் பஞ்சாபிலும் தோக்ரியின் பகிர்வு காணப்படுகிறது.

**வரலாற்றுக் குறிப்புகள்**

கிரேக்க சோதிடர் புலோமி அலெக்சாண்டருடன் இணைந்து கி.பி. 323 இல் இந்தியத் துணைக்கண்டத்தில் துக்கர் பகுதிகளில் பிரச்சாரம் செய்தனர். வீரம் மிக்க தோக்ரா குடும்பங்கள் சிவாலிக் என்ற மலைத் தொடர்களில் வசித்தனர். 1317 ஆம் ஆண்டு அமிர்குஷ்ரோ, பிரபல இந்தி மற்றும் பாரசீக கவிஞர் தோக்ரி பற்றி வரையறுத்துள்ளார். இம்மொழியின் வட்டாரங்கள் பற்றி வரையறுத்துக் கூறியது: சிந்து ஓ லாகூரி ஓ காஷ்மீரி ஓ தூதர் எனக் குறிப்பிடுகிறார்.

**பெயர் தோற்றக் கோட்பாடுகள்**

மகாராஜா ரன்பீர்சிங், குலாப்சிங்சின் மகனாவார். இவர் ஜம்மு மற்றும் காஷ்மீர் பற்றி வரையறுத்து 'துக்கர்' என்று கூறினார். மொழியியலாளர் ஜார்ஜ் ஜியர்சன் துக்கர் என்ற வார்த்தையை ராஜ தானியுடன் சேர்த்து 'தூங்கர்' அதாவது 'மலை' மற்றும் 'தோக்ரா' மற்றும் 'டோங்கர்' எனக் குறிப்பிடுகிறார். ராஜ தானியிலிருந்து தோக்ரியில் பல முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டன. தூங்கர் பின்னர் துக்கர், டோங்கர் பின்னர் தோக்ரா என அறியப்படுகின்றன. துக்கர் எவ்வாறு தோக்ரா ஆனது எனச் சில அறிஞர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மற்றொரு விதத்தில் துக்கர் என்ற வார்த்தை பூரிசிங் மு லீம்களால் (சம்பா, இமாச்சல பிரதேசம்) கொண்டுவரப்பட்டது: துர்க்கர் என்பதின் பொருள் 'வெல்தல்' என்பதாகும். ஏராளமான வட இந்தியர்களின் மொழி, இவர்களின் நிலப்பரப்பு, வரலாற்று இராணுவம் மற்றும் தன்னாட்சி தோக்ரா சங்கங்களின் கடின உழைப்பு ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றனர். இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் தோக்ரி, யுனா, சிட்பூர்ணி, தாங்ரா மற்றும் பிலா பூர் பகுதியில் தோக்ரி மொழி பேசப்படுகிறது.

1976 ஆம் ஆண்டு தார்வாரில் நடைபெற்ற அனைத்திந்திய ஒருங்கிணைந்த மாநாட்டில் மொழி அமர்வு பற்றி நிபுணர்கள் கலந்தாய்வு செய்தனர். டிவிகார்ட் மற்றும் துர்க்கர், தூங்கர் தூக்கர் பற்றி கருதுகோள்களை அவர்களால் அமைக்க முடியவில்லை. பின்னர் 1982 இல் ஜெய்ப்பூரில் நடைபெற்ற அகில இந்திய ஒருங்கமைவு மாநாட்டில் மொழியியலாளர்கள் பண்பாடு, மொழி ஆகியவற்றில் ராஜ தான் மற்றும் துக்கர் ஆகியவற்றில் ஒரு ஒற்றுமை உள்ளது என ஒப்புக் கொண்டனர். துக்கர் அல்லது தோக்ரா எனும் வார்த்தைகள் ராஜ தான் பகுதியில் பொதுவாக உள்ளது. குறிப்பாகக் கோட்டைகள் கொண்ட பெரிய பகுதிகள் துக்கர் என்று அழைக்கப்படுகின்றன. மற்றும் சிலர்

தோக்ரா என்று அழைக்கின்றனர். தரம்சந்த் பிரசாந்த் எழுதிய ஒரு கட்டுரையில் சிராசா டேக்ரியை வலியுறுத்தி துக்கர் பற்றிய வார்த்தைக்கு இதன் பொருள் விளக்கம் மற்றும் ஒலி அமைப்பும் கொடுக்கப் பட்டுள்ளன.

துர்க்கி தோகுர் மற்றும் துர்க்மென் ஒகு எனும் பழங்குடியினர் மத்திய ஆசியா மற்றும் துர்து பகுதியில் இருந்தனர். இந்தத் துர்க்கி பகுதியிலிருந்து தோகா, துகிர், தோகர் ஆகியவை எழுதப்பட்டன.

**சமீபத்திய வரலாறு**

நவீன காலத்தில் சம கிருதம், உன்னதமான கணித இசைப்பாடல் லீலாவதியை (தக்ரி எழுதுதல்) கணிதமேதை பா கராச்சார்யா (கி.பி. 1114) ஜம்முவில் உள்ள வித்யவிலா அச்சு மூலம் 1873 இல் வெளியிட்டார். சம கிருத அறிவு குறைந்த அளவில் இருந்ததால் மஹாராஜா ரான்பீர் சிங் லீலாவதியைத் தோக்ரியில் கோத்ஷி பி ஹேவர் மொழிபெயர்த்தார்.

**எழுத்துமுறை**

தோக்ரி முதலில் தக்ரி எழுத்தில் எழுதப்பட்டது. இது சாரதா எழுத்துடனும் காஷ்மீரி, குர்முகி எழுத்து, பஞ்சாபி எழுதவும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்தியாவில் தேவநாகரியில் எழுதப்படுகிறது. பாகி தான் நிர்வகிக்கும் காஷ்மீர் பகுதியில் பாரசீக அரபு வடிவ்மான நா தாலிக் பயன்படுத்தப்படுகிறது.

**உயிரெழுத்துக்கள்**



**மெய்யெழுத்துக்கள்**




**எண்கள்**




**இலக்கியம்**

தோக்ரி கவிதை அறிவியல் மற்றும் நாடகப் படைப்புகளுக்கான ஒரு பாரம்பரியம் உண்டு. அண்மைய கவிஞர்களான பேராசிரியர் ராம்நாத் சா திரி மற்றும் திருமதி பத்மா சச்தேவ் ஆகியோர் 18 ஆம் நூற்றாண்டு தோக்ரி கவிஞர்கள் ஆவர். கவி டட்டுவின் உயரிய படைப்பான மாஸா (12 மாதங்கள்) கமல்நேத்ரா (தாமரை கண்கள்) பூப் பிலாஜ் மற்றும் பிர் பிலா ஆகியவை பிரபலமானவையாகும். தோக்ரி பருவ இதழ்கள் ஜம்மு மற்றும் காஷ்மீரின் இலக்கியப் பணி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றை வெளியிட்டன.

தோக்ரி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தின் மாநில மொழிகளில் ஒன்று. 2003 டிசம்பர் 22 அன்று தோக்ரி இந்திய அரசியலமைப்பின் இந்திய தேசிய மொழி என அறிவிக்கப்பட்டது. 1969 ஆக ட் 2 இல் சாகித்ய அகாடமி பொதுசபையில் தில்லி வல்லுநர் குழு ஒருமனதான பரிந்துரை அடிப்படையில் 'சுதந்திரமான நவீன இலக்கிய மொழி தோக்ரி' என அங்கீகரிக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டில் உரைநடை மற்றும் கவிதையில் 100 படைப்புகள் கடந்த 50 ஆண்டுகளில் தோக்ரி மொழியில் வெளியிடப்பட்டுள்ளன.

## 5. குஜராத்தி மொழி

| | |
|---|---|
| பேசப்படும் இடம் | : இந்தியா |
| பகுதி | : குஜராத்தி |
| இனம் | : குஜராத்தீ |
| பேசுவோர் எண்ணிக்கை | : 49 மில்லியன் (2007) |
| மொழிக் குடும்பம் | : இந்தோ ஐரோப்பிய<br>இந்தோ ஈரானிய<br>இந்தோ ஆரிய<br>மேற்கு<br>குஜராத்தி மொழி<br>குஜராத்தி |
| எழுத்து முறை | : குஜராத்தி எழுத்து (பிராமி)<br>குஜராத்தி ப்ரெய்லி<br>அரபு எழுத்து<br>தேவநாகரி (வரலாறு) |
| அதிகாரபூர்வ மொழி | : குஜராத் (இந்தியா) டாமன் மற்றும் டையூ,<br>தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி |

குஜராத்தி இந்தோ ஆரிய மொழி, மேற்கு இந்திய பகுதியான குஜராத்தில் பேசப்படுகிறது. இது இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் ஒரு பிரிவாகும். குஜராத்தி நவீன குஜராத்தியின் முந்தையது ஆகும் (கி.பி. 1100 1500). மேலும் இது நவீன இராஜ தானியின் மூதாதையர் மொழி ஆகும். இது இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் முதன்மை மொழியாகும். மற்றும் யூனியன் பிரதேசங்களாகிய டாமன், டையூ, தாத்ரா மற்றும் நாகர்ஹாவேலியின் அதிகாரப்பூர்வ மொழியாகவும் உள்ளது.

மத்திய புலனாய்வு நிறுவனம் (CIA) 4.5% இந்திய மக்கள் தொகையில் 1.21 மில்லியன் மக்கள் (2011 கணக்கெடுப்பு) 54.6 மில்லியன் மக்கள் குஜராத்தி மொழி பேசுகின்றனர். உலக அளவில் 65.6 மில்லியன் மக்கள் குஜராத்தி மொழி பேசுகின்றனர். இது உலகில் அதிகமாகப் பேசப்படும் மொழிகளில் 26வது இடத்தில் உள்ளது. ரோமன் மற்றும்

சிந்தி ஆகியவற்றுடன் சேர்ந்து குஜராத்தியும் மேற்கத்திய இந்தோ ஆரிய மொழிகளில் ஒன்றாக உள்ளது. குஜராத்தி தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் 'இந்தியாவின் இரும்பு மனிதர்' வல்லபாய் படேல் ஆகியோரின் முதன்மை மொழியாக இருந்தது.

மற்ற முக்கிய பிரமுகர்கள் சுவாமி தயானந்த சர வதி, மொராஜி தேசாய், நர்ஸின் மேத்தா, திருபாய் அம்பானி, J.R.D.டாட்டா மற்றும் 'பாகி தான் தேசத் தந்தை' முகமது அலி ஜின்னா ஆகியோரின் முதன்மை மொழி குஜராத்தியே ஆகும்.

**வரலாறு**

குஜராத்தி (குஜரெத்தி, குஜராத்தி, குஷ்ரெட்டி, குஜ்ரத்தி, குஜாரெத்தி) எனப் பலவாறு உச்சரிக்கப்படுகிறது. இது சம கிருதத்திலிருந்து உருவான இந்தோ ஆரிய மொழி. பாரம்பரிய அடிப்படை மூன்று வரலாற்று கட்டங்களின் அடிப்படையில் ஐஹ மொழிகள் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.

1. பழைய IA (வேத மற்றும் பாரம்பரிய சம கிருதம்)

2. மத்திய IA (பல்வேறு ப்ராகிருதம் மற்றும் அப்பபிராம்ஸா)

3. புதிய IA (ஹிந்தி, பஞ்சாபி, பெங்காலி போன்ற நவீன மொழிகள்)

மற்ற IA மொழிகளிலிருந்து குஜராத்தி நான்கு விதங்களில் பிரித்துக் காட்டப்படுகிறது.

1. IA மொழிகள் வடக்கு, கிழக்கு, மேற்கு எனப் பிரிந்து புதுமையைப் புகுத்தும் பண்புகளின் அடிப்படையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

2. மேற்கத்திய, அதிலிருந்து மத்திய மற்றும் தென்பகுதி.

3. மத்திய, குஜராத்தி/ராஜ தானி, மேற்கு ஹிந்தி மற்றும் பஞ்சாபி/லகாண்டா/சிந்தி ஆகியவற்றின் அடிப்படையில் துணைச் சொற்கள் மற்றும் பிரதிப் பெயர்ச் சொற்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

4. குஜராத்தி/ராஜ தானி வழியாக குஜராத்தி மற்றும் ராஜ தானியின் துணைச் சொற்கள் 'ச்' மற்றும் 'ன்' ஆகியவை 15 ஆம் நூற்றாண்டில் உருவாயின.

**பழைய குஜராத்தி**

குர்ஜார் அப்பபிராம்சா கி.மு. (1100 1500) நவீன குஜராத்தி மற்றும் இராஜ தானி) ஆகியவை குர்ஜார்களால் பேசப்பட்டன. இவர்கள் பஞ்சாப், ராஜ்புட்டானா, மத்திய இந்தியா மற்றும் குஜராத்தின் சில பகுதிகளில் வாழ்கின்றனர். இம்மொழி இலக்கிய மொழியாக 12 ஆம்

நூற்றாண்டின் துவக்கத்தில் பயன்படுத்தப்பட்டது. குஜராத்தியில் இந்த காலத்தில் காட்சி உரைகள் போன்ற நேரடி/மறைமுகப் பெயர்ச்சொல், பிரதிப் பெயர்ச்சொல், துணைச் சொற்கள் ஆகியவை சிறப்பு அம்சங்களாக இருந்தன. இதில் 3 பாலினங்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் கி.பி. 1300 இல் குஜராத்தி மிகவும் தரப்படுத்தப்பட்ட மொழியாக தோன்றியது. பொதுவாகப் பழைய குஜராத்தி என்று அழைக்கப்படும் போது சில அறிஞர்கள் பழைய மேற்கு ராஜ தானி எனக் கூற விரும்பினர். பின் குஜராத்தி மற்றும் ராஜ தானில் ஒரு தெளிவானதாக கூறப்படவில்லை என்றும் கூறினர். நவீன ராஜ தானி அப்போது 3ஆவது பாலினத்தையும் கொண்டிருந்தது. அடிப்படையில் தவறான முடிவுகள் உச்சரிப்பில் நாசி உயிர் எழுத்து ஆகியவற்றில் காணப்பட்டது. பின் நல்ல அமைப்புடன் தொகுக்கப்பட்ட இலக்கணம் ஜெயின் துறவியும், சிறந்த அறிஞருமான ஹேமசந்திரசூரியால் எழுதப்பட்டது.

## மத்திய குஜராத்தி

கி.பி. 1500 1800 இல் மத்திய குஜராத்தி இராஜ தானில் இருந்து பிரிந்து மற்றும் வளர்ந்த ஒலியிடை மற்றும் துணை எழுத்தான E மற்றும் CH மற்றும் 'n' ஆகியவற்றில் சிறப்பாக ஒலியமைப்புடன் காணப்பட்டது. முக்கிய குஜராத்தி பேச்சொலி பழைய மற்றும் மத்திய குஜராத்தி இடையே பல மாற்றப் பண்புகளைக் கொண்டுள்ளன.

★ i மற்றும் u வளர்ச்சியடைந்து என்னும் திறந்த அசையாக உள்ளது.

★ இரு ஒத்த ஓசைகள் i, u ஆகியவை மாறி மற்றும் ஆரம்ப அசையாக மாற்றம் பெற்றுள்ளன.

★ வளர்ச்சியடைந்து எனும் ஆரம்ப அசையாகவும், முடிவில் எனும் அசையாகவும் மாறும்.

இந்த வளர்ச்சிகள் இலக்கண விளைவுகளை ஏற்படுத்தின.

## நவீன குஜராத்தி (கி.பி. 1800 முதல்)

ஒரு பெரிய பேச்சொலி மாற்றங்கள் நவின குஜராத்தியில் இருந்தது. வார்த்தைகளில் நீக்கம் செய்யப்பட்டது. இறுதியில் மெய்யெழுத்தைக் கொண்டிருந்தது. புதிதாக இலக்கணத்தில் பன்மை தோன்றியது. 19 ஆம் நூற்றாண்டின் மூன்றாவது காலாண்டில் ஒரு தொடர் மைல் கல்லை ஏற்படுத்தியது. முன்னதாகப் பல மேலாதிக்க இலக்கியக் கட்டுரைகள் தோன்றின.

★ 1840 முதல் தனிப்பட்ட நாட்குறிப்புக் கட்டுரை (நித்யானந்த், துர்காராம் மேத்தாஜி)

★ *1851* முதல் கட்டுரை (நர்மதாசங்கர் லால்சங்கர் தேவ்)

★ *1866* முதல் நாவல் (கரன் கேலோ, நந்தாசங்கர் மேதா)

★ *1866* முதல் சுயசரிதை (நர்மதாசங்கர் லால்சங்கர் தேவ்)

**புவியியல் பகிர்மானம்**

சுமார் 46 மில்லியன் குஜராத்தி பேசுவோர் உள்ளதாக 1997 கணக்கெடுப்பு கூறுகிறது. 45.5 மில்லியன் பேர் இந்தியாவிலும், 150,000 பேர் உகண்டாவிலும் 250,000 பேர் தன்சானியாவிலும், 50,000 பேர் கென்யாவிலும், 100,000 பேர் கராச்சியிலும் குஜராத்தி மொழி பேசுவோர் உள்ளனர். இன்னும் சுய அடையாளம் இல்லாத ஆயிரக்கணக்கானோர் இம்மொழியைப் பேசுகின்றனர். இன்னும் சில மொரீசியன்கள் மற்றும் ரீயூனியன் தீவில் வாழ்பவர்களும் குஜராத்தி பேசுகின்றனர்.

ஒரு பெரிய குஜராத்தி சமூகம் மும்பையில் (2.1 மில்லியன்) உள்ளனர். மேலும் ஒரு கணிசமான குஜராத்தி மொழி பேசுவோர் அமெரிக்காவிலும், முக்கியமாக நியூயார்க், கனடாவிலும் அதிகமானோர் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதிகமாகப் பேசப்படும் மொழிகளில் குஜராத்தி நான்காவது இடத்தில் உள்ளது. இலண்டனிலும் 200,000 பேச்சாளர்களும் மற்றும் பர்மிங்காம், மான்செடர் மற்றும் லெய்செய்டர், காவென்டரி, பிராட்போர்டு மற்றும் லங்காஷயர் ஆகிய ஆலை நகரங்களிலும் பேசப்படுகிறது.

குஜராத்தி மக்களால் பேசப்படுவது மட்டுமன்றி, குஜராத்தியில் குடியேறுபவர்களாலும், இம்மொழி பேசப்படுகிறது. இவர்கள் இம்மொழியைத் தாய்மொழியாக ஏற்றுக் கொள்கின்றனர். பாரசீக மற்றும் சிந்தி அகதிகளாலும் பேசப்படுகிறது. இதனை இந்த புவியியல் பகிர்மானத்தை ஏ.ஜார்ஜின் 'இந்திய மொழியியல் ஆய்வு' மூலம் அறியலாம்.

**அதிகாரப்பூர்வ நிலை**

குஜராத்தி இந்தியாவின் 22 அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாகவும் 14 பிராந்திய மொழிகளில் ஒன்றாகவும் உள்ளது. இது அதிகாரப்பூர்வமாக இந்தியாவின் குஜராத் மாநில மொழியாக உள்ளது.

**வட்டார வழக்கு**

நிலையான வட்டார வழக்கு பரோடாவிலிருந்து அகமதாபாத் மற்றும் வடக்குப் பகுதியில் பேசப்படுகிறது. அதன் வட்டார அமைப்பு பின்வருமாறு:

★ காமேடியா (அகமதாபாத், வதோதரா)

★ காகரி

★ கதியாவாடி (சௌராஷ்டிரா)
★ கார்வர்
★ பார்சி
★ நிலையான குஜராத்தி (மும்பை குஜராத்தி)
★ டரிமுக்கி

**பெரிய வட்டாரம்**

வில்லியம் டி டால் (1892) குஜராத்தியில் ஒரு எளிமையான இலக்கணத்தை வரையறுத்தார். அதில் பெரிய வட்டார மொழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை:

**இந்து குஜராத்தி**

இந்து குஜராத்தி, அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது.

**பார்சி குஜராத்தி**

பார்சி குஜராத்தி, பேச்சு மற்றும் எழுத்து ஜோரோஷ்டிரிய பார்சியர்களால் எழுதப்பட்ட மொழி. இது சாதாரண குஜராத்தியிலிருந்து சில குறிப்பிட்ட மத சம்பந்தமான வார்த்தைகளில் மாறுபட்டு காணப்படுகிறது. அரபு மற்றும் பாரசீகத்திலிருந்து பெறப்பட்ட சில தூய பாரசீக வார்த்தைகளும் சாதாரண குஜராத்தியிலிருந்து வேறுபடுகின்றன.

**புலம்பெயர் வட்டாரம்**

கிழக்கு ஆப்பிரிக்கா போன்ற புலம்பெயர்ந்த பகுதிகளில் உள்ள குஜராத்தி சமூகத்தினரால் குஜராத்தி உள்ளூர் வட்டாரச் சொற்களிலிருந்து வார்த்தைகள் கடனாகப் பெறப்படுகின்றன.

**மிக நெருக்கமான மொழிகள்**

கட்ச், இது கோஜ்கி என்றும் அழைக்கப்படுகிறது. இது குஜராத்தியின் வட்டார மொழியாக உள்ளது. மொழியியலாளர்கள் குஜராத்தி சிந்தியுடன் நெருக்கமாக உள்ளதாகக் கருதுகின்றனர். கூடுதலாகச் சிந்தி, குஜராத்தி மற்றும் கட்ச் ஆகியவை கலந்த ஒரு கலவையாக 'மெமோனி' என அழைக்கப்படுகிறது. இது குஜராத்தியுடன் தொடர்புடையது.

**இலக்கணம்**

குஜராத்தி ஒரு தலை இறுதி அல்லது இடது கிளைமொழி ஆகும். பெயரடைகள், பெயர்ச்சொல், வினைச்சொல், பிரதிப்பெயர்ச்சொல் ஆகியவை உள்ளன. குஜராத்தியின் வார்த்தை அமைப்பு பெயர், பொருள், வினை அடிப்படையில் உள்ளது. மேலும் மூன்று பாலினம்,

இரண்டு எண்களைக் கொண்டுள்ளது. சுட்டிடைச் சொற்கள் இல்லை. ஆனால் வினைச்சொல் வேரைக் கொண்டுள்ளது. முன்னொட்டு, பின்னொட்டு, இணைப்புச் சொல், காலங்கள், நிலை ஆகியவற்றையும் சுட்டிக் காட்டுகின்றது. செய்வினை, செயப்பாட்டு வினை ஆகியவையும் உருவ அமைப்பும் குஜராத்தி இலக்கணத்தில் உள்ளது.

**ஒலியியல்**

குஜராத்தி *36* மெய்யெழுத்துக்களும், *24* உயிரெழுத்துக்களும் கொண்டு மொத்தம் *60* பேச்சொலிகளைக் கொண்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்படுவதில்லை.

**எழுத்து முறை**

மற்ற நகரி எழுத்து முறைகள் போன்று குஜராத்தி எழுத்து ஒரு அபுகிடா ஆகிறது. இது குஜராத்தி மற்றும் கட்ச் மொழி எழுதப் பயன்படுகிறது. இவை தேவநாகரியிலிருந்து கிடைமட்ட வரிகள் மற்றும் எழுத்திலிருந்து சிறிய எண்ணிக்கையில் மாறுபடுகிறது.

குஜராத்தி மற்றும் அதனுடன் நெருங்கிய தொடர்புடைய கட்ச் ஆகியவை அரபு அல்லது பாரசீக எழுத்தில் எழுதப்படுகிறது. இது பாரம்பரியமாகக் குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் செய்யப்படுகிறது. குஜராத்தி எழுத்து தேவநாகரியிலிருந்து பெறப்பட்டது. முதன்முதலில் குஜராத்தி கையெழுத்துப் பிரதி *1592* இல் எழுதப்பட்டது. இந்த எழுத்து முதன்முதலில் *1797* இல் அச்சிடப்பட்டது. *19* ஆம் நூற்றாண்டு வரை எழுதுவதற்கு இலக்கிய மற்றும் கல்வி சார்ந்தவற்றிற்கும் தேவநாகரியே பயன்படுத்தப்பட்டது.

**உயிரெழுத்துக்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| અ | આ | ઇ | ઈ | ઉ | ઊ | ઋ |
| a [ə] | ā [a] | i [i] | ī [i] | u [u] | ū [u] | ṛ [ru] |
| પ | પા | પિ | પી | પુ | પૂ | પૃ |
| pa | pā | pi | pī | pu | pū | pṛ |
| એ | ઐ | ઓ | ઔ | અં | અઃ | અઁ |
| e [e, ɛ] | ai [əy] | o [o, ɔ] | au [əu] | aṃ [əŋ] | aḥ [əh] | ã [ə̃] |
| પે | પૈ | પો | પૌ | પં | પઃ | પઁ |
| pe | pai | po | pau | paṃ | paḥ | pã |

## மெய்யெழுத்துக்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ક | ખ | ગ | ઘ | ઙ | ચ | છ | જ | ઝ | ઞ |
| ka | kha | ga | gha | ṅa | ca | cha | ja | jha | ña |
| [kə] | [kʰə] | [gə] | [gɦə] | [ŋə] | [ʧə] | [ʧʰə] | [ʤə] | [ʤɦə] | [ɲə] |
| ટ | ઠ | ડ | ઢ | ણ | ત | થ | દ | ધ | ન |
| ṭa | ṭha | ḍa | ḍha | ṇa | ta | tha | da | dha | na |
| [ʈə] | [ʈʰə] | [ɖə] | [ɖɦə] | [ɳə] | [tə] | [tʰə] | [də] | [dɦə] | [nə] |
| પ | ફ | બ | ભ | મ | ય | ર | લ | વ | |
| pa | pha | ba | bha | ma | ya | ra | la | va | |
| [pə] | [fə] | [bə] | [bɦə] | [mə] | [jə] | [rə] | [lə] | [ʋə] | |
| શ | ષ | સ | હ | ળ | ક્ષ | જ્ઞ | | | |
| śa | ṣa | sa | ha | ḷa | kṣa | jña | | | |
| [ʃə] | [ʃə] | [sə] | [ɦə] | [ɭə] | [kʃə] | [ʤɲə] | | | |

## இணைப்பு மெய்யெழுத்துகள்

A selection of conjunct consonants

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ખ્ખ | ગ્ક | ઘ્ક | ચ્ક | ઙ્ક | ણ્ક | ત્ક | ધ્ક | ન્ક | પ્ક |
| khkha | gka | ghka | cka | ṅka | ṇka | tka | dhka | nka | pka |
| બ્ક | ભ્ક | મ્ક | ય્ક | શ્મ | શ્લ | ષ્ટ | શ્ચ | ઙ્ક | ક્ર |
| bka | bhka | mka | yka | śma | śla | ṣṭa | śca | ṅka | kra |
| ખ્ર | ટ્ર | ર્ક | શ્ર | ત્ર | દ્ર | હ્ર | હ્ય | હ્મ | દ્વ |
| khra | ṭra | rka | śra | tra | dra | hra | hya | hma | dva |
| દ્ધ | દ્મ | દ્ય | ટ્ટ | ડ્ડ | ટ્ઠ | ઢ્ઢ | ત્ત | દ્દ | |
| ddha | dma | dya | ṭṭa | ḍḍa | ṭṭha | ḍhḍha | tta | dda | |

**எண்கள்**




**இலக்கியம்**

குஜராத்தி இலக்கியம் பல சிறப்பு வாய்ந்த எழுத்தாளர்களைக் கொண்டுள்ளது. நரசிம்ம மேத்தா குஜராத்தின் முதல் கவிஞராகக் கருதப்படவில்லை. ஆனால் இவர் குஜராத் கவிதையின் தந்தை என அழைக்கப்பட்டார். இவருடைய கோவிந்தகமானா மற்றும் சுடாமா சரிதா ஆகியவை மிக பிரபலமானவை. மகாபாரத்திலிருந்து பெறப்பட்ட கிருஷ்ணரின் வாழ்க்கைப் பற்றிக் கூறியது ஒரு சிறந்த தரத்தை உருவாக்கியது. பாலானா மற்றொரு சிறந்த கவிஞராக இக்காலத்தில் விளங்கினார். இவரது படைப்புகள் காதம்பரி, நளக்கேயனா மற்றும் ராமபாலச்சரித்தரா ஆகியவையாகும். பானா பாட்டா சம கிருத உரையான காதம்பரி பாலானாவின் ஒரு மிகச் சிறந்த படைப்பாகும். நாக்கரா மற்றும் விஷ்ருதாஸா ஆகியோர் அகாயானா இலக்கியத்தை வளர்ச்சியடையச் செய்தனர். இவர்களால் இராமாயணம், மகாபாரதம் மற்ற புராணங்கள் அனைத்தும் குஜராத்திற்கு கொண்டுவரப்பட்டன. ஆக்னோ குஜராத்தில் வேதக் கவிதைகளின் சாதனையாளர் ஆவார்.

16 ஆம் நூற்றாண்டில் காதல் கவிதைகள் ஜெயின் மற்றும் ஜெயின் அல்லாத கவிஞர்களால் எழுதப்பட்டன. தலபாத்ரம் மற்றும் நர்மத் ஆகியோர் இக்காலத்தில் புதிதாகத் தோன்றினர். இவர்கள் அறிஞர்கள் மற்றும் பாரம்பரிய கவிஞர்கள் ஆவர். நந்தசங்கர் கர்மா கேல் முதல் குஜராத்தி நாவல் ஆகும். ஆனால் அதிக பிரபலமான நாவல் சர வதி சந்திரா ஆகும்.

அடுத்ததாகச் சிறந்த படைப்பாளி கே.எம்.முன்ஷி. இவர் ஏராளமான வரலாறு மற்றும் சமூக நாவல்களைப் படைத்துள்ளார். இவரது ஜாய் சோம்நாத் படைப்பு குஜராத்தி, ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. இவரது புத்தகமான 'மகாத்மா காந்தி, நான் மகாத்மா காந்தியைப் பின்பற்றுவேன்' புத்தகம் மிகச் சிறந்தது. இது குஜராத்தி மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப் பட்டுள்ளது. இவர் படைத்தளித்த காந்தியம் பற்றிய புத்தகத்தை

யாராலும் மறக்க முடியாது. காகா கலேல்கரின் மரண யாத்ரா் இவரது சுயசரிதையாகும். இவரது படைப்புகள் குஜராத்தியில் மிகச் சிறந்ததாகும்.

சமகாலத்தில் குஜராத்தி இலக்கியம் செழிப்படைந்தது. இக்காலத்தில் மிகச் சிறந்த படைப்பாளர்களான சுந்தரம் மற்றும் உமாசங்கர் ஜோதி ஆகியோர் சிறந்து விளங்கினர். இந்த நவீன காலத்தில் இவர்கள் இரட்டைக் கவிஞர்களாக விளங்கினர். காவ்யமங்கலா மற்றும் யாத்ரா ஆகியவை கவிஞர் சுந்தரத்தின் மிகச் சிறந்த படைப்புகளாகும். ஜோசியின் விஷ்வசந்தி காந்திஜி வாழ்க்கையின் நீண்ட கவிதையாகும். இவரது இறுதிப் படைப்பான சப்தபதியும் சிறப்பு வாய்ந்தது. இவரது படைப்புகளில் காதல், இயற்கை, கடவுள், சுதந்திரம், அன்றாட வாழ்க்கைப் பற்றிய எழுத்துக்களே அதிகமாக உள்ளன. இவருடைய 'நிசீத்' புத்தகம் பாரம்பரியமானது. மற்றும் பன்னாலா படேல், தனுஷ்க்லால் மேத்தா, சி,எல்.மேத்தா, உமர்வாதியா, சிவகுமார், ஜோஷி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவ்ர். குஜராத்தி இலக்கியம் இரண்டு ஞானபீடவிருது மற்றும் பல சாகித்ய அகாடமி விருதுகளைப் பெற்று பெருமையுடன் திகழ்கிறது.

## 6. இந்தி மொழி

| | |
|---|---|
| உச்சரிப்பு | : ஹிந்து தானி உச்சரிப்பு |
| பேசப்படும் இடங்கள் | : இந்தியா, நேபாளம், தென்ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் |
| பேசுபவர்கள் | : *180 மில்லியன்* |
| மொழிக் குடும்பம் | : இந்தோ ஐரோப்பியா<br>இந்தோ இரேனியன்<br>இந்தோ ஆர்யன்<br>மத்திய பகுதி<br>மேற்கத்திய இந்தி<br>இந்து தான்<br>கரிபோளி<br>இந்தி |
| எழுத்துமுறை | : தேவநாகரி (பிராமிக்)<br>இந்தி ப்ரெய்லி |
| குறியீட்டு வடிவம் | : குறியீட்டு இந்தி |
| அலுவல் மொழி | : இந்தியா |

**வரலாறு**

இந்தி என்ற வார்த்தை இந்த் (Hind) என்ற எழுத்துடன் பின் க் (ik) என்று சேர்க்கப்பட்டு, இரண்டும் இணைந்து இந்திக் (Hindik) எனப்பட்டது. பின்னர் சில மாற்றங்களுக்குப் பின் 'க்' (k) என்ற எழுத்து நீக்கப்பட்டு இந்தி (Hindi) எனப்பட்டது. இந்தி (Hindi) என்பதன் பொருள் 'இந்து' அல்லது 'இந்தியன்' ஆகும். பல நாட்டு மக்களும் பயன்படுத்தும் வார்த்தையான 'இந்தி' என்பது இந்தி மொழியைக் குறிக்கிறது.

இந்தி இந்தியாவின் தேசிய மொழி. உலகில் அதிகமாகப் பேசப்படும் மொழிகளுள் ஆங்கிலம், மாண்டரின் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக இந்தி உள்ளது. இந்தி இந்தோ ஆரியன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இந்தி மொழி இந்தியாவில் நிர்வாகத்துறை,

ஊடகத்துறை, கல்வி, இலக்கியம் ஆகிய துறைகளில் பயன்படுகிறது. டெல்லி, உத்திரப்பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், இராஜ தான், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பேசப்படுகிறது. ஆங்கிலத்திற்கு அடுத்த மொழியாக இந்தி அதிகமான மக்களால் பேசப்படுகிறது.

இந்தி, பங்களாதேஷ், பிளெய், போ ட்வானா, கனடா, ஜெர்மனி, கொய்னா, கென்யா, நேபாளம், நியூசிலாந்து, பிலிப்பைன், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா, சூரினேம், தரிநாத், உகண்டா, அமெரிக்கா, இலண்டன், ஏமன், சாம்பியா ஆகிய நாடுகளிலும் பேசப்படுகிறது. இந்தி உருதுமொழிக்கு மிக நெருக்கமான மொழி ஆகும். இந்தியா, பாகி தானில் முக்கிய மொழியாக உள்ளது. இது அரபிய எழுத்துமுறையில் எழுதப்பட்டுள்ளது.

**பேச்சு வழக்கு**

இந்தி அதிகமான இடங்களில் பேச்சு மொழியாகக் காணப்படுகிறது. இது வடக்கு மற்றும் தெற்கு என்று பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கு உத்திரப்பிரதேசம், ஹரியானாவின் சில மாவட்டங்களிலும், மத்தியப் பிரதேசத்திலும் பேச்சுவழக்கு மொழியாக உள்ளது. இது ப்ராஜ் எனப்படுகிறது. பண்டெலி (வடக்கு மத்திய மத்தியப்பிரதேசம், தென் மேற்கு உத்திரப்பிரதேசம்), கானுக் (மேற்கு மத்திய உத்தரப்பிரதேசம்), பாங்குரு (ஹரியானா), இந்து தானி (டில்லி, சுற்றுவட்டாரப் பகுதி), சுவாதி (வடக்கு மத்திய உத்திரப்பிரதேசம்), சட்டீ கரி (சட்டீ கர்ரா), தெற்கு இந்தி பேச்சு வழக்கு அதிகமான பல வகைகளுடனும் காணப்படுகிறது. இதனுடன் பல இராஜ தானி மொழிகளும் (மார்வாரி என்பது அதிகமாக பேசப்படுகிறது) பீகாரி, மைதிலி, போஜ்புரி, கிழக்கு உத்திரப்பிரதேசம், மேற்கு மத்திய பீகார், தாரை மற்றும் ரேபாலி ஆகிய இடங்களிலும் பேச்சுவழக்கில் உள்ளது.

**இந்தி, உருது மற்றும் இந்துஸ்தானி**

உருது, இந்து தானி ஆகிய மொழிகள் இந்திமொழி போன்றே காணப்படுகின்றன. இந்தி போன்ற உருது இலக்கணத்துடன் கூடிய தாய் மொழியை பேச்சுமொழியாக டெல்லியின் சில பகுதிகள் கொண்டுள்ளன.

இதன் சொற்றொகுதி பெர்சியன் மற்றும் அரேபிய சொற்களிலிருந்து அதிகமாகக் கடன்வாங்கப்பட்டுள்ளது. தேவநாகரி இடமிருந்து வலமாக எழுதப்படுகிறது. உருது வலமிருந்து இடமாக எழுதப்படுகிறது. உருது, இந்தி ஆகிய மொழிகளுக்கிடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**ஒலி அமைப்பு**

ஒலி அமைப்பு ஒலி உறுப்புகள் உருவாக்கும் ஒலியின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

1. ஆரம்பநிலை
2. ஒலியமைப்பு
3. தெளிவான உச்சரிப்புநிலை

ஆகியவை ஆகும்.

**வரலாறு**

இந்தி மற்ற இந்தோ ஆரிய மொழிகளைப் போல் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சௌரசேனி பிராகிருதத்திலிருந்து உருவானது என்று பி.என். திவாரி என்ற அறிஞர் கூறுகிறார். இந்தியின் வளர்ச்சி மூன்று காலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது என்றும், பழைய காலம் 1000 முதல் 1500 வரை என்றும், மத்திய காலம் 1500 முதல் 1800 வரை என்றும், தற்காலம் 1800 முதல் என்றும் கூறியுள்ளார். இக்கால இந்தியில் நூற்றுக்கணக்கான அரேபிய, பெர்சிய, துருக்கி, புஷ்டோ சொற்கள் புகுந்துள்ளன என்றும் கூறுகிறார்.

இந்தி இலக்கியத்தில் பழைய கரிபோலி, பிரிஜ்பாஷா, பழைய மைதிலி, பழைய ராஜ தானி ஆகிய மொழிகளின் தாக்கம் உள்ளதாகவும், பழைய இந்தியிலும், மத்தியகால இந்தியிலும் இம்மொழிகளின் செல்வாக்கு உள்ளதாகவும் கூறுகிறார். பழைய இந்தியைக் கரிபோலி படித்தவர் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்று எ.கே.சாட்டர்ஜி கூறியுள்ளார்.

இந்தி கரிபோலியை அடிப்படையாகக் கொண்டது. டில்லி வட்டாரம், மேற்கு உத்திரப்பிரதேசம், தெற்கு உத்தரகண்ட் பகுதிகளிலும் இந்தி பேசப்படுகிறது. இந்தக் கிளை முகலாயப் பேரரசு (கி.பி. 17 ஆம் நூ.) உருது மொழியைக் கொண்டிருந்தது. இதை நீதிமன்ற மொழியாகவும் அறிவித்தது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வட இந்தியாவில் கரிபோலியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு எழுத்துமுறை பின்பற்றப்பட்டது. இது உருதுவிலிருந்து தனிமைப்படுத்தி காணப்பட்டது. பின் 1881 ஆம் ஆண்டில் பீகார் உருதுக்குப் பதிலாக இந்தியை அதன் அலுவல்நிலை மொழியாக ஏற்றுக் கொண்டது.

1954 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் ஒரு குழு அமைத்து இந்தி இலக்கணத்தை உருவாக்கி 'நவீன இந்தி ஒரு அடிப்படை இலக்கணம்' என 1958 ஆம் ஆண்டு வெளியிட்டது. எழுத்து வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு சீரான எழுத்துக்களைத் தேவ நாகரியிலிருந்து உருவாக்கப் பயன்படுத்தி, தரநிர்ணயம் ஏற்படுத்த மத்திய

இந்திய இயக்குநரகத்தின் கல்வி மற்றும் கலாச்சார அமைப்பு முனைப்புடன் செயல்பட்டு அறிமுகப்படுத்தியது. பின் அரசியல் நிர்ணய சபையால் செப்டம்பர் 14, 1949 அன்று ஒன்றியத்தின் அலுவல்நிலை மொழியாக இந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே இந்நாள் இந்தி தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இக்கால இந்தியில் கரிபோலியின் மேலாண்மை நன்கு தெரிகிறது என்றும், அதுவே டெல்லி பகுதியில் அதிகமாகப் பேசப்படுகிற தென்றும், அவதியும் பிரிஜ்பாஷாவும் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன என்றும், கரிபோலியை அராபிக் மற்றும் பாரசீகச் சொற்கள் வளப்படுத்தியுள்ளன என்றும் திவாரி கூறுகிறார்.

**சொற்றொகுதி**

இந்தி சொற்றொகுதியில் 4000க்கும் மேற்பட்ட சொற்கள் தினசரி வாழ்க்கையில் பாரசீக மற்றும் அரபுச் சொற்கள் அறிவியல், தொழில் நுட்பம், ஆட்சி, சட்டம் ஆகிய துறைகளில் பயன்படுகின்றன என்றும் ஆங்கிலம் மற்றும் சம கிருத வேர்ச்சொற்களில் உருவானவையும் பயன்படுகின்றன. முறையான இந்திய வார்த்தைகள் அதிகமாகச் சம கிருதத்திலிருந்து பெறப்பட்ட வார்த்தைகளைக் கொண்டுள்ளன. முறைசார்ந்த இந்தி கடன்பெறப்பட்ட வார்த்தைகள் ஐந்து முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளன.

**1. Tatsam வார்த்தைகள் :**

இவை இந்தியிலும் சம கிருதத்திலும் ஒரே மாதிரியாகவே எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவை எந்த மாற்றமும் இல்லாமல் பிராகிருதத்திலிருந்து சம கிருதம் வழியாகப் பெறப்பட்ட வார்த்தைகள் ஆகும்.

(எ கா.) இந்து தானியில் சூயஅ (நாம்)
சம கிருதத்தில் நாமா (பெயர்)
இந்து தானியில் சுராஜ்
சம கிருதத்தில் சூரியா (சூரியன்)

அத்துடன் நவீன காலத்தில் சம கிருதத்திலிருந்து நேரடியாகக் கடன் வடிவங்கள் பெறப்பட்டன. பிரார்த்தனா பிரார்த்தனை எனப்பட்டது. எனினும் உச்சரிப்பு சம கிருதத்திலிருந்து இந்தியில் மாற்றம் பெற்றுக் காணப்படுகிறது.

**2. Avdhatatsan வார்த்தைகள்**

இத்தகைய வார்த்தைகள் சம கிருதத்திலிருந்து பெறப்பட்ட ஒலி மாற்றம் பெற்ற வார்த்தைகள்.

**3. Tadbhav (என்று பிறந்த) வார்த்தைகள்**

இந்த வார்த்தைகளின் எழுத்துக்கள் சம கிருதத்திலிருந்து மாறு பட்டதாகக் காணப்படுகின்றன. இதன் பேச்சொலிகள் சம கிருதத்தி லிருந்து மாற்றம் பெற்றுள்ளன. (எ கா.) சம கிருத கர்மா, பாலியில் கம்மா 'பத்திரம்' ஆகிறது. இறுதியில் 'கம்' இந்தியில் 'வேலை' எனப்படுகிறது.

**4. Deshaj வார்த்தைகள்**

இதில் கடன் பெறப்பட்ட வார்த்தைகள் எதுவும் பயன்படுத்துவ தில்லை. முக்கியமான இந்தோ ஆரிய மொழிகளில் பெறப்பட்ட எழுத்துக்களில் சான்றொப்பம் பெறக்கூடாது. மேலும் இதற்கான தனிப்பட்ட வார்த்தைகள் உள்ளன.

**5. Videshi அந்நிய வார்த்தைகள்**

இதில் அனைத்து வார்த்தைகளும் இந்தோ ஆரிய மொழிகளிலிருந்து கடன் பெறப்பட்ட வார்த்தைகளில் அடங்கும். இவ்வாறு அடிக்கடி கடன் பெறப்பட்ட வார்த்தைகளுள் பாரசீக, அரபு, போர்த்துக்கீசியம், ஆங்கிலம் ஆகியவையும் அடங்கும். நிலையான இந்த அகராதியில் பாரசீக, அரபு, ஆங்கில வார்த்தைகள் நீக்கப்பட்டு Tatsam வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது நிலையான தூய இந்தி என அழைக்கப் படுகிறது. மேலும் இந்தி மற்ற பேச்சுவழக்கு வடிவங்களில் ஒரு மதிப்புமிக்க கிளையாகக் கருதப்படுகிறது.

இதேபோல் உருது உருவ நோக்கங்களுக்காகத் தனிப் பிரிவாகவே பாரசீக மற்றும் அரபு மொழியிலிருந்து பெறப்பட்ட எழுத்துக்களும் சொல்லகராதியில் காணப்படுகின்றன. அதிகமான Tatsam வார்த்தைகள் தாய்மொழி பேசுவோரிடையே ஏராளமான பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன. Tatsam வார்த்தையில் அதிகமான சம கிருத மெய் கொத்து காணப்படுகிறது. ஆனால் அவை இந்தியில் இல்லை. இந்தியைப் படித்த மத்தியதர வர்க்கத்தினர் எளிமையாக வார்த்தைகளை உச்சரிக்கமுடியும். ஆனால் அது மற்றவர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்துகிறது. உண்மையான உச்சரிப்புகள் கொடுக்கப்பட்ட பாரசீக அரசு சொல்லகராதி போன்றே சிரமம் ஏற்படும்.

**இலக்கியம்**

இந்தி இலக்கியம் நான்கு முக்கிய பகுதிகளைக் கொண்டு காணப்படுகிறது.

1. Shungar (*அழகு கேசவ், பிஹாரி*)
2. abir, Raskhan (*பக்தி இலக்கியம்*)

3. Virgatha (பராக்கிரமசாலிகளைப் புகழ்தல்)
4. Adhunic (நவீனம்)

இடைக்கால இந்தி இலக்கியம், பக்தி இயக்க செல்வாக்கு மற்றும் நீண்ட காவிய கவிதைகளின் தொகுப்பாகக் குறிப்பிடப்படுகிறது. முதன்மையாகக் கரிபோலியில் உள்ள இந்தி குறிப்பாக அவதி மற்றும் பிரிக்பாஷா வகையில் எழுதப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது இந்து தானி கிளை மாறி பெரிதும் சம கிருதம் ஈடுபடுத்தப்பட்ட சொல்லகராதி அல்லது சாகித்யக் இந்தி (இலக்கிய இந்தி) கொண்டு சுவாமி தயானந்த சரசுவதி, பார்டெண்ட் அரிச்சந்திரா ஆகியோரின் எழுத்துக்கள் பிரபலமாயின. செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 'தேவகி நந்தந் கத்திதா' எழுதிய சந்திரகாந்தா, நவீன இந்திய உரையாடலின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இந்தி உரைநடை இலக்கியத்தில் அறிவியல் மற்றும் முற்போக்கான இயக்க உலகில் மிகவும் மரியாதைக்குரியவராக முன்ஷி பிரேம்சந்த் இருந்தார்.

இந்தி இலக்கியத்தில் திரிவேதியுக் 1900 முதல் 1918 வரை நீடித்தது. இது நவீன இந்தி மொழி நிறுவுதல், மதம் மற்றும் காதல் பாரம்பரிய கவிதைகளைப் பாடங்களில் விரிவுபடுத்தவதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தவர் மகாவீர் பிரசாத் திரிவேதி ஆவார்.

20 ஆம் நூற்றாண்டில் இந்தி காதல் இலக்கியத்தில் ஒரு எழுச்சிக் கண்டது. இது சய்யவாத் சாடோயிஸம் (Chhayavaad Shadowism) என்று அழைக்கப்பட்டது. இந்தப் புள்ளிவிவரங்கள் Chhayavaadi என்று அழைக்கப்படுகின்றது. ஜெய்ஷங்கர் பிரசாத், சூர்யகாந்த் திரிபாதி, நந்தகுமார், மகாதேவி வர்மா, சுமித்ரநந்தன் பந்த் ஆகியோர் முக்கிய கவிஞர்கள் ஆவர்.

இந்தி இலக்கியத்தில் மாறுபட்ட பல எழுத்துக்கள் காணப்பட்டது. இவை நான்கு முக்கியக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை:

1. விர் காதா (கவிதை வீரமான இராணுவ வீரர் பற்றி) 11 14 ஆம் நூற்றாண்டு.
2. பக்தி வரலாற்றுக் கவிதைகள் (பக்தி கவிதை) 14 18 ஆம்நூற்றாண்டு
3. ரிதி அல்லது அகீங்கர் கவிதைகள் (காதல் கவிதைகள்) 18 20 ஆம் நூற்றாண்டு
4. அதுனிக் இலக்கியம் (நவீன இலக்கியம்) 20 ஆம் நூற்றாண்டு முதல்

இந்த இலக்கியங்கள் பல வட்டார மொழிகளை உருவாக்கின. அவை: பிராஜ், பண்டெலி, சுவாதி, கன்னூஜ், கரிபோலி, மார்வாரி, அங்கிகா, வஜ்ஜிகா, மைதிலி, மகதி, போஜ்புரி ஆகியவை ஆகும். 20

ஆம் நூற்றாண்டிலிருந்து நிலையான இந்தி மற்றும் இந்து தானி உருவானது. இதுவே நவீன இந்திய இலக்கியம் உருவாவதற்கு முக்கிய காரணமாக இருந்தது.

**அடைக்காலம் அல்லது காதா காலம் (1050-1375)**

அடைக்கால இலக்கியம் (15ஆம் நூற்றாண்டிற்கு முன்) மத்திய இந்தியப் பகுதியான கன்னுஜ், டெல்லி, அஜ்மீர் பகுதிகளில் வளர்ச்சியடைந்தது. பிரித்விராஜ் ராசோ பற்றிய இதிகாசக் கவிதை சந்த் பார்டை அவர்களால் எழுதப்பட்டது (1149 1200). இதுவே இந்தியில் எழுதப்பட்ட முதல் இந்தி வரலாற்று இலக்கியம் ஆகும். சந்த் பார்டை அவர்கள் முகமது ஆப் கார் டெல்லி, அஜ்மீர் ஆகிய பகுதிகளில் படையெடுத்தபோது மிகச் சிறந்த ஆட்சியாளராக இருந்த பிரித்விராஜ் சௌகான் அரசவைக் கவிஞர் ஆவார்.

**பக்தி காலம் (கி.பி. 1375-1700)**

இடைக்கால இந்தியில் பக்தி சம்பந்தப்பட்ட வரலாற்றுக் கவிதைகள், கட்டுரைகள் ஆகியவை செல்வாக்குப் பெற்றிருந்தன. இந்த இலக்கியத்தில் அவதி மற்றும் பிரிஜ் பாஷா பேச்சு வழக்கு வளர்ச்சியடைந்தது. அவதி பேச்சு வழக்கின் முக்கிய வேலை மாலிக் முகமது ஜெயாசின் பத்மவாதாண்ட் மற்றும் துளசிதாசரின் இராம சரித்திரமானா ஆகியவை ஆகும். பிராஜ் பேச்சு வழக்கின் முக்கிய வேலை துளசிதாசரின் வினாய பத்ரிகா மற்றும் சுரதாஸின் சர்சசாகர் ஆகியவையாகும். சதுகாதி ஏற்கனவே மொழிகளில் பயன்படுத்தப் பட்டது. குறிப்பாகக் கபீரின் கவிதை மற்றும் தோகாவில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

**ரித்தி-காவ்ய காலம் (கி.பி. 1700-1900)**

ரித்தி காவ்ய அல்லது ரித்தி மக்ரா காவ்ய காலம், இந்தி இலக்கியத்தில் புகழ் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. இக்காலத் ரித்தி (செய்முறை) என அழைக்கப்பட்டது. ஏனெனில் இக்காலத்தில் பல கவிஞர்கள், உரைநடையாளர்கள் தோன்றினர். இக்காலத்தில் உணர்ச்சி ததும்பும் கவிதைகள் குறைக்கப்பட்டு, பக்தி சார்ந்தவை அதிகரிக்கப்பட்டன. கவிதையின் முக்கியத் தன்மை குறைக்கப் பட்டது. பக்தி இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

**அதுனிக் காலம்**

1800 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஃபோர்ட் வில்லியம் கல்லூரியைக் கல்கத்தாவில் நிறுவினர். அக்கல்லூரியின் தலைவர் ஜே.பி.கில் கிறிட் இந்து தானியில் நூல்கள் பல எழுதினார்.

இந்து தானியின் சில நூல்கள் லல்லுலாலின் பிரேம்சாகர், சதால் மி ராவின் நாசிக் கேட்டோ பாக்யான், டெல்லி சதாசுக்காலாலின் சுக்சாகர், முன்ஷி இன்ஷா, அல்லாகானின் ராணி கேட்டகி கி கஹானி ஆகியவையாகும். இந்தி உரைநடை இலக்கியத்தில் ஒரு உண்மைத் தன்மையைக் கொண்டு வந்தவர் முன்ஷி பிரேம்சந்த் ஆவார். இவர் இந்தி வளர்ச்சியிலும் கற்பனைக் கதைகளிலும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர் ஆவார். பிரேம்சந்திற்கு முன் இந்திய இலக்கியத்தில் அதிகமாகத் தேவதை அல்லது மந்திரக் கதைகள், பொழுது போக்குக் கதைகள், மதக் கருத்துக்கள் ஆகியவை இடம்பெற்றிருந்தன. பிரேம்சந்தின் நாவல்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன.

**உயிரெழுத்துக்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| अ | आ | इ | ई | उ | ऊ | ए |
| a | ā | i | ī | u | ū | e |
| [ʌ] | [a] | [i] | [iː] | [u] | [uː] | [e] |
| प | पा | पि | पी | पु | पू | पे |
| pa | pā | pi | pī | pu | pū | pe |
| ऐ | ओ | औ | अं | अः | अँ | ऋ |
| ai | o | au | aṅ | aḥ | ãṃ | ṛ |
| [æː] | [o] | [ɔː] | [aŋ] | [əh] | [ãː] | [r̩] |
| पै | पो | पौ | पं | पः | पाँ | पृ |
| pai | po | pau | paṅ | paḥ | `pāṃ | pṛ |

**மெய்யெழுத்துக்கள்**




**எண்கள்**




இது கரிபோலியிலிருந்து நிலைபெற்ற இன்றைய இந்தி மொழி ஆறு மாநிலங்களின் ஆட்சிமொழியாகவும், இந்திய நாட்டின் ஆட்சிமொழியாகவும், இந்திய நாட்டின் ஆட்சிமொழியாகவும், இலக்கிய மொழியாகவும் செழுமைப் பெற்றுள்ளது.

## 7. கன்னட மொழி

பேசப்படும் இடம் : கர்நாடகம், கேரளா, மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், கோவா, தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் வேறுசில பகுதிகளிலும் பேசப்படுகிறது.

மொழிக் குடும்பம் : திராவிட
தெற்கு
தமிழ் கன்னடம்
கன்னடம் படகா

ஆரம்ப படிவங்கள் : பழைய கன்னடம்

பேசுவோர் எண்ணிக்கை : 1,74,20,000

எழுத்துமுறை : கன்னட எழுத்துக்கள் (பிராமி) கன்னட ப்ரெய்லி அதிகாரப்பூர்வ நிலை

உத்தியோகபூர்வ மொழி : கர்நாடகம்

**வரலாறு**

கன்னடமொழி தென் திராவிட மொழிகளில் ஒன்றாகும். கன்னட மொழியானது கர்நாடக மாநிலத்திலும் மராத்தி நாட்டின் தென் பகுதியிலும் பேசப்படுகின்றது. இதனைக் 'கருநாடகம்' என்றும், 'கானரி' என்றும் அழைப்பர். கர்நாடகா என்ற வடசொல் திரிந்து இம்மொழியின் பெயராக அமைந்ததாக வடநூலார் சுட்டியுள்ளனர். இருப்பினும் டாக்டர் குண்டர்ட் இதனைத் திராவிடச் சொல்லாகவே கருதுகின்றார். நீலகிரி மலைப் பகுதியில் வாழும் படகர்கள் பேசும் மொழி கன்னட மொழியோடு பெரிதும் தொடர்புடையதாக ஒப்பியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவின் முக்கிய மொழிகளில் ஒன்றான கன்னடம் கர்நாடக மாநிலத்தில் பேசப்படுகிறது. கர்நாடக மக்களின் தாய்மொழி கன்னடம் ஆகும். உலகின் 40 மிக முக்கிய மொழிகளுள் கன்னடமும் ஒன்றாகும். கிட்டத்தட்ட 40 மில்லியன் மக்கள் கன்னடமொழியைப் பேசுகின்றனர். கர்நாடக மாநிலத்தில் அதிகார மற்றும் நிர்வாக மொழியாக கன்னட மொழி திகழ்கிறது.

கன்னட மொழியானது 5 ஆம் நூற்றாண்டில் கடம்பா என்ற எழுத்துப் படிவத்திலிருந்து வந்தது. கன்னட மொழி பற்றி ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. அதாவது பழைய கன்னடா 6 ஆம் நூற்றாண்டில் கங்கை வம்சத்தினரால் செழிப்படைந்ததாகவும், பின்னர் இராஷ்ட்டிரகூட பரம்பரையாய் மேலும் செழிப்படைந்ததாகவும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள இலக்கிய வரலாறுகள் கூறுகின்றன.

மொழியியல் நிபுணர் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்திய அரசு அதிகாரப்பூர்வமாகக் கன்னட மொழியைச் செம்மொழி என சூலை 2011 இல் அறிவித்தது. இத்தகைய கன்னட மொழி வரலாற்றை மூன்று காலங்களாகப் பிரிக்கலாம்.

கி.பி. 450 1200 பழைய கன்னடம் (ஹலே கன்னடி)

கி.பி.1200 1700 மத்திய கன்னடம் (நடு கன்னடி)

கி.பி. 1700க்குப் பிறகு நவீன கன்னடம்

எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மொழியில் பல சிறந்த ஆய்வுகளைப் பேராசிரியர் A.S.ஆச்சார்யா அவர்கள் நடத்தியுள்ளார். H.S.பிலகிரி அவர்கள் இம்மொழியின் ஒலியன்கள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

**மொழிக் குடும்பம்**

கன்னடம் திராவிட மொழிக் குடும்பங்களில் ஒன்றான தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

**சமஸ்கிருதம் மற்றும் பிராகிருத செல்வாக்கு**

கன்னட இலக்கணமானது மூன்று விதங்களில் காணப்படுகிறது. அது பாணினியின் இலக்கணம், சம கிருத இலக்கணம், முக்கியமாக காட்டத்ரா, சாகத்தன்யா பள்ளி மற்றும் பிராகிருத இலக்கணம்.

பிராகிருத மற்றும் சம கிருத இலக்கணம் பண்டைய காலத்தில் இருந்தே கர்நாடகாவில் நிலவிவந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் கன்னட ஒலி அமைப்பியல், சொல்லகராதி, இலக்கண மற்றும் தொடரியல் நிகழ்ச்சி ஆகியவற்றிலும் சம கிருத மற்றும்பிராகிருத மொழியின் செல்வாக்கு அதிகம் காணப்பட்டது.

கன்னட மொழியில் சில வம்சாவளி வார்த்தைகள் குடியேறின. உதாரணம் பண்ண (வண்ண) அரசு (ராஜா). சம கிருதத்தில் வர்ண (நிறம்), புன்னிவா (பௌர்ணமி) முழுநிலா, ஹீன்னீம் (அமாவாசை) 'ராயா'விலிருந்து ராஜா (அரசர்) ஆகிய சொற்களும் மேலும் தினா, கோபா, சூர்யா, முகா, நிமிசா, அண்ணா போன்ற சம கிருத மற்றும் பிராகிருத மொழியிலிருந்து பெறப்பட்ட வார்த்தைகளும் கலந்து காணப்படுகின்றன.

**எழுத்துமுறை**

மொழி 49 எழுத்துக்களுடன் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு காணப்படுகிறது.

Swaragalu *(உயிர் எழுத்து 13 எழுத்துக்கள்)*

Vyanjanagalu *(மெய்யெழுத்து 34 எழுத்துக்கள்)*

Yogavashakagalu *(உயிர் மற்றும் மெய் ஆகிய 2 எழுத்துக்கள்* (anusvara o *மற்றும் விசார்கா :).* இந்த பண்புருக்கள் கிட்டத்தட்ட இந்திய மொழிகள் பலவற்றில் ஒரேமாதிரியாக உள்ளன.

பிராமியிலிருந்து பெறப்பட்ட எழுத்துக்களைப் பிற இந்திய மொழிகளுடன் இணைப்பதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. ஏனெனில் இந்த எழுத்துக்கள் அரை எழுத்துக்களாகவோ அல்லது மொழிக் குறியீடுகளாகவோ காணப்படுகின்றன.

கன்னட எழுத்துமுறையானது முற்றிலுமாக ஒலிப்பு முறையை ஒத்திருந்தது. ஆனால் சில ஒலிகள் பாதியில் முடிவதாகவும் பின் முழுமை பெறுவதாகவும் உள்ளன. எனவே சில 49 எழுத்துக்களுக்கும் அதிகமாகக் காணப்படுகின்றன. கன்னட மொழியில் எழுதப்படும் ஒவ்வொரு எழுத்தும் ஒரு அசை ஆகிறது. ஆங்கிலம் போன்றே கன்னட மொழிக்கும் ஒவ்வொன்றிக்கும் ஒலி அமைப்பு காணப்படுகிறது.

**உயிரெழுத்துக்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ಅ | ಆ | ಇ | ಈ | ಉ | ಊ | ಋ | ೠ |
| ಕ | ಕಾ | ಕಿ | ಕೀ | ಕು | ಕೂ | ಕೃ | ಕೄ |
| a | ā | i | ī | u | ū | ṛ | ṝ |
| [a] | [a:] | [i] | [i:] | [u] | [u:] | [ri/ru] | [ri:/ru:] |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ಎ | ಏ | ಐ | ಒ | ಓ | ಔ | ಅಂ | ಅಃ |
| ಕೆ | ಕೇ | ಕೈ | ಕೊ | ಕೋ | ಕೌ | ಕಂ | ಕಃ |
| e | ē | ai | o | ō | au | aṃ | aḥ |
| [e] | [e:] | [ai] | [o] | [o:] | [au] | [aŋ] | [ah] |

**மெய்யெழுத்துக்கள்**

**Consonants**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ಕ | ಖ | ಗ | ಘ | ಙ | ಚ | ಛ | ಜ | ಝ | ಞ |
| ka | kha | ga | gha | ṅa | ca | cha | ja | jha | ña |
| [ka] | [kʰa] | [ga] | [gʱa] | [ŋa] | [ʧa] | [ʧʰa] | [ʤa] | [ʤʱa] | [ɲa] |
| ಟ | ಠ | ಡ | ಢ | ಣ | ತ | ಥ | ದ | ಧ | ನ |
| ṭa | ṭha | ḍa | ḍha | ṇa | ta | tha | da | dha | na |
| [ʈa] | [ʈʰa] | [ɖa] | [ɖʱa] | [ɳa] | [ta] | [tʰa] | [da] | [dʱa] | [na] |
| ಪ | ಫ | ಬ | ಭ | ಮ | ಯ | ರ | ಲ | ವ | |
| pa | pha | ba | bha | ma | ya | ra | la | va | |
| [pa] | [pʰa] | [ba] | [bʱa] | [ma] | [ja] | [ra] | [la] | [ʋa] | |
| ಶ | ಷ | ಸ | ಹ | ಳ | ಕ್ಷ | ಜ್ಞ | | | |
| śa | ṣa | sa | ha | ḷa | kśa | jña | | | |
| [ɕa] | [ʂa] | [sa] | [ha] | [ɭa] | [kʂa] | [ʤɲa] | | | |

**எண்கள்**

**Numerals**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ೧ | ೨ | ೩ | ೪ | ೫ | ೬ | ೭ | ೮ | ೯ | ೧೦ |
| ಒಂದು | ಎರಡು | ಮೂರು | ನಾಲ್ಕು | ಐದು | ಆರು | ಏಳು | ಎಂಟು | ಒಂಬತ್ತು | ಹತ್ತು |
| oṃdu | eraḍu | mūru | nālku | aidu | āru | ēḷu | eṃṭu | oṃbattu | hattu |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

**கன்னட எழுத்துக்குறிக்கும் வரலாற்றுப் படிவம்**

கன்னட இலக்கியப் படைப்புகள் அதன் ஒலிப்பு முறையில் மலையாளம் மற்றும் தமிழ்மொழியை ஒத்திருந்தது.

(R) (Rh)

மொழிபெயர்ப்பானது ர் அல்லது ற்

(l) (lh) zh

மற்றும் ல விலிருந்து S மற்றும் H ஆகிய எழுத்துக்கள் 12 மற்றும் 18 ஆம்

நூற்றாண்டுகளில் கைவிடப்பட்டன. பின்னர் கன்னடத்தில் முறையே 'ஏ' மற்றும் 'ல' எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.

மேலும் மற்றொரு மெய்யெழுத்தான 'nh' இன் ண் (inn) ஆக மாறுகிறது. இந்த எழுத்துக்கள் 1980 ஆம் ஆண்டுகளில் கர்நாடகாவின் பல கடலோர பகுதிகளில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இந்த எழுத்துக்களில் தற்போது சில மாற்றங்கள் பெறப்பட்டு மெய்யெழுத்து (n) ஆக மாற்றப்பட்டது.

**கன்னட எழுத்துமுறை வளர்ச்சி**

Proto கன்னடம் > முன் பழைய கன்னடம் > பழைய கன்னடம் > நவீன கன்னடம்

புரோட்டோ கன்னட எழுத்துமுறை பழைய பிராமிக் எழுத்துப் போன்றே கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலும் முன் பழைய கன்னடம் 4 ஆம் நூற்றாண்டிலும், பழைய கன்னடம் 10 ஆம் நூற்றாண்டிலும் நவீன கன்னட எழுத்துமுறை 17 ஆம் நூற்றாண்டிலும் தோன்றியதாக அறியப்படுகிறது.

**தேவாங்கா கன்னடம்**

தேவாங்கா கன்னடம் என்பது கன்னட மொழியில் வட்டார வழக்குகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டிலுள்ள சின்னாளப்பட்டி அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளில் வாழும் தேவாங்கச் செட்டியார் என்னும் பிரிவினர் இதனைப் பேசுகின்றனர். இது கர்நாடகப் பகுதியில் வழங்கப்படும் கன்னட மொழியைப் போலன்றித் தமிழ்ச் சொற்களை அதிகமாக ஏற்று தமிழோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காட்சியளிக்கிறது. தொன்மையான தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்று அழிந்துபோன சொற்கள் பலவற்றை இது இன்றும் பேணிக் காப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(எ.கா.) வெண்திங்கள் > பெலி திங்கலு (தே. கன்னடம்) ஒலியன்களின் நிலைகளைப் பொறுத்தவரை இது மைசூர்ப் பகுதியிலுள்ள கன்னட மொழியிலிருந்து மாறுபடுகின்றது. மொழி முதலில் தமிழில் பகர ஒலி வருமிடங்களிலெல்லாம் கன்னட மொழியில் 'ஹ'கர ஒலி வருதல் இயல்பானதாகும். ஆனால் தேவாங்கா கன்னடத்தில் மொழி முதல் 'ய'கர ஒலி கெட்டு விடுகின்றது.

(எ.கா.) தமிழ் பால் ஹாலு (கன்னடம்) > ஆலு (தே. கன்னடம்)

**கௌடா கன்னடம்**

கர்நாடக நாட்டின் தென்பகுதியிலும் கூர்க் மாவட்டத்திலுள்ள கௌடர்கள் பேசும் கன்னட மொழியின் ஒரு வட்டார வழக்கே கௌடா

கன்னடம். இது கன்னட மொழியிலிருந்து பல நிலைகளில் மாறுபடுகின்றது. இவ்வட்டார வழக்கில் 14 உயிர் ஒலிகளும் (9 குறில் 5 நெடில்), 22 மெய் ஒலிகளும் உள்ளதாக இதனை ஆராய்ந்த டாக்டர் கே.குஷலப்பா கௌடா குறிப்பிடுகிறார். பேராசிரியர் உபாத்தியாயா என்பவர் 1968 இல் கன்னட மொழியின் நான்கு வட்டார வழக்குகளை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். கன்னட மொழியின் பேச்சு வடிவம் பற்றிப் பேராசிரியர் வில்லியம் பிரைட் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

**கன்னட இலக்கியங்கள்**

திராவிட மொழிகளின் இலக்கிய மொழிகளில் இதுவும் ஒன்று. மைசூர் மாநிலத்தில் மட்டும் இம்மொழி பேசப்படினும் பண்டைக் காலத்தில் இன்று மராட்டி வழக்கும் பல இடங்களில் கன்னடமே பேசப்பட்டு வந்தது என்பதற்குரிய சான்றுகள் பல உள்ளன. இந்தோ ஆரிய மொழியான மராத்தியின் வளர்ச்சியில் கன்னடம் வடக்கே வழக்கிழந்த நிலையைக் காண்கிறோம். பல கன்னடக் கல்வெட்டுகள் பலவற்றை அங்கே காணமுடியும்.

கி.பி. ஐந்தாவது நூற்றாண்டைச் சார்ந்த பிரல்மிடி கல்வெட்டை இம்மொழியின்கண் காணப்படும் முதல் கல்வெட்டு எனினும் இம்மொழி பற்றிய குறிப்பினைக் கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே காணமுடியும் என்பர். மகாபாரதத்தில் பீர்மபர்வத்திலும் மார்க்கண்டேய புராணத்திலும் மிருச்சகடிக நாடகத்திலும் இம்மொழி பற்றியும் இந்நாடு பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன என்பர். சங்க கால இலக்கியங்களில் எருமை நாடு என அழைக்கப்படுவது கன்னட நாட்டையே என எண்ணுவர் பலர். இதுபோன்றே கி.பி. இரண்டாவது நூற்றாண்டில் எழுதப்பட்ட கிரேக்க நாடகமொன்றிலும் இம்மொழி பற்றிய குறிப்பினைக் காணலாம். கி.பி. 500 முதல் இம்மொழியின்கண் தொடர்ச்சியாகப் பல கல்வெட்டுக்கள் காணக்கிடக்கின்றன. கி.பி. 500 இல் இவை தோன்றியதாகக் கருதப்படுகின்றன. கல்வெட்டொன்றில் கவிதைகளைக்கூடக் காணமுடிகிறது. எனவே கி.பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே பண்பட்டதொரு மொழியாக இது வளர்ந்துள்ளது எனக் கருதலாம்.

கி.பி. ஒன்பதாவது நூற்றாண்டில் எழுதப்பட்ட, கவிராஜமார்க்கம் என்னும் நூலே இம்மொழியின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. கவிஞர்களின் ராஜபாதை என்று பொருள்படும் இந்நூலை இயற்றியவர் இராஷ்டிரகூட அரச பரம்பரையைச் சார்ந்த நிருபதுங்கா (814 879) எனக் கருதுவர் பலர். ஆனால் இந்நூல் அவ்வரசனின் அவையில் வாழ்ந்த நீவிஜயா என்ற புலவரால் ஆக்கப்பட்டதே அன்றி அரசனால்

ஆக்கப்பட்டதன்று எனக் கருதுவாரும் உண்டு. இதற்குப் பின்னர் கன்னட இலக்கியம் தொடர்ச்சியாக வளர்ந்து வந்தது.

கடந்த *1500* ஆண்டுகளாக வாழ்ந்துவரும் கன்னட இலக்கியம் தன் வரலாற்றில் எத்தனையோ மாற்றங்களைக் கண்டுள்ளது. மொழி வளர்ச்சியையும் மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்ட இதன் வரலாற்றை ஆதிகன்னடம் (Purva Kannada), பழைய கன்னடம் (Pala or Halakannda), இடைக்கால கன்னடம், தற்காலக் கன்னடம் என நான்கு பிரிவுகளாகப் பிரிப்பர்.

### பூர்வ கன்னடம் (800)

கவிராஜ மார்க்கமே இதன் முதல் இலக்கியம் என்றாலும் அதற்கு முன்னரே சிறந்ததொரு இலக்கிய பாரம்பரியம் இருந்துள்ளது. எனினும் கவிதைகள் ஆக்கும் திறன், கவிதைகளின் வகைகள் போன்றவற்றைக் கூறும் இந்நூல் கவிஞர்கள் பலரையும் குறிப்பிட்டுச் செல்கிறது.

கன்னட மொழியில் வடமொழியின் செல்வாக்கு அதிகம் என்பது அறிஞர்கள் கண்ட உண்மையாகும். கவிராஜமார்க்கத்திலும் கன்னட மொழிக் கல்வெட்டுகளிலும் இதனை நன்கு காணமுடியும். பூர்வகன்னடம் எனக் கூறப்படுகின்ற காலப்பகுதியிலேயே இந்நிலை காணப்படுவது கன்னட மொழியில் வடமொழி கொண்டுள்ள செல்வாக்கினை நன்கு காட்டுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

### பழங்கன்னடம் (800-1150)

கவிராஜமார்க்கம் இக்காலத்தைச் சார்ந்தது. இந்நூலாசிரியர் தம் நூலின்கண் கன்னட மொழி பற்றியும், கன்னட மொழியினரின் கவிதையாக்கும் ஆற்றல் பற்றியும் பெருமைபடக் கூறுவார். கன்னடம் காவிரி முதல் கோதாவரியின்கண் பல கிளைமொழிகளும் இருந்தன என்றும் கூறியுள்ளார்.

இதனையடுத்து ஹரிவம்சா என்ற நூல் தோன்றியது. இதை எழுதியவர் குணவர்மன் என்பார். ஜைனதீர்த்தங்கரர் பற்றிக் கூறும் இந்நூல் நேமிநாத புராணம் எனவும் அழைக்கப்படும்.

கி.பி. பத்தாவது நூற்றாண்டில் கன்னட இலக்கியம் சிறந்ததொரு வளர்ச்சியினைக் கண்டது. இந்நூற்றாண்டில்தான் பம்பா, பொன்னா, ரன்னா என்றழைக்கப்படும் முப்பெரும் புலவர்கள் வாழ்ந்தனர். இந்நூற்றாண்டில்தான் மகாபாரதம், இராமாயணம் போன்ற நூல்களும் பல்வேறு சைனமதக் கொள்கைகளும் மிகவும் செல்வாக்குடன் விளங்கினமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதிபம்பா என்றழைக்கப்படும் பம்பா கி.பி. *901* இல் தோன்றியவர். சைன வகுப்பில் தோன்றியபோதிலும் பரதத்தைக் கன்னட மொழியில் மொழிபெயர்த்தார். பம்பன பரதம் என அழைக்கப்படும் இந்நூல் கன்னட மொழியில் சிறந்ததொரு காவியமாகக் கருதப்படுகிறது. இவரால் ஆக்கப்பட்ட மற்றொரு நூலான ஆதிபுராணமும் சிறந்த சைன இலக்கியமாகப் புகழப் படுகிறது. இவரோடு வாழ்ந்த பொன்னா என்ற புலவர் பெருமகனும் இவரைப் போன்று ஒரு சைனரே. இவர் சாந்திபுராணம் என்னும் நூலை இயற்றினார். பதினொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏரன்னா அஜிதபுராணம், சாகச பீசவிஜயம் போன்ற நூல்களைப் படைத்தார். சிறந்த இலக்கிய நடையும் அழகொழுகும் சொல்வளமும் கொண்டு விளங்குவன இந்நூல்கள். இவைத் தவிர வேறு பல நூல்களும் இக்காலப்பகுதியில் எழுந்தன. கி.பி. *10* ஆவது நூற்றாண்டில் எழுந்த வட்டாரதனா என்னும் உரைநடை நூல் குறிப்பிடத்தக்கதாகும். கன்னட மொழியில் காணப்படும் முதல் உரைநடை நூலும் இதுவேயாகும். பல்வேறு *(19)* சிறுகதைகளைக் கொண்டுள்ள இந்நூல் அக்கால உரைநடை வளர்ச்சியைக் காண்பதற்கு உதவியாக இருந்தது. வடமொழி பிராகிருதம் போன்ற மொழிச் சொற்களை இதன்கண் ஏராளமாகக் காணமுடிகின்றன.

இதைப் போன்றும் முதல் நாகவர்மன் என்பவரால் ஆக்கப்பட்ட சந்தோம்பூதி என்ற இலக்கணநூலும் மொழியியல் ஆராய்ச்சிக்கு நன்கு பயன்படுவது. பாவினங்களைப் பற்றிய இந்நூல் அக்காலக் கன்னட மொழிப் பாவினங்கள், அசை, சீர், தளை போன்றவற்றைப் பரக்கக் கூறும். இந்நூலாசிரியர் இலக்கிய நூல்களும் செய்துள்ளார். பத்தாம் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்த சம்புநடையில் (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்) காதம்பரியை மொழிபெயர்த்துள்ளார்.

பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகள் பத்தாம் நூற்றாண்டைப் போன்று அத்தனை இலக்கிய வளம் இல்லாதிருந்த போதிலும் இக்காலத்திலும் சில சிறந்த நூல்கள் தோன்றியுள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த நாகச்சந்திரா என்பவர், ராமசந்திர சரிதபுராணம் போன்ற நூல்களை இயற்றினார். இக்காலப்பகுதியில் கன்னடமொழி இலக்கியம் சிறந்ததொரு வளர்ச்சியைக் கண்டது. பல வடமொழி நூல்களும் சைன மத நூல்களும் கன்னட மொழியில் வந்தன என்றாலும்கூட கன்னட நாகரிகத்திற்கேற்ற மாற்றங்களையும் அவை கொண்டுள்ளமையைக் காணமுடியும். பம்ப பாரதம் மகா பாரதக்கதைத் தழுவி எழுதப்பட்டிருப்பினும் பல

மாற்றங்களைக் கொண்டிருக்கிறது. இக்காலப் பகுதியில் சைன மதத்தின் செல்வாக்கு கன்னட இலக்கியத்தில் பரந்து நின்றது. சிறந்த புலவர்கள் அனைவருமே சைனர்களாகவே இருந்தனர். புதிய பம்பா தாம் எழுதிய இராமாயணத்தைச் சைன காவியமாகவே படைத்திருந்தார். இக்காவியத்தில் இந்தியநாடு முழுவதும் சைன நாடாகவே குறிப்பிடப்படுகிறது. பிராமணர்கள் பற்றியோ பிராமணியத்தைப் பற்றியோ எவ்வித குறிப்பும் இல்லை. இராமனும் இராவணனும் சைனர்களாகவே காட்டப்படுகின்றனர்.

**இடைக்கால கன்னடம் (1150-1800)**

*கி.பி. 12* ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவ சமயத்தின் செல்வாக்கு கன்னட மக்களிடையே வளரத் தொடங்கியது. புதிய வேகத்துடன் எழும்பிய இந்து மத பிடிப்பு இலக்கியத்திலும் எதிரொலித்தது. இதனால் இக்காலப் பகுதியில் சைன சமயத்தின் செல்வாக்கு கீழே இறங்கியது.

பசவா (Basava) என்பவரால் தொடங்கப்பட்ட வீரசைவம் என்ற புதிய மதம் லிங்காயதம் எனவும் பெயர்பெறும். வீழ்ந்துகிடந்த சைவ சமயத்தை வீறு கொண்டு எழச் செய்தவர். இவர் அமைச்சராக இருந்த காரணத்தால் இவருடைய கொள்கை மக்களிடையே காட்டுத்தீயென பரவியது. இதனால் மக்களிடையே ஒரு எழுச்சியும் புத்துணர்ச்சியும் எழுந்தன. இந்நிலையில் வசன என்ற புதியதொரு இலக்கிய வகையினைக் கன்னட மொழி காணநேர்ந்தது. சாதாரண மக்களிடையே வழங்கிவந்த சொற்களை அழகுபட அமைத்து வசனமாக ஆனால் ஓசை நயம் சொட்ட ஆக்கப்பட்ட இவ்விலக்கிய வகையினைத்தான் வசன் (Vachane) என்று கன்னட இலக்கிய வரலாறு அழைக்கிறது. இத்தகைய வசனங்களை ஏராளமாகக் கன்னடமொழியில் காணலாம். பசவா மட்டுமே ஆயிரத்திற்கும் அதிகமான வசனங்களை இயற்றியுள்ளதாகக் கூறுவர்.

அக்கமாதேவி (Akkamadevi), தேவர தாசிம்மய்யா (Devara Dasimmayya) போன்று நூற்றுக்கும் அதிகமான வசனக்காரர்களை கன்னட மொழியில் காணலாம். இவ்இலக்கிய உரை வாழ்க்கையில் காணும் அன்றாட உண்மை நிகழ்ச்சிகளை எளியமுறையில் எழில்மிகு மொழியில் ஆக்கினமையால்தான் இவை இன்றும் வாழ்கின்ற நிலையில் உள்ளன.

*13, 14, 15* ஆம் நூற்றாண்டுகளில் ஷட்பதீ இலக்கியம் சிறந்து விளங்கியது. *15* ஆம் நூற்றாண்டுப் பகுதியில் வாழ்ந்த குமாரவியாசா இவ்விலக்கிய வகையைத் தம் நூலில் மிகத் திறம்பட கையாண்டுள்ளார்.

இக்காலப்பகுதியில் சிறந்த புலவர்களாகக் கருதப்படும் லட்சுமிஷா (Lakshmisha), சதக்சரி (Sadaksari) ஆகிய இவ்விலக்கிய வகையை நன்கு கையாண்டு வெற்றிப் பெற்றுள்ளார்.

இக்காலப்பகுதியில் தோன்றிய மற்றொரு இலக்கிய வகை ரகளே (Ragale) என அழைக்கப்படுகிறது. இது பிராகிருத மொழிக் கவிதைகளை அடியொற்றியது என்பர். வீரசைவத்தை ஒட்டி எழுந்த நூல்கள் பலவாகும். பசவபுராணம் (1369), மகா பசவராஜசரிதம் (1500), சன்ன பசவ புராணம் (1558) போன்றவை குறிப்பிடத்தக்கன.

கி.பி. 1500க்கும் 1800க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வைணவ மதமும் புதியதொரு எழுச்சி பெற்றது. இதன் காரணமாகப் பல்வேறு கன்னட நூல்களும் எழுந்தன. இராமாயணம், பாகவதம் போன்ற நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. விஜயநகர அரசர்களின் செல்வாக்கினால் கன்னட இலக்கியம் இக்காலப்பகுதியில் செழித்து வளர்ந்தது. கதுகின பாரதா (குமார வியாசாவால் எழுதப்பட்டது) தொரவே ராமாயண (Torava Ramayana) பாகவத புராணம் போன்ற நூல்கள் தோன்றின. புரந்தரதாசர், கனகதாசர், விட்டலதாசா, வெங்கடதாசா, விஜயதாசா, நாமாவளியைப் பரப்பி வந்தனர். இவர்கள் பாடல்கள் ஆழ்வார்கள் பாடல்களுடன் ஒப்பவைத்து எண்ணத்தகுந்தன.

பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் யக்சகானா என்ற புதிய வகை இலக்கியம் தோன்றியது. புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டு நாடகப்பாணியில் எழுதப்படும் இவ்விலக்கியவகை இன்றும் தழைத்து வளர்ந்து கொண்டிருக்கிறது.

**தற்காலம்**

கன்னட மொழி இலக்கியம் ஐரோப்பியர்களின் வரவால் பல மாற்றங்களைக் கண்டது. கோவா போன்ற இடங்களில் வாழ்ந்துவந்த கிறித்தவப் பாதிரியார்கள் கன்னட மொழியில் ஆர்வம் செலுத்தியதோடு பல ஆக்கப்பணிகளைச் செய்தனர். இவர்களின் உதவியால் கோவாவில் ஆரம்பிக்கப்பட்ட அச்சுக்கூடம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு முதலே கன்னட மொழியில் அச்சுப் புத்தகங்களை வெளியிட்டு வந்தது. இத்தாலிய பாதிரியாரான லேனர்டோ (Leonardo Cinnanu) என்பவரால் எழுதப்பட்ட ஒரு இலக்கண நூலும் அகராதி ஒன்றும் கி.பி. 1774 இல் வெளிவந்தன. இவற்றையடுத்து வில்லியம்கரே (William Carey) என்பார் எழுதிய கன்னட இலக்கண நூலும் (A Grammar of the Karnataka Language, 1817) வெளியாயிற்று. இத்தகையதொரு மாற்றம் புதியதொரு எழுச்சியை ஏற்படுத்தியது.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கப் பகுதியில் கன்னடம் ஓரளவு

பிந்தைய நிலையில் இருந்தபோதிலும் ஐரோப்பிய இலக்கியங்களின் செல்வாக்கு இம்மொழியையும் பாதித்தது. மைசூர் பகுதியைத் தவிர பிற பகுதிகளில் இம்மொழி ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்ததாகப் பலர் குறிப்பிட்டுள்ளனர். *1914* இல் பெங்களூரில் ஆரம்பிக்கப்பட்ட கன்னட இலக்கியக் கழகம் (Academy of Kannada Literature) இம்மொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். இதுபோன்றே மங்களூரில் வாழ்ந்து வந்த கிட்டல் (F.Kittel) என்பார் இம்மொழிக்குச் செய்த பணியும் குறிப்பிடத்தக்கது. அவர் எழுதிய கன்னட ஆங்கில அகராதியும் (Kannada-English Dictionary, 1898) கன்னட இலக்கணம் (Kannada Grammar, 1903) கன்னட மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இவரைப் போன்றே ரை என்பாரும் பிளீட் என்பாரும் கன்னட மொழிக்கும் இலக்கியத்திற்கும் பல்வேறு ஆக்கப் பணிகளைச் செய்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் சமகிருதம், ஆங்கிலம், வங்காளி, மராத்தி போன்ற மொழிகளிலிருந்து பல்வேறு கதைகளும் கவிதைகளும் மொழிபெயர்க்கப்பட்டன. பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் புதினங்கள் பல இம்மொழியில் மொழிபெயர்க்கப் பட்டன. இதனால் புதினம் இம்மொழியில் வளர ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. இந்நூற்றாண்டில்தான் முதல் கன்னட மொழிப் புதினம் உருவாயிற்று. களகநாதாகேரூர் போன்றவர்கள் இத்துறையில் ஈடுபட்டனர். கேரூர் புதினம் மட்டுமின்றி சிறுகதை நாடகம் போன்ற பல துறைகளில் வெற்றிகண்டவர். தன்னுடைய சுபோதயா என்ற இதழின் மூலம் பல ஆக்கப் பணிகளைச் செய்தவர் இவர். சேக் பியர் இயற்றிய நாடகங்கள் பலவற்றை இவர் மொழிபெயர்த்துள்ளார். இவரை அடியொற்றி கைலாசம் போன்றவர்கள் நாடகங்கள் பல ஆக்கினர். கைலாசம் பேச்சுமொழிக் கூறுகளைத் தம் நாடகங்களில் புகுத்திப் புதியதொரு வேகத்தைத் தந்தார்.

கன்னடக் கவிதைகளும் இக்காலப்பகுதியில் வளர்ந்தன. குண்டப்பா, ஸ்ரீகண்டையா, பேந்திரே போன்றவர்களும், புட்டப்பா, சங்கரபட் போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் பேந்திரே நாட்டுப்புற வாழ்க்கையை மையமாக வைத்துச் சிறந்த ஓசை நடையில் கவிதைகளை யாத்தவர். இருபதாம் நூற்றாண்டு கவிஞர்களில் மிகச் சிறந்தவராகக் கருதப்படுபவர் இவர். ஆனால் கவிஞர் புட்டப்பாவோ தாகூரைப் போன்று பழமையில் ஒரு புதுமையைக் கண்டவர். இந்திய நாட்டுப் பரம்பரையின் பழமையில் புதுமையை ஓடவிட்டு கவிதைகளை இயற்றியவர். இராமாயணத்தை முழுமையாக

யாத்தவர்.

இந்த நூற்றாண்டில் கன்னட கவிதை உலகம் பல கவிஞர்களைக் கண்டுள்ளது. கோகாக், கோவிந்தபை, சீதாராமையா, நரசிம்மாச்சாரி போன்றவர்கள் இவ்வகையின் கர்த்தாக்களாகக் கருதப்படுகிறார்கள்.

உரைநடைப் பகுதியும் இந்நூற்றாண்டில் வேகமாக வளர்ந்தது. சொல்ல வேண்டிய கருத்தைத் தெளிவாக ஐயமறக்கூறும் அளவுக்கு ஆற்றல் பெற்று விளங்கும் நிலையை இம்மொழி அடைந்தது எனக் கூறலாம். பல்வேறு நாளிதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் உரைநடை வளர்ச்சியின் வேகத்திற்கு வித்திட்டன. இதுபோன்றே ஆங்கிலப் படிப்பும் ஆங்கில உரைநடை நூல்களின் செல்வாக்கும் இம்மொழியில் உரைநடையை உயர்ந்த இடத்திற்குக் கொண்டுசென்றன.

**கன்னட மொழி இலக்கணங்கள்**

கன்னட மொழியினர் இலக்கண ஆராய்ச்சியில் மிகப் பழங்காலந் தொட்டே ஈடுபட்டிருந்தனர். எழுத்து, சொல், யாப்பு, அணி, பொருள் என்ற ஐந்து வகை இலக்கணங்களிலும் நாட்டம் மிகக் கொண்டிருந்தனர். இம்மொழியின்கண் தோன்றியுள்ள பல இலக்கணங்களில் நிருபதுங்க மன்னன் அவையில் தோன்றிய கவிராஜமார்க்கமும், இரண்டாம் நாகவர்மாவால் எழுதப்பட்ட காவ்யாவிலோகனா, பாஷாபூஷணா ஆகிய இலக்கணங்களும், கேசிராஜா எழுதிய சப்தமணிதர்ப்பணாவும், பட்டாகலங்கா எழுதிய கர்நாடக சப்தாநுசாசனாவும் மிகச் சிறந்த இலக்கணங்களாகக் கருதப்படுகின்றன. கன்னட இலக்கணங்கள் பொதுவாகச் சம கிருத மொழியின் செல்வாக்கினைக் கொண்டு விளங்குகின்றன. பாணினியின் இலக்கணம் கன்னட இலக்கணங்களில் தன்னுடைய செல்வாக்கினை நிலைநிறுத்தியுள்ளன. இதுபோன்றே வேறு பல சம கிருத இலக்கணங்களும் குறிப்பாக காதந்தரா இலக்கணமும் பிராகிருத மொழி இலக்கங்களும் தன்னுடைய செல்வாக்கினை நிலைநிறுத்தியுள்ளன.

பட்டாகலங்கா தன்னுடைய நூலில் பதினெட்டுக்கும் மேலான மொழிகளைப் பற்றியும் பல்வேறு சம கிருத இலக்கணங்கள் பற்றியும் குறிப்பிட்டாலும்கூட தமிழ், தெலுங்கு இலக்கணங்களைப் பற்றி எவரும் குறிப்பிடவில்லை.

கன்னட நாட்டில் தோன்றிய முதல் இலக்கண நூல் சம கிருத மொழிக்குரிய இலக்கணம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஜெயநேந்திரா என்று அழைக்கப்படும் இந்நூல் இம்மக்களின் இலக்கண ஆராய்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தேவந்தி பூஜ்யபாதா என்பவரால் எழுதப்பட்ட இவ்விலக்கணநூல் சம கிருத

இலக்கணங்களுள்ளும் மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

நாகவர்மா, கேசிராஜா, பட்டாகலங்கா ஆகியோர் கன்னட மொழிக்குரிய இலக்கணங்களை எழுதியிருப்பினும் கன்னடம், சம கிருதம், பிராகிருதம் கலந்த ஒரு மொழியே என்றும் அம்மொழிக்கே இவர்கள் இலக்கணம் எழுதியுள்ளதாகவும் எண்ணினர். கர்நாடக சப்தா என்று இவர்கள் குறிப்பிடுவதெல்லாம் சம கிருதமும் பிராகிருதமும் கலந்த சொற்களையே ஆகும். இவர்களுக்குத் தெரிந்த சம கிருத இலக்கணத்தில் கன்னட மொழியின் இலக்கணத்தைப் பொருத்திக் காண்பதே இவர்களது எண்ணமாக இருந்தது. கன்னட மொழியின் முதல் இலக்கணமாகக் (எழுத்து, சொல்) கருதப்படுகின்ற பாஷாபூஷணம் சம கிருத மொழியில் எழுந்தது குறிப்பிடத்தக்கது. சம கிருத இலக்கணக் கொள்கைகளைப் பின்பற்றி எழுதிய காரணத்தால் நாகவர்மா இதனை சம கிருதத்தில் எழுதினார் என்று சிலரும், இந்திய நாட்டின் பொதுமொழியாக சம கிருதம் இருந்தமையால் இவ்வாறு எழுதினார் எனக் கருதுவோரும் உண்டு.

**கவிராஜ மார்க்கம்**

கன்னட மொழி நூல்களுள் மிகவும் பழமையானது இந்நூலாகும். கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் இந்நூல் (850) ஒரு இலக்கண நூல். எனவே இக்காலத்திற்கு முன்னரே கன்னடமொழி சிறந்ததொரு பாரம்பரியத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இந்நூலில் சிறந்த பல ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிட்டிருப்பினும் அவர்களுள் பலர் கவிதைகளை ஆக்கிய புலவர்கள் என்பது இந்நூல் தரும் செய்திகள் ஆகும்.

தொல்காப்பியத்தைப் போல அன்றி இந்நூல் யாப்பு, அணி ஆகியவற்றை மட்டுமே பேசுதல் காணலாம். இந்நூல் மூன்று பரிச்சேதங்களைக் கொண்டது. முதல் பரிச்சேதம் கன்னடநாடு, கன்னடமொழி, கன்னட நாட்டு மக்களின் திறன் போன்ற பல்வேறு கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் இந்நூல் அக்காலத்து அரசியல் சூழ்நிலை நிருப்பதுங்க மன்னனின் புகழ் போன்ற இன்னோரன்ன செய்திகளைக் குறித்துச் சொல்வதைக் காணலாம். கன்னட நாட்டு அறிஞர்கள் மட்டுமின்றி கன்னட நாட்டு மக்களும் கவிதைகளை அனுபவிப்பதிலும் நுணித்து அறிந்துகொள்வதிலும் வல்லவர்கள் என்றும், இந்நாட்டு மக்கள் சிறந்த வீரர்களாகவும், கவிஞர்களாகவும், செல்வர்களாகவும் வாழ்ந்து வந்தனர் என்றும் குறித்துச் சொல்லும் இந்நூல் கன்னட இலக்கணம் சம்பந்தமாகச் சில வரையறைகளையும் சில நியமங்களையும் பேசிச் செல்லும் இந்நூல்

வடமொழி இலக்கண ஆசிரியரான தண்டியின் காவியாதர்சத்தை அடியொட்டியது என்றாலும் கன்னட மொழியின் பண்பு அதன் தனிநிலை ஆகியவற்றை எல்லாம் கூறி மூலத்திலிருந்து பல்வேறு நிலைகளில் வேறுபட்டு காணப்படுகிறது. மூன்றாவது அத்தியாயத்தில் வேறுபாடு குறைந்து காணப்படுகிறது என்றும் கூறுவர். பொதுவாகத் தண்டி ஆசிரியரை அடியொற்றியிருந்தாலும் தான் எடுத்துக் கூறும் எடுத்துக்காட்டுகள், சொல்லும் முறை ஆகியவற்றில் ஒரு தனித்தன்மையைக் காணலாம்.

இந்நூலின் ஆசிரியர் நிருபதுங்க மன்னனே எனப் பலர் எண்ணினர். ஆனால் நிருபதுங்க அரசவையில் வாழ்ந்த ஸ்ரீவிஜயன் என்பாரே இந்நூலின் ஆசிரியர் என்று இப்போது கருதுகின்றனர். கி.பி. 814 முதல் 877 வரை ஆண்ட இம்மன்னனின் புகழ்பற்றி இந்நூலில் கூற காணலாம். ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் நிருபதுங்க தேவனுக்கு இணையான கவிராஜமார்க்கம் என்பது போன்று வருவதை எடுத்துக் காட்டி அரசன் செய்திருப்பானாயின் தன்னையே புகழ்ந்திருக்க மாட்டான் என்றும், அதனால் ஸ்ரீவிஜயனே இதன் ஆசிரியர் எனவும் கூறுவர்.

சந்தோம்புதி கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. முதல் நாகவர்மன் என்பவரால் எழுதப்பட்டது. இதனைச் சந்தோம்பு ராசி, நாகவர்மா சந்தசு என்றும் அழைப்பர். சந்தோம்புதி எனப் பொருள்படும் கன்னட யாப்பிலக்கணம் பற்றிக் கூறும் நூல்களில் இது மிகவும் சிறந்தது என்பர்.

சம கிருத யாப்பினை அடியொற்றியே இந்நூலும் ஆக்கப் பட்டுள்ளது எனினும் இந்நூலின்கண் பல தனிச்சிறப்புகளையும் காணமுடியும். கவிராஜ மார்க்கத்தில் காணமுடியாத பல கவிதை வகைகளைப் பற்றி இந்நூல் கூறுவதும் அவற்றிற்குத் திருந்திய விளக்கங்களையும் எடுத்துக்காட்டுகளையும் தந்து நிற்கும் இந்நூல் ஆறு அதிகாரங்களைக் கொண்டது.

காவியாவிலோகனா இரண்டாவது நாகவர்மனால் எழுதப்பட்ட இந்நூலும் கன்னட அலங்காரம் பற்றியது. இதன் முதல் அதிகாரம் கன்னட இலக்கணம் பற்றி பேசும்.

காவியாவலோகனா கவிராஜமார்க்கத்தைப் போலன்றி கன்னட மொழி, எழுத்து, சொல், இலக்கணம் பேசுதல் காணலாம். ஒரு மொழியின் அலங்காரம் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டி அம்மொழியின் எழுத்து, சொல், இலக்கணம் பற்றியும் தெரிந்து கொள்ளல் வேண்டும் என்பது இந்நூலின் எண்ணம். இதனால்தான்

அலங்காரம் பற்றிப் பேசுவதற்கு முன்னாலேயே எழுத்து, சொல், இலக்கணம் பற்றி ஒரு அதிகாரத்தில் இவர் குறித்துச் சொல்கிறார். இலக்கணம் பற்றிய அதிகாரத்தில் எழுத்து, வடிவம், புணர்ச்சி (சந்தி), பெயர்ச்சொல் (நாமா), தொகைகள் (சமாஸா), பயனிலை (ஆக்யாதா) என்ற ஆறு பிரிவுகளை உடையது. பாஷா பூஷணா நூலும் இரண்டாவது நாகவர்மாவால் எழுதப்பட்டது. 280 சூத்திரங்களைக் கொண்ட இந்நூல் சூத்திர நடையில் சம கிருத மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் எழுத்து, வடிவம், புணர்ச்சி, வேற்றுமை (விபக்தி), வேற்றுமைத் தொடர்பு (காரகா), சொல் வகைகள் (ஸப்தாடுத), தொகைகள் (ஸமாஸா), பயனிலை, இடைச்சொற்கள் (அவ்வாயநிர்ப்பண (நிபாதா) என்ற பத்து அதிகாரங்களைக் கொண்டதாகும்.

சப்தமணி தர்ப்பணா கி.பி. 1275 இல் கேசிராஜாவினால் எழுதப்பட்ட இந்நூல் கன்னட இலக்கண நூல்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஒரு முழுமைப்பெற்ற இலக்கண நூலாகவும் இது விளங்குகிறது. பல இலக்கண நூல்களுள் சம கிருத மொழியில் எழுதப்பட்டிருப்பினும் இந்நூல் கன்னடத்தில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பல வழிகளில் கவிராஜமார்க்கத்தை இது பின்பற்றியிருந்தபோதிலும்கூட கன்னட மொழியில் காணப்படுகின்ற பலப்பல புதிய செய்திகளைத் திரட்டித் தெளிவான கன்னட மொழியில் சூத்திர நடையில் எழுதிய பெருமை இந்நூல் ஆசிரியரையே சாரும்.

இந்நூல் 337 சூத்திரங்களைக் கொண்டது. புணர்ச்சி, பெயர்ச் சொற்கள், தொகைகள், ஆக்க உருபுகள், பயனிலை அல்லது வினைச்சொற்கள், வேர்ச் சொற்கள் (தாது), சம கிருதச் சொற்கள் (அபப்பிரம்ஸ), வேற்றுமை ஏலாச் சொற்கள் (அவ்வய) என்ற எட்டு அதிகாரங்களைக் கொண்டு விளங்குகிறது இந்நூல். அதிகார முறை வைப்புகளையும் ஆசிரியர் தரும் எடுத்துக்காட்டுகளையும் நோக்கின் நாகவர்மாவின் காவியவலோகனாவை இவர் பின்பற்றியுள்ளார் என்பது தெரியவரும்.

கர்நாடக சப்தாநுசாசனம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சம கிருத மொழியில் எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர்பட்டாகலங்கா என்பவர் ஆவார். சிறந்த பேரிலக்கணம் ஒன்றைக் கன்னட மொழிக்கு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்த இந்நூல் சப்தமணி தர்ப்பணாவில் கூறப்படும் இலக்கணக் கொள்கைகளை விரிவாக்கி எழுதிய இந்நூலுக்கு இவரே உரையும் எழுதியுள்ளார். இந்நூல் எழுத்து, வேற்றுமை, தொகை, வினை என்ற நான்கு அதிகாரங்களைக் கொண்டது. எனினும் இந்நூல் விரிவாகவும் தெளிவாகவும் உள்ளது.

இந்நூலைப் பற்றிக் குறிப்பிட்ட P.L.ரை என்பார் பாணினியின் அஷ்டாத்தியாயியுடனும் இவரது உரையினைப் பதஞ்சலியின் மஹாபாஷ்யத்துடனும் ஒப்பிடுவர்.

ஹொச கன்னட நுடி கன்னடி எனும் நூல் கிருஷ்ணமாச்சாரி என்பவரால் *1838* இல் எழுதப்பட்டது. பெயருக்கேற்ற ஒரு புதிய முறையிலே எழுதப்பட்டது. கன்னடப் பேச்சு மொழியின் இலக்கணம் பற்றிக் கூறும் இந்நூல் இருவர் பேசுவதுபோல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் பத்து அதிகாரங்களைக் கொண்டதாகும்.

## 8. காஷ்மீரி மொழி

தாய்மொழியாகக் கொண்டோர் : ஜம்மு மற்றும் காஷ்மீர் (இந்தியா) ஆசாத் ஜம்மு மற்றும் காஷ்மீரி (பாகிதான்)

பகுதி : இந்திய துணைக்கண்டமான மேற்குப் பகுதி

பேசுவோர் எண்ணிக்கை : 5.6 மில்லியன் (2001)

மொழிக் குடும்பம் : இந்தோ ஐரோப்பிய
இந்தோ ஈரானிய
இந்தோ ஆரிய
தார்டிக்
காஷ்மீரி

வட்டாரம் : கஷ்தவாரி, புகலி, ரம்பானி

எழுத்து முறை : பாரசீக அரபு எழுத்து (சமகாலத்தில்)
தேவநாகரி எழுத்து (சம காலத்தில்)
சாரதா எழுத்து (பண்டைய/புனித)

அதிகாரப்பூர்வ மொழி : இந்தியா

காஷ்மீரி இந்தோ ஆரிய மொழி மற்றும் தார்திக் கிளைக்குழுவைச் சேர்ந்தது. காஷ்மீர் பள்ளத்தாக்கு, ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதிகளில் பேசப்படுகிறது. இந்தியா முழுவதும் சுமார் 5,527,698 பேர் காஷ்மீரி மொழியைப் பயன்படுத்துவதாக 2001 ஆம்ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு கூறுகிறது. 105,000 பேர்கள் இந்தியப் பிரிவினைக்குப் பிறகு காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து பாகி தானுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். அவற்றில் சிலர் நீலம் மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் வாழ்கின்றனர்.

காஷ்மீரி மொழி இந்தியாவின் 22 மொழிகளில் ஒன்று. இந்திய அரசியலமைப்பில் ஆறாவது அட்டவணையில் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒரு பகுதியாக உள்ளது. இத்துடன் ஆறாவது அட்டவணையில் இந்தி, உருது, காஷ்மீரி ஆகியவையும் மாநில வளர்ச்சிக்கு உதவும். சில காஷ்மீரிகள் அடிக்கடி இரண்டாவது மொழியாக இந்தி அல்லது ஆங்கில மொழியைப் பயன்படுத்துகின்றனர். நவம்பர் 2008 முதல் காஷ்மீரி

மொழி அனைத்துப் பள்ளத்தாக்குகளில் உள்ள பகுதிகளிலும் உயர்நிலைப் படிப்பு வரை கட்டாயமாக்கப்பட்டது.

**இலக்கணம்**

காஷ்மீரி ஜெர்மன் மற்றும் பழைய ஆங்கிலம் போன்றும், மற்ற இந்தோ ஆரிய மொழிகளைப் போலல்லாமல் ஏ2 வார்த்தை அமைப்பைக் கொண்டுள்ளது. காஷ்மீரியில் நான்கு வழக்குகள் உள்ளன. எழுவாய், பயனிலை, நேர்முக, மறைமுக வழக்குகள் உள்ளன.

**சொற்றொகுதி**

காஷ்மீரியில் ஆயிரக்கணக்கான சொற்கள் கடனாகப் பெறப்பட்டவை ஆகும். முக்கியமாகப் பாரசீக மற்றும் அரபியிலிருந்து பெறப்பட்டவை ஆகும். இதற்கு முக்கியக் காரணம் இசுலாமியர் வருகையாகும். எனினும் அது இந்தோ ஆரிய அடிப்படையில் உள்ளது. இந்து மற்றும் மு லீம்களால் பேசப்படும் காஷ்மீரிக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. 'நெருப்பு' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு காஷ்மிரி வார்த்தையில் அகன் (அக்னி சம கிருதம்) பயன்படுத்தப்படுகிறது. மு லீம்கள் அடிக்கடி 'நிர்' என்ற அரபு வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர்.

**பழைய இந்தோ-ஆரிய சொல்லகராதியைப் பாதுகாத்தல்**

**முதல் நபர் பிரதிப் பெயர்ச்சொல்**

இந்தோ ஆரிய மற்றும் ஈரானிய கிளைகளையுடைய இந்தோ ஈரானிய மொழிக்குடும்பம் முதல் நபர் பிரதிப் பெயர்ச் சொல்லை நீக்குவதற்கு ஒரு வலுவான போக்கை நிரூபித்துள்ளது. இதற்குப் பதிலாக எழுவாய் பயன்படுகிறது. இந்தோ ஐரோப்பிய வேர்ச் சொற்களில் ஒரு புதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது (என்னை, எனது) என வார்த்தைகள் சம கிருதம், அவெ தா ஆகிய இரண்டு மொழிகளிலும் உள்ளன. இருப்பினும் இதுபோன்ற நவீன பாரசீக, பலுச்சி, இந்தி, பஞ்சாபி போன்ற மொழிகளில் தனித்துவமாக நியமிக்கும் வடிவம் முற்றிலும் இழந்து வருகிறது. 'ம' மற்றும் 'மை' போன்ற வார்த்தைகளுக்கு இடையேயான வேறுபாட்டை காஷ்மீரி மொழி காக்கிறது.

## உயிரெழுத்துக்கள்

Kashmiri vowels

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| اےٖ | اے | اٚے | اوآ | او | او | اوٚ | اُو | اُ | إ | إ | اى | إ | أ | أ | آ | اَ |
| ẏ | ē | e | ō̤ | o̤ | ō | o | ū | u | ṳ̄ | ṳ | ī | i | ạ̄ | ạ | ā | a |
| [ʲ] | [e:] | [e] | [ɔ:] | [ɔ] | [o] | [o:] | [ʊ] | [u:] | [ɨ] | [ɨ:] | [ɪ] | [i:] | [ə:] | [ə] | [a:] | [a] |

## மெய்யெழுத்துக்கள்

Kashmiri consonants

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ذ | ڈ | د | خ | ح | چ | ج | ث | ٹ | ت | پ | ب |
| z̤ | ḋ | d | ḫ | ḥ | č | ǧ | s̱ | ṭ | t | p | b |
| [z] | [ɖ] | [d] | [kʰ] | [h] | [ʧ] | [ʤ] | [s] | [ʈ] | [t] | [p] | [b] |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ع | ظ | ط | ض | ص | ش | س | ژ | ز | ڑ | ر |
| ' | ẓ | ṭ | ż | ṡ | š | s | ć | z | ṙ | r |
| [?, Ø] | [z] | [t] | [z] | [s] | [ʃ] | [s] | [ts] | [z] | [ɽ] | [r] |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ے | ہ | و | ن | م | ل | گ | ک | ق | ف | غ |
| y | h | v | n | m | l | g | k | q | f | ġ |
| [j] | [h, ə] | [w] | [n] | [m] | [l] | [g] | [k] | [k] | [f, pʰ] | [g] |

## எண்கள்

Numerals

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ١ | ٢ | ٣ | ٤ | ٥ | ٦ | ٧ | ٨ | ٩ | ١٠ |
| akh | zah | trih | chōr | pānch | sheh | sath | aiṭh | nav | dah |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

**ஒலியியல்**

**மூத்து முறை**

காஷ்மீரி எழுத்து மூன்று அமைப்பில் காணப்பட்டது. அவை:

1. சாரதா எழுத்து
2. தேவநாகரி எழுத்து
3. பாரசீக அரபு எழுத்து

ரோமானிய எழுத்தும் சில நேரங்களில் அறிவிக்கப்படாமல் காஷ்மீரி எழுதப் பயன்படுகிறது.

காஷ்மீரி மொழி 9 ஆம் நூற்றாண்டிற்குப் பின் பாரம்பரியமாக சாரதா எழுத்தில் எழுதப்படுகிறது. இந்த எழுத்து இந்நாட்களில் பொதுவாகப் பயன்படுவதில்லை. காஷ்மீர் பண்டிட்டுகள் மதச் சடங்குகள் செய்ய இந்த எழுத்தைப் பயன்படுத்தினர்.

தற்போது (சில மாற்றங்களுடன்) தேவநாகரி எழுத்து மற்றும் பாரசீக அரபு எழுத்து பயன்படுத்தப்படுகிறது. பாரசீக அரபு மொழியில் எழுதப்பட்ட காஷ்மீரி மொழி சில உயிர் ஒலிகளைக் கொண்டு காணப்படுகிறது. இந்த எழுத்து இந்தியாவில் மு லீம் காஷ்மீர் பள்ளத்தாக்கை வென்றெடுத்தபின் பல நூற்றாண்டுகளாக மக்கள் இம்மொழியைப் பயன்படுத்தி வருகின்றனர். எனினும் தற்போது காஷ்மீரி பாரசீக அரபு எழுத்துடன் காஷ்மீரி மு லீம்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அப்போது காஷ்மீரி தேவநாகரி எழுத்துடன் காஷ்மீரி இந்து இனத்தவருக்கு தொடர்பு ஏற்பட்டது.

**இலக்கியம்**

காஷ்மீரி கி.பி. 10ஆம் நூற்றாண்டில் அப்பபிராம்சா மரபிலிருந்து தோன்றியது. ஆரம்பகால காஷ்மீரி கவிதைகள் சம கிருத உரையிலிருந்து மாற்றப்பட்டது. அபினவ் குப்தாவின் தான்ட்ரசாரா, புத்தமதம், வைஷ்ணவம் ஆகியவை காஷ்மீரியின் 14 ஆம் நூற்றாண்டு இலக்கியத்தில் பல விளைவை ஏற்படுத்தின. இசுலாமியர்களும் மத்திய ஆசியப் பகுதிகளில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தன. ஹாபா காட்டூன் காஷ்மீரியின் பிரபலமான 16 ஆம் நூற்றாண்டு கவிஞர் ஆவார். 18 ஆம் நூற்றாண்டு பெண் கவிஞர் ஆர்னிமல் ஆவார். இசுலாமியர் வருகைக்குப்பின் பாரசீக அரபின் செல்வாக்குக் காஷ்மீரியில் அதிகமாக இருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல நகைச்சுவை நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றின.

நவீன காஷ்மீரி இலக்கியம் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல புதிய இலக்கியங்களைத் தோற்றுவித்தது. அப்துல் ஆசாத், தயா ராம்

கன்ஜூ, சிந்தாகால், கௌலாம் ஹசன் பெக் ஆரிப் ஆகியோர் சிறந்த கவிஞர்கள் ஆவர். 1919 இல் ஜார்ஜ் ஆபிரகாம் ஜியர்சன் 'காஷ்மீர் ஒரு இலக்கியம் என்று வர்திக் மொழிகள் மட்டுமே உள்ளது' என்று எழுதினார். காஷ்மீர் இலக்கியத்தின் வயது 750 ஆண்டுகளுக்கு மேலாகச் செல்கிறது. இதன் வயது மற்ற ஆங்கில நவீன இலக்கியங்களைவிட குறைவாகவோ அதிகமாகவோ உள்ளது.

## 9. கொங்கனி மொழி

கொங்கனி என்ற வார்த்தை தேவநாகரி எழுத்திலிருந்து உருவானது.

உச்சரிப்பு : கொங்கனி

பேசப்படும் இடம் : இந்தியா

பகுதி : கொங்கன், கோவா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் கேரளாவின் சில பகுதிகள், தாதர் மற்றும் நாகர்ஹாவேலி, டாமன், டையூ. கொங்கனி அமெரிக்கா, இலண்டன், கென்யா, உகாண்டா, பாகி தான், பெர்சியன் வளைகுடா, போர்ச்சுக்கல் ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது.

பேசுவோர் எண்ணிக்கை : 7.4 மில்லியன் (2007)

மொழிக் குடும்பம் : இந்தோ ஐரோப்பிய<br>
இந்தோ ஈரானிய<br>
இந்தோ ஆரிய<br>
தென் மண்டலம்<br>
மராத்தி கொங்கனி<br>
கொங்கனி

வட்டார மொழி : கர்நாடகா கொங்கனி, கனரா கொங்கனி, கோவா கொங்கனி.

தனிப்பட்ட வட்டாரம் : வால்வனி, மங்களூர், சிட்பவானி, ஆன்ட்ரூ , பார்தேஷ்கரி, சாக் ட்டி, டால்டி, பெட்னேக்கரி.

எழுத்துமுறை : தேவநாகரி, ரோமன், கனடா, மலையாளம், அரபு

அலுவல் நிலை மொழி : கோவா, இந்தியா

கொங்கனி இந்தோ ஆரிய மொழி, இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இது இந்தியாவின் மேற்குக் கடற்கரைப்

பகுதியில் பேசப்படுகிறது. இது இந்திய அரசியலமைப்பு 8ஆவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 22 மொழிகளில் ஒன்றாகும். மேலும் இந்திய மாநிலமான கோவாவின் அலுவல்நிலை மொழியாக உள்ளது. இது மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளாவின் வடபகுதி (காசர்கோடு மாவட்டம்), தாதர், நாகர் ஹவேலி, டாமன், டையூ ஆகிய பகுதிகளில் சிறுபான்மை மொழியாக உள்ளது.

கொங்கனி தெற்கு இந்தோ ஆரிய மொழிக் குழுவில் ஒரு உறுப்பினராக இருக்கிறது. இது பழைய இந்தோ ஐரோப்பிய மொழி கட்டமைப்புக் கூறுகளை வைத்திருக்கிறது. மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய இரண்டு இந்தோ ஆரிய மொழிகளின் ஒற்றுமையைக் காட்டுகிறது. பழைய கொங்கனி பேச்சாளர்கள் இதைப் பிராகிருதம் என்பர். கர்நாடகா கபினியில் உள்ள பாஹுபலியின் மகத்தான சிலை அடிவாரத்தில் உள்ள கல்வெட்டுகளில் இரண்டு வரிகள் உள்ளன. அவை:

1. கொழும்பு சாமுண்டராஜே காரவியாலே
2. ஸ்ரீகங்கா ராஜோ சுல்தான் காரவியாலே

இதில் முதல் வரி கி.பி. 981 இலும், இரண்டாவது வரி கி.பி. 116 117 இலும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வரிகளும் கொங்கனி மொழி என எ.பி.குல்கர்னி(மராத்தி துறை, முன்னாள் தலைவர், நாக்பூர் பல்கலைக்கழகம்) மற்றும் டாக்டர் ஜோ பெரைரா (முன்னாள் பேராசிரியர், ஃபோர்தம் பல்கலைக்கழகம், அமெரிக்கா) ஆகியோர் கூறியுள்ளனர். இந்த வாதங்களைப் பரிசீலித்து சிரவணபெலகோலாவில் உள்ள கல்வெட்டுகளில் முந்தைய கொங்கனி எழுத்துக்கள் தேவநாகரியாக இருக்கலாம் எனக் கருதப்பட்டது. கொங்கனி என்ற பெயர் குறிப்புகள் 13 ஆம் நூற்றாண்டின் இலக்கியத்தில் காணப்படவில்லை. முதன் முதலில் 13 ஆம் நூற்றாண்டில் மராத்தி கவிஞர் நமதேவா (1270 1350) 'Abhanga 263' என்பதில் கொங்கனி எனக் குறிப்பிட்டுள்ளார். கொங்கனி பல பெயர்களில் அறியப்படுகிறது. கனாரிம், கான்கனிம், கோமன்டாக்கி, பிராமனா மற்றும் கோலானி. இம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் இம்மொழியை அம்ஷிபா (எங்கள் மொழி) என்று அழைக்கப்படுகின்றனர். இம்மொழி பேசுவோர் (அம்ஷிகேலி தஷிண கனடா) எனவும், மற்றவர்கள் கோவி அல்லது கோன்ஷிபா என்றும் அழைக்கின்றனர். மராத்தி மொழி பேசுவோர் இம்மொழியைக் கோமன்டாக்கி என்று குறிப்பிடுகின்றனர்.

கொங்கனி போர்த்துக்கீசிய கத்தோலிக்க மிஷனெரிகளால் லிங்குவா கனாரியம் என வரையறுக்கப்பட்டது. பிறகு

போர்த்துச்கீசியர்கள் கொங்கனியை லிங்குவா கன்கானியம் எனக் கூறினர். அனைத்து ஐரோப்பிய எழுத்தாளர்களும் கோவாவின் இரண்டு மொழி வடிவங்களையும் அங்கீகரித்தனர்.

*1. பீலிபியான் கனாரியம் என அழைக்கப்பட்டது.*

*2. வழக்கமான (கல்வியில் பயன்படுத்தப்படுவது) லிங்குவா கனாரியம் பிராமனா அல்லது வெறுமனே பிராமனா டி கோவா என அழைக்கப்பட்டது.*

**வரலாறு**

**சொற்பிறப்பியல்**

வார்த்தை கொங்கன் மற்றும் கொங்கனி ஆகியவற்றில் பலவித கருத்துக்கள் உள்ளன. கொங்கன் என்ற வார்த்தை குக்கானா பழங்குடியினரின் வாழிடமான கொங்கனி என்ற இடத்திலிருந்து தோன்றியுள்ளது. இந்துமத புராணங்களின்படி பரசுராமர் கடலில் அம்பை வீசினார். அந்த அம்பு தரையிரங்கிய புள்ளி வரை கடல் பின்வாங்கும்படி கடவுள் கட்டளையிட்டார். இப்பகுதி மீண்டும் புதிய நிலம் உருவானது. கொங்கன் என்பதன் பொருள் 'பூமியின் துண்டு' அல்லது 'பூமியின் மூலை' எனப்பட்டது.

கொனா (மூலை) + கானா (துண்டு)

இதைக் கந்தபுராணத்தில் சாயத்திரிகண்டா குறிப்பிட்டுள்ளார். கொங்கன் கொங்கனியுடன் சேர்ந்தே காணப்படுகிறது. ஆனால் தற்போது இப்பகுதி மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

*1. மகாராஷ்டிரா (கொங்கன் பிராந்தியம்)*

*2. கோவா*

*3. கர்நாடகா (வடக்கு கனரா)*

**முன்வரலாறு மற்றும் ஆரம்ப வளர்ச்சி**

**ஆஸ்திரிய-ஆசியா கிளை**

கொங்கனி மொழி அடுக்கு அதன் பிரதிநிதிகளான குருக், குரக், குன்ரக், குன்னா மற்றும் மால்டோ போன்ற மொழிகளில் உள்ளது. இதன் உரைகள் ப்ரோட்டோ ஆட்ராலாய்டா பழங்குடியினரின் சமூகத்தில் உள்ளது. இந்தப் பழமையான ஆட்ராலாய்டு பழங்குடியினர் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் கோவா மற்றும் கொங்கன் பகுதியில் இருந்தனர். இப்பழங்குடியினர் முதலில் வேட்டையாடினர். பின்னர் விவசாயம் செய்யத் தொடங்கினர். விவசாயம் தொடர்பான சில கொங்கனி வார்த்தைகள் குமேரி (விவசாய வகை), மெர் (புலத்தின் எல்லை), சோன் (உபரி உற்பத்தி பங்கு), காசன் (விவசாய நிலத்தின் வகை), குட் (அறை), கோம்ப் (குடிசை).

### திராவிட கிளை

திராவிட மொழிகள் பேசுவோர் கொங்கன் பகுதியில் குடியேறினர். வரலாற்று வடமேற்கு இந்தியாவிற்கு ஆரம்ப திராவிடர்கள் வந்தனர். இவ்வாறு வந்த திராவிட வம்சாவளியினர் கொங்கனி வார்த்தைகளைப் பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக, தண்டல் (அரிசி), நால் (தேங்காய்), மாட்வால் (உலையில்), சோறு (சமைத்த அரிசி), வெந்தயம் (வெந்தயம்) முலோ (முள்ளங்கி), சின்ச் (புளி), வாயான்கி (நறுக்கியது), பெல்பாய் (வீட்டில் பல்லி) ஆகிய வார்த்தைகளைப் பயன்படுத்தினர்.

### இந்தோ-ஆரிய கிளை

கொங்கனி இந்தோ ஆரிய கிளையில் உள்ள திராவிடத்திலும் ஆதிக்கம் செலுத்தியது. பிற நவீன இந்தோ ஆரிய மொழிகளை ஒப்பிடும் போது இதில் திராவிட மற்றும் சம கிருதம் குறைந்தே காணப்பட்டது. மொழியியலாளர் ப்ரக்ரித பல்வேறு கூட்டிணைவாகக் கொங்கனியை விவரிக்கிறார். இது கொங்கன் கடற்கரைப் பகுதியில் குடியேறுபவர்களால் பேசப்படுகிறது.

### புவியியல் பகிர்மானம்

கொங்கனி மொழி கொங்கன் எனப்படும் இந்தியாவின் மேற்கு கடற்கரை பகுதியில் பரவலாகப் பேசப்படுகிறது. கொங்கன் பிரிவான மகாராஷ்டிரா, கோவா, உத்தரகன்னடா (முன்னால் வடக்கு கனரா, உடுப்பி மற்றும் தட்சிண கன்னடா, கர்நாடகா) (முன்னாள் தென் கனரா), கர்நாடகா மாவட்டங்கள், கேரளாவின் பல மாவட்டங்கள் (காசர்கோடு, கொச்சி, ஆலப்புழா, திருவனந்தபுரம், கோட்டயம்) ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது. ஒவ்வொரு பகுதிகளிலும் உச்சரிப்பு பாணி, சொல்லகராதி, தொனி, இலக்கணம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்புப் படி (1991) கொங்கனி பேசுவோர் இந்தியாவில் 1,760,607 பேர் உள்ளனர். இது இந்திய மக்கள்தொகையில் 0.21% ஆகும். 602,606 பேர் கோவாவிலும், 706,397 பேர் கர்நாடகாவிலும், 312,618 மகாராஷ்டிராவிலும், 64,008 பேர் கேரளாவிலும் உள்ளனர். இவ்வலிமை மூலம் மொழிகளில் பட்டியலில் 15ஆவது இடத்தில் உள்ளது. மேலும் இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்புத்துறை மூலம் 2001 இல் எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி இந்தியாவில் கொங்கனி பேசுவோர் 2,489,015 பேர் உள்ளதாகக் கூறுகின்றனர்.

கொங்கனி பேச்சாளர்கள் கணிசமான அளவு கென்யா, உகாண்டா, பாகிதான், பாரசீக வளைகுடா, போர்த்துக்கல் பகுதிகளிலும் காணப்படுகின்றனர். போர்த்துக்கீசியர் ஆட்சிக்காலத்தில் ஏராளமான

கொங்கனியினர் இந்த நாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

**ஒலியியல்**

கொங்கனி மொழி *16* அடிப்படை உயிர், *36* மெய், *5* அரை உயிர், *1* மூச்சொலி பல ஒத்த ஓசையுடை ஒலி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மற்ற இந்தோ ஆரிய மொழிகளைப் போல, இதில் நீண்ட உயிர், குறுகிய உயிர் மற்றும் இரண்டு அசைகள் உள்ளன. வேறுபட்ட நாசி ஒலிகள் கொங்கனி மொழியின் சிறப்பம்சாகும்.

**உயிரெழுத்துக்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Devanagari | अ | आ | इ | ई | उ | ऊ | ए |
| Kannada | ಅ/ಒ | ಆ | ಇ | ಈ | ಉ | ಊ | ಎ |
| Malayalam | അ | ആ | ഇ | ഈ | ഉ | ഊ | എ |
| Arabic | - | - | - | - | - | - | - |
| Latin | o | a | i | i | u | u | e |
| IPA | [ɵ] | [a:] | [i] | [i:] | [u] | [u:] | [e] |
| Devanagari | ए/ऍ | ए | ऐ | ओ | ओ | औ | अं |
| Kannada | ಎ | ಎ / ಏ | ಐ | ಒ | ಒ | ಔ | ಅಂ |
| Malayalam | ഏ | ഐ | ഐ | ഒ | ഓ | ഔ | അം |
| Arabic | - | - | - | - | - | - | - |
| Latin | e | e | ai/oi | o | o | au/ou | om/on |
| IPA | [ɛ] | [æ] | [ɵi] | [o] | [ɔ] | [ɵo] | [ɔ] |

## மெய்யெழுத்துக்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Devanagari | क | ख | ग | घ | ङ | ञ | च | छ | ज़ |
| Kannada | ಕ್ | ಖ್ | ಗ್ | ಘ್ | ಙ | ಚ್ | ಚ್ | ಛ್ | ಜ |
| Malayalam | ക് | ഖ് | ഗ് | ഘ് | ങ് | ത്സ് | ച് | ഛ് | ജ |
| Arabic | ک | کھ | گ | گھ | ڠ | ځ | چ | چھ | ز |
| Latin | ka | kha | ga | gha | nga | cha | cha | chha | za |
| IPA | [kə] | [kʰə] | [gə] | [gʱə] | [ŋə] | [tsə] | [cə] | [cʰə] | [zə] |
| Devanagari | ज | झ़ | झ | ञ | ट | ठ | ड | ढ | ण |
| Kannada | ಜ್ | ಝ್ | ಝ್ | ಞ | ಟ್ | ಠ್ | ಡ್ | ಢ್ | ಣ್ |
| Malayalam | ജ് | ഝ് | ഝ് | ഞ് | ട് | ഠ് | ഡ് | ഢ് | ണ് |
| Arabic | ج | زه | جه | ڃ | ٹ | ٹھ | ڈ | ڈھ | ڻ |
| Latin | ja | zha | jha | nha | tta | ttha | dda | ddha | nna |
| IPA | [jə] | [zʱə] | [ɟʱə] | [ɲə] | [ʈə] | [ʈʰə] | [ɖə] | [ɖʱə] | [ɳə] |
| Devanagari | त | थ | द | न | प | फ | ब | भ | म |
| Kannada | ತ್ | ಥ್ | ದ್ | ನ್ | ಪ್ | ಫ್ | ಬ್ | ಭ್ | ಮ್ |
| Malayalam | ത് | ഥ് | ദ് | ന് | പ് | ഫ് | ബ് | ഭ് | മ് |
| Arabic | ت | تھ | د | ن | پ | ف | ب | بھ | م |
| Latin | ta | tha | da | na | pa | fa | ba | bha | ma |
| IPA | [t̪ə] | [t̪ʰə] | [d̪ə] | [nə] | [pə] | [fə] | [bə] | [bʱə] | [mə] |
| Devanagari | य | र | ल | श | ष | स | ह | ळ | व |
| Kannada | ಯ್ | ರ್ | ಲ್ | ಶ್ | ಷ್ | ಸ್ | ಹ್ | ಳ್ | ವ್ |
| Malayalam | യ് | ര് | ല് | ശ് | ഷ് | സ് | ഹ് | ള് | വ് |
| Arabic | ي | ر | ل | ش | – | س | – | – | ڤ |
| Latin | i/e/ie | ra | la | xa | xa | sa | ha | lla | va |
| IPA | [jə] | [rə] | [lə] | [ʃə] | [ʂə] | [sə] | [ɦə] | [ɭə] | [ʋə] |

**இலக்கணம்**

கொங்கனி இலக்கணம் ஒட்டுமொத்த சம கிருத அமைப்பு மற்றும் பிற இந்தோ ஆரிய மொழிகளை ஒத்தே காணப்படுகிறது. கொங்கனி இலக்கணத்திலும்கூட திராவிட மொழிகளின் தாக்கம் இருந்தது. கொங்கனி ஒரு சிறந்த தொடரியல் மற்றும் அமைப்பியல் கொண்ட மொழியாக இருக்கிறது. இதை ஒரு அழுத்தம் மற்றும் தொனி நிறைந்த மொழியாக விவரிக்க முடியாது. பேச்சு பின்வரும் எந்தப் பகுதிகளிலும் வகைப்படுத்தப் படலாம்.

1. நாம் (பெயர்ச்சொல்)
2. சர்வநாம் (பிரதி பெயர்ச்சொல்)
3. விஷேசன் (பெயரடை)
4. க்ரியபாட் (வினைச்சொல்)
5. க்ரியவிஷேசனா (உரிச்சொல்)
6. உபயான்வயி அவ்யாயோ
7. ஷபாயதோயோகி அவ்யாயோ
8. கேவலபிரயோகி அவ்யாயோ

இந்தோ ஆரிய மொழிகளைப் போல் கொங்கனி பெயர், வினை, பொருள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**கொங்கனி, சமஸ்கிருத, பிராகிருத வேர்ச்சொற்கள்**

| Konkani verbs | Sanskrit/Prakrit Root | Translation |
|---|---|---|
| वाच vaach (tatsama) | वच् vach | read |
| ाफय, आपय aafay, aapay (tatsama) | आव्हय् aavhay | call, summon |
| रांध raandh (tatsama) | रांध् raandh | cook |
| बरय baray (tadbhav) | वर्णय् varnay | write |
| व्हर vhar (tadbhav) | हर har | take away |
| भक bhak (tadbhav) | भक्ष् bhaksh | eat |
| हेड hedd (tadbhav) | अट् att | roam |
| ल्हेव lhev (tadbhav) | लेह् leh | lick |
| शीन sheen (tadbhav) | छिन्न chinna | cut |

Source:*Konkani Dhatukosh*[37]

**சொற்றொகுதி**

கொங்கனி சொற்கள் பலவித மூலங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். முக்கிய மூலம் பிராகிருதம் ஆகும். மற்ற இந்திய மொழிகளைக் காட்டிலும் கொங்கனி சம கிருதத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. எனவே சம கிருதம் கொங்கனியில் ஒரு மிக முக்கிய பிரிவாக உள்ளது. கொங்கனி வார்த்தை 'தாட்சாமா' விலிருந்து உருவாக்கப்பட்டது. (சம கிருத வார்த்தை மாறாமல்) டாத்பவா (சம கிருதத்திலிருந்து பெறப்பட்ட வார்த்தை), தேஷ்யா (மாறாத வார்த்தைகள்), அண்டார்தேஷ்யா (வெளிநாட்டு வார்த்தைகள்) ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மற்ற வார்த்தைகள் அரபு, பாரசீக, துருக்கிய, கன்னடம், மராத்தி மற்றும் போர்ச்சுக்கல் ஆகியவற்றிலிருந்தும் பெறப்பட்ட வார்த்தைகளாகும்.

**எழுத்துமுறை**

கொங்கனி பலவிதமான எழுத்து முறையைக் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட எழுத்து எல்லா இடத்திலும் பயன்படுத்தப்படுவதில்லை. இவை வார்த்தைகள் பல இடங்களில் பரவுவதற்கும், அனைவராலும் பேசுவதற்கும் புரிந்து கொள்வதற்கும் முக்கிய பல பேச்சு வழக்குகள் தோன்றுவதற்கும் வழிவகுத்தன. கடந்த காலத்தில் பிராமி எழுத்து பயன்படுத்தப்பட்டது. பிறகு சில கல்வெட்டுகளில் பழைய நாகரி எழுத்து எழுதப்பட்டிருந்தது. போர்ச்சுக்கீசியர் காலத்தில் 1510 இல் தேவநாகரி பயன்படுத்தப்பட்டது. பின் போர்ச்சுக்கீசியர்களால் கொங்கனி, நாகரி எழுத்தில் எழுத தடை விதிக்கப்பட்டிருந்தது.

மற்ற எழுத்துக்களான காண்டேவி அல்லது காய்கண்டி ஆகியவை அப்போதே கோவாவில் உள்ள கடம்பர்களால் 17 ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டது. காண்டேவி/காய்கண்டி ஆகியவை ஹாலே கன்னடா எழுத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டு காணப்பட்டது. சில ஒற்றுமை மட்டுமே காணப்பட்டது. ஹாலிகன்னடா, காண்டேவி/ காய்கண்டி எழுத்துக்கள் கிடைமட்டத்தில், நாகரி எழுத்து போன்று காணப்படும். இந்த எழுத்து கடம்பா எழுத்தைவிட அதிகமாகக் கோவா மற்றும் கொங்கன் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிறகு ஆரம்பகால கல்வெட்டுகளில் தேவநாகரி கி.பி. 1187லும், ரோமானிய எழுத்துக்கள், இலக்கியங்களில் 16 ஆம் நூற்றாண்டிலும் தோன்றின.

தற்காலத்தில் கொங்கனி 5 முறையில் எழுதப்படுகிறது. அவை தேவநாகரி, ரோமானிய, கன்னடம், மலையாளம், பாரசீக அரபு ஆகியவையாகும். கோன் இந்துக்கள் தேவநாகரி எழுத்தைப் பயன்படுத்திய சமயத்தில் கிறித்தவர்கள் ரோமானிய எழுத்தைப்

பயன்படுத்தினர். கர்நாடகாவின் சர வாத், வடகனரா மாவட்டத்தினர் தேவநாகரி எழுத்தைப் பயன்படுத்தினர்.

உடுப்பி மற்றும் தெற்கு கனரா பகுதியினர் கன்னட எழுத்தைப் பயன்படுத்தினர். கர்நாடகா கிறித்தவர்களும் இதையே பயன்படுத்தினர். கேரளாவில் உள்ள கொங்கனி இனத்தவர் மலையாள எழுத்தைப் பயன்படுத்தினர். கர்நாடகாவின் பாட்கால் தாலுக்காவில் உள்ள கொங்கனி மு லீம்கள் அரபு எழுத்தில் கொங்கனியை எழுதினர். சாகித்ய அகாடமி *1975* இல் சுதந்திர இலக்கிய மொழியாக இதனை அறிவித்தது. இலக்கியப் பாரம்பரியத்தில் உள்ள ரோமி கொங்கனி *1556* இல் ஆரம்பமானது. பிறகு கொங்கனி தேவநாகரி எழுத்தில் அதிகாரப்பூர்வ மொழியாகக் கோவாவில் *1987* இல் அறிவிக்கப்பட்டது.

**உயிரெழுத்து, மெய்யெழுத்து அமைப்புகள்**



**வட்டார வழக்கு**



கொங்கனி குறைந்த மக்கள் தொகையிலும் அதிகமான பேச்சு வழக்கைக் கொண்டிருந்தது. வரலாற்று நிகழ்வு, கலாச்சார பேச்சாளர், என்.ஜி.கலேல்கார் விரிவான வட்டார வழக்கை மூன்றாகப் பிரித்துள்ளார்.

**வடக்கு கொங்கனி :** மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள சிந்து துர்கா மாவட்டத்தில் பேசப்படுகிறது. (எ.கா.) மால்வானி, மராத்தியுடன் தொடர்பு கொண்டிருந்தது.

**மத்திய கொங்கனி :** கோவா மற்றும் வடக்கு கர்நாடகா வட்டாரத்தில் பேசப் படுகிறது. இந்தக் கொங்கனி போர்த்துக்கீசிய மொழி மற்றும் கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

**தெற்கு கொங்கனி :** இந்த வட்டார வழக்கு கனரா பகுதியில் (மங்களூர், உடுப்பி) கர்நாடகா மாநிலத்தில் பேசப்படுகிறது. இது துளு மற்றும் கனடாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. மகாராஷ்டிரா கொங்கனி குழுவாக வட்டார வழக்கு இணைந்து கொங்கனி மற்றும் மராத்தி இடையே சிலவற்றை இணைக்கிறது.

**மராத்தி கொங்கனி :** இம்மொழியைக் கிழக்கு இந்தியர்கள் கொங்கனி எனக் கூறுகின்றனர். இது மராத்தி கொங்கனியின் பேச்சுவழக்கு இணைந்த மகாராஷ்டிரா கொங்கனி ஆகும். இத்துடன் கோவா மாநிலத்திற்கு வெளியேயும் மங்களூரான் கொங்கனி, சிட்பவானி கொங்கனி, மால்வானி கொங்கனி, கார்வாரி கொங்கனி ஆகியவையும் பேசப்படுகின்றன.

**கொங்கனி மொழி**

இரண்டாம் நூற்றாண்டிலிருந்து 10 ஆம் நூற்றாண்டு வரை கோவாவில் காணப்பட்ட அனைத்துக் கல்வெட்டுக்கள், செப்புத்

தகடுகள் அனைத்திலும் அதிகமாகப் பிராமி, திராவிட பிராமி எழுத்துக்கள் காணப்பட்டன. சம கிருதத்தின் செல்வாக்கும் அதிகமாகக் காணப்பட்டது. இவற்றில் இடங்கள், மானியங்கள், விவசாயம் தொடர்பான விதிமுறைகள், மக்களின் பெயர்கள் ஆகியவை கொங்கனியில் உள்ளன. கொங்கனி கோவா மற்றும் கொங்கன் பகுதியில் பேசப்படுகிறது.

**ஆரம்ப கால கொங்கனி**

ஆரம்பகால கொங்கனி கல்வெட்டுக்கள் கோவாவில் உள்ள ஆரவேலம் கிராமத்தில் குப்தா காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு பிராமி எழுத்தில் எழுதப்பட்ட இரண்டாம் நூற்றாண்டு கல்வெட்டாகும். மற்ற கல்வெட்டு ஷைலஹாரா ஆபார்தித்யா அரசர் காலத்தில் நகரி எழுத்தில் எழுதப்பட்டு கி.பி. 1166 இல் கண்டுபிடிக்கப் பட்டது. கோவா மற்றும் கொங்கன் பகுதிகளில் காணப்படும் பல கல்வெட்டு மற்றும் செப்புத் தகடுகளில் கொங்கனி இருந்திருக்கிறது. சில வார்த்தைகள் மராத்தியிலும் இருந்திருக்கிறது.

**இடைக்கால கொங்கனி**

இந்தக் காலத்தில் கோவாவின் படையெடுப்பு, மகாராஷ்டிராப் பகுதி, கனரா (இன்றைய கர்நாடகா கடற்கரைப் பகுதி) மற்றும் கொச்சி பற்றிக் குறிப்பிடுகிறது.

படையெடுப்பு (1312 1327க்கு இடையே) டெல்லி சுல்தான் மாலிக்காபூர், அலாவுதீன் கில்ஜி, முகமதுபின் துக்ளக் ஆகியோரால் கோவாபுரி மற்றும் கடம்பர்கள் அழிக்கப்பட்டனர்.

படையெடுப்பின் விளைவாக 1470 இல் பாமணி அரசர்களால் கோவா கைப்பற்றப்பட்டது. இதன் விளைவாக பீஜப்பூர் சுல்தான் யூசுப் அலி ஷாவால் 1492 இல் மீண்டும் இப்பகுதி கைப்பற்றப்பட்டது. பின்னர் 1500 இல் கோவா போர்த்துக்கீசியர்களால் கிறித்தவமயமாக்கப்பட்டது. இந்து, மு லிம் மற்றும் நவ கத்தோலிக்க அமைப்பு கோவாவில் 1560 இல் நிறுவப்பட்டது. பின். 1812 இல் கலைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் கொங்கனியில் பல வட்டார வழக்குகள் உருவாகக் காரணமாக இருந்தன. கடலோர கர்நாடகம், கேரளப் பகுதிகளில் உள்ளோர் கொங்கனி கற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். கொங்கனி பேச்சாளர்களின் மத்தியில் பல உள்ளூர் வார்த்தைகளும் ஊடுருவிக் காணப்பட்டன. எடுத்துக்காட்டாக தர் (கதவு) 'வழிவிட்டு திற' ஆகிய வார்த்தைகள் அடங்கும். பிற கொங்கனி சமூகங்கள் தங்கள் சொந்த வட்டார மொழியைக் கொண்டிருந்தனர். ரத்னகிரி, பாக்தால் பகுதியில்

உள்ள மு லீம்களால் அரபு வார்த்தைகள் கலந்து காணப்பட்டன. மற்ற புலம்பெயர்ந்த இனங்களான சித்தி , பாந்து ஆகியோர் போர்த்துக்கீசிய வியாபாரிகள் மூலம் அடிமைகளாக இந்திய துணைக் கண்டமான தென்கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து வந்தனர்.

**தற்கால கொங்கனி**

தற்கால கொங்கனி தேவநாகரி, கன்னடம், மலையாளம், பாரசீகம், ரோமன் ஆகிய எழுத்தில் எழுதப்படுகிறது. அது அவர்களின் சொந்த வட்டார பேச்சாளர்களால் எழுதப்படுகிறது. எனினும் தேவநாகரி எழுத்து முறையில் கோவா ஆன்ட்ர பேச்சு வழக்கு நிலையான கொங்கனி எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**இலக்கியம்**

கொங்கனியின் முதல் இலக்கிய ஆசிரியர் ஷாமாராஜா. இவர் கிருஷ்ணதா ஷாமா என்று அழைக்கப்படுகிறார். கிருஷ்ணரின் பக்தர் ஆவார். கி.பி. 15ஆம் நூற்றாண்டில் கோவாவில் உள்ள குயிலோஸிம் கிராமத்தில் பிறந்தார். இவர் ஸ்ரீகிருஷ்ண சரித்திரகதா எழுதினார். 13 ஆம் நூற்றாண்டில் இந்து லூனார் நாள்காட்டியில் வைசாகா மாதத்தில் எழுத ஆரம்பித்தார். இவர் இராமாயணம், மகாபாரதம், கிருஷ்ண சரித்திரம் ஆகியவற்றை உரைநடை பாணியில் எழுதினார். இவரது கையெழுத்துப் பிரதிகள் கிடைக்கப்படவில்லை. ஆனால் உரோமன் எழுத்தில் எழுதப்பட்ட பிராகா போர்த்துக்கல்லில் கிடைத்துள்ளது. ஆனால் தற்போதும் இது இரகசியமாகவே உள்ளது.

விஷ்ணுதா நாமா, வைஷ்ம்பாயாணா, பரமே வராகோ ஷாராங்காட் நாமா ஆகியோர் பிஷ்மப்பர்வா மற்றும் ஆதிபர்வா ஆகியவற்றை எழுதினர். இது மொழி மாற்றம் செய்யப்பட்டு பொது நூலகத்தில் போர்த்துக்கல்லில் பிராகாவில் வைக்கப்பட்டுள்ளது.

இராமாயணத்தின் மற்ற பிரதிகளில் ஆசிரியர்பெயர் தாங்கப்பட வில்லை. எனினும் ‘சதாசிவா’ என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதன்முதலில் அச்சிடப்பட்ட கொங்கனி புத்தகம் ஆங்கில ஜீசுட் குரு, பாதிரியார் தாம டீபன் ஆகியோரால் 1622 இல் அச்சிடப்பட்டது.

முதல் கொங்கனி இலக்கியப் புத்தகம் ‘ஆர்ட்டி டாலிங்கா கனாரியம்’ முதன்முதலில் 1640 இல் பாதிரியார் டீபன்சன் என்ற போர்த்துக்கீசியரால் வெளியிடப்பட்டது. அதேபோன்று ‘கொங்கனி இலக்கணம்’ என்ற புத்தகம் 1882 இல் மங்களூரில் ஏஞ்சலோ பிரான்சி கோ சவேரியோ மாஃபை அவர்களால் கனரா கொங்கனி இலக்கணம் வரையறுக்கப்பட்டுள்ளது.

## 10. மைதிலி மொழி

| | |
|---|---|
| பேசப்படும் இடம் | : இந்தியா, நேபாளம் |
| பகுதி | : ஜார்கண்ட், வடக்கு பீகார், நேபாளின் டெராய் பகுதி |
| தாய் மொழியாகக் கொண்டோர் | : 35 மில்லியன் (2000 2001) |
| மொழிக்குடும்பம் : | இந்தோ ஐரோப்பிய<br>இந்தோ ஈரானிய<br>இந்தோ ஆரிய<br>கிழக்கு<br>மைதிலி |
| வட்டார மொழி | : மத்திய (சோட்டிபுரா)<br>பாஜ்ஜிகா<br>கோர்தா (கிழக்கு)<br>டிஹாதி<br>ஜோலஹா<br>கிஷான்<br>தெற்கு<br>தேத்தியா<br>மேற்கு |
| எழுத்துமுறை | : தேவ நாகரி, மைதிலக்சார் |
| அதிகாரபூர்வ மொழி | : அரசியலமைப்பு இந்தியாவின் 8ஆவது பிரிவு பீகார் |

மைதிலி இந்தோ ஆரிய மொழிகளில் ஒன்றாகும். நேபாளின் தென் கிழக்குப் பகுதிகளிலும் மற்றும் இந்தியாவின் வடபீகாரிலும் 46 மில்லியன் மக்களாலும், நேபாளில் 3 மில்லியன் மக்களாலும் பேசப்படுகிறது. இது தேவநாகரி எழுத்து முறையைக் கொண்டுள்ளது. ஆனால் கடந்த காலத்தில் சொந்த மொழியான மைதிலக்ஷார் எழுத்து பயன்படுத்தப்பட்டது.

2003 ஆம் ஆண்டில் மைதிலி மொழி கல்வி, அரசாங்கம், பிற உத்தியோகபூர்வ சூழல்களில் பயன்படுத்தப்பட்டது. மேலும் இம்மொழி இந்திய அரசியலமைப்பின் 8ஆவது அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ளது. இம்மொழி நேபாளில் மிகவும் பேசப்படும் இரண்டாவது மொழியாக உள்ளது (12விழுக்காடு).

**வரலாறு**

மைதிலி என்ற பெயர் 'மிதிலா' என்ற வார்த்தையிலிருந்து வந்தது. இது பண்டைய மன்னர் ஜனகனின் இராச்சியம் ஆகும். மைதிலி என்பது சீதாவின் பெயர் ஆகும். இவர் ஜனகனின் மகளும், இராமனின் மனைவியும் ஆவார். மிதிலாவில் உள்ள அறிஞர்கள் தங்கள் இலக்கியப் பணிக்குச் சம கிருதத்தையே பயன்படுத்தினர். மற்றும் மைதிலி ஒரு பொதுவான நாட்டுப்புற மொழியாக இருந்தது. மைதிலியின் ஆரம்பகால வேலைகள் அனைத்தும் ஜோதி வர் தாக்கர் என்பரால் வர்ண ரத்னாக்கர் எண் முறையில் தொடங்கப்பட்டது.

பாலா வம்ச ஆட்சியின்போது புத்தமதம் மறையத் தொடங்கியது. கர்நாடக அரசால் அரசப் பரம்பரையைச் சார்ந்த ஹரசிம்ஹதேவா (1226 1324) என்பவரால் மீண்டும் நிறுவப்பட்டது. ஜோதி வரா தாகூர் (1280 1340) என்பவர் தூய மைதிலி உரைநடையில் வர்ணரத்னாக்கர எழுதப்பட்டது. ஆரம்பகால உரைநடை ஆகியவை நவீன இந்தோ ஆரிய மொழிகளில் இருந்தது.

1325 இல் கியாசுதீன் துக்ளக் என்னும் தில்லி பேரரசர் மிதிலா மீது படையெடுத்து ஹரசிம்ஹதேவாவைத் தோற்கடித்தார். பின்னர் மிதிலாவின் பூசாரி காமே வரர்ஜா, மைதிலி ஆயின்வர், பிராமணர்கள் ஆகியோர் மைதிலியில் எந்த ஒரு இலக்கியமும் படைக்கவில்லை என்று கூறப்பட்டது. பின் வித்யாதிபதி தாகூர் (1360 1450) அரசர் சிவா சிம்ஹா மற்றும் அரசி லெட்சுமி தேவியின் ஆதரவின்கீழ் ஒரு சகாப்தம் செய்யும் கவிஞராகத் திகழ்ந்தார். இவர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலத்தால் அழியாத இசைப் பாடல்களை உருவாக்கினார். இவை அனைத்தும் இராதா கிருஷ்ணரின் சிறுபிள்ளை விளையாட்டு, சிவன் பார்வதியின் வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றிய பல பாடல்களை உருவாக்கினார். மேலும் இவர் பல பாடங்களை சம கிருத மொழியில் உருவாக்கினார். இவரது பாடல்கள் எல்லா இடங்களிலும் ஞானிகள், குருக்கள், இளைஞர்கள் மத்தியில் வேகமாகப் பரவியது.

சைதன்ய மகாபிரபு இவரது பாடல்களில் ஒரு தெய்வீக ஒளியைக் காண்பதாகக் கூறினார். விரைவில் இந்தப் பாடல்கள் வங்கார வைஷ்ணவ பிரிவுக்கு மாறியது. ரவீந்திரநாத் தாகூரின் ஆர்வத்தை

சீதோனிம் பனோசிம்ஹா என்ற பாடல் வெளிக்கொண்டுவந்தது. வித்யாபதி மதம் சார்ந்த இலக்கியமான அஸாமா, பாங்கா மற்றும் உத்காலா ஆகியவற்றில் அதிகமான செல்வாக்குப் பெற்றிருந்தது.

ஜோன்பூர் சுல்தானின் மிதிலா படையெடுப்புக்குப் பின் டெல்லி, சிவசிம்கா அரசுகள் 1429 இல் மறையத் தொடங்கின. பின் ஆனிபரின் பலவீனமான ஆட்சி மற்றும் இலக்கியம் சார்ந்த வேலைகள் அனைத்தும் நேபாளத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

மைதிலி அல்லது திர்ஹுூத்யா பற்றிய குறிப்புகள் 1771 இல் வெளியிடப்பட்ட பெலிகாட்டி அல்ஃபாபெட்டம் பிரம்மாணிக்கம் என்னும் அமுது ஸி முன்னுரையில் உள்ளது. இம்மொழி இந்திய மொழிகளின் பட்டியலில் உள்ளது. 1801 இல் சம கிருதம் மற்றும் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட கோல்புறுக் கட்டுரையே முதன்முதலில் அதிகமான வட்டார மொழிகளைக் கொண்டு காணப்பட்டது.

பல பக்திப் பாடல்கள் 17 ஆம் நூற்றாண்டின் மத்தியில் வித்யாபதி மற்றும் கோவிந்ததா உட்பட்ட வைஷ்ணவ முனிவர்களால் எழுதப்பட்டது. மாபாத்தி உபாத்யாயா பாரிஜாதஹரணா என்ற நாடகத்தை மைதிலி மொழியில் எழுதினார். பல வேலை சார்ந்த குழுக்கள், கிர்தானிய என அழைக்கப்படும் தலித் வகுப்பைச் சார்ந்த குழுக்கள், பஜன் அல்லது பக்திப் பாடல்களைப் பாடும் பாடகர்கள், பொதுமக்கள் கூடும் இடம் மற்றும் பிரபுக்களின் நீதிமன்றங்கள் ஆகியவற்றிலிருந்து இந்த நாடகம் தொடங்கியது. லோச்சனா (1575 1660) எழுதிய ராகதாரங்கனி, முக்கியமாக இசை அறிவியலிலும், மிதிலாவின் இராகம் மற்றும் தாளங்களையும் வரையறுத்துக் கூறுவதாக உள்ளது.

மல்லா வம்சத்தின் தாய்மொழியான மைதிலி 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் நேபாளின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியது. இந்தக் காலக்கட்டத்தில் குறைந்தது 70 நாடகங்கள் மைதிலி மொழியில் எழுதப்பட்டன. சித்தி நாராயண தேவா (1620 1657) எழுதிய ஹரிச்சந்திரன் ரித்யம் நாடகத்தில் சில கதாபாத்திரங்கள் மைதிலியிலும், மற்ற பேச்சாளர்கள் பெங்காலி, சம கிருதம் மற்றும் பிராகிருத மொழியிலும் பேசியுள்ளனர். நேபாள் பாரம்பரியம் அசாமில் உள்ள ஆன்கிய நாடாவுடனும், ஒடிசாவில் உள்ள ஜாத்ராவுடனும் இணைக்கப் பட்டிருந்தது.

மஹே வர் சிங், கர்பாங்காராஜ் ஆட்சியாளர் மறைவுக்குப் பின் 1860 இல் இந்த ராஜியம் பிரிட்டிஷ் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது. தர்பங்க ராஜ் ஆட்சிக்குப் பின் மகாராஜா லெஷ்மி வேர் சிங் 1898 இல்

ஆட்சிக்கு வந்தார். ஆனால் இந்த நடைமுறையில் மைதிலி மொழியின் பயன்பாடு எதுவும் இல்லை. ஆனால் ஜமின்தார் ராஜ் அவர்களின் அணுகுமுறை மைதிலி மொழியை நோக்கியே இருந்தது. எனினும் மைதிலி மொழியின் பயன்பாடு எம்.எம்.பரமே வரர் மி ரா, சந்தா ஜா, முன்சி ரகுநாதன் ஆகியோரின் தனிப்பட்ட முயற்சியால் புதுப்பிக்கப் பட்டது.

மிதிலாவின் வெளியீடுகளான மைதிலிஹிதா நாதனா *(1905)*, மிதிலா மோடா *(1906)*, மிதிலா பிஹிர் *(1908)* ஆகியவை எழுத்தாளர் களிடையே ஒரு ஊக்கத்தை ஏற்படுத்தியது. முதல் சமூக அமைப்பான மைதிலி மகாசபா 1910 இல் மைதிலி மற்றும் மிதிலாவின் வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இது மைதிலி பிராமணர்கள் மற்றும் கர்ணகயா தா சாதிகளைச் சேர்ந்தவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் மைதிலி மகாசபா மைதிலி மொழி ஒரு அதிகாரப்பூர்வ மொழி எனப் பிரச்சாரம் செய்தது. கல்கத்தா பல்கலைக் கழகம் 1917 இல் மைதிலி மொழியை அங்கீகரித்தது. பின் இது மற்ற பல்கலைக்கழகங்களுக்கும் சென்றது. பாபு போலோலால் தா மைதிலி மொழியில் (மைதிலி வயாக்கரன்) இலக்கணப் புத்தகத்தை எழுதினார். மேலும் இவர் கத்யா கசுமன்ஜலி என்ற புத்தகத்தை மைதிலி மொழியில் பிரசுரித்தார்.

1965 இல் இந்திய இலக்கியத்தின் உயர் அமைப்பான சாகித்ய அகடமியால் மைதிலி மொழி அதிகாரப்பூர்வ மொழியாக அங்கீகரிக்கப் பட்டது. 2003 இல் மைதிலி மொழி இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய மொழிகளில் ஒன்று என அரசியலமைப்பு எண் ஏழாவது பிரிவு அறிவித்துள்ளது. இம்மொழி தற்போது 22 அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் ஒன்றாக உள்ளது. மைதிலி புத்தகங்கள் மற்றும் மைதிலக்ஷர் எழுத்துமுறை ஆகியவை ஆச்சார்ய ராம்லோச்சன் சரண் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.

**புவியியல் பகிர்வு**

பீகார் போலல்லாமல் இந்திக்கு அடுத்தபடியாக வட்டார மொழி போஜ்பூர் மற்றும் மகதி வடிவில் உள்ளது. மாற்றப்பட்ட வடிவங்களில் இரண்டாவது முக்கிய மொழியாக இந்திக்குப் பின்னர் ஜார்கண்டில் மைதிலி பேசப்படுகிறது. மைதிலி மேலும் தென்கிழக்கு நேபாளின் பூர்னியா, மங்கர், பகல்பூர் மாவட்டங்களிலும் பேசப்படுகிறது. கலாச்சார மற்றும் மொழியியல் மையங்கள் மதுபானி, தர்பாங்கா ஆகிய நகரங்களில் உள்ளன. மைதிலி பேசுவோர் டெல்லி, கல்கத்தா, மும்பையிலும், சிதாமரி, சஹார்சா, மாதேபுரா, சுபால் ஆகிய பகுதிகளிலும் வசித்து வருகின்றனர்.

நேபாளில் மைதிலி மொழி டெராய் மாவட்டத்தின் ஜனாக்பூர் மண்டலத்திலும் அதேபோல் சர்லாகி, மஹோட்டரி, தனுஷா மாவட்டத்திலும், சன்சாரி மாவட்டத்திலும், கோசி மண்டலத்திலும், சிராஹா, சப்தாரி மாவட்டத்திலும் சகர்மாதா மண்டலத்திலும் பேசப்படுகிறது.

**வகைப்படுத்தல்**

19 ஆம் நூற்றாண்டில் மொழியியல் அறிஞர்கள் மைதிலி பெங்காலி அல்லது இந்தியின் வட்டார மொழி எனவும், பீகாரில் பேசப்படும் மொழிக் குழுக்களில் ஒன்று என்றும் கருதினார்கள். ஹோர்னல் ஒப்பிடும்போது இது ஒரு பாதுகாப்பு மொழி எனக் குறிப்பிடுகிறார். ஜியர்சன் இது ஒரு தனித்துவமான அங்கீகரிக்கப்பட்ட மொழி எனவும் அதன் முதல் இலக்கணம் 1881 இல் வெளியிடப்பட்டது எனவும் கூறுகிறார்.

**வட்டார மொழி**

புத்தகத்தில் எழுதும் மைதிலி மொழி ஒரு நிலையான வடிவத்தில் உள்ளது. மத்திய மைதிலி தர்பங்கா பிரிவு மற்றும் கோசி பிரிவு மாவட்டங்களிலும் பேசப்படுகிறது. கோர்தா வட்டார மொழி தியாகோர் பகுதியில் பேசப்படுகிறது. வஜ்ஜிக்கா எனும் பேச்சு வழக்கும் இம்மொழியில் உள்ளது. தார்வாட் நேபாளில் பிரத்யேகமாக பேசப்படுகிறது. ஜோலாகா மைதிலி ஒரு வட்டார மொழி அல்ல. ஆனால் மிதியாவில் உள்ள இசுலாமியர்களால் பேசப்படுகிறது. இதற்காக எந்தக் குறிப்பிட்ட பகுதியும் இல்லை.

**உயிரெழுத்துக்கள்**



**மெய்யெழுத்துக்கள்**




**எண்கள்**




மைதி பாரம்பரியமாக மைதிலி மொழியில் (இது திர்குதா அதாவது மிதிலாக்ஷர் என அறியப்படுகிறது) எழுதப்படுகிறது. மேலும் காய்தி எழுத்திலும் எழுதப்படுகிறது. ஐ.எ.ஓ. யுனிகோடு தொழில்நுட்பக் குழு காய்தி மற்றுத் திர்குதா எழுத்தை அங்கீகரித்துள்ளது. இப்போதெல்லாம் தேவநாகரி எழுத்து பொதுவாகப் பேசப்படுகிறது. மைதிலி மொழியைப் பாதுகாப்பதற்கு எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. எனினும் தற்போது நிலையான டிஜிட்டல் முறை மூலம் மைதிலி எழுத்தைப் பாதுகாத்து வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் தொழில்நுட்ப ஒப்புதலை அனுஷ்மன் பாண்டே பெற்றுக் கொடுத்தார்.

**இலக்கியம்**

மைதிலி மொழியில் மிகவும் பிரபலமான கவிஞர் வித்யாபதி *(1350 1450)* ஆவார். இவர் இவருடைய கவிதைகள் அனைத்தையும் மைதிலி மொழியில் எழுதினார். மைதிலி மாநிலத்தில் சமகிருதமும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இன்றளவும் இலக்கிய மொழிகளில் சமகிருதம் பயன்படுத்தப்படுகிறது. பிற்காலத்தில் மைதிலி பயன்பாட்டில் சமகிருதமும் சேர்ந்து இலக்கியத்தில் வித்யாபதிக்குப் பிறகு ஒரு பொதுவான நிலை வந்தது.

மகதி பிராகிருதத்தின் முக்கியப் பண்புகள் இணைந்து சக்கு s என்றும், h க்கு n என்றும், j க்கு y, bக்கு y ஆகியவையும் சில மாற்றம் பெற்றன. அசோகரின் ஆணைப்படி r மாற்றம் h என மாறியது. மகாவீரர், புத்தர் ஆகியோர் தங்களது மதப் போதனைகளைக் கிழக்கு மொழியில் வழங்கினர். மொழி மதச் சார்பற்றுப் பயன்படுத்தப் படுவதற்காக கிழக்குப் பகுதியில் இருந்து பிராகிருத பைங்கலாம், விரிவான பிராகிருதம் மற்றும் அபாபிராம்ஷா அவஹாட்டா கவிதைகள் உருவாகின. ஜோதிரிஹ்வர் லோரிகாவைக் குறிப்பிடுகிறார். வச்ச பதி II அவருடைய தட்வசிந்தாமணி மற்றும் வித்யாபதியின் தனவாக்யாவளி ஆகியவை மைதிலியில் அதிகமாகத் தினசரி பயன்படுத்தப்படுகின்றன. மைதிலி எழுத்து, மிதிலாக்ஷரா அல்லது திரிகுதா ஆகியவை பழங்காலத்தில் மிகவும் பிரபலமாக அறியப்பட்டது. லலிதவி தாரா வைதேகி எழுத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஆரம்பத்தில் ஏழாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் சில மாற்றங்கள் பெற்று வடகிழக்கு எழுத்துக்கள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டன. பிறகு முதன் முறையாகக் கிழக்கிந்திய பகுதிகளில் வளர்ச்சியடைந்து மைதிலி மொழி அசாம், பெங்கால், நேபாளம் ஆகியப் பகுதிகளுக்கு வந்தது.

மைதிலி எழுத்தின் முந்தைய எழுத்து ஆதித்யசேனாவின் மந்தர் மலை கல்வெட்டுகளில் காணப்பட்டது (கி.பி. 7 ஆம் நூ.). தற்பொழுது இக்கல்வெட்டு தியாகோரில் உள்ள பைத்தியநாத் கோவிலில் உள்ளது. காம்ரூபா பேச்சுவழக்கு கிழக்கு மைதிலியில் முக்கியமாக ஆரிய மொழி பேசப்படும் அரசவைகளில், அதிலும் அசாம் பள்ளத்தாக்கு மற்றும் வடக்கு வங்காளத்திலும், கூடுதலாகப் பூர்ணா மாவட்டத்திலும் பேசப்படுகிறது. புத்த தோகா மொழிகள் அனைத்தும் மைதிலி மொழியுடன் கலந்து பேசப்படும் காம்ரூபி மொழியாகும்.

**ஆரம்பகால மைதிலி இலக்கியம்**

இந்தக் காலக்கட்டத்தில் கதைப்பாடல்கள், இசை, தோகா ஆகியவை இருந்தன. இக்காலத்தில் உள்ள சில முக்கியமான மைதிலி

எழுத்தாளர்கள் கவி கோகில், ஜோதிரி வர் வித்யாபதி, ஜோதிரி வர் தாகூர் *(1290 1350)* ஆகியோர் ஆவர். இரண்டாமவர் எழுதிய 'வர்ணாத்நாக்கர்' வட இந்திய மொழிகளில் எழுதப்பட்ட முதல் உரைநடை கலைக்களஞ்சியம் ஆகும்.

**மத்திய மைதிலி இலக்கியம்**

இந்தக் கால எழுத்துக்கள் நாடக வடிவில் இருந்தன. இக்காலத்தில் உள்ள சில முக்கிய மைதிலி எழுத்தாளர்கள் வித்யாபதி *(1350 1450)*, மகமந்தா சங்கர தேவா *(1449 1568)*, கோவிந்ததா ஆகியோராவர்.

## 11. மலையாள மொழி

| | |
|---|---|
| பேசப்படும் இடம் | அதிகமாக இந்திய மாநிலமான கேரளாவில். |
| பகுதி | கேரளா, லட்சத்தீவு, மாஹ, புதுச்சேரி |
| இனம் | மலையாளி |
| மொழி பேசுபவர்கள் | 38 மில்லியன் (2007) |
| மொழிக் குடும்பம் | திராவிடம் |
| மொழி மரபு இனவகைப்பாடு | |
| தென்பகுதி | தமிழ் கன்னடம் |
| | தமிழ் குடகு |
| | தமிழ் மலையாளம் |
| எழுத்துமுறை | மலையாள எழுத்துக்கள் (பிராமிக்) |
| | மலையாளம் ப்ரெய்லி |

**வரலாறு**

மலையாளம் இந்திய மாநிலமான கேரள மாநிலத்தின் முக்கிய மொழியாகும். இது இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகளில் ஒன்றாகும். மலையாள மொழி கேரளா மற்றும் லட்சத் தீவுகள், புதுச்சேரி யூனியன் பிரதேசங்களில் அதிகாரப்பூர்வ மொழியாக உள்ளது. இம்மொழி கேரளாவில் மட்டுமின்றி தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய அண்டை மாநிலங்களிலும் பேசப்படுகிறது. தமிழ்நாட்டில் நீலகிரி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், கர்நாடகாவில் தட்சின கன்னடா மற்றும் குடகு மாவட்டங்களிலும் பேசப்படுகிறது.

மலையாளம் 6 ஆம் நூற்றாண்டில் மத்திய தமிழிலிருந்து உருவானது. மலையாளத்தில் 80 விழுக்காட்டிற்கு மேல் பல சொல்லகராதிகள் உள்ளன. இவற்றில் பல சொற்கள் சம கிருத மொழியிலிருந்து பெறப்பட்டுள்ளன. நவீன மலையாளம் இன்னும் பல தமிழ் வார்த்தைகளை சங்க இலக்கிய காலத்திலிருந்து பாதுகாத்து வருகிறது. மலையாள மொழி பல இலக்கண விதிகள் மற்றும் வார்த்தைகளைச் சம கிருத மொழியிலிருந்து கடன் வாங்கத்

தொடங்கியது. இதற்குப் பின் எழுதப்பட்ட எழுத்துக்கள் ஆர்ய எழுத்துக்கள் எனப்பட்டன. நவீன காலத்தில் மலையாளத் திரைக் கதைகள் உருவாயின. பல இடைக்கால புனித நூல்களும், பழமையான இலக்கியப் பணிகளும் தொடங்கியது. இவ்வாறு இலக்கிய பயணமும் தொடங்கியது. 9 மற்றும் 11 ஆம் நூற்றாண்டுகளின் இடையில் சுமார் 1785 இல் பி.தோமா கொத்தனார் என்பவரால் எழுதப்பட்ட வர்த்தமான் பு த்தகமே முதல் நூல் ஆகும்.

மலையாளத்தில் தனியாகப் பேச்சுவழக்கு கிடையாது. கிறித்தவர்கள் மற்றும் மு லீம்களின் வருகையினாலும், நம்பூதிரிகளின் வருகையினாலும் மலையாள மொழியில் அதிகமாகச் சம கிருதம் கலந்து காணப்பட்டது. மிகவும் பிரபலமான பல பாடல்களும் உருவாக்கப்பட்டன. முக்கியமாகக் கம்பனின் தமிழ் இராமாயணம் மலையாள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

மலையாள வட்டார மத்தியில் விலகுதல் போன்ற ஒலிப்பியல், ஒலியியல், இலக்கணம் மற்றும் சொல்லகராதி ஆகியவை அனைத்து அம்சங்களிலும் தழுவு பேச்சுவழக்கிலும், வாய்மொழி வடிவங்களுடன் சேர்க்கப்பட்டது.

முக்கியமாக ஹரிஜன் பேச்சு ஒருசில வகையாகவும், மலையாள கிறித்தவர்கள் பேச்சுமுறை நாயக்கரின் பேச்சுவழக்குடன் ஒத்து காணப்படுகிறது. கிறித்தவர்கள் பேசும் முறையில் அதிகமாக மலையாளத்துடன் ஆங்கில வார்த்தைகள் கலந்து காணப்பட்டன.

மலையாள இலத்தீன் கிறித்தவர்கள் மீனவர் பகுதிகளில் வாழும் அமைப்பில் அவர்களின் பேச்சுவழக்கில் இலத்தீன் போர்த்துக்கீசியம் மற்றும் ஆங்கில வார்த்தைகள் கலந்து காணப்பட்டன. மு லீம்கள் பேசும் முறையில் அதிகமாக அரபு மற்றும் உருது கலக்கப்படாவிடினும் சம கிருத மற்றும் ஆங்கிலப் பாதிப்புகள் அதிகமாகக் காணப்பட்டன. பேச்சு வழக்கில் 'ழ' கர ஒலிக்கு அவர்கள் 'ய' எனக் குறிப்பிட்டனர்.

மலையாள புவியியல் வட்டாரப் பகுதிகளில் பல இனவாத அமைப்பு முறை காணப்பட்டதால் கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறையிலிருந்து நடத்தப்பட்ட ஆய்வில் 1974-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மலையாளம் 12 விதமான மொழிகளுடன் கலந்து பேசப்பட்டதாக அவ் ஆய்வு கூறியுள்ளது.

மலையாள வட்டார மொழி, இனவாத வேறுபாடுகள், உட்பிராந்திய வேறுபாடுகள் மற்றும் பழங்குடி பேச்சு வழக்கு எனப் பல பிரிவுகள் காணப்பட்டும், பிராமணர்கள், ஹரிஜன், ஈழவர், கிறி தவர், லத்தீன் கிறி தவர் மற்றும் மு லீம்கள், மீனவர், மலையாளிகள் எனப்

பல்வேறு பிரிவுகள் பொதுவான தொழில்சார் அடிப்படையிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. எனினும் கிறி தவ சபைகள் மலையாள சமூகத்திற்குப் பல மொழி அகராதிகள் மற்றும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட விவிலியங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளன. மேலும் இவ் அயல்நாட்டவர்கள் பலவற்றைச் சம கிருத மொழியிலும் வழங்கினர். அவை வானியல், ஜோதிடம், கணக்கு, மருத்துவம் ஆகியவை ஆகும். இவை அனைத்தும் சம கிருத மொழியில் புலமை பெற்றவர்களால் எழுதப்பட்டது.

இலக்கியத்தில் திறமைபெற்ற இறையம்மன் தம்பி மற்றும் வித்வான் கொய்த்தம்புரான் ஆகியோர் மிகச் சிறந்த பாடல் மற்றும் கவிதைகளை இயற்றியுள்ளனர். மேலும் மலையாளம் அதிகமான கதக்களி இலக்கியங்களை வழங்கியுள்ளது. ஓமன திங்கல் கிட்டாபோவின் படைப்பான தக்ஷயாகம், கிச்சகவாதம் மற்றும் யுத்ர வாயவரம் ஆகியவை சிறந்த படைப்பாகும். கதக்களியில் ராவண விஜயம் ஒரு சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது.

### சொல்லாக்கம்

மலையாளம் என்பதன் பொருளானது தமிழில் 'மலை' என்றால் குன்று என்றும், 'யாளம்' என்றால் 'பிரதேசம்' என்பதும் பொருளாகும். மலையாளம் என்பது மலைப்பிரதேசம் எனப்படுகிறது. மலைப்பகுதி நிலம் என்பது சேர அரசைக் குறிக்கவும் பயன்பட்டது. பின் மலையாளத்திற்கு மாற்றாக ஆலினம், மலையாளினி, மலையானி, மாலின், மாலியாத் மற்றும் மல்லிலி என்றும் அழைக்கப்படுகிறது.

முதலில் அந்தப் பிராந்தியத்தில் அதன் பொருள் மலையாளம் என்பது Malayanma அல்லது Malayayma என்று குறிப்பிடப்படுகிறது. இது தேசிய மொழி மலையாளம் என்று பொருள்படும். நவீன மலையாள மொழி தோற்றம் கொண்ட பின் பழங்காலத்தில் உள்ள வார்த்தை Malayanma என்பது மாறி 19 ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் மலையாளம் எனப் பெயர்பெற்றது.

### பரிணாமம்

மலையாள மொழி தமிழ் அல்லது புரோட்டோ திராவிட மொழிக் கிளைகளிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று ஒப்பிட்டு வல்லுநர்கள் கூறுகின்றனர். ராபர்ட் கால்டுவெல் அவரது திர்ாவிட மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் மற்றும் தென்னிந்திய மொழிகள் ஆகிய நூல்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளன.

மலையாள மொழியானது ஒரு காலக்கட்டத்தில் அதன் வார்த்தை அமைப்பு முறையில் அதிகமாகச் சம கிருதம் பயன்படுத்தப்

பட்டமையால் அதற்கான தனிப்பட்ட மதிப்பு குறையத் தொடங்கியது. பின் 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுத்து முறைகளிலும் தமிழிலிருந்து பல மாறுதல்கள் காணப்பட்டன.

ஆரம்பத்தில் அறியப்பட்ட கவிதை ராமச்சரிதம் என்பது சம கிருத எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு முன்னரே, அதாவது 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

**எழுத்துமுறை**

**உயிரெழுத்துக்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| അ | ആ | ഇ | ഈ | ഉ | ഊ | ഋ |
| a | ā | i | ī | u | ū | ṛ |
| [a] | [a:] | [i] | [i:] | [u] | [u:] | [ri] |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| എ | ഏ | ഐ | ഒ | ഓ | ഔ |
| e | ē | ai | o | ō | au |
| [e] | [e:] | [aj] | [o] | [o:] | [au] |

**மெய்யெழுத்துக்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ക | ഖ | ഗ | ഘ | ങ | ച | ഛ | ജ | ഝ | ഞ |
| ka | kha | ga | gha | ña | ca | cha | ja | jha | ña |
| [ka] | [kʰa] | [ga] | [gʱa] | [ŋa] | [tʃa] | [tʃʰa] | [dʒa] | [dʒʱa] | [ɲa] |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ട | ഠ | ഡ | ഢ | ണ | ത | ഥ | ദ | ധ | ന |
| ṭa | ṭha | ḍa | ḍha | ṇa | ta | tha | da | dha | na |
| [ʈa] | [ʈʰa] | [ɖa] | [ɖʱa] | [ɳa] | [t̪a] | [t̪ʰa] | [d̪a] | [d̪ʱa] | [na, n̪a] |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| പ | ഫ | ബ | ഭ | മ | യ | ര | ല | വ |
| pa | pha | ba | bha | ma | ya | ra | la | va |
| [pa] | [pʰa] | [ba] | [bʱa] | [ma] | [ja] | [ɾa] | [la] | [ʋa] |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ശ | ഷ | സ | ഹ | ള | ഴ | റ |
| śa | ṣa | sa | ha | ḷa | ḻa | ṟa |
| [ɕa] | [ʃa] | [sa] | [ɦa] | [ɭa] | [ɻa] | [ra] |

### இணைப்பு மெய்யெழுத்துக்கள்

A selection of conjunct consonants

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| സ്ക | യ്ക്ക | ച്ഛ | ജ്ജ | ട്ട | ഡ്ഡ | ഷ്ണ |
| ska | ykka | ccha | jja | ṭṭa | ḍḍa | ṣṇa |
| പ്ത | ബ്ദ | സ്ന | പ്പ | ക്മ | പ്സ | ക്ക |
| pta | bda | sna | ppa | kma | psa | kka |
| ക്ത | ങ്ക | ങ്ങ | ഞ്ഞ | ഞ്ച | ണ്ട | ക്ഷ |
| kta | ñka | ññа | ñña | ñca | ṇṭa | kṣa |
| ണ്ഡ | ത്ത | ത്മ | ന്ത | ന്ദ | ശ്ച | |
| ṇḍa | tta | tma | nta | nda | śca | |

### எண்கள்

Numerals (അക്കങ്ങൾ akkaññalla)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ൧ | ൨ | ൩ | ൪ | ൫ | ൬ | ൭ | ൮ | ൯ | ൰ |
| ഒന്നു | രണ്ടു | മൂന്നു | നാലു | അഞ്ചു | ആറു | ഏഴു | എട്ടു | ഒമ്പതു | പത്തു |
| ഒന്നു | രണ്ടു | മൂന്നു | നാലു | അഞ്ചു | ആറു | ഏഴു | എട്ടു | ഒമ്പതു | പത്തു |
| onnu | raṇṭu | mūnnu | nālu | añcu | āṛu | ēḻu | eṭṭu | onpatu | pattu |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

### இலக்கியம்

மலையாளம் கி.பி. ஒன்பது அல்லது பத்தாவது நூற்றாண்டில்தான் தனியொரு மொழியாக வளர்ந்தது என்றாலும்கூட அதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தனக்குரிய தனிக்கூறுகள் பலவற்றையும் அடைந்திருக்கிறது. இம்மொழி தமிழ்மொழியின் கிளைமொழியாக இருந்திருந்தாலும்கூட பல புதிய உருவங்களையும் மாற்றங்களையும் கொண்டு வளர்ந்த நிலையில் காலப்போக்கில் தனியொரு மொழியாகவும் மாறி தனக்கென தனியொரு வாழ்வையும் பாரம்பரியத்தையும் அமைத்துக் கொண்டது.

இம்மொழியின் கால வரலாற்றை ஒரு வகையினர் முற்காலம், இடைக்காலம், தற்காலம் என்றும் பிறிதோர் வகையினர் முற்காலம், தற்காலம் என்றும் பிரிப்பர். கி.பி. 9 ஆவது நூற்றாண்டு முதல் கி.பி. 13

ஆம் நூற்றாண்டு வரை முற்காலம் என்றும், கி.பி. 13 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆவது நூற்றாண்டு வரையுள்ள பகுதியை இடைக்காலம் என்றும்,அதற்குப் பின்னர் உள்ள காலத்தைத் தற்காலம் என்றும் பிரிப்பர்.

மலையாள மொழியின்கண் காணப்படும் இலக்கியங்களில் தமிழ் மற்றும் சம கிருதம் ஆகிய இரு மொழிகளின் செல்வாக்கு அதிகளவில் காணப்படுகின்றன. இம்மொழியின் முதல் இலக்கியம் ராமசரிதம். இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகும். இச்சரிதம் கி.பி. 1195 முதல் கி.பி. 1208 வரையிலும் திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தை ஆண்டு வந்த ஸ்ரீவீரராம வர்மாவால் எழுதப்பட்டதாகும். இந்நூலிலும் தமிழ் மொழியின் செல்வாக்கினைக் காணமுடியும்.

ராமசரிதத்தை ஒட்டி பல நூல்கள் இம்மொழியில் தோன்றின. இவற்றுள் உண்ணுநீலி சந்தேசம் இவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். தலைவி தன்னுடைய காதலனாகிய அரசன் ஒருவனுக்குத் தூதுவிட்டதாக எழுதப்பட்ட இந்நூல் நாடு, நகரம், இயற்கை காட்சிகள் போன்றவற்றைப் பற்றிக் கூறும் இந்நூல் கி.பி. 1315 ஐ ஒட்டிய காலப்பகுதியில் தோன்றியது. இதுபோன்றே பல சம்பு இலக்கியங்கள் இக்காலத்தில் தோன்றின. சம்பு இலக்கியங்கள் என்பவை உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் ஆகும். இக்காலப்பகுதியில் தான் பாரதம், செல்லூர், மகாத்மியம், பாஷாநிடதம் போன்ற சம்பு இலக்கியங்கள் பல தோன்றின. இவ்விலக்கியங்களின் உரைநடைப் பகுதிகளில் ஏராளமான மலையாளச் சொற்களைக் காணமுடியும். சம்பு இலக்கியத்தைப் போன்றே 14, 15 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தோன்றிய கண்ணேசன் பாட்டுக்களும் குறிப்பிடத்தக்க இலக்கியங்களாகக் காணப்படுகின்றன.

மலையாள மொழி வரலாற்றில் மிக முக்கியமான ஒரு திருப்பு முனையாகக் கருதப்பட்ட நூல் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஆசிரியர் செருசேரி நம்பூதிரியின் கிருஷ்ணகாதையாகும். இக்காதையின் கண் தமிழ், சம கிருதம் ஆகிய மொழிகளின் செல்வாக்கு காணப்பட்ட போதிலும் மலையாள மொழியின் தனித்தன்மை பலவற்றை இந்நூல் கொண்டுள்ளது. இதன் பின்னர் தோன்றிய பல இலக்கியங்கள் கலப்பற்ற மலையாள இலக்கியங்களாகத் தோன்றின.

கி.பி. 15 அல்லது 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்தச்சன் அவர்களது தோற்றம் இம்மொழியின் வாழ்விலும் வரலாற்றிலும் தனியொரு இடத்தைப் பெற்றதாக அமைகிறது. எனவேதான் இவர் மலையாள மொழியின் தந்தையாகக் கருதப்படுகிறார். இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களைத் தழுவி இவர் எழுதிய நூல்கள் மலையாள மொழியின் சிறந்த இலக்கியங்களாக உள்ளன. தனக்கென

தனியொரு நடையையும் இலக்கியபாணியையும் கொண்ட இவரது நூல்கள் மிகச் சிறந்தனவாகும். கிளிப்பாட்டுகள் என அழைக்கப்படும் இவரது நூல்கள் படிப்பவர்க்கு இன்பம் தருவன. மலையாள இலக்கியம் இவருடைய கைவண்ணத்திலும் கற்பனை வளத்திலும் ஒரு புதிய வேகத்தையும் வளர்ச்சியையும் அடைந்தது. பக்தி இலக்கியத்திற்கு வேண்டிய பண்புகள் அனைத்தும் இவர்தம் இலக்கியத்தில் காணக்கிடைப்பதும் சிறப்பான ஒன்றாகும்.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் கதகளி இலக்கியங்களும் மலையாள மண்ணில் தோன்றின. கேரள நாட்டின் இரு கண்களாகக் கருதப்படும் கதகளி நாட்டிய நாடகமும் இன்றைய உருவங்களை இருபதாம் நூற்றாண்டில்தான் கண்டன. இந்நிலையில் பல இலக்கியங்கள் உருவாகின. மலையாள மண்ணில் பல காலமாக வேரூன்றி இருந்த நாட்டிய வகை கதகளியாகும். கதை + களி எனப் பிரித்து (களி விளையாட்டு, ஆடல்) கதையை ஆட்டத்தில் காட்டுதல் எனப் பெயர் கொள்ளலாம். இவ்ஆட்டத்தில் பயன்படும் கதையை 'ஆட்டகதா' ஆட்டத்திற்குரிய கதை என்பார். இக்கலைக்காகவே பல கதைகளும் இலக்கியங்களும் உருவாகத் தொடங்கின. இவ் இலக்கிய வகை ஜெயதேவாவின் காலத்தில்தான் முதன்முதலில் தோன்றின. இவரது கீதா கோவிந்தா என்ற நூல் இவ்வகையில் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இத்தகைய கவிதைகளையும் கதைகளையும் கதகளியில் புகுத்தியவர்கள் சாக்கையர் எனப்படும் சாதியினராவர். ஜெயதேவாவின் கீதா கோவிந்தத்தை அடுத்து கிருஷ்ணகிதி என்னும்நூல் உண்டாயிற்று. தம்புரான், உண்ணாயிவாரியர் இந்நிலையில் குறிப்பிடத்தக்கவர்கள். கதகளிக்காக எழுந்த பாடல்களுக்கு இலக்கிய அந்த தை அளித்த பெருமை கோட்டயத்து தம்பிரானைச் சாரும். மகாபாரத கதைகளை யொட்டி இவர் ஆக்கிய பாகவதம், கிரிம்மிதவதம், காலகேயவதம், கல்யாண சௌகாந்திகம் என்பவை இவ்விலக்கியங்களில் குறிப்பிடத் தக்கன. இவற்றுள் காலகேயவதம் சிறந்து விளங்குகிறது என்பர். இவற்றையடுத்து உண்ணாயிவாரியாரின் நளசரிதம் குறிப்பிடத்தக்க ஒரு நூலாகும். இவர் அது மட்டுமன்றி கிரிஜா கல்யாணம், ஹம்சபாட்டு என்ற நூல்களையும் ஆக்கியுள்ளார். இறையுமன் தம்பி, கிளிமானூர் வித்துவான் கோயில் தம்புரான், கிருஷ்ணன் தம்பி போன்றவர்களும் கதகளி நூல்கள் பல ஆக்கியுள்ளனர்.

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில்தான் துள்ளல் இலக்கியங்களும் உருவெடுத்தன. கதகளி நாடகங்கள் சமுதாயத்தில் உயர்ந்து விளங்கிய மக்களிடையே மட்டுந்தான் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆனால் துள்ளல் மக்களிடையே வாழ்ந்து வளர்ந்து வந்தது. குஞ்சன் நம்பியார்

என்னும் கவிஞரின் கைவண்ணத்தில் துள்ளல் உருவானது மட்டுமின்றி மக்களிடையேயும் காட்டுத்தீயெனப் பரந்து வளர்ந்தது. மக்களின் மனதைக் கவர்ந்த இந்நாட்டியக் கலையை உருவாக்கிய இவர் சிரிக்கச் சிரிக்க பேசும் திறனும் சமுதாயத்தில் காணப்பட்ட ஊழல்களை எடுத்துக் கூறி மக்களைச் சிந்திக்க வைக்கும் பேராற்றலும் பெற்று விளங்கினார். 1705 இல் பிறந்த இவர், பஞ்சேந்திரோகாக்கியானம் கார்த்தவீரியார்ஜுன விஜயம் போன்ற எழுபதுக்கும் அதிகமான நூல்களை இயற்றியுள்ளார்.

இவ்வாறு வளர்ந்துவந்த மலையாள இலக்கியம் 19 ஆம் நூற்றாண்டில் மேனாட்டினரின் வரவால் மேலும் சிறந்துவளரத் தலைப்பட்டது. கிறித்தவ மதத்தின் செல்வாக்கு கேரளநாட்டில் அதிகமாக வளர, பல இலக்கியங்கள் உருவாயின. கி.பி. முதல் நூற்றாண்டிலேயே வேரூன்றிய கிறித்தவ மதம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் நன்கு வளரத் தலைப்பட்டது. இந்நிலையில் இம்மொழியின் முதல் அச்சுப் புத்தகம் கி.பி. 1714 இல் வெளிவந்தது. பின்னர் 1733 முதல் தொடர்ச்சியாகப் பல அச்சு நூல்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன. இன்று மலையாள இலக்கியம் சிறந்ததொரு கவர்ச்சியைக் கொண்டுள்ளது. கேரளவர்மா (1845 1915), இராஜராஜ வர்மா (1853 1918), குஞ்சுகுட்டன் தம்புரான் போன்றவர்களும், 20 ஆம் நூற்றாண்டில் முப்பெரும் கவிஞர்களாகக் கருதப்படும் குமாரன் ஆசான் (1873 1924), வள்ளத்தோள் நாராயணமேனன் (1879 1958), உள்ளூர் பரமே வர ஐயர் (1877 1949) போன்றவர்களும் மலையாள மொழியை வளமுள்ள ஒரு மொழியாக ஆக்கிச் சென்றுள்ளனர். இவர்களுடைய கைவண்ணத்தில் வின்னபூ, பிரபோத சந்திரோதயம், கருணா, சித்திரயோகம், ஒருகத்து, சிஷ்யனும் மகனும் என்றெ குருநாதன், அருணோதயம், கர்ணபூஷணம் போன்ற இலக்கிய மலர்கள் பூத்தன.

இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இலக்கிய பாரம்பரியம் இன்றும் வளர்ந்துவரக் காணலாம். வீறுகொண்டு எழுகின்ற இளங்கவிஞர்கள் பலரைப் பெற்றெடுத்திருக்கிற பெருமையுடையது மலையாள மொழி. இதே நிலையைப் புதினத்திலும் நாடகத்திலும், சிறுகதையிலும் இன்னும் வேறுபல இலக்கியப் படைப்புகளிலும் காணலாம். கி.பி. 7 8 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழியின் ஒரு கிளை மொழியாக இருந்த மலையாளம் இன்று தனக்கென ஒரு வாழ்வையும் வரலாற்றையும் அமைத்துக் கொண்டுள்ளது.

**உரைநடை இலக்கியம்**

1857 இல் சென்னைப் பல்கலைக்கழகம் அமைத்தது கேரள இலக்கிய வளர்ச்சியில் ஒரு முக்கிய காலகட்டமாகும். இக்காலக்கட்டத்தில்

அப்பகுதி மக்கள் மேற்கத்திய இலக்கியம் மற்றும் இலக்கியப் போக்குகள் பற்றி அதிகம் தெரிந்து கொண்டனர். மேலும் ஆங்கிலத் தொடர்பும் அதிகமாகவே காணப்பட்டது. மலையாள இலக்கியப் படைப்புகளில் எவ்விதக் குறைபாடும் காணப்படவில்லை. எனவே மேற்கத்திய வழிகளில் அந்த மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் பயன்படுத்த பாடப் புத்தகங்கள் தயாரிக்கும் ஒரு திட்டம் தொடங்க திருவிதாங்கூர் மகாராஜா கூறினார். கேரள வர்மா சம கிருதத்தில் புலமை பெற்றவர். மலையாளம், ஆங்கிலம் ஆகியவை ஒரு குருவால் நியமிக்கப்பட்ட பல வகுப்புகளுக்கும் பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டன.

**சிறுகதைகள்**

தலச்சேரியிலிருந்து வெங்கயில் குன்கிர்ராமன் நாயனார் (1861 1914) முதல் மலையாள சிறுகதையான வசனவிக்ளுநியை உருவாக்கினார். இதற்குப் பின் பல சிறுகதைப் படைப்புகள் உருவாயின.

**நாவல்கள்**

1887 இல் குண்டலாட்டா மற்றும் அப்புதெடுங்கடி ஆகியோரால் மலையாளத்தில் நாவல்கள் தோன்றின. மற்றொரு திறமையான எழுத்தாளர்களான சந்த்மேனன் இந்துலேகா என்ற நாவலையும் மற்றும் மிகச் சிறந்த சமூக நாவலான சாரதா என்ற நாவலை 1889 இலும் எழுதினார். சி.வி.ராமன்பிள்ளை வரலாற்று நாவலான 'மார்த்தாண்ட வர்மா' என்ற நாவலை எழுதினார். இதேபோன்று இராமானுஜ பகதூர் தர்மராஜா ஆகியோரும் உள்ளனர்.

**நாவல் மற்றும் கவிதைகள்**

கவிதைகளில் முக்கியமான இரண்டு வகைகள் காணப்படுகின்றன. ஒன்று வெண்மணி நம்பூதிரி கவிதைகள்; மற்றொன்று கேரளா வர்மா கவிதைகள். பிற்கால கவிதைகள் மணிப்பிரவாள நடையிலும் சம கிருத கலப்பிலும் உள்ளன. இக்கவிதைகள் புதிய கருத்துக்களைக் கூறுவதாகவும் உள்ளன.

20 ஆம் நூற்றாண்டில் மொழிப்பயிற்சி அதிகமாகக் காணப்பட்டது. எழுத்தாளர்கள் சம கிருதம் மற்றும் ஆங்கிலப் படைப்புகளை மலையாளத்தில் மொழிபெயர்த்தனர்.

காளிதாசரின் மேகதூதம் மற்றும் குமாரசம்பவா ஆகியவை ஏ.ஆர்.ராகராக ரவிவர்மாவாலும் ரகுவம்சத்தை மொழிபெயர்த்த கே.என்.மேனன் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். முக்கியமாக மொழிபெயர்ப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர் சி.எ. சுப்பிரமணியன் போற்றி. இவரது சிறந்த மாதிரியாக இவர்

மொழிபெயர்த்த 'துர்ச்சந்தினி' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**இலக்கணம்**

லீலா திலகம் எனும் நூலே மலையாள மொழியின் முதல் இலக்கண நூலாகும். இதன் காலம் 14 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. எட்டுச் சிற்பங்களைக் கொண்ட இந்நூல் இலக்கண நூலே ஆனபோதும் இலக்கணச் செய்தியோடுகூட கேரளத்தில் அன்றைய காலக்கட்டத்தில் வழங்கிவந்த மொழிகளின் நிலை, கேரள திராவிடர்களின் நிலை, மணிப்பிரவாளத்தின் இலக்கணம், இம்மொழியிலுள்ள பல்வேறு திசைச் சொற்கள், மணிபிரவாள வகைகள், பாட்டு மொழியின் இலக்கணம் போன்ற பல்வேறு செய்திகளையும் விரிவாக குறிப்பிட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் யார் என்பதும் இதற்கு உரை எழுதியவர் யார் என்பதும் அறியப்படவில்லை. இருப்பினும் இவ்விலக்கணத்தின் ஆசிரியர் சிறந்த தமிழ் அறிவும் மலையாளமொழி அறியும், வடமொழியில் நல்ல பயிற்சியும் பெற்றவராகவும், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் நல்ல புலமை பெற்றிருந்ததாலுமே அவரால் சிறந்த ஒரு இலக்கணத்தை உருவாக்கித் தர முடிந்திருக்கிறது.

தொல்காப்பியம், நன்னூல் போன்ற தமிழ் இலக்கண நூல்களில் காணப்படும் செய்திகளை இவர் குறிப்பிட்டுச் செல்வது இவருடைய தமிழ்ப் புலமையை நன்கு காட்டும். தமிழும் குறிப்பிட மலைநாட்டுத் தமிழும் சம கிருதமும் கலந்த நிலையில் மணிப்பிரவாளம் தோன்றிற்று என்றும் அம்மொழிக்கே தாம் இலக்கணம் கூறுவதாகக் கூறுவார். இவர் இத்தகைய மணிப்பிரவாளத்தை ஒரு பெண்ணாகப் பாவித்து இந்தப் பெண்ணின் இலக்கணத்தைக் கூறுகிற நிலையில்தான் இது லீலாதிலகம் என்று பெயர் பெற்றதே எனக் கருதுவாருளர். இந்நூல் எட்டுச் சிற்பங்களையும் 131 நூற்பாக்களையும் கொண்டுள்ளது.

முதல் சிற்பம் பதினொரு நூல்களைக் கொண்டது. மணிப்பிரவாள த்தின் இலக்கணம், கேரளரும் திராவிடரும், மணிப்பிரவாளத்தின் வகைகள், மெய்ப்பாடுகள், திசைச்சொல் போன்ற பல்வேறு செய்திகளை இச்சிற்பத்தின்கண் விரிவாகக் காணமுடியும்.

இரண்டாவது சிற்பத்தின்கண் நாட்டுமொழி இலக்கணம், சம கிருதம் ஆக்கல், சிறப்பெழுத்துக்கள், சம கிருதச் சொற்கள், வேற்றுமை, பால் விகுதிகள், எண், வினைச்சொற்கள் போன்றவை பற்றி ஆராய்ந்துள்ளார். வேற்றுமை பற்றி ஆராய்ந்துள்ள இவர் பிற திராவிட மொழி இலக்கணங்களைப் போலவே எட்டு வேற்றுமைகள் உள்ளன என்றும் தொல்காப்பியத்தைப் போன்று அடுக்கியும் காட்டுவார். பால் விகுதிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்ற இவர் ஆண்பால், பெண்பால்,

விரவுப்பால், பலர்பால் என்ற பகுதிகளைக் குறிப்பிடுவதோடு அவற்றிற்குரிய விகுதிகளையும் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாம் சிற்பத்தில் உயிர் ஈற்றின் முன் மெய்வருதல், மெய் ஈற்றுப்புணர்ச்சி போன்ற பல்வேறு சந்திகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| மாலை | + அது | > | மாலையது |
| கிளி | + அது | > | கிளியது |
| ஆசை | + அது | > | ஆசையது |
| மரு | + உண்டு | > | மருயுண்டு |
| அது | + இல்லை | > | அதில்லை |
| ஆறு | + அகம் | > | ஆற்றகம் |
| நாடு | + அகம் | > | நாட்டகம் |
| அ | + காலம் | > | அக்காலம் |
| மண் | + தீது | > | மண்டீது |
| மரம் | + குருது | > | மரங்குருது |
| தோல் | + பெட்டி | > | தோற்பெட்டி |

எனப் பல்வேறு சொற்களில் காணப்படும் சந்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

நான்காம் சிற்பத்தில் 20 குற்றங்கள் (சொற் குற்றங்கள்) வழுச்சொல், ஆற்றல் இல்லாச் சொல், இன்னாச் சொல், பயனில் சொல், பொருந்தாச் சொல் (கூறியது கூறல்) போன்ற குற்றங்களை எல்லாம் கூறியுள்ளார்.

ஐந்தாவது சிற்பத்தில் செறிவு, இன்பம், தெளிவு, சமநிலை என்ற நான்கு குணங்கள் பற்றியும், ஆறாவது சிற்பத்தில் இவ்வாசிரியர் குணமும் அணியும் பற்றிப் பேசியுள்ளார். சீர்எதுகை, சீர்மோனை, அடியெதுகை, அடிமோனை, எழுத்துமடக்கு, யமகம், சிலேடை போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஏழாம் சிற்பத்தில் உவமையணி, ஞாபக அணி, உருவக அணி, ஐயவணி, மயக்க அணி, அவநுதியணி, வேற்றுமையணி, விளக்க அணி, மறுபொருள் உவமையணி, எடுத்துக்காட்டு உவமையணி, தற்குறிப்பேற்ற அணி, உயர்வு நவிற்சி அணி, நிரனிறையணி, சிலேடை அணி, தன்மை நவிற்சி வேற்றுப் பொருள் வைப்பணி, முரணணி, விபாவனையணி, விசேட அணி போன்ற இருபத்தொன்பது அணிகள் பற்றிப் பேசுவார்.

எட்டாம் சிற்பத்தின்கண் மணிப்பிரவாளத்தின் உயர்நிலையாகிய

குறிப்புப் பொருள் பற்றியும் இதன்கண் பல்வேறு மெய்ப்பாடுகள் பற்றி விளக்கிப் பதிமூன்று நூற்பாக்களில் விரித்தும் பகுத்தும் கூறியுள்ளார்.

**கேரள பாணினீயம்**

கி.பி. 20 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இவ்விலக்கண நூலாகும். இது ஏ.ஆர்.ராஜவர்மாவால் எழுதப்பட்டது. மலையாள மொழியில் லீலா திலகத்திற்கு அடுத்தபடியாக மிக முக்கியமான நூலாகக் கருதப்படுவது கேரள பாணினீயமே ஆகும். இந்நூல் ஏழு அதிகாரங்களைக் கொண்டதாகும்.

முதல் அதிகாரத்தில் சந்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஒரு மொழியின் இலக்கணத்தில் சந்தி மிக முக்கியமான இடம்பெறவேண்டும் என விரும்புவோர் சிலர். அவ்விருப்பபடியே கேரள பாணினீய ஆசிரியர் சந்தியை முதல் அதிகாரமாக வைத்துப் பேசியுள்ளார். லோபசந்தி, ஆகசந்தி, ஆதேசசந்தி எனப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து விரித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது அதிகாரம் (நாமாதிகாரம்) பெயர் பற்றிப் பேசுகிறது. இதில் பால், எண், வேற்றுமை உருபுகள், காரகத் தொடர்புகள், பெயர்கள் உண்டாகும் முறை, பெயராக்கங்கள் ஆகிய ஆறு தலைப்புகளில் (லிங்க பிரகரணம், வசன பிரகரணம், விபக்தி பிரகரணம், விபக்திய பாஷா பிரகரணம், காரக பிரகரணம், தந்தத பிரகரணம் பற்றிப் பேசியுள்ளார்.

மூன்றாவது அதிகாரம் வினை பற்றி (தாத்துவ அதிகாரம் விளக்குகிறது. இது 12 பிரகரணங்களைக் கொண்டதாகும். காலம், செய்வினை, செயபாட்டுவினை, குறிப்புவினை, துணைவினை, எதிர்மறைவினை, பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், தொழிற் பெயர்கள், பல்வேறு வாக்கியங்களிலிருந்து உருவாகும் பெயர்த் தொடர்கள் போன்ற செய்திகள் இவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும் செய்வினை, செயப்பாட்டு வினை, பல்வேறு துணைவினைகள் பற்றி 10 சூத்திரங்களில் விளக்கியுள்ள இவர் இ, பி, து, கு போன்ற பல்வேறு ஒட்டுக்கள் ஏவல் வினை விகுதிகளாக வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.

(எ கா.)

களிக்குன்னு > களிப்பிக்குன்னு
சேர்க்குன்னு > சேர்ப்பிக்குன்னு
களையின்னு > களையிக்குன்னு
உடையின்னு > உடைக்குன்னு

போன்ற பல எடுத்துக்காட்டுக்களைத் தந்தும் விளக்கியுள்ளார்.

ஐந்தாவது அதிகாரத்தில் பல்வேறு விதமான இடைச்சொற்கள்

பற்றியும் அவை பயன்படும் நிலை பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உம், ஓ, ஏ, ஆ, ஆன், ஈ போன்ற இடைச் சொற்கள் பற்றி இவ்வதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வதிகாரம் மூன்று சூத்திரங்களைக் கொண்டுள்ளது.

ஆறாவது அதிகாரம் (ஆகாம் ஷாதிகாரம்) தொடரியல் பற்றிப் பேசுகிறது. இது பத்து நூற்பாக்களைக் கொண்டது. வாக்கிய பிரகரணம், சமாஸபிரகரணம் என்ற இரு தலைப்புகளில் தொடரியல் பற்றிப் பேசுகிறது. எழுவாய், பயனிலை போன்றவற்றிற்கு விளக்கம் கொடுப்பதுடன் அவை வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுகின்றன என்றும் பல்வேறு அடைகளை ஆங்காங்கே இணைப்பதன் மூலம் வாக்கியங்களை நீளமானவையாக மாற்றலாமென்றும் குறிப்பிட்டுப் பேசியுள்ளது இவ்வதிகாரம். மேலும் கர்த்தா, கர்மா, கிரியா போன்றவற்றை ஒரு வாக்கியத்தின் முன்னும் பின்னும் இட்டுப் பேசலாம் என்று கூறுவதில் வாக்கியத்தில் காணப்படும் பல்வேறு இலக்கணக் கூறுகளின் வரிசை பற்றிப் பேசும் இவ்வதிகாரத்தில் பல்வேறு தொகைகள் பற்றியும்அவை எவ்வாறு உருவாகின்றன என்பது பற்றியும் அவற்றை எவ்வாறு வகைப்படுத்தலாம் என்பது பற்றியும் விரிவாக இவ்வதிகாரம் பேசுகிறது.

ஏழாவது அதிகாரம் (சப்தோல்பத்தி) சில பெயர்கள் வேறுசில இலக்கணக் கூறுகளில் காணப்படும் சில சொற்கள் அவற்றின் ஆக்கங்கள் போன்ற பல்வேறு செய்திகள் பற்றி 15 நூற்பாக்களில் கூறியுள்ளது. பண்டைக் காலத்தில் பெயர்கள் ஓரடைச் சொற்களாகவே இருந்தன என்றும், பின்னர்ப் பல்வேறு வகையான மாற்றங்கள் கண்டன என்பதைப் பற்றியும் இவ்வதிகாரம் பேசியுள்ளது.

*1895* இல் வெளிவந்த இந்நூல் இன்றும் மலையாள அறிஞர்களிடையே மிகச் சிறந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. மலையாள மொழிக்குச் சிறந்ததோர் இலக்கணம் இல்லையே என்ற ஆதங்கத்தில் எழுதப்பட்ட இந்நூல் மலையாள மொழியில் காணப்படும் இலக்கண நூல்களில் மிகச் சிறந்து விளங்குகிறது.

## 12. மணிப்புரி மொழி

பகுதி : வடகிழக்கு இந்தியா, பங்களாதேஷ், பர்மா

தாய்மொழியாகக் கொண்டோர் : 120,000

மொழிக் குடும்பம் : இந்தோ ஐரோப்பிய
இந்தோ ஈரானிய
இந்தோ ஆரிய
கிழக்கு
பெங்காலி அசாமி
மணிப்புரி

எழுத்துமுறை : பெங்காலி எழுத்துக்கள்

மணிப்புரி இந்தோ ஆரிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது. இம்மொழி இந்திய மாநிலங்களான அசாம், திரிபுரா அத்துடன் வங்கதேசத்தின் சில்ஹெட் பகுதி, பர்மா ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது. மணிப்புரி மொழி அதன் எழுத்து முறையில் பெங்காலி எழுத்துக்களைக் கொண்டுள்ளது.

### வரலாறு

பிஷ்ணுப்பிரியா அல்லது விஷ்ணுப்பிரியா மணிப்புரி இந்தியாவின் அசாம், திரிபுரா, பர்மா மற்றும் வங்க தேசத்தின் சில்ஹெட் ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது. இம்மொழி மற்ற இந்தோ ஆரிய மொழிகளான பெங்காலி, அசாமி, ஒரியா ஆகிய மொழிகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. லோக்டக் ஏரியைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தே மணிப்புரி மொழி தோன்றி வளர்ச்சியடைந்தது. இந்திய மொழியியல் ஆய்வாளர் ஜார்ஜ் ஆபிரகாம் ஜியர்சன் மணிப்புரி மொழி 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியிருக்கலாம் எனக் கூறியுள்ளார். ஜியர்சன் இம்மொழியைப் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி என அழைத்தார். ஆனால் மற்ற எழுத்தாளர்கள் வெறுமனே பிஷ்ணுப்பிரியா என்றே அழைத்தனர்.

பெரும்பாலான பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பேச்சாளர்கள் மணிப்புரியிலிருந்து தப்பித்து அசாம், திரிபுரா, சில்கெட், சச்சர் ஆகிய

பகுதிகளில் தஞ்சம் அடைந்தனர். ஏனெனில் அவர்கள் பிரபுக்களின் உள்நாட்டு மோதல்களுக்கும் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பர்மிய தாக்குதலுக்கும் ஆளாயினர். இதன் விளைவாகப் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பேசுவோரின் எண்ணிக்கை குறைந்து மைதியின் தாக்கம் அதிகரித்தது. பின்னர் 1891 இல் ஜி.ஏ.ஜியர்சன் ஒரு கணிசமான அளவு மணிப்புரி பேசுவோர் பிஷ்ணுப்பூருக்கு அருகில் உள்ள இரண்டு மூன்று ஊர்களில் உள்ளதைக் கண்டறிந்தார். மணிப்புரி மொழி மெதுவாகச் சிதைவடையத் தொடங்கியது. சச்சர் மற்றும் பங்களாதேஷ் பகுதிகளில் பெங்காலி மொழி பேசுவோர் மத்தியில் மைதியும் சிதைவடையத் தொடங்கியது. இந்த மொழி தற்போது ஜிரிபாம் பகுதியில் (மணிப்பூரின் துணைப் பிரிவு) பேசப்படுகிறது. சச்சர் (அசாம் மாவட்டம்) மற்றும் பங்களாதேஷ், திரிபுரா பகுதிகளிலும் பேசப்படுகிறது.

**மூலம் மற்றும் தோற்றம்**

மொழி அதன் பேச்சாளர்களால் அறியப்படுகிறது. இமர்தார் என்பது 'என் தாய்மொழி' எனப் பொருள்படும். மணிப்புரி மக்கள் தங்களையும் தம் மொழியையும் மணிப்புரி என்றே அழைத்தனர். மற்றும் பிஷ்ணுப்பிரியா, மணிப்பூரைப் பிற இனங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது. பிஷ்ணுப்பூர் பகுதியிலிருந்து இம்மொழி தோன்றியதால் அது பிஷ்ணுப்பிரியா எனப்பட்டது. பிஷ்ணுப்பூரிலிருந்து மகாபாரதப் போருக்குப் பின் துவாரக்கா மற்றும் அ தினாபுரத்தில் குடியேறியவர் களால் மணிப்பூருக்கு இம்மொழி சென்றது. சில அறிஞர்கள் மற்றும் வரலாற்று ஆசிரியர்கள் மகாபாரதத் தோற்றத்திலிருந்து வந்த பிஷ்ணுப்பிரியா மணிப்புரி மொழியின் அமைப்பியல், சொற்பிறப்பு மற்றும் ஒலியியல் பற்றி ஆராய்ந்தனர். பிஷ்ணுப்பிரியா மணிப்புரியில் சம கிருதம், மகாராஷ்டிரி, சௌராஷ்னி, பிராகிருதம் ஆகிய மொழிகளின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. கே.பி.சின்கா பிஷ்ணுப்பிரியா மணிப்புரி மகதி பிராகிருதத்திலிருந்து தோன்றியுள்ளது என்று கூறியுள்ளார். இதனாலேயே இம்மொழி மகதியின் மேலாதிக்கப் பண்புகளைக் கொண்டு காணப்படுகிறது என்றும் கூறியுள்ளார். மேலும் இம்மொழி ஒரியா, பெங்காலி, அசாம் ஆகிய மொழிகளை ஒத்தே காணப்படுகிறது. ஒரியா, பெங்காலி, அசாமி ஆகிய மொழி அமைப்புகளும் மகதி பிராகிருதத்திலிருந்தே தோன்றியவை ஆகும்.

எனினும் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி மொழி நிச்சயமாகத் திபெத்தோ பர்மன் மொழிகளில் ஒன்று அன்று. ஆனால் இவை மிக நெருக்கமாக இந்தோ ஆரிய மொழிகளுள் ஒன்றாகவும், மேலும் மைத்தி

மொழியின் இலக்கணம் மற்றும் ஒலி அமைப்பையும் பெற்றும் காணப்படுகிறது.

வேறொரு காலக்கட்டத்தில் மொழி வளர்ச்சி சௌரசேனி, மகாராஷ்ரி மற்றும் மகதி, திபெத்தோ, பர்மன் மொழிகளுடனும் அதிகமான செல்வாக்கைப் பெற்றிருந்தது. பிஷ்ணுப்பிரியா மணிப்புரி (15, 18 ஆம் நூற்றாண்டுகளில்) அதிகமாக வளர்ச்சியடைந்தது. பின் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இம்மொழி பேசுவோரின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

**வட்டார மொழி**

பிஷ்ணுப்பிரியா இரண்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ராஜர் கும்பல் (அரச கிராமம்), மற்றொன்று மாதாய் கும்பல் (அரசி கிராமம்). மற்ற பழங்குடியினர் வட்டாரப் பகுதிகள் போல் அல்லாமல் பிஷ்ணுப்பிரியா வட்டாரம் தனிப்பட்ட புவியியல் பகுதிகளுடன் நின்றுவிடவில்லை. மாறாக அதே பகுதிகளில் அருகருகேயும் வாழத் தொடங்கினர். இந்த இரண்டு வட்டாரப் பகுதிகளிலும் மொழியின் ஒலியியல் அமைப்பு, மாதாய்க் குழுவில் அதிகமாக அசாமி மற்றும் மைதியும், ராஜர் குழுவில் அதிகமாகப் பெங்காலியும் காணப்படுகின்றன.

சொற்றொகுதியில் மாதாய்க் குழுவில் அதிகமாக மைத்தி செல்வாக்குப் பெற்றும், ராஜர் குழுவில் அதிகமாகப் பெங்காலி, அசாமி ஆகியவை செல்வாக்குப் பெற்றும் காணப்பட்டன. இந்த உருவ அமைப்பு இரண்டு வட்டாரங்களுக்கிடையே அதிக வேற்றுமையுடன் காணப்பட்டது.

**சொற்களஞ்சியம்**

மற்ற இந்திய மொழிகளைப் போல பிஷ்ணுப்பிரியா மணிப்புரியும் தாத்பாவா வார்த்தைகளிலிருந்து உருவாக்கப்பட்டது. அதாவது வார்த்தைகள் பழைய இந்திய மொழிகளில் முக்கியமாக சமகிருதம் ஆகியவை வரலாற்று மாற்றங்களுக்கு உட்பட்டு இலக்கணம் மற்றும் உச்சரிப்பு முறையில் மரபுரிமை பெற்றுவந்தது. எனினும் ஆயிரக் கணக்கான தாட்சாமா வார்த்தைகள் (அதாவது சமகிருதத்திலிருந்து சிறிதளவு ஒலி மற்றும் இலக்கணத்தில் மாறுபாடடைந்த) வார்த்தைகள் சொற்களஞ்சியத்தில் அதிகமாகக் காணப்பட்டன. கூடுதலாக மேலும் பல வார்த்தைகள் நேரடியாகக் காலனித்துவ மொழி, முக்கியமாக மைத்தி, ஆங்கிலம் மற்றும் பெர்சிய அரபு மொழிகளிலிருந்தும் கடனாகப் பெறப்பட்டன.

மரபுரிமை பெற்ற வார்த்தைகள் (தாத்பாவா) : 10,000 (இதில் 2000 வார்த்தைகள் மட்டுமே மணிப்புரியில் காணப்படுகின்றன. ஆனால் மற்றவை இந்திய மொழிகளிலிருந்து மரபுரிமை பெறப்படவில்லை.

சம கிருதத்திலிருந்து பெறப்பட்ட வார்த்தைகள் : 10,000.

சில மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் சம கிருதத்திலிருந்து பெறப்பட்ட வார்த்தைகள் : 1500.

மைத்தியிலிருந்து பெறப்பட்ட வார்த்தைகள் : 3500.

இந்திய மொழி அல்லாத பிற பழங்குடியின மொழிகளிலிருந்து பெறப்பட்ட வார்த்தைகள் : 1500.

பெர்சிய அரபியிலிருந்து பெறப்பட்ட வார்த்தைகள் : 2000.

ஆங்கிலத்திலிருந்து பெறப்பட்ட வார்த்தைகள் : 700.

கலப்பின வார்த்தைகள் : 1000

தெளிவற்ற தோற்றம் கொண்ட வார்த்தைகள் : 1300.

**பிஷ்ணுப்பிரியா மணிப்புரியில் மைத்தியின் ஆக்கக்கூறு**

பிஷ்ணுப்பிரியா மைத்தியின் 18 பழைய ஒலிகளைக் கொண்டு காணப்படுகிறது. அவற்றில் மூன்று உயிரெழுத்துகள். அவை a, i, u. மேலும் 13 மெய்யெழுத்துக்கள் காணப்படுகின்றன. அவை, p t k ph th kh c s m n l f h மற்றும் இரண்டு உயிர்மெய் எழுத்துக்கள். அவை a மற்றும் y.

பிறகு 9 அதிக ஒலிகள் மைத்தியில் சேர்க்கப்பட்டன. ஆனால் பிஷ்ணுப்பிரியாவில் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிஷ்ணுப்பிரியா மணிப்புரியிலிருந்து பிரிந்தது. எனவே பிஷ்ணுப்பிரியா பழைய மைத்தி ஒலிகளை வைத்திருந்தது. எனினும் மைத்தி அதற்குள்ளாகவே சில ஒலி மாறுபாடுகளைக் கொண்டுள்ளது. எனவே மைத்தி பிஷ்ணுப்பிரியா மணிப்புரியைவிட அதிகமான செல்வாக்குப் பெற்றிருந்தது. மணிப்புரி வார்த்தை தொடக்கத்தில் உயிரெழுத்தைக் கொண்டு இவ்வாறு 'ஆங்க்' தொடங்கி எழுதப்படுகிறது.

**அசாமி மற்றும் பெங்காலி மொழிகளின் இணைப்பு**

பெங்காலி, அசாமி, பிஷ்ணுப்பிரியா, மணிப்புரி ஆகிய மொழிகளுக்கிடையே ஏராளமான வேறுபாடுகள் காணப்படுவதாக பெங்காலி ஒலியியல் ஆய்வாளர் சுனிதிகுமார் கூறியுள்ளார். பெங்காலியின் வட்டார மொழி பற்றியும், அசாமி வட்டார மொழி பற்றி மகேஷ்வர் நியாக், பனிகாந்தா காக்தி ஆகியோரும் கூறியுள்ளனர். அவர்களின் ஊகங்களில் பின்னர் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி மொழி

தோற்றத்தில் முரண்பாடு ஏற்படும். ஆனால் மணிப்புரி பற்றிய அறிவியில் ஆராய்ச்சி மற்றும் அமைப்பியல், சொல்லகராதி, ஒலியியல் அமைப்பு முறை எவையும் தவறான அனுமானங்களைத் தரவில்லை.

**எழுத்துமுறை**

ஆரம்ப காலக்கட்டத்தில் பிஷ்ணுப்பிரியா மொழியில் எழுதுவதற்கு தேவநாகரி மொழியையே பயன்படுத்தியுள்ளனர். எனினும் பெங்காலி மொழி மூலம் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நவீன கல்வி அறிமுகம் செய்யப்பட்ட பின் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி எழுத்தாளர்கள் பூர்வநாகரி (அசாம்/பெங்காலி) மொழியில் எழுத ஆரம்பித்தனர். இந்த எழுத்துக்கள் மெய்யெழுத்துக்களைக் கொண்டும் அத்துடன் உயிர் எழுத்து குறியீட்டைச் சார்ந்தும் அதேபோல் சுதந்திரமான உயிரெழுத்துக்களைக் கொண்டும் காணப்படுகிறது. நிறுத்தற் குறிகள் மற்றும் எண்கள் ஆகியவையும் பயன்படுத்தப்படுகின்றன. பிஷ்ணுப்பிரியா மணிப்புரி ஆங்கிலத்தைப் போன்றே இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் பயன்படுத்தப்படுகிறது. சில மெய்யெழுத்துக்கள் கொத்தாக இணைந்து இணைப்பு எழுத்தாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பேசப்படும் இடங்கள்**

மணிப்பூரில் இம்மொழி இன்றும் ஜிரிபாம் உட்பகுதியில் பேசப்படுகிறது. பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பேசுவோர் அதிகமாக அசாம் பகுதியில் வாழ்கின்றனர். முக்கியமாகச் சச்சர், கரிம்கானி, துல்லாப்சேர்ரா, பாதர்காண்டி, ஹைலாக்காண்டி ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது. இந்த மக்கள் சச்சர் மற்றும் கரிம்கானி மாவட்டங்களில் மக்களின் பிரதான குழுக்களில் ஒன்றாகக் கருதப்படுவார்கள். திரிபுராவில் மணிப்புரி மக்களின் இடங்கள் தர்மாநகர் துணைப் பகுதியிலும், ஒரு பகுதி கைலாசாகர் துணைப் பகுதியிலும் மற்றும் ஒரு பகுதி மேற்கு திரிபுரா துணைப் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. மேகாலயா, அருணாச்சல பிரதேசம், மிசோரம் ஆகிய பகுதிகளிலும் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி மக்கள் சிதறி வாழ்கின்றனர்.

இந்தியாவிற்கு வெளியில் வங்கதேசத்தில் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பேசுவோரின் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. முக்கியமாக சில்கெட், மௌல்பிவாசர், ஹாபிகானி, சுனாம்கனி மாவட்டத்தில் வசிக்கின்றனர். பர்மாவில் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பகுதிகளில் அநேகமாக மியான்மர், அமர்புரா முதலிய பகுதிகளிலும் அமெரிக்கா, கனடா, செர்மனி, மத்திய கிழக்கு மற்றும் ஆ திரியா ஆகிய பகுதிகளிலும் ஒரு கணிசமான அளவு பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பேசுவோர் குடியேறியுள்ளனர்.

பிஷ்ணுப்பிரியா மணிப்புரி மக்கள் தொகை

அசாமில் **295,000**

திரிபுரா, மேகலாயா, அருணாச்சலப்பிரதேசம், நாகலாந்து, மிசோரம் பகுதிகளில் **121, 000.**

மணிப்பூரில் (இம்பால், பிஷ்ணுப்பூர், நிங்க்துக்கோங் **1457**)

மணிப்பூர் (ஜிரிபாம் துணைப்பகுதி) **5000**

புதுதில்லி, மேற்குவங்கம், மகாராஷ்டிரா, ஜார்கண்ட், சிக்கிம், மற்ற இந்திய மாநிலங்கள் **5000**

பங்களாதேஷ் **40,000**

பர்மா, அமெரிக்கா, இலண்டன், கனடா, ஆதிரேலியா, பிலிப்பைன், மத்திய கிழக்கு, பிற வெளிநாடுகளில் **2000** பேர் இம்மொழியைப் பேசுகின்றனர்.

**இலக்கியம் - பண்டைய இலக்கியம்**

பழைய தோற்றம் உள்ள பிஷ்ணுப்பிரியா மணிப்புரி நாட்டுப்புற இலக்கியங்கள் மற்றும் வாய்வழி பாரம்பரியத்தில் ஒரு நல்ல பங்கு வகிக்கிறது. பிஷ்ணுப்பிரியா மணிப்புரி பண்டைய இலக்கியம், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புற இசை, நாட்டுப்புற கவிதைகள், பாடல்கள், பழமொழிகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு மழை பாடல் (போரான் தகானிர் இலா, **1450, 1600** கி.பி.) இல்லற வாழ்க்கை சம்பந்தமான பாடல் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்த இசை மற்றும் வார்த்தைகள் திபெத்தோ பர்மிய மூலத்திலிருந்து தோன்றியது. இந்த இரண்டு பாடல்களும் பிஷ்ணுப்பிரியா மணிப்புரியின் கலாச்சார மற்றும் மொழியியல் வரலாற்று ஆய்வில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இவை தவிர பெண்கள் வயல்களில் வேலை செய்யும்போது பாடிய பாடல்களும் உள்ளன. பழமொழிகள் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி நாட்டுப்புற இலக்கியத்தின் மற்றொரு முக்கியமான பகுதியாகும்.

**நவீன இலக்கியம்**

பிஷ்ணுப்பிரியா மணிப்புரியை மக்கள் மத்தியில் இலக்கிய நடவடிக்கைகளை ஊக்குவிக்க சமூகம் நிகில் பிஷ்ணுப்பிரியா மணிப்புரி சாகித்ய பரிஷத் (**1955**), பிஷ்ணுப்பிரியா மணிப்புரி சாகித்திய சபா, பிஷ்ணுப்பிரியா மணிப்புரி சாகித்ய சிங்கல்ப், பௌரி, மணிப்புரி திரங்கு மற்றும் இலக்கிய நிறுவனங்களின் அமைப்புகளும் நிறுவப்பட்டன.

பிஷ்ணுப்பிரியா மணிப்புரியின் தீவிர இலக்கியக் கலாச்சாரம் **20** ஆம் நூற்றாண்டின் **2** ஆவது காலாண்டில் தொடங்கியது. உண்மையில்

மணிப்புரி இலக்கிய வரலாற்றில் இலக்கிய இதழ் ஜாகரன் என்பதை ஃபால்கனி சிங்கா என்ற சமூக சேவகர் 1925 இல் ஆரம்பித்தார். இந்த இதழ் பிஷ்ணுப்பிரியா, மைத்தி ஆகிய இரு மொழிகளிலும் வெளிவந்தது. மணிப்புரி சுர்மா பள்ளத்தாக்கில் முதல் சங்கம் 1934 இல் நிறுவப்பட்டது. (பின்னர் இது சுர்மா பள்ளத்தாக்கு மணிப்புரி சங்கம்) என அழைக்கப் பட்டது. இதன் உறுப்பினர்களாக மைத்தி, பிஷ்ணுப்பிரியா மற்றும் பான்கல் (மணிப்புரி மு லீம்) ஆகியவையும் உள்ளன.

பின்னர் 1933 ஆம் ஆண்டிலிருந்து மணிப்புரி (1933), மெக்தாலி (1938), க்காஸாத்ரஜோதி (1944) ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன. இவற்றில் தேசியவாதம், இலக்கியம் மற்றும் கலாச்சாரம் ஆகியவையும் காணப்பட்டன. மேலும் பிஷ்ணுப்பிரியா, மணிப்புரி இலக்கியத்தின் ஒரு பகுதி வைணவ தத்துவத்தின் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

# 13. மராத்தி மொழி

பேசப்படும் இடம் : இந்தியா

பேசப்படும் பகுதி : மகாராஷ்டிரா, கோவா, கர்நாடகா, மத்திய பிரதேசம், சட்டீ கர், குஜராத், ஆந்திரப் பிரதேசம், தாத்ரா, நாகர் ஹாய்வேலி, டாமன், டையூ, டெல்லி ஆகிய சில பகுதிகள்

பேசுவோர் : 73 மில்லியன்.

மொழிக்குடும்பம் : இந்தோ ஐரோப்பிய
இந்தோ இரேனிய
தெற்கு இந்தோ ஆர்ய
மராத்தி கொங்கனி
மராத்தி

துவக்கநிலை : மகாராஷ்டிரி, மராத்தி

பேச்சுவழக்கு :வார்காதி

எழுத்துமுறை : தேவநாகரி எழுத்து (மராட்டிய எழுத்து) மராத்தி ப்ரெய்லி.

அதிகாரப்பூர்வ மொழி : இந்தியா, மகாராட்ஷ்டிரா, டாமன், டையூ, தாத்ரா, நாகர் ஹாய்வேலி.

**மராத்தி**

மராத்தி இந்தோ ஆரியமொழி. இது இந்தியாவின் மகாராஷ்டிர மாநில அதிகாரப்பூர்வ மொழி மற்றும் இந்திய அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. 73 மில்லியன் மராத்திய மொழி பேசுபவர்கள் இருப்பதாக 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு கூறுகிறது. இந்திய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளோரின் மராத்தி மொழி நான்காவது இடத்தில் உள்ளது. மராத்தியின் முக்கிய வட்டார மொழி டாண்டர்டு மராத்தி மற்றும் வார்காதி மராத்தி என அழைக்கப்படுகிறது. அகிரானி, தாங்கி, வத்வாலி, சமவேதி, கான்தேசி போன்ற ஒருசில துணை வட்டார மொழிகளும் உள்ளன. டாண்டர்டு மராத்தி மகாராஷ்டிரா மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மொழியாகும்.

மராத்தி முதன்மையாக மகாராஷ்டிரா, குஜராத், மத்தியப்பிரதேசம், கோவா, கர்நாடகா, சட்டீ கர், ஆந்திரபிரதேசம், டாமன், டையூ, தாத்ரா, நாகர்ஹவேலி போன்ற தொழிற்சங்கப் பகுதிகளிலும் பேசப்படுகிறது. பரோடா, சூரத், அகமதாபாத் (குஜராத்), பெல்காம் (கர்நாடகா), இந்தூர், குவாலியர் (மத்தியபிரதேசம்), அதோனி (ஆந்திரப் பிரதேசம்), தஞ்சாவூர் (தமிழ்நாடு) ஆகிய நகரங்களில் மராத்தி பேசும் சமூகங்கள் இருக்கின்றன. மராத்தி குறிப்பாக அமெரிக்கா, இசுரேல், மொரிஷீய, கனடா ஆகிய நாடுகளிலும் புலம்பெயர்ந்தோரால் பேசப்பட்டு வருகிறது.

**வரலாறு**

மராத்தி, மகாராஷ்ட்ரி, பிராகிருத மொழிகளிலிருந்து வந்த மொழிகளுள் ஒன்றாகும். ‘அப்ராம்ச’ மொழிகளே மறுவடிவம் பெற்று மராத்தி உருவானது என்றும் கூறுவர். பெர்சியன், உருது ஆகியவை எவ்வாறு இந்தியை ஒத்துக் காணப்பட்டதோ அதேபோல் மராத்தியும் இந்தியை ஒத்துக் காணப்படுகிறது.

**யாதவப் பிரிவு**

மராத்தி இலக்கியம் 12 ஆம் நூற்றாண்டில் யாதவ தேவ்கிரி வம்சத்தினரால் தொடங்கப்பட்டது. இதை நீதிமன்ற மொழியாக மராத்தி மற்றும் மராத்தி அறிஞர்கள் ஆதரித்தனர். மகானுபவ் மற்றும் வார்காரி வகுப்பைச் சார்ந்த இரண்டு மதங்களும் தங்களது பக்திக் கொள்கைகளைப் போதிப்பதற்கு மராத்திய மொழியை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தினர்.

மராத்திய யாதவ அரசர்கள் காலத்தில் மராத்தி ஒரு முக்கியமான மகான் இடத்தை அடைந்தது. நலோபாக்யான், ருக்மணி வயம்வர் மற்றும் மகீபதிஜோதி ரத்னமேளா ஆகிய அரசர்கள் ஆட்சிக்காலத்தில் சோதிடம், மருத்துவம், புராணம், உரைநடை, இலக்கியம் ஆகிய அனைத்திலும் மராத்திய மொழி பயன்படுத்தப்பட்டது.

மராத்திய மொழியின் பழமையான புத்தகமான ‘விவேகசிந்து’ முகுந்தராஜ் அவர்களால் எழுதப்பட்டது. யோகி நாதாபாதா மராத்திய கவிஞர் ஆவார். முகுந்தராஜ் சங்கராச்சா இந்துமத போதனைகள், தத்துவம், யோகா மார்க்கம் ஆகியவை பற்றியும் விளக்கமளித்தார். மராத்தியின் மிகச் சிறந்த துறவியான தியானே வர் எழுதிய அம்ரித்தனுபவா, பாவத்ரதீபிகா ஆகியவை மிக பிரபலமாக இருந்தன. இவர் சுபங்கா என்ற பக்திப் பாடல்களையும் இயற்றியுள்ளார். தயானே வர் மராத்திய மொழிக்கு ஓர் உயர்நிலையைத் தந்தார். எப்படியெனில் அவர் பகவத்கீதையைச் சம கிருத மொழியிலிருந்து

மராத்தி மொழிக்கு மாற்றியவர்.

**மகானுபவ் பிரிவு**

சக்ரதார் சுவாமியால் தொகுக்கப்பட்ட மகிமாபத்தா சிறந்த உரைநடையாகும். மகானுபவ் பிரிவு மராத்திக் கலாச்சாரத்தைப் பரப்புவதற்கான ஒரு வாகனமாகத் திகழ்ந்தது.

**வார்காரி பிரிவு**

மகானுபவ் பிரிவு வார்காரி பிரிவின் கவிஞரான ஏக்நாத்தைத் தொடர்ந்து வந்தது. ஏக்நாத் பாவர்த் ராமாயிணா பாவர்த் ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. முக்தே வார் இதிகாசமான மகாபாரதத்தை மராட்டி மொழியில் மொழிபெயர்த்தார். சமூகச் சீர்திருத்தவாதி கவிஞர் துக்காராம் போன்றவர்களால் இலக்கிய மொழியாக மராத்தி மொழி மாற்றப்பட்டிருந்தது. துறவி துக்காராமின் கவிதைகளில் மராத்திய மொழியின் தாக்கங்கள் அதிகம் காணப்பட்டன. இவர் ஒரு சிறந்த சீர்திருத்தவாதியாக இருந்தபோதிலும் அபாங்கா என்ற 3000 பக்திப் பாடல்களை இயற்றினார். மகானுபவ் பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் இலக்கியத்திற்கும், வார்காரி பிரிவைச் சேர்ந்தவர்கள் கவிதைக்கும், உரைநடைக்கும் அதிகமான பங்களிப்பு செய்துள்ளனர். சமணம் மற்றும் பிகாமணி காலத்தில் மராத்தி வளம் அடைந்தது. மராத்தி கீர்த்தன், வார்கரி கீர்த்தன் ஆகியவை பக்தி மற்றும் வெகுஜன கல்வி பற்றி விளக்கின.

**நவீன காலம்**

1630 முதல் மராத்திய சத்ரபதி சிவாஜி (1627 1680) ஆட்சிக் காலத்திலிருந்து மராத்திய சாம்ராஜ்யம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பின்னர் ஆட்சியாளர்களால் வடக்கே டில்லி, கிழக்கே ஒடிசா, தென் பகுதியில் தமிழ் நாட்டில் உள்ள தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலும் மராத்தி பரந்துவிரிந்தது. இந்தக் காலக்கட்டத்தில் நிலம், வணிகம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் மராத்தியின் பயன்பாடு அதிகரித்தது. ஆனால் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டின் ஒரு பெரிய பகுதி மீது மராட்டிய செல்வாக்கு குறைந்து இருந்தது.

**பதினெட்டாம் நூற்றாண்டில்**

18 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறந்த பல நல்ல படைப்புகள் தயாரிக்கப்பட்டன. வாமன் பண்டிட்டால் எழுதப்பட்ட யதார்த்த தபிகா, ரகுநாத் பண்டிட்டால் எழுதப்பட்ட நளதமயந்தி சுயம்வரம், மீரதர் பண்டிட் மூலம் பாண்டவ பிரதாப், ஹரிவிஜய், ராம் விஜய் ஆகியோரால் பல படைப்புகள் உருவாகின. புதிய இலக்கியங்கள் வெற்றிகரமாக

இக்காலத்தில் புது வடிவங்கள் பெறத் தொடங்கின.

## 1800க்குப் பிறகு 20-ஆம் நூற்றாண்டு வரை

நவீனகாலம் என அழைக்கப்படும் பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் கிறித்தவ மதபோதகர் வில்லியம் காரேவின் முயற்சிகள் மூலம் மராத்தி இலக்கணம் உருவாக்கப்பட்டது. அறிவியல் அகராதிகள், இலக்கண உற்பத்தி ஆகியவற்றை உருவாக்குவதில் கிறித்தவ மிஷினரிகள் முக்கிய பங்கு வகித்தன. பின் 1831 இல் கேப்டன் ஜேம் தாம மோல்வொர்த் என்பவரால் மராத்தி ஆங்கில அகராதிகள் தொகுக்கப்பட்டன.

மகாராஷ்டிராவில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலனிய நவீனத்துவ காலம் இருந்தது. இந்தக் காலக்கட்டத்தில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. எனவே ஆங்கில உரைநடை, சீர்திருத்த நடவடிக்கைகள் ஆகியவை அறிவார்ந்த சூழலை ஏற்படுத்தியது.

முதன்முதலாக ஆங்கிலப் புத்தகம் மராத்தியில் 1817 இல் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது. முதல் மராத்திய செய்தித்தாள் 1835 இல் தொடங்கப்பட்டது. செய்தித்தாள்கள், இலக்கியப் பகிர்வு மற்றும் சமூகச் சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் ஆகியவை வெளிவர மேடை அமைத்துக் கொடுத்தது. மராத்தி நாடகம் புகழ்பெற்றது. மராத்தி மொழி தழைத்தோங்கியது. சங்கீத் நாடக் என அழைக்கப்படும் இசை மேலும் உருவானது. நவீன மராட்டிய கவிதையின் தந்தை கேசவசுட் என்பவரால் 1885 இல் முதல் கவிதை வெளியிடப்பட்டது. முதல் மராத்திய துர்பான் 1832 இல் பாலசா திரி ஜாம்பேகர் என்பவரால் தொடங்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் இலக்கியத்துறையில் புதிய உற்சாகம் பிறந்தது. இவை சமூக அரசியல் ஈடுபாடு, மராத்தி இலக்கியம், நாடகம், இசை, திரைப்படம் ஆகியவற்றில் முக்கிய மைல்கற்கள் அடைய உதவின. கட்டுரை, சுயசரிதைகள், நாவல்கள், உரைநடை, நாடகம் ஆகியவற்றால் நவீன மராத்தி வளர்ச்சி அடைந்தது. சிப்லுன்காரின் நிபன்தமலா (கட்டுரை) என்.சி.கெல்லரின் வாழ்க்கை வரலாறு, ஹரிநாராயணனின் அப்தேவின் நாவல், நாராயண் சிதாராம்பதேக் மற்றும் வி.எ.கண்டேகர் நாவல்கள் மற்றும் நாடகங்கள் போன்ற பல்வேறு இலக்கிய வடிவங்கள் தழைத்தோங்கின. மாமாவார்கர் மற்றும் கிர்லோ கரின் பங்கு குறிப்பிடத்தக்கது. கண்டேகர்தான் யயாதி பெற்ற ஞானப்பீட விருது பெற்ற நாவல் மிகவும் குறிப்பிடத்தக்கது. மராத்தி விஜய் டெண்டுல்கரின் நாடகங்கள் மகாராஷ்டிராவில் மிகவும் பிரபலமடைந்தன. பி.எல்.தேஷ்பாண்டே,

பி.கே.அட்ரி ஆகியோரின் நாடகங்களின் பங்களிப்பு சிறப்பானது. இந்திய சுதந்திரத்திற்குப் பின் மராட்டிய மொழிக்குத் திட்டமிட்ட அளவில் ஒரு மொழி அந்த து வழங்கப்பட்டது.

மே 1960 இல் மகாராஷ்டிராவின் விதாபா மற்றும் மராத்வாடா பகுதிகள் பல்வேறு மொழிவாரியாக இருந்தன. பின் சமூக மற்றும் அரசியல் நிலை மூலம் ஒன்றாக்கப்பட்டது. இந்திய மாநில மற்றும் கலாச்சார பாதுகாப்பு மராத்தியில் 1990 இல் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியது.

அகில பாரதிய மராத்தி சாகித்திய சம்மேளனத்தில் அனைத்து இந்திய மராத்தி இலக்கியம் சந்திக்கா என்று ஓர் இலக்கிய நிகழ்வு ஆண்டுதோறும் நடைபெறும். கூடுதலாக அகில பாரதிய மராத்தி நாட்ய சம்மேளனத்தில் (அனைத்து இந்திய திரையரங்கை) சந்திக்கும் நிகழ்வு ஆண்டுதோறும் நடைபெறும். இந்த இரு நிகழ்வுகளும் மராத்தியர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக உள்ளன.

**வட்டார மற்றும் பேச்சுவழக்கு**

வட்டார மற்றும் பேச்சுவழக்கு மராத்தி கல்வியாளர்கள் மற்றும் அச்சு ஊடகங்களில் பயன்படுத்தப்படும் வட்டாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்திய அறிஞர்கள் 42 வட்டார மொழிகளை மராத்தி மொழி கொண்டுள்ளது எனக் கூறுகின்றனர். வட்டார மொழிகள் சில ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளன. ஆனால் இந்த மொழிகள் மராத்தியின் பேச்சுவழக்கில், உச்சரிப்பில் பல மாறுதல்களைப் பெற்றுள்ளன.

**ஜாதி போலி (Jhadi Boli)**

ஜாதி போலி அல்லது ஜாதிப்ரான்தா தூரகிழக்கு மகாராஷ்டிரா, கிழக்கு விதர்பா அல்லது மேற்கு மத்திய கொண்டவானா ஆகிய பகுதிகளில் வட்டார மொழிகள் பேசப்படுகின்றன.

**தென்னிந்திய மராத்தி**

தஞ்சாவூர் மராத்தி, நம்தேவ் சிம்பி மராத்தி, பாவ்சர் மராத்தி ஆகிய பல மராத்தியர்கள் தென்னிந்தியாவில் உள்ளனர். இந்த வட்டார பேச்சுவழக்கு பழைய மராத்தியில் 17 ஆம் நூற்றாண்டிலிருந்து வந்தது. இது தென்பகுதியில் தஞ்சாவூர் மற்றும் பெங்களூர் பகுதிகளிலும் அதிகமாகப் பேசப்படுகிறது. மேலும் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது.

**வார்காதி (Varhadi) பேச்சுவழக்கு**

வார்காதி அல்லது வைதர்பி ஆகியவை மகாராஷ்டிராவின் மேற்கு

விதர்பா பகுதியில் பேசப்படுகின்றன. இந்தக் கிளை முற்றிலும் வேறுபட்டது. இத்தகைய மாறுபட்ட ஒலிப்பு முறைகள் மராத்தியிலிருந்து மற்ற வட்டார பேச்சு வழக்குக்கு இடையில் பல மாறுபாடுகளைக் கொண்டுள்ளன. தஞ்சாவூரில் பேசப்படும் மராத்தி தேச தா (Deshestha) மராத்தி ஆகும். இசுரேல் நாட்டைச் சார்ந்த யூதர்கள் பேசுவது யூத மராத்தி ஆகும்.

**ஒலிகள்**

மராத்திய ஒலியின் முறை பல இந்தோ ஆரிய மொழிகளை ஒத்துக் காணப்படுகிறது.

**உயிரெழுத்துக்கள்**

| | Front | Central | Back |
|---|---|---|---|
| High | i | | u |
| Mid | e | a | o |
| Low | | a | |

**மெய்எ**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Voiceless stops | p pʰ | t̪ t̪ʰ | ts | ʈ ʈʰ | tʃ tʃʰ | k kʰ |
| Voiced stops | b bʰ | d̪ d̪ʰ | dz dzʰ | ɖ ɖʰ | dʒ dʒʰ | g gʰ |
| Voiceless fricatives | | | s | | ʃ | |
| Nasals | m mʰ | n̪ n̪ʰ | | ɳ | | |
| Liquids | ʋ ʋʰ | | l r lʰ rʰ | (ts) | j | |

இரண்டிற்கும் மேற்பட்ட உயிர் எழுத்துக்கள் உச்சரிப்புகளைக் குறிப்பிடுகின்றன. இவை ஆங்கில எழுத்துக்களைக் குறிப்பிடுவதுபோல் உள்ளன. இந்தக் குறியீடுகள் முறை (a) மற்றும் (b). சில மராத்தி வார்த்தைகள் சம கிருதத்தைப் போலவே காணப்படுகின்றன. அவை ஒலிப்பு முறையில் சம கிருதத்தைப் போலவே காணப்படுகின்றன. இந்தியில் Sanhac என்பது மராத்தியில் Samhar எனவும், பூர்ண மற்றும் ராம் என்ற வார்த்தைகளை ஒப்பிடும்போது மராத்தி உச்சரிப்பில் சில சம கிருத வடிவங்கள் காக்கின்றன.

**எழுத்து**



**தேவநாகரி மற்றும் மோடி எழுத்துமுறை**

மராத்தி எழுத்து முதன்முதலில் கற்கள், கல்வெட்டுகள் மற்றும் செப்புத் தகடுகளில் 11 ஆம் நூற்றாண்டில் காணப்பட்டது. மராத்தி தேவநாகரி எழுத்துக்கள் இந்தி தேவநாகரி எழுத்துக்கள் போலவே இருக்கும். 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு வரை மராத்தி மோடி எழுத்தில் எழுதப்பட்டது. 1950 முதல் இது தேவநாகரியில் எழுதப்பட்டு வருகிறது.

**தேவநாகரி**

மராத்தி பொதுவாகத் தேவநாகரி எழுத்தில் எழுதப்படுகிறது. இது 36 மெய்யெழுத்துகளையும் 16 ஆரம்ப உயிர் எழுத்துக்களையும் கொண்டுள்ளது. இது இடமிருந்து வலமாக எழுதப்படுகிறது. மராத்தி எழுதப் பயன்படும் தேவநாகரி எழுத்துக்கள் இந்தி மற்றும் பிற மொழிகள் எழுதப் பயன்படும் தேவநாகரி எழுத்துக்களைவிட சற்று வித்தியாசமாக உள்ளன. இதில் கூடுதலாக ஒரு ஜோடி மராத்தி எழுத்துக்கள் மற்றும் நிறுத்தற் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மராத்தி தேவநாகரி எழுத்துக்கள் பால்போத் (Balbodh) என்று

அழைக்கப்படுகின்றன.

## மோடி எழுத்து

பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்து 1950 வரை மராத்தி மோடி எழுத்தில் எழுதப்பட்டது. இவற்றை எழுதும்போது எழுத்துக்களின் அளவு குறைக்கப்பட்டு இருந்தது. பின் இதன் எழுத்துருக்கள் மாற்றம் பெற்றதால் இவ்வெழுத்துக்கள் மறைந்து வெகுதொலைவில் இருந்தன.

## இலத்தீன்

தேவநாகரி இலத்தீன் எழுத்தைக் கணிப்பொறியில் தட்டச்சு செய்ய மற்றும் சமூக வலைத்தளங்களில் பயன்படுத்தச் சரியான எழுத்துருக்கள் இல்லாததால் கணினிகளில் பயன்படுத்த இயலவில்லை. இதனால் ஒலிப்பு மற்றும் எழுத்துப்பிழை விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்க முடியாத நிலை உள்ளது.

## மெய்யெழுத்து

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ச்சியான மெய் ஓர் உயிர் மூலம் தொடர்ந்தபோது ஒரு மெய் உருவாகிறது. மராத்தி போன்ற சில மெய்யெழுத்துக்கள் அரிதாகச் சில மொழிகளில் மட்டுமே காணப்படுகின்றன.

## இலக்கணம்

மராத்தி இலக்கணம் மற்ற இந்தோ ஆரிய மொழிகளான இந்தி, குஜராத், பஞ்சாபி ஆகிய மொழிகளை ஒத்திருந்தது. முதன்முதலாக மராத்தி இலக்கணப் புத்தகம் 1805 ஆம் ஆண்டு வில்லியம் காரே என்பவரால் வெளியிடப்பட்டது. பழமையான இலக்கணம் மகாராஷ்டிர சாகித்ய பரிசத் என்ற அமைப்பால் மகாராட்ஷ்டிர இலக்கணம் எழுதப்பட்டது. பழமையான சம கிருத மொழியில் இருந்து தழுவிய வார்த்தைகள் மராத்தியில் எந்தவித மாற்றமும் செய்யாமல் இருந்தன. இது கூயவளயஅ (without change). இந்தச்சிறப்பு அந்த து சம கிருத இலக்கணத்தில் பல விதிகளைக் கொண்டு வந்தது. இதன் விளைவாக மராத்தியில் தேவைப்படும் போதெல்லாம் பல தொழில்நுட்ப வார்த்தைகள் சம கிருத மொழியிலிருந்து பெறப்பட்டன. இதன் பின் மராத்தி இலக்கணம் தனிச் செல்வாக்கைப் பெற்றது.

மராத்தி முதன்மை வார்த்தை அமைப்பானது (SOV) பொருள், பொருள், வினை என்ற அமைப்பைக் கொண்டது. மராத்தியுடன் மற்ற இந்தோ ஐரோப்பிய மொழிகளை ஒப்பிடும்போது அது ஆ ட்ரோனேஷியன் மொழிகள் எனப்படும். மேலும் திராவிட

மொழிகள், ராஜ தானி, குஜராத்தி ஆகியவை உள்ளடக்கிய பிரத்தியேகத்தைக் காட்டுகிறது.

அதன் தொடர்புடைய மொழிகளைப் போல் அல்லாமல் மராத்தி மூன்று இலக்கணப் பாலினத்தையும் காக்கிறது. அவை ஆண்பால், பெண்பால், பலவின்பால். மராத்தி மூன்று இலக்கணக் குரல்களைக் கொண்டுள்ளது.(எ கா) கார்டாரி, கார்மணி, பாவே ஆகியவையாகும். மராத்தி மொழியின் இலக்கண அம்சங்களை விரிவான ஆய்வு மூலம் விவாதித்துள்ளது.

**மராத்திய நிறுவனங்கள்**

நிறுவனங்களின் கட்டுப்பாடு, பதவி உயர்வு மற்றும் மராத்திய மொழி செறிவூட்டல் ஆகிய பணிகளை அரசாங்கம் மேற்கொள்கிறது. இதில் பல மராத்தி அமைப்பு மற்றும் நிறுவனங்கள் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. அத்தகைய அமைப்புகள் பின்வருமாறு:

அகில பாரதிய கீர்தான் சான் தா, தாதர், மும்பை.

அகில பாரதிய மராத்தி நாட்ய பரிஷத்

அகில பாரதிய மராத்தி சாகித்திய மகாமண்டல் (அனைத்து மராத்தி அமைப்புகளின் மத்திய கூட்டமைப்பு)

மகாராஷ்டிரா சாகித்ய பரிஷத், புனே

மராத்தி கவிதா

மராத்தி விஷ்வகோஷ், மராத்தி கலைக்களஞ்சியத் திட்டம்

மராத்வாடா சாகித்ய பரிஷத், அவுரங்காபாத்

மராத்தி சாகித்திய சங்கம்

ராஜ்ய மராத்தி விகா , சான் தா

ஷோர் மராத்திச்சா

விதர்பா சாகித்திய சங்கம், நாக்பூர்

மகாராஷ்டிரா மாநிலத்தின் வெளியே

அகில பாரதிய மராத்தி மண்டல், ஜபல்பூர்

ஆந்திரப்பிரதேசம் சாகித்திய பரிஷத், ஹைதராபாத்

கோமண்ட மராத்தி அகாடமி

மத்தியபிரதேசம் சாகித்ய பரிஷத், ஜபல்பூர்

மராத்தி சாகித்ய பரிஷத், கர்நாடகா

வாதோபி (பாதோத் சன் தான், கெய்க்வாட் மாநிலம்)

குஜராத் ராஜ்ய பாரத்

ஸ்ரீமகாராஷ்டிரா சாகித்ய சபா, இந்தூர்

சனிந்த் நயா , இந்தூர்

மராத்தி சமாக், இந்தூர்

பிரிஹன்னா மகாராஷ்டிரா மண்டல்

**மொழி வளங்கள்**

பல நூற்றாண்டுகளாக மராத்தி மொழி மக்கள் பல மொழிகளுடனும், வட்டார வழக்குகளுடனும் தொடர்பு கொண்டிருந்தனர். அவற்றில் பிராகிருதம், மகாராஷ்டிரி, அப்ஹபிராம்சா, சம கிருதம் ஆகியவை முதன்மைச் செல்வாக்கைப் பெற்றுள்ளன. குறைந்தபட்சம் 50 விழுக்காட்டுச் சொற்கள் சம கிருத மொழியிலிருந்து பெறப்பட்டதாக உள்ளன.

மராத்தி மொழி மேலும் பல திசைகளில் சொல்லகராதி, இலக்கணம் கொண்ட இந்திய திராவிட மொழிகள், சில வெளிநாட்டு மொழிகளான பாரசீகம், அரபு, ஆங்கிலம், போர்த்துக்கீசியம் ஆகிய மொழிகளுடனும் மொழிகளைப் பகிர்ந்துள்ளது.

**உருபனியல் மற்றும் சொற்பிறப்பியல்**

அன்றாட வாழ்வில் மராத்தி மொழி அதிகமான எண்ணிக்கையில் சம கிருதம், வட இந்திய இந்தி வார்த்தைகளைக் கொண்டுள்ளது. சில வார்த்தைகள் சம கிருத மொழியில் மாற்றம் பெற்று அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. மராத்திப் பேச்சாளர்கள் மூலம் தினசரி அதிகமாகவோ குறைவாகவோ பயன்படுத்தப்படும் வார்த்தைகள். எடுத்துக்காட்டாக

| | | |
|---|---|---|
| பூர்ணா | purna | பூர்ணம் (முழுவதும், முழு அளவில்) |
| ஓலா | ola | ஓலம் அல்லது ஈரமான |
| கரண் | karan | கரணம் அல்லது காரணம் |
| புஷ்கள் | puskal | மிகவும் பல |
| சாடட் | (satat) | satatam அல்லது எப்போதும் |
| விசித்ரா | vichitra | விசித்திரமான அல்லது அந்நியமான |
| வாதா | svatah | வாதா அல்லது அவனுடைய, அவளுடைய |
| ப்ரயாத்ணா | prayatnam | ப்ரயாத்னம் அல்லது முயற்சி |
| பிகிதி | bhiti | பிகிதியிலிருந்து அல்லது பயம் |
| பாந்தா | bhanda | சமையல் அல்லது உணவு சேமித்தல் அல்லது கப்பல் |
| கார் | ghar | வீட்டில் |
| துவாரம் | dwaram | கதவு |
| கார் | ghar | வீடு |
| வேக் | vagh | புலி |

| | | |
|---|---|---|
| பலேன் | palane | வேகமாக ஓடு |
| கிதி | kiti | ஊடகம் அல்லது எத்தனை |

போன்ற வார்த்தைகள் இன்னும் மாற்றம் கொண்டுள்ளன.

**இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளிலிருந்து கடன்பெறப்பட்ட வார்த்தைகள்:**

| | | |
|---|---|---|
| அதகிட்டா | Adakitta | விதை உடைக்கும் கருவி. நேரடியாகக் கன்னட மொழியிலிருந்து பெறப்பட்டது. |
| ஹாஜ்ரி | Hajeri | வருகை. உருது மொழியிலிருந்து பெறப்பட்டது. |
| ஜாஹிரியேட் | Jaahiraat | விளம்பரம். அரபு மொழியிலிருந்து பெறப்பட்டது. |
| மார்ஜி | Marji | ஆசை. பாரசீகமொழியிலிருந்து பெறப்பட்டது. |
| சிம்ப்பாரா | shiphaaras | பரிந்துரை. பாரசீக மொழியிலிருந்து பெறப்பட்டது |

ஆங்கில வார்த்தைகள் அதிகமாக உரையாடலில் பயன்படுத்தப் படுகின்றன. ஆனால் மராத்தி சொல்லகராதி ஒரு குறிப்பிட்ட பொருளைக் கொண்டுள்ளது. (எ.கா.)

| | |
|---|---|
| pen | இது மராத்தியில் lekhail எனப்படுகிறது. |
| சட்டை | sadaraa எனப்படுகிறது. |

## 14. நேபாளி மொழி

| | |
|---|---|
| பூர்வீகம் | : நேபாளம், இந்தியா, பூடான் |
| இனம் | : கா , கூர்க்காக்கள் |
| தாய் மொழியாகக் கொண்டோர் | : 17 மில்லியன் (2007) |
| மொழிக் குடும்பம் | இந்தோ ஐரோப்பிய<br>இந்தோ ஈரானிய<br>இந்தோ ஆசிய<br>வடக்குப்பகுதி<br>கிழக்கு பஹாரி<br>நேபாளி |
| எழுத்து முறை | : தேவநாகரி (நேபாளி எழுத்துக்கள்)<br>நேப்பாளி ப்ரெய்லி |
| அதிகாரப்பூர்வ மொழி | : நேபாள்<br>இந்தியா (மேற்கு வங்கம்)<br>சிக்கிம் மற்றும் டார்ஜிலிங் |

நேபாளி அல்லது நேபாளி இந்தோ ஆரிய மொழிகளுள் ஒன்றாகும். இம்மொழி நேபாளத்தின் அதிகாரப்பூர்வ மொழி. நடைமுறையில் பூட்டானிலும் பேசப்படுகிறது. நேபாள மொழி அதிகாரப்பூர்வ மொழியாக இந்திய மாநிலங்களான சிக்கிம், மேற்கு வங்காளத்தில் உள்ள டார்ஜிலிங் மாவட்டம், அசாம் பகுதிகளிலும் உள்ளது. நேபாளி இந்தோ ஆரிய மொழிகளுள் குறிப்பாக, பஹாரி மற்றும் மகாஹி ஆகிய மொழிகள் மற்றும் சம கிருதத்தின் தாக்கம் ஆகியவற்றுடனும் காணப்படுகிறது. நேபாள் நாட்டின் புவியியல் அமைப்புக் காரணமாகத் திபெத் பர்மன் மொழித் தாக்கமும் காணப்பட்டது. நேபாளி முக்கியமாகப் பஹாரியிலிருந்து இலக்கணம் மற்றும் சொற்றொகுதியில் மாறுபட்டுக் காணப்படுகிறது. நேபாளி மொழியும், பெங்காலி மொழியும் 40 விழுக்காட்டு ஒற்றுமையுடன்

காணப்படுகின்றன. பிரிட்டிஷ் குடியுரிமை பெற்ற காத்மாண்டு பிரையன் ஹவுட்டன் ஹோட்சொன் கூறுகிறார். நேபாளி வார்த்தையில் பத்தில் எட்டு வார்த்தைகள் இந்தியைப் போன்றே உள்ளதாகக் கூறுகிறார்.

வரலாற்று ரீதியாக முதலில் இம்மொழி கா மொழி என்றே அழைக்கப்பட்டது. பின் கார்காளி அல்லது குர்காளி (கோர்கா இராஜ்ய மொழி) எனப்பட்டது. நேபாளி என்ற மொழி (நேபாள் பாஷாவிலிருந்து) எடுக்கப்பட்டது. மற்ற பெயர்கள் பார்பாத்தியா (Parbatiya மலைமொழிகள்) நேபாளியில் உள்ள பார்பாத்தியா மக்களால் பேசப்படுவது மற்றும் லோட்சமிக்கா (Lhotshamikha) பூடான் பகுதியில் வாழும் மக்களால் பேசப்படுகின்றன.

**மொழி வரலாறு**

அரபு, சீனா, ஜார்ஜியா, இந்தியா, ஜப்பான், கொரியா, குஃபிக், மங்கோலியா, நேபாளி, பாரசீகம், சினி, திபெத்திய, மேற்கத்திய பகுதிகளிலிருந்து சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு கர்னாலி ஆற்றின் பெர்ரிசெதி கரைப்பகுதியின் கிழக்குப்பகுதி நெல் சாகுபடி செய்வதற்கு உகந்தது எனக் கருதி கான்டாகி பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதியில் தாம் ஹைலேண்ட் பகுதியில் உள்ளவர்கள் குடிபெயர்ந்தனர். குறிப்பிடத்தக்க சில குடும்பங்கள் மட்டும் போக்கராண்ட் மற்றும் காத்மாண்ட் ஆகிய பகுதிகளுக்கு இடையில் குடியேறின. பின்னர் கி.பி. 1559 இல் லாம்ஜன்ஜ் இளவரசர் டிராவ்யா ஷா என்பவர் உள்ளூர் கா மற்றும் மேகர் ஆகியோரின் உதவியுடன் கோர்கா சிம்மாசனத்தை நிறுவினர். பின் பாகீரன் பான்டா என்ற படைத்தலைவரைக் கொண்டு ஒரு இராணுவப் படையை நிறுவினர். பின்னர் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவரது வாரிசான பிருத்வி நாராயன்ஷா என்பவர் இமயமலை அடிவாரங்களில் உள்ள பழங்குடி இனமான காஸா (சேத்ரி), துக்குரி, குருங் மற்றும் மேகர் ஆகியவர்களைக் கொண்டு இராணுவம் மேம்படுத்தப்பட்டது. அதிலிருந்து கார்கா என்பது மாறி அப்பகுதி கா எனும் தாயகமாக மாறியது. க குரா என்பது கார்காலி எனப்பட்டது. அப்பகுதியில் பேசும் மொழி கார்கா எனப்பட்டது.

பிருத்வி நாராயணனின் மிகவும் குறிப்பிடத்தக்க இராணுவ சாதனையாக இருந்தது காண்டகி பள்ளத்தாக்கின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றியது. கைப்பற்றிய இந்தப் பகுதி அப்போது நேபால் என அழைக்கப்பட்டது. காத்மாண்டு பகுதி பிறகு பிருத்வி அரசின் புதிய தலைநகரமாக இருந்தது. பின் அவர் மற்றும் அவரது வாரிசுகளால் கிழக்கு தோசி ஆற்றுப்பகுதி, வடக்கு திபெத்திய பீடபூமி, தெற்கு வடஇந்திய

சமவெளிகள் மற்றும் மேற்கில் கர்னாலி மற்றும் பேரி ஆற்றின் குறுக்கிலும், அதைத் தாண்டியும் அவரது எல்லைகள் விரிவடைந்தன.

இவ்விரிவாக்கம் முக்கியமாக வடக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளை வளர்ந்த நாடுகளான பிரிட்டிஷ் மற்றும் சீனாவின் மோதலுக்குக் கொண்டு வந்தது. இந்தப் போர்களால் மீண்டும் நேபாளத்தின் பகுதிகள் சுருக்கப்பட்டு தற்போதைய நேபாளத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்பட்டன. பிரிட்டிஷ் மற்றும் சீனா ஆகியவை ஓர் இடையக மாநில மதிப்பைப் புரிந்துகொண்டு மீண்டும் எல்லைகளைக் குறைக்க முயற்சி செய்யவில்லை. அப்போதிலிருந்து காத்மாண்டு பள்ளத்தாக்கு அல்லது நேபாள் அரசியல் முன்னெடுப்பில் ஒரு புதிய மையமாகக் கருதப்பட்டது. இது படிப்படியாக முழு சாம்ராஜ்யத்திற்கு வழிவகுத்தது. மட்டுமன்றி அதனால் கோர்கா மொழி மீண்டும் நேபாளி என அறியப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் நேபாளியில் பல மொழிகளின் தாக்கங்கள் இருந்தன. நேபாளி தொழில்நுட்ப ரீதியில் இந்தி, பெங்காலி மொழிகளைப் போன்றே காணப்படுகிறது. இது பல வார்த்தைகளைக் கடனாகப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக கதவை (Dhoka), சாரளம், சன்னல் (Jhyaal) கடை (Adarsha), சேவல் (Kukhura) நீர் எருமை (Raango) போன்ற வார்த்தைகள் திபெத்திய பர்மிய வேர்களைக் கொண்டுள்ளன. கட்டாக் (தியாகி) காறும் (சட்டம்) போன்ற வார்த்தைகள் அரபு மற்றும் பாரசீக வேர்களைக் கொண்டு காணப்படுகின்றன. பல ஆங்கில வார்த்தைகள் தற்போதைக்கு அதிகமாகப் பேசப்படுகின்றன. ஆனால் ஒட்டு மொத்தமாக நேபாளி இன்னும் பல சம கிருத வேர்களைக் கொண்டு காணப்படுகிறது.

கா குரா/கார்காளி/பின்னர் நேபாளி காலிகாண்டாகி ஆற்றின் மேற்குப் பகுதியில் அதிகமாக நேபாளில் உள்நாட்டிலேயே பேசப்படுகிறது.

**பேச்சாளர்கள் எண்ணிக்கை**

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி நேபாளி மக்கள் 44.6 விழுக்காட்டினர் நேபாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். வலைதளக் கணக்கெடுப்பின்படி உலக அளவில் 2007 ஆம் ஆண்டு 17 மில்லியன் மக்களும், 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 42 மில்லியன் மக்களும் பேசுகின்றனர்.

நேபாளி குறிப்பாக நேபாள் நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள மலைப் பகுதிகளில் பேசப்படுகிறது. நேபாள் பாஷா மொழி

காத்மாண்டு பள்ளத்தாக்கின் மேலாதிக்க மொழியாகும். தற்போது நேபாளி மேலாதிக்க மொழியாக உள்ளது. நேபாள மெழி அரசாங்கம் மற்றும் உள்ளூர் மக்களால் தினசரி பேசப்படும் வளர்ந்துவரும் மொழியாக உள்ளது. இருப்பினும் நேபாள் அரசாங்கம் மற்றும் நீதிமன்றங்களில் பிரத்யேகமாகப் பயன்படுத்தப்படுவது ஒரு சவாலாகவே உள்ளது. நேபாளில் உள்ள மற்ற இன மொழிகள் மாவோயிசஎழுச்சி குறிக்கோள்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பூடானில் நேபாளி மொழி பேசுவோர் லோட்சாம்பா என அறியப் படுகின்றனர். தோராயமாக 35 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. நேபாளி மக்களால் பேசப்படுவதைக் காட்டிலும் 30இலிருந்து 40 சதவீதம் அதிகமாகக் காணப்பட்டது என்பதை அதிகாரப்பூர்வமற்ற மதிப்பீடுகள் மூலம் கண்டறியப்பட்டது. 1980 களின் பிற்பகுதியில் சுமார் 1,00,000 நேபாளி மொழி பேசுவோர் பூட்டானிலிருந்து வெளியேற்றப் பட்டனர். சட்டவிரோத செயல்பாடுகள் நடப்பதாகப் பூட்டான் அவர்கள் மீது குற்றம் சாட்டியது. ஒரு பெரிய இனச்சுத்திகரிப்புப் பிரச்சாரத்தில் பலர் வெளியேற்றப்பட்டு நேபாள அகதிகள் முகாம்களில் வாழ்ந்தனர்.

இந்தியாவிலும் நேபாளி மொழி பேசுவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. வடகிழக்கு இந்தியாவில் (அசாம், மேகாலயா, நாகலாந்து, மணிப்பூர், திரிபுரா, மிசோரம், அருணாசலப்பிரதேசம்) ஆகிய மாநிலங்களில் நேபாளி மொழி பேசுவோர் அதிகமாக உள்ளனர். நேபாளி பேசும் மக்களில் ஒரு கணிசமான எண்ணிக்கையினர் கொல்கத்தா, தில்லி, பெங்களூர், விசாகப்பட்டினம், கோவா, பீகார், டார்ஜிலிங், சிக்கிம், சென்னை, மும்பை, ஐதராபாத் போன்ற பல இந்திய நகரங்களில் உள்ளனர்.

**இலக்கியம்**

நேபாளி 19 ஆம் நூற்றாண்டில் ஒரு நூறு ஆண்டுகளுக்கு குறுகிய காலத்திற்குள் குறிப்பிடத்தக்க இலக்கியம் உருவாக்கப்பட்டது. இதனால் அத்யாத்மா இராமாயணம் உருவாக்கப்பட்டது. சுந்தரநந்தா பாரா (1833) பிர்ஸிக்கா நாட்டுப்புறக் கதைகள் ஒரு அநாமதேய சேகரிப்பு மற்றும் பானுபாக்தா தெற்காசிய இராமாயணத்தில் ஒரு பதிப்பு ஆகியவை உருவாக்கப்பட்டன.

மிகப் புகழ்வாய்ந்த கவிஞர்களான லேக்நாத் பௌத்யால், லெக்ஷ்மி பிரசாத், தேவ்கோட்டா முனாமதன் மூவரும் நேபாளி மொழி தரத்தை உலக அளவிற்கு உயர்த்தினர். குறிப்பாக இந்தியாவில் டார்ஜிலிங் மற்றும் வாரணாசி பகுதிகளில் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கவாறு உள்ளது. கடந்த

பத்தாண்டுகளில் ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள நேபாளி மற்றும் புலம்பெயர் நேபாளிகளின் பங்களிப்பு இலக்கியத்தில் அதிகமாகவே உள்ளது.

**இலக்கணம்**

நேபாளி இலக்கணம் தெற்கு ஆசியாவில் பேசப்படும் இந்தோ ஐரோப்பிய மொழி அமைப்பில் உள்ளது. அவை:

1. எழுத்து
2. உருபனியல்
3. பெயர்ச் சொற்கள்
4. பெயரடைகள்
5. முன் இடைச்சொற்கள்
6. பிரதிபெயர்ச் சொற்கள்
7. வினைச்சொற்கள்
8. வினைப் பொதுநிலை

ஆகியவையாகும்.

**எழுத்து**

எழுத்தில் நேபாளி தேவநாகரியைக் கொண்டுள்ளது. இந்திய எழுத்து முறை அடிப்படையில் சமகிருதத்திலிருந்து மாறுபட்டு காணப்படுகிறது. இதன் சிறப்புத் தன்மைகளாக வளைகிற மெய், ஒட்டுப் புள்ளிகள், சொற்பிறப்பியல், நீண்ட உயிரெழுத்துகள், மூச்சடை, உரிச்சொல் ஆகியவற்றைக் கூறலாம்.

**உருபனியல் - பெயர்ச் சொற்கள்**

நேபாளி பெயர்ச்சொற்கள் ஆண் மற்றும் பெண் மனிதர்களைக் குறிக்கிறது. முன்னொட்டு இலக்கணப்படி மாறுபட்ட வகையில் ஜோடிகள் மூலம் வேறுபடுத்தி அறியப்படுகிறது. (எ கா.) சோரோ மகன் ஆண்பாலைக் குறிக்கிறது. சோரோ 'மகள்' பெண்பாலைக் குறிக்கிறது. புர்ரோ தாத்தா, புர்ரி பாட்டி. இதேபோன்று பெண்பாலில் பின்னொட்டு சேர்த்து எழுதப்படுகிறது. சேத்ரி, சேத்ரி பெண், குர்குர் நாய், பிட்ச் பெண் நாய். இவ்வாறு பின்னொட்டுகள் மாறுபட்டு ஆண்பால், பெண்பால் பிரித்தறியப்படுகிறது. ஒட்டுமொத்த இலக்கண பாலினம் அடிப்படையில் இந்தோ ஆரிய மொழிகள் மத்தியில் நேபாளி மொழியில் பெண் பாலினம் உயிரோட்டமானதாக உள்ளது. 0 அமைப்பு தனிப்பட்ட முறையில் மாறக்கூடிய நடுநிலைப் பண்புடன் காணப்படுகிறது.

நேபாளியில் பாலினங்கள் வேறுபடுத்திக் காணப்பட்டன.

பன்மையில் பின்னொட்டுகள் சேர்க்கப்பட்டன. (எ.கா)

| | |
|---|---|
| மித்ரா | நண்பன் |
| மித்ரகாரு | நண்பர்கள் |

ஆங்கிலப் பன்மைபோல் கட்டாயம் அல்ல. ஆனால் பன்முகத் தன்மை வேறு சில வழியில் சுட்டிக்காட்டப்படுகிறது. சில பின்னொட்டு அரிதாக எளிய பன்மையைக் குறிக்கிறது. அது பெரும்பாலும் அதே அல்லது அதே போன்ற வர்க்கத்தின் மற்ற பொருள்களைக்கூட சுட்டிக்காட்டப் பயன்படுகிறது.

**பெயரடைகள்**

பெயரடைகள் மனப்போக்கு மற்றும் நீக்கப் பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றன. அவை தகுதிப் பெயர்ச் சொற்கள், பாலினம் மற்றும் எண்கள் மூலம் குறிக்கப்பட்டன. முடிவில் *0* இருந்தால் அவை ஆண்பால் ஒருமையையும், முடிவில் கூ இருந்தால் அவை பெண்பால் ஒருமையையும் மற்றும் ய பன்மையையும் குறிக்கிறது.

*(எ கா.)*

| | | |
|---|---|---|
| sanokitab | 'small book' | சிறிய புத்தகம் |
| saniketi | 'small girl' | சிறிய பெண் |
| sana kalamharu | 'small pens' | சிறிய பேனா |

என்பதையும் குறிக்கிறது. ஆண்பால் அல்லது மாறாக நடுநிலை *0* சான்று வடிவம் இல்லையெனில் மிகப் பெருமளவில் தவறுகள் காணப்படும். எனினும் எழுதுவதில் பெண்பாலின் முடிவில் சில அடைமொழிகள் குறிக்கப்பட்டு ஒரு வலுவான போக்கை ஏற்படுத்தியது. இந்தப் போக்கு சில நேபாளி இலக்கணங்களைப் பலப்படுத்துவதாகவும், மேலும் பேச்சிலும் எழுத்திலும் இந்தியை வலுப்படுத்துவதாகவும் இருந்தது. அளபெடைகள் முடிவடையும் போது இறுதியில் மெய் அல்லது உயிரைக் கொண்டு முடிவடைந்தன. (*0* தவிர)

மனப்போக்கு அளபெடைகளுக்கு எடுத்துக்காட்டு 'துலோ' பெரிய, 'ராம்ரோ' நல்ல, 'சீடோ' வெள்ளை, 'சானோ' சிறிய. நீக்க அளபெடைகளுக்கு எடுத்துக்காட்டு காரிப் ஏழை, சாஃபா தூய்மை, தனி பணக்கார, நாயா புதிய.

**முன் இடைச் சொற்கள்**

நேபாளி இலக்கணச் செயல்பாடு மற்றும் வழக்கு குறிக்கும் ஆங்கிலத்திற்கு இணையான முன்னொட்டுக்களை இணைக்கும் அமைப்பில் உள்ளது. அத்தகைய வார்த்தை முதன்மை முன் இடைச்சொல் எனப்படுகிறது. முக்கியமாக இதில் 'இல்' இடத்தில்',

'மேலே' ஆகிய சொற்கள் குறிக்கப் படுகின்றன. தாலா கீழே, முனி அடியில், தேதி, பேடா இருந்து, சாகா உடன், சீதா உடன், பாச்சி பிறகு, சாம்மா மேலிருந்து, பித்திகை விரைவில் ஆகியவை முதன்மையாக பட்டியலிடப்படுகிறது. அதேபோல் பாந்தமதி மேலே, அப்பால், பாந்தா இணையாக, கோவிருதா எதிராக, கோபச்சாரி பின்னால், கோலாகி உடைய ஆகியவையும் முன் இடைச் சொற்களில் குறிக்கப்படுகின்றன.

**பிரதிப் பெயர்ச்சொல்**

நேபாளி பிரதிப் பெயர்ச்சொல்லில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவையும் குறிக்கப்படுகின்றன. இதில் மூன்று வகையான நிலைகள் குறிக்கப்படுகின்றன. குறைந்த, நடுத்தர, உயர்ந்த தரங்களாக உள்ளது. ஆனால் பிரதிப்பெயர்ச் சொற்களில் பாலின வேறுபாடு இல்லை. முதல் நபர் ஒருமை சுட்டுப்பெயர் (மா) MA முதல்நபர் பன்மை சுட்டுப்பெயர் ஹமி யாகக் குறிக்கப்படுகிறது.

**வினைச் சொற்கள்**

நேபாளிச் சொற்கள் மிகவும் உயர்ந்த எண், பாலினம், தகுதி மற்றும் பொருள் ஆகியவற்றுக்கு ஏற்ப மாறுகின்றன. அவை காலம், மனநிலை, அம்சம் ஆகியவற்றுக்கு ஏற்ப மாறுகின்றன. அத்துடன் தரிந்த வரையறுக்கப்பட்ட வடிவங்கள் மற்றும் பெயரெச்ச வடிவங்கள் எனவும் பல உள்ளன.

நேபாளி வார்த்தைகள் மிகவும் முக்கியமாக மேலும் ஒழுங்கற்ற வினை அமைப்புடனும் உள்ளது. எளிய நிகழ்காலம் அதில் மூன்று இணைப்புச் சொற்கள் உள்ளன. முதல் ஹோ இணைப்புச் சொல் இவை அதிகமாகப் பேசும் விஷயங்களில் அதிக அளவு பரந்து பெயர்ச் சொல்லாக உள்ளது. இரண்டாவது ஷா இணைதல். இது பொதுவாகப் பெயரடை அல்லது முன்னிடை சொற்றொடர் இணைவதற்குப் பயன்படுகிறது. மூன்றாவது ஹன்சா இணைதல். இது வழக்கமான நிகழ்வுகள் அல்லது எதிர்கால நிகழ்வுகளை வெளிப்படுத்த பயன்படுத்தப் படுகிறது.

**வினைப் பொதுநிலை**

நேபாள மொழி இரண்டு வினைப் பொதுநிலையைக் கொண்டுள்ளது. முதலில் நு, வினைத்தண்டு எனப்படும். இந்த வினை சான்று வடிவம் மற்றும் நிர்மாணங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. இது மேலும் இணைந்து நு வினைப் பொதுநிலை; parnu 'விழு' எனப்படுகிறது. இது வினையெச்சம்

இணைப்பதன் மூலம் உருவாகிறது.

**நேபாளி ஒலியியல்**

நேபாளி மொழி நேபாளத்தின் தேசிய மொழியாகும். *48* விழுக்காட்டு மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். மேலும் மூன்று முக்கிய வட்டார மொழிகள் காணப்படுகின்றன. அவை மத்திய, கிழக்கு, மேற்கு ஆகியவையாகும். நேபாளில் காணப்படுகின்ற பல வட்டாரங்களும் மற்றும் பிற தெற்காசிய நாடுகளுடன் வேறுபடுத்திக் காணப்பட்டாலும் ஒலியியலிலும் பல சிறிய மாறுபாடுகள் காணப்படுகின்றன.

**உயிரெழுத்துக்கள்**

நேபாளி பொதுவாக *11* உயிரெழுத்துக்களைக் கொண்டுள்ளது. அவற்றில் 6 வாய்வழி உயிர் மற்றும் 5 நாசி உயிர் எனப்படுகிறது. இது உரிச்சொல்லைச் சுட்டிக்காட்டவும் பயன்படுகிறது. இருந்தபோதிலும் சம கிருதம் நேபாள முன்னோர்களின் மொழியாக இருந்தது. எனவே அவை பேசும்விதத்திலும் எந்த மாறுபாடும் இல்லாமலேயே இருந்தது. எனினும் ழ நீக்கத்துக்குப் பிறகு பல நீண்ட உயிரெழுத்துக்கள் உருவாயின.

# 15. ஒரியா மொழி

| | |
|---|---|
| பேசப்படும் இடம் | : இந்தியா |
| பகுதி | : ஒடிசா, ஜார்கண்ட், மேற்கு வங்கம், ஆந்திரப் பிரதேசம், அந்தமான் நிக்கோபார் தீவுகள், பீகார். |
| இனம் | : ஒரியா |
| தாய்மொழியாகக் கொண்டோர் | : 33 மில்லியன் (2007) |
| மொழிக் குடும்பம் | : இந்தோ ஐரோப்பிய<br>இந்தோ ஈரானிய<br>இந்தோ ஆரிய<br>கிழக்கு<br>ஒரியா மொழிகள்<br>ஒரியா |
| எழுத்துமுறை | : ஒரியா எழுத்துக்கள் (பிராமி)<br>ஒரியா ப்ரெய்லி |
| அதிகாரப்பூர்வ மொழி | : ஒடிகா, ஜார்கண்ட் |

ஒரிசா அதிகாரப்பூர்வமாக ஒடியா எனப்படுகிறது. இம்மொழி இந்திய மொழிகளுக்குச் சொந்தமான இந்தோ ஆரிய கிளையில் இந்தோ ஐரோப்பிய மொழிகளில் ஒன்றாகும். இம்மொழி முக்கியமாக இந்திய மாநிலமான ஒடிசா, மேற்கு வங்கம், ஜார்கண்ட், சட்டீ கர் மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் பேசப்படுகிறது. ஒரியா இந்தியாவில் பல அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாக இருக்கிறது. ஒரியா ஒடிசாவின் அதிகாரப்பூர்வ மொழியாகும். ஜார்கண்டில் இரண்டாவது உத்தியோகப்பூர்வ மொழியாகவும் உள்ளது. ஒரியா நீண்ட இலக்கிய வரலாற்றைக் கொண்டும், மற்ற மொழிகளிலிருந்து கடன் பெறப்பட்ட வார்த்தைகள் அதிகமாக இல்லை என்ற அடிப்படையிலும் ஒரியா மொழி செம்மொழி அறிவிக்கப்பட்ட ஆறாவது இந்திய மொழியாக உள்ளது. ஒரியா மொழி ஒடிசாவில் ஒரு முக்கிய மொழியாக உள்ளது. மேலும்

2002 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி ஒரியா மொழி பேசுவோர் 81.4% உள்ளனர்.

**வரலாறு**

ஒரியா இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கிழக்கு இந்தோ ஆரிய மொழி. இது நேரடியாக கதி பிராகிருதத்திலிருந்து வந்த அர்தமகதியை ஒத்துள்ளது. மேலும் இது 1500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் பேசப்பட்டது. மற்றும் ஆரம்பகால ஜெயின் நூல்களில் பயன்படுத்தப்படும் முதன்மை மொழியாக இருந்தது. ஒப்பீட்டளவில் சிறிதளவு பாரசீக மற்றும் அரபு மொழியின் தாக்கம் காணப்படுகிறது. ஒரிய மொழி வரலாறு 5 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை:

1. பழைய ஒரியா
2. ஆரம்ப கால மத்திய ஒரியா
3. மத்திய ஒரியா
4. பிற்கால மத்திய ஒரியா
5. நவீன ஒரியா

ஆகியவையாகும்.

**பழைய ஒரியா (7-ஆம் நூற்றாண்டு-1200)**

ஒரியா மொழியின் இலக்கியத் தோற்றம் புத்தகானா ஓ தோகா இல்லையெனில் சர்யபாடா எனப்பட்டது. இது ஒடிசா புத்த சித்தர்களால் எழுதப்பட்டது. ஒரியா மொழி கோவில்களில் உள்ள கல்வெட்டுகளிலும், செப்புத் தகடுகளிலும், பனையோலை கையெழுத்துகளிலும் காணப்பட்டது.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரிய மொழி வார்த்தைகள் மற்றும் உரைகள் கல்வெட்டுகளில் காணப்பட்டன. உதாரணமாக ஒரிய வார்த்தைகள் கும்பா, பாட்டர் ஆகியவை 7 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இதேபோல் கி.பி. 991 ஆம் ஆண்டு கல்வெட்டுகளிலும், ஒரிய வார்த்தையான பித்ரு, அதாவது உள்ளிருந்து, மேலும் பாண்டோரா பதினைந்து ஆகிய வார்த்தைகளும் காணப்படுகின்றன. மேலும் ஒரு ஒரியா பத்தி மற்றாரு கி.பி. 715 ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டும் காணப்படுகிறது.

**ஆரம்பகால மத்திய ஒரியா (1200-1400)**

ஆரம்ப கால உரைநடைப் பயன்பாடுகளை மதலபான்ஜி அல்லது பனையோலை ஆகியவற்றில் உள்ளதைப் பூரியில் உள்ள ஜகந்நாதர்

கோயிலில் காணலாம். 12 ஆம் நூற்றாண்டு வரை உள்ளது இங்குக் காணப்படுகிறது.

**மத்திய ஒரியா (1400-1700)**

மகாபாரதம், சாண்டி பூரான், சத்ரமுனி சரளாவின் விளக்க இராமாயணம் ஆகியவையும், அர்ஜுனாதா அதே சமகால இடைவெளியில் சரளாதாஸா ஆகியோர் ராமா பிஹா ஆகியவற்றையும் எழுதினர். மேலும் இவர்கள் ஒரியா மொழியில் நீண்ட கவிதை ஒன்றையும் எழுதினர். 16 ஆம் நூற்றாண்டில் 5 எழுத்தாளர்கள் தோன்றினர். அவர்களுக்கிடையே நூறாண்டு இடைவெளி காணப்பட்டது. அவர்கள் பஞ்சசாகா என அறியப்பட்டனர். எனினும் அவர்களின் சிந்தனை ஒரேமாதிரியாக உக்காளிய வைஷ்ணவத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்களின் பெயர்கள் பாலராம் தா, ஜகந்நாத் தா, அச்சுயநந்தா தா, ஆனந்ததா, ஜஸோபாந்தா தா ஆகியவையாகும்.

**பிற்கால மத்திய ஒரியா (1700-1850)**

உசாபிலிஷாவைச் சிசுசங்கரதாசும் ரகஷ்யமஞ்சரியைத் தேவதுர்ளா பாதாசும் மற்றும் ருக்மணிபிபாவைக் கார்டிக்க தாசும் எழுதினர். பின் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராமச்சந்திர பட்நாயக் எழுதிய ஹரவேலியில் வசன நாவல்கள் ஒரு புதிய வடிவம் பெற்றன. உபேந்திர பான்ஜா இந்தக் காலக்கட்டத்தில் ஒரு முக்கியப் பங்கு வகித்தார். இவரது படைப்புகளான பைதேசிகா பிலாசா, தோடி பிராமாந்தா சுந்தரி, லாவண்யபதி ஆகியவை ஒரியா இலக்கியத்தில் ஒரு மைல் கல்லை நிருபித்தது. தினக்ருஷ்ணதாஸின் ரசக்கொள்ளாலோ மற்றும் அபிமன்யு சமந்தாசிம்காராவின் பிதாக்தா சிந்தாமணி ஆகியவை இந்தக் காலக்கட்டத்தில் ஒரு முக்கிய காவியமாக இருந்தது. நான்கு முக்கிய கவிஞர்கள் இந்தக் காலக்கட்டத்தில் தோன்றினர். அவர்கள் 1. கபிசூர்யா பாலாதேப் ராத், 2. சாந்தா காபி அல்லது அந்தமுனி பீமாபாய், 3. பிரஜாநாத் பாதாஜீனா, 4. கோபால் கிருஷ்ண பட்நாயக் ஆகியோர் ஆவர்.

**நவீன ஒரியா (1850 முதல் இன்று வரை)**

முதல் ஒரியா அச்சு இலக்கியம் 1836 இல் கிறித்தவ மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்டு ஒரியா இலக்கியம் மற்றும் மொழிகளில் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தியது.

**அசோகர் காலத்திய ஒரியா மொழி**

கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் உள்ள டௌலி மற்றும் ஜாகுடா ஆகிய

கல்வெட்டுகளிலும் காரவேலாவில் உள்ள ஹாதிகும்பாவின் காந்தகிரி ஆகியவையும் சாத்தியமான ஒரு ஒரியா மொழி தோற்றத்தைக் கொண்டுவந்தது. இந்த மொழிக் கண்ணோட்டத்தில் ஹாதிகும்பா கல்வெட்டில் உள்ள ஒரியா மொழி நவீன ஒரியாவிலும் அசோகா கல்வெட்டில் உள்ள மொழியும் போதுமான அளவு வேறுபாட்டோடு காணப்பட்டது. இந்தக்காலகட்டத்தில் பாலி மொழி அதிகமாக இருந்து வந்தது. ஹாதிகும்பா கல்வெட்டு மட்டுமே பாலி மொழி இருந்ததற்கான சான்றாக உள்ளது. இதைப் பற்றி ஜெர்மன் மொழியியலாளர் ஹெர்மன் ஓல்டென்பெர்க் பாலி மொழி ஒடிசாவின் அசல் மொழி என்றே குறிப்பிட்டுள்ளார்.

**புவியியல் பகிர்மானம்**

ஒடிசாவிற்கு வெளியே பிறமொழி பேசும் மாவட்டங்களுக்கு இடையேயும் ஒரியா மொழி பேசுவோர் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக மேற்கு வங்கத்தில் உள்ள மிட்னாப்பூர் மாவட்டம், கிழக்கு சிங்பும், மேற்கு சிங்பும், சிறைக்கேலா கார் வான் மாவட்டம், சிம்தேகா, கும்லா, குன்ட்டி, ஜார்கண்டில் உள்ள ராஞ்சி மாவட்டம், ஸ்ரீகாகுளம் விசயநகரம் மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள விசாகப்பட்டினம் மாவட்டம், சட்டீ கரின் கிழக்கு மாவட்டங்கள் ஆகிய பகுதிகளில் ஒரியா மொழி பேசப்படுகிறது.

தொழிலாளிகள் அதிகமாக இடம்பெயர்ந்ததன் காரணமாக மேற்கு இந்தியாவின் குஜராத்திலும், ஒரியா மொழி பேசுவோர் குறிப்பிடத்தக்க அளவு உள்ளனர். இந்தியாவில் இரண்டாவது பெரிய ஒரியா மொழி பேசும் மக்களைக் கொண்ட நகரமாகச் சூரத் விளங்குகிறது. மேலும் ஒரியா மொழி பேசுவோர் விசாகப்பட்டினம், ஹைதராபாத், பாண்டிச்சேரி, பெங்களூர், சென்னை, கோவா, மும்பை, ராஜ்பூர், ஜாம்ஷெட்பூர், பரோடா, அகதாபாத், புதுதில்லி, கொல்கத்தா, காராக்பூர், கௌகாத்தி, சில்லாங், புனே, சில்வாசா பகுதிகளிலும் காணப்படுகின்றனர்.

**வெளிநாடுகளில்**

ஒரியா புலம்பெயர்ந்த பல நாடுகளில் உலகம் முழுவதும் ஒரு கணிசமான எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். முக்கியமாக பங்களாதேஷ், இந்தோனேசியா, ஜாவா, சுமத்ரா, பாலியிலிருந்து சாதாவிற்கும் இம்மொழி பேசுவோர் வந்து தங்கினர். பழைய வர்த்தகர்கள் ஒரியா மொழியோடு கலாச்சாரம் ஆகியவற்றையும் பிற நாடுகளுக்கு வர்த்தகத்திற்காகச் செல்லும் போது குறிப்பாக மேற்கத்திய நாடுகளான அமெரிக்கா, கனடா, ஆ திரேலியா, இங்கிலாந்து

பகுதிக்கும் எடுத்துச் சென்றனர். ஒரியா மொழி பேசுவோர் ஒரு 'நாடு கடந்த பாரம்பரிய இந்தியக் குழுக்கள்' எனக் கருதப்படுகின்றனர். இந்தியாவில் ஒரியா மொழி பேசுவோர் 31 மில்லியனுக்கு மேற்பட்டும், உலக அளவில் 45 மில்லியனுக்கு மேற்பட்டும் பேசுகின்றனர். இது இந்தியாவில் அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாகவும், ஒடிசாவின் முக்கிய மொழியாகவும் உள்ளது. ஒரியாவின் மொழி பர்மா, மலேசியா, பிஜி, இலங்கை, பாகி தான் போன்ற உலகின் ஏனையப் பகுதிகளிலும்கூட பரவி வருகிறது.

**நிலையான ஒரியா**

முகால்பாந்தி ஒரியா இலக்கிய மரபுகளைச் சரியாகக் கொண்ட நிலையான ஒரியாவாகக் கருதப்படுகிறது. பூரி, கர்தா, கட்டாக், ஜெய்ப்பூர், ஸ்ரீகத்சிங்பூர், கேந்திரபாதா, அனந்தபூர், தென்கானல், சங்குல், நயாகரா மாவட்டங்களிலும் சிறு வேறுபாடுகளுடனும் முகால்பாந்தி ஒரியா பேசப்படுகிறது.

**உருபனியல்**

இந்தி போலல்லாமல் ஒரியா பெரும்பாலும் சம கிருதத்தைக் கொண்டுள்ளது. இது எழுவாய் வேற்றுமை மற்றும் ஒலிகளையும் இணைத்தே கொண்டுள்ளது இவை மூன்று பாலினங்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால்) இரண்டு இலக்கண எண்கள் (ஒருமை, பன்மை) மற்றும் மூன்று காலங்கள் (இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம்) ஆகிய காலங்களையும் கொண்டு காணப்படுகிறது.

**இலக்கியம்**

ஒரியாவின் இலக்கிய வரலாறு 14 ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. கவிஞர் சரளா தாசாவின் சாண்டி புராணம் மற்றும் விளக்க இராமாயணம் ஆகியவை துர்க்கை தெய்வத்தைப் புகழ்ந்து பேசுகிறது. அர்ஜுனா தாசா எழுதிய 'ராம பிபாஹா' முதன்முதலில் ஒரியா மொழியில் எழுதப்பட்ட நீண்ட கவிதையாகும்.

பின்வரும் காலத்தில் பிஞ்சசாகா காலம் குறிப்பிடப்படும் ஆண்டு 1700 வரை நீண்டுள்ளது. இந்தக் காலத்தில்தான் ஸ்ரீசைதன்ய பிரபு வைணவ செல்வாக்கைப் புதிய பரிணாமத்தில் ஒரியா இலக்கியத்தில் கொண்டு சேர்த்தார். பஞ்சசகா காலத்தில் குறிப்பிடத்தக்க மதம் சார்ந்த இலக்கியங்கள் தோன்றின. பஞ்சசகாக்கள், அதாவது பலராமதாசர், ஜகந்நாததா , யசோவந்தா, ஆனந்தா, அச்சுதானந்தா ஆகியோர் மதம் சார்ந்த இலக்கியங்களை மொழிபெயர்த்தும் சம கிருதத்தைத் தழுவியும் எழுதினர்.

எனினும் பஞ்சா காலத்தில் (மேலும் இது ரித்தியுகம் என்று அழைக்கப்படும்) 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாய் மொழியாக ஒரியா ஒவ்வொரு நாளும் வளமை அடைந்தது. வாய்மொழி செப்பிடு வித்தை, ஆபாசம் மற்றும் பாலுணர்வு சம்பந்தமான படைப்புகள் குறிப்பாகச் சாம்ராட் உபேந்திரா பான்ஜா படைப்புகள் 1700 மற்றும் 1850 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உருவாயின. பஞ்சாபின் படைப்புகள் அதிக அளவில் அர்க்சிததாஸை ஒத்தே காணப்பட்டன. மத பண்டிகைகள், சடங்குகள், குடும்பம் சார்ந்த படைப்புகளும் இந்தக் காலகட்டத்தில் தோன்றின. முதன்முதலில் ஒரியாவை அச்சிடும் முறை கிறித்தவ மிஷனெரிகளால் 1836 இல் ஆரம்பமானது. கையால் எழுதப் பட்ட ஒரியா எழுத்து நெருக்கமாக பெங்காலி மற்றும் அசாமி எழுத்தை ஒத்திருந்தது என்றாலும் அபர்ணா பண்டா, முர்த்தியன் ஜாய்ராத், ராம்சந்திரா ஆச்சார்யா மற்றும் பிரஜாபந்து மி ரா ஆகியோர் ஆவர்.

19 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த எழுத்தாளர் பண்டிட் கிருஷ்ணா சந்திரகார் (1907 1995). இவர் பாரி ராய்கா, குஹ¨கா ராய்ஜா, பஞ்ச தந்திரா, அடி ஜ¨காராகல்பா மாலா ஆகிய ஏராளமான குழந்தைகள் புத்தகத்தை எழுதியுள்ளார். இவரால் உருவாக்கப்பட்ட ஒரியா இலக்கியங்கள், குழந்தைகளுக்கான கற்பனைக் கதைகள், சுயசரிதைகள் ஆகியவற்றுக்காகப் பண்டிட் கிருஷ்ணா சந்திரகார் அவர்களுக்குச் சாகித்ய அகாடமி விருது கிடைத்தது.

19, 20 ஆம் நூற்றாண்டுகளின் முக்கிய எழுத்தாளர்களில் ஒருவர் முரளிதர் மாலிக் (1927 2002) ஆவார். இவரது வரலாற்று நாவல்கள் மற்றும் பங்களிப்பு வார்த்தைகளைக் கடந்து காணப்படுகின்றன. ஒரிய இலக்கியத்திற்காக இவருக்கும் 1998 இல் சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. ஒரியாவின் 20 ஆம் நூற்றாண்டு எழுத்தாளர்கள் பள்ளிகபி நந்தா கிஷோர் பால் (1875 1928), கங்காதர் மேகர் (1862 1924), சிந்தாமணி மகந்தி மற்றும் குண்டாலா குமரி சபத் உக்காலா பாரதி, நிலதிரி தாஸா, கோபாபந்து தா (1877 1928) ஆகியோர் ஆவர்.

ஒரியாவின் மிகச் சிறந்த எழுத்தாளர்கள் கோபிநாத் மஹோந்தி, சச்சிதானந்த ரௌத்ரி, சீதாகாந்த் மகாபாத்ரா, பிரதீபராய் ஆகியோருக்கு மிக உயரிய விருதான ஞானபீட விருதும், இந்திய இலக்கிய விருதும் வழங்கப்பட்டுள்ளன.

## 16. பஞ்சாபி மொழி

| | |
|---|---|
| பேசப்படும் இடம் | : பாகி தான், இந்தியா |
| பகுதி | : மேற்கு பஞ்சாப், கிழக்கு பஞ்சாப் |
| இனம் | : பஞ்சாபிகள் |
| தாய்மொழியாகக் கொண்டோர் | : 100 மில்லியன் (2010) |
| மொழி குடும்பம் | : இந்தோ ஐரோப்பியம்<br>இந்தோ ஈரானியம்<br>இந்தோ ஆரியம்<br>மத்திய பஞ்சாபி |
| எழுத்து முறை | : குர்முகி (பிராமி)<br>சாமுகி (பெர்சிய அரசு)<br>பஞ்சாபி ப்ரெய்லி (இந்தியாவில்) |
| உத்தியோகப் பூர்வ மொழி | : இந்தியா (பஞ்சாப், சண்டிகர், ஹரியானா, இமாசலப்பிரதேசம், தில்லி, ஜம்மு காஷ்மீர் மற்றும் மேற்கு வங்க மாநிலங்கள்.) |
| பாகி தான் | : (பாகி தானின் பஞ்சாப் மாகாணத்தில்) ஆசாத் காஷ்மீர் மற்றும் இ லாமாபாத் தலைநகர் பிரதேசம். |

**பஞ்சாபி மொழி**

பஞ்சாபி இந்தோ ஆசிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. 130 மில்லியன் மக்களால் பேசப்படுகிறது. இது பஞ்சாப் மக்களின் சொந்த மொழியாகவும் உள்ளது. பாகி தான் மற்றும் இந்தியப் பகுதியில் வசிக்கும் பஞ்சாப் மக்களின் சொந்த மொழி. இந்தோ ஆரிய மொழிகளில் பஞ்சாப் மொழி ஒரு தொனி மொழியாகவும் உள்ளது.

பாகி தானில் பஞ்சாபி மொழி பரவலாகப் பேசப்படுகிறது. இது அதிகமாகப் பேசப்படும் இந்திய மொழிகளில் 11ஆவது இடத்திலும்,

இந்தியத் துணைக்கண்டத்தின் சொந்த மொழியில் 3ஆவது இடத்திலும் உள்ளது. பஞ்சாபி அதிகமாகப் பேசப்படும் மொழிகளில் 4ஆவது இடத்தில் உள்ளது. இங்கிலாந்து, வேல் நாடுகள், கனடா, ஐக்கிய அரபு எமிரேட், அமெரிக்கா, சவுதி அரேபியா, ஐக்கிய அமெரிக்கா, ஆ திரேலியா ஆகிய நாடுகளில் இம்மொழி குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தின் கலாச்சார மொழிகளில் பஞ்சாபியின் செல்வாக்கு பாலிவுட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பெரும்பான்மையான பாலிவுட் திரைப்படங்களில் பாடல்கள் முழுமையாகப் பஞ்சாப் மொழியில் உள்ளது. பஞ்சாபி பாடல்கள் மற்றும் சொற்கள் தற்போது பாலிவுட்டில் ஐம்பது விழுக்காடு இடத்தைப் பெற்றுள்ளன. இது அண்டை நாடான பாகி தானிலும் இசைப் பார்வையாளர்களின் ஈர்ப்பைப் பெற்றுள்ளது.

**வட்டாரம் மற்றும் மொழித் தொடர்பு**

பஞ்சாபியின் முக்கிய வட்டாரம் மஜ்ஹி, தோபி, மால்வை, போதோஹரி, போவாதி மற்றும் முல்தானி ஆகியவையாகும். சராய்கி மற்றும் லஹண்டா கிளை மொழிகள் ஆகியவை பஞ்சாபியின் வட்டார மொழி என மொழியியலாளர்கள் கருதுகின்றனர். ஆனால் இவை தனிப்பட்ட மொழிகளில் உள்ளன.

இந்தோ ஆரிய மொழிகளில் சில வட்டார மொழிகளை வரையறுக்கும் போது 'மொழி' சில வட்டாரச் சிக்கல்களை உருவாக்குகிறது எனினும் கடந்த நூற்றாண்டில் பஞ்சாபி மொழியில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன.

பிரிட்டிஷ் மொழியியலாளர் ஜார்ஜ் ஆபிரகாம் ஜியர்சன் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார். மேற்கு பஞ்சாபி பேசுவோர் வடக்கு மற்றும் மேற்குப் பகுதியில் குறிப்பாகச் சிந்து சமவெளி மற்றும் நான்கு துணையாறுகள் (பியா ஆறு நீங்கலாக) அமைந்துள்ளவை பஞ்சாப் மையப் பகுதியில் மேற்கு என்ற முடிவுக்கு வந்தது. இங்கு பஞ்சாபிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு மொழி அமைக்கப்பட்டது. அவர் 1919 இல் இந்திய மொழி ஆய்வில் ஒரு தொகுதியின் வட்டார மொழி பற்றிய ஆய்வை வெளியிட்டார். இந்தக் குழுவிற்கு லஹண்டா எனப் பெயரிட்டிருந்தார். தெற்கு லஹண்டா இப்போது சராய்கி எனக் கருதப்படுகிறது. பாகி தானில் தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் (1981) சராய்கி மற்றும் ஹிந்துகோ என்பதை 'மேற்கத்திய பஞ்சாபி' என வகைப்படுத்தியுள்ளார். இங்கு பஞ்சாபி பேச்சாளர்களின் சதவீதம் குறைவு என்பதை இது விளக்குகிறது.

மஜ்ஹி வட்டார மொழி அமிர்தரசைச் சுற்றியுள்ள பகுதிகளில்

பேசப்படுகிறது. மஜ்ஹி பஞ்சாபின் மாவட்டங்களான மாஜ்ஹா, தரன், குர்தா பூர், இந்திய பஞ்சாப், லாகூர் மாநிலம், கசூர், பதான்கோட் மாவட்டங்களிலும் பேசப்படுகிறது.

முதல் பஞ்சாபி இலக்கணம் மற்றும் அகராதி பிரிட்டிஷ் ஆட்சியின் போது முறையே *1851* மற்றும் *1854* இல் எழுதப்பட்டது. லூதியானாவைச் சுற்றிப் பேசப்படும் மால்வை மற்றும் போவதி வட்டார மொழிகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. பேச்சுவழக்கில் ஒலி முன்னிலையில் உள்ளது.

பாகிதானில் பேசப்படும் மஜ்ஹி மற்றும் லஹன்டா சொல்லகராதி ஆகியவற்றில் ஒலிகள் z/l/x/ மற்றும் /r/ ஆழமாக உள்ளன.

| **English** | **Gurmikhi based(Indian)** | **Shahmukhi based (Pakistan)** |
|---|---|---|
| ஆங்கிலம் | குர்முகி அடிப்படை (இந்தியா) | சாமுகி அடிப்படை (பாகிதான்) |
| Article கட்டுரை | Lekh (லேக்) | Mazmun |
| Family குடும்பம் | பரிவார்/தாபார் (Tabbar) | காண்டன்/தாபார் |
| Philosophy தத்துவம் | Darsan | Falsafa |
| Capital மூலதனம் | ராஜ்தானி | தாகுல் ஹாகுமட்/ ராஜ்கார் |
| வானியல் Astronomy | Khogol-Vigyan காஜல் விக்யான் | Falkiyot |
| Viewer பார்வையாளர் | Darshak | Nazvin |

**சொற்பிறப்பியல்**

பஞ்சாபி என்ற வார்த்தை பஞ்சாப் மற்றும் பாரசீகத்திலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் 'ஐந்து தண்ணீர்' (Five waters) எனப்படுகிறது. பாஞ் என்பது சமகிருத பாங்கா மற்றும் கிரேக்க மொழியான penta என்பதாகும். ஐந்து உடன் பிறப்பு என்றும், அப் (Ab) என்பது பிரெஞ்சில் 'ஆவ்' எனவும், இலத்தீனில் 'அக்வா' ஒரு 'உடன்பிறப்பு நீர்' எனப்படுகிறது. இது சிந்து நதியின் 5 முக்கிய கிழக்குத் துணையாறுகளைக் குறிக்கிறது. இப்போது இந்தியா பாகிதான்

இடையே வரலாறு பஞ்சாப் பகுதியில் சிந்து நதி மற்றும் இந்த ஐந்து ஆறுகள் மூலம் இயற்பியல் வரையறுக்கப்படுகிறது. ஐந்தில் ஒன்றான பியா ஆற்றின் மற்றொரு கிளையாகச் சட்லெஜ் திகழ்கிறது.

இந்தியாவில் பஞ்சாபி இரண்டு தனி தரப்படுத்தப்பட்ட நிலையில் எழுதப்பட்டுள்ளது. அவை குருமுக்கி மற்றும் தேவநாகரி. குருமுக்கி என்பது 'குருவினுடைய வாய்' எனப்படுகிறது. பின்னர் மு லிம்கள் 'சாமுகி' என்பதை உருவாக்கினர். இது 'ராஜாவின் வாயிலிருந்து' எனப்பட்டது. பின்னர் இது குருவாய் மொழி என மொழிபெயர்க்கப் பட்டது. இது அடிப்படையில் பாரசீகத்தைக் கொண்டு காணப்பட்டது.

**வரலாறு**

பஞ்சாபி இந்தோ ஆரிய மொழி. இது ஒரு Shaurase மொழிப் பரம்பரையைச் சார்ந்தது. இது மத்தியகால வட இந்தியாவின் தலைமை மொழியாக இருந்தது. பஞ்சாபி 12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு சுயாதீன மொழியாகும். பாரிதுத்தின் (Fariduddin Ganjshakar) ஞானசாகர் ஒரு சிறந்த பஞ்சாபி கவிஞராக அறியப்படுகிறார். சீக்கிய மதம் பஞ்சாப் பகுதியில் 15 ஆம் நூற்றாண்டில் உருவானது. பஞ்சாபி சீக்கியர்களின் புழங்கிய மொழியாக உள்ளது. பஞ்சாப் சீக்கியர்கள் பயன்படுத்தும் மொழி மட்டும் இல்லை என்றாலும் குரு கிரந்த் சாகிப் எழுதிய பெரும்பாலான பகுதிகள் குர்முகியில் எழுதப்பட்ட பஞ்சாப் மொழியைப் பயன்படுத்தியதாக வேதஜனம் சாக்கிகளின் குருநானக் வாழ்க்கை மற்றும் புராண *(1469 1539)* கதைகள், பஞ்சாபி உரைநடை இலக்கியம் ஆகிய ஆரம்பகால உதாரணங்கள் குறிப்பிடுகின்றன. குருநானக் பஞ்சாப் அகராதி, பஞ்சாபி வசனம் ஆகியவற்றை சம கிருதத்திலிருந்து பஞ்சாபி மொழியில் உருவாக்கினார். இது சம கிருதம், அரபு, பாரசீகம், மற்ற இந்திய மொழிகள், குர்பானி பாரம்பரிய மொழிகளுடனும் உருவாக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபி சூஃபி கவிதைகள் ஷா ஹீசைன் *(1538 1599)*, சுல்தான் பஹு *(1628 1691)*, ஷாஷரப் *(1640 1724)*, அலி ஹைதர் *(1690 1785)*, சலே முகம்மது சுஃபூரி (இவர் ஹ ரத்மாய் சஃபூரா குய்த்ரியாவின் மகன்) இவர் காலத்தில் பஞ்சாபி சூஃபி கவிதை உருவாக்கப்பட்டது. புல்லே ஷா *(1680 1757)* ஆகியோர் காலத்தில் பாரசீகக் கவிஞர்களின் கவிதைகளுக்குப் பதிலாகப் பஞ்சாபி சூஃபி புலவர்கள் மற்றும் சுஃபி ஆகியவை உருவாகின.

பஞ்சாபி சுஃபி கவிதைகளில் குறிப்பாக பங்சாபி க்யி ஸா, இந்திய பாரசீக, குர்ஆனிய மூலங்களில் இருந்து பெறப்பட்ட காதல் சோகம் ஆகிய பஞ்சாபி இலக்கிய மரபுகள் வளர்ச்சியடைந்தன. வரிஷ் ஷா (1706

1798) மூலம் உருவாக்கப்பட்ட க்யி ஸா பஞ்சாபி மிகவும் பிரபலமான ஒன்றாக இருந்தது. இவற்றுள் பிற மக்கள் கதைகளான பசல்ஷா மஹிவால், ஹபீ பார்க்குதார், பிர்சா ஷாகிபான் (1658 1707), ஹஹிம்ஷா (1735 1849), சூஸி புன்ஹம், குதார்யர், க்யி ஸா பூரண்பதத் (1802 1892) ஆகியவையும் அடங்கும்.

வார் எனப்படும் பணக்கார வாய் வழி பாரம்பரிய கதைப் பாடல்கள் உண்டு. வீர அல்லது காவியக் கதைகளின் முக்கிய உதாரணங்கள் குரு கோபிந்த் சிங் சாண்டியின் திவார் (1666 1708) கவிதையினுள் அடங்கும். இதில் நாதிர்ஷாவின் அரை வரலாறு இடம்பெறுகிறது. நாதிர்ஷா மூலம் இந்தியாவின் படையெடுப்பு விவரிக்கப்படுகிறது. ஜன்ஞ்னாமா (துயபேயேஅய) அல்லது போர் வரலாறு மூலம் முகலாய ஆட்சிக்காலத்தில் பஞ்சாபியின் இலக்கியம் அறிமுகப்படுத்தப்பட்டது. பஞ்சாபி ஷா முகம்மது ஜன்ஞ்னாமா (1780 1862) முதலாம் ஆங்கிலேய சீக்கிய (1845 46) போரை விவரித்துள்ளார்.

**நவீன பஞ்சாபி**

| | | | | |
|---|---|---|---|---|
| ੳ | ਅ | ੲ | ਸ | ਹ |
| ਕ | ਖ | ਗ | ਘ | ਙ |
| ਚ | ਛ | ਜ | ਝ | ਞ |
| ਟ | ਠ | ਡ | ਢ | ਣ |
| ਤ | ਥ | ਦ | ਧ | ਨ |
| ਪ | ਫ | ਬ | ਭ | ਮ |
| ਯ | ਰ | ਲ | ਵ | ੜ |

மஜ்ஹி பஞ்சாப் என்பது பஞ்சாபின் இரண்டு பகுதிகளிலும் எழுதப் படுகிறது. பாகி தான் பஞ்சாபி பொதுவாகச் சாமுகி எழுத்தில் எழுதப் படுகிறது. இது பாரசீக நா டாலிக் என்பதில் ஒரு மாற்றம் பெற்று காணப்படுகிறது. இந்தியாவில் பஞ்சாபியானது பெரும்பாலும் குர்முகியில் எழுதப்படுகிறது. இது தேவநாகரி மற்றும் இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டவையாகும். இந்தியாவின் உத்தியோகப் பூர்வ மெழிகளான இந்தி மற்றும் ஆங்கிலம் ஒன்றிய அளவில் முக்கிய மொழியாகக் கருதப்படுகிறது.

இந்தியாவில் பஞ்சாபி அதிகாரபூர்வ மொழிகளான 22 மொழிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இது பஞ்சாப் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ

மொழியாக உள்ளது. பஞ்சாபி பாகிதானின் மாகாண மொழி. பாகிதான் மாகாணத்தில் பஞ்சாபி அதிகமாகப் பேசப்படுகிறது. இருப்பினும் அது அங்கு அதிகாரப்பூர்வ மொழியாக இல்லை.

### உத்தியோகப்பூர்வ அங்கீகாரம்

பஞ்சாபி, பஞ்சாப், அரியானா, இமாச்சலப்பிரதேசம், தில்லி, ஜம்மு, மேற்கு வங்க மாநில அளவில் இந்திய அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் ஒன்று. டாக்டர் மான்ஸர் இஜா கூற்றின்படி மத்திய பாகிதானில் பஞ்சாபி ஒரு உத்தியோகபூர்வ மொழியாக அல்ல. பாகிதான் கல்வியில் ஒரு மீடியமாகப் பயன்படுத்தப்படுகிறது. பஞ்சாபின் மத்திய பகுதிகளில் பஞ்சாப் மொழியில் இரண்டு தினசரி செய்தித்தாள்கள் மட்டுமே வெளிவருகின்றன. பாகிதானில் ஒருசில மாத இலக்கிய இதழ்கள் பஞ்சாபி மொழியில் வெளிவருகின்றன.

### பஞ்சாபியின் நவீன கலாச்சாரம்

நவீன ஊடகம் மற்றும் தகவல் தொடர்பில் பஞ்சாபி ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பஞ்சாபி எப்போதும் இந்திய பாலிவுட் சினிமாவில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருந்து வருகிறது. சமீபத்திய ஆண்டுகளில் பாலிவுட் இசை முற்றிலும் பஞ்சாபியில் எழுதப்பட்ட போக்கு காணப்படுகிறது. பஞ்சாபி பாப் மற்றும் நாட்டுப்புற இசை தேசிய அளவில் இந்தியா மற்றும் பாகிதான் இரண்டிலும் மிகவும் பிரபலமாக உள்ளன. பல தொலைக்காட்சி நாடகங்கள் பஞ்சாபி கதாபாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு பல அலைவரிசையில் ஒளிபரப்பப்படுகிறது. பல மாணவர்களின் இலக்கியத் தேர்வு பாகிதான் பஞ்சாபியில் அதிகரித்துள்ளது. இந்தியாவில் பஞ்சாபி சினிமா ஒரு புத்தெழுச்சிக் கண்டிருப்பது மேலும் பல பஞ்சாபி திரைப்படங்கள்தயாரிக்கப்படுவதற்கு ஊக்கமளிக்கின்றன. இந்தியாவில் ஐ.ஏ.எ. தேர்வில் விருப்பப்பாடமாகப் பஞ்சாபி இலக்கியத்தைத் தேர்வு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிவிகிதம் அதிகரித்துள்ளது. பஞ்சாபி இசை இன்று உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாக உள்ளது.

### பஞ்சாப் பாகிஸ்தான் நிர்வாகப் பிரிவுகள்

பஞ்சாபி பாகிதானில் மிகவும் பரவலாகப் பேசப்படும் மொழி ஆகும். பஞ்சாபி பாகிதான் பஞ்சாப் மாகாண மொழி ஆகும். பாகிதானில் பஞ்சாபியை 44.15 விழுக்காட்டுக்கு அதிகமானோர் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். 70 விழுக்காட்டு மக்கள் பஞ்சாபியை முதல், இரண்டாவது, மூன்றாவது மொழியாகக்

கொண்டுள்ளனர். பஞ்சாபின் தலைநகரான லாகூர் உலகின் மிகப் பெரிய பஞ்சாபி பேசும் நகரமாக இருக்கிறது. லாகூரின் மொத்த மக்கள் தொகையில் 86 விழுக்காடு மக்கள் பஞ்சாபி பேசுகின்றனர். பாகி தான் தலைநகரான இசுலாமாபாத்தில் 71 விழுக்காடு மக்கள் பஞ்சாப் மொழியில் பேசுகின்றனர்.




**குரல்**

பஞ்சாபி மூன்று தனித்துவ எழுத்துடன் மெய் தொடரில் காணப்படுகிறது. ஒலியுடன் உயர்ந்து அல்லது குறைந்து வருவதை அதன் வரையறைகளை ஓர் அசை அல்லது ஈரசை என வகைப்படுத்தினர். ஆனால் ஒலியில் உயர், மத்திய மற்றும் குறைந்த அளவும் காணப்படும்.

வார்த்தையின் ஆரம்பநிலையில் ஒரு வரலாற்றில் முறுமுறுப்பு மெய் (குரல் மூச்சொலி மெய்) அது இரண்டு அசைகள் குறைந்து காணப்படும்.

(எ கா.) பாடிசய (koʰra:) குதிரை

(Ma:g) மக் அக்டோபர்

ஒரு குறுகிய உயிர் எழுத்துக்குப் பின் மெய் தோன்றி ஒரு நீண்ட உயிர் குரல் உண்டாகிறது. அது இரண்டு அசைகள் கொண்டு காணப்படுகிறது.

maghauna (maga:una:) ஏதோ ஒன்று இருக்கிறது

மற்ற அசைகள் குறைந்த ஒலியில் காணப்படும்.

**இலக்கணம்**

பஞ்சாபி மொழியில் இலக்கணம் குறிப்பது வார்த்தை ஒழுங்கமைவு, வினை ஆய்வு, வினை இணைதல். மற்ற பஞ்சாபி மொழி உருவ மற்றும் தொடரியல் கட்டமைப்புகள் காணப்படுகின்றன. பல முக்கிய கட்டுரைகளும் முதன்மை ஆதாரங்களும் பஞ்சாபி இலக்கணம் பற்றி விவாதிக்கிறது.

**எழுத்து முறைமைகள்**

சாமுக்கி எழுத்துகள், குருமுக்கி எழுத்துக்கள் மற்றும் பஞ்சாபி

ت ٹ ث ج چ ح خ د ڈ ذ ر ڑ ز ژ س ش ص ض ط ظ ع غ ف ق ک گ ل م ن و ہ ھ ء ی

**விரிவாக்கப்பட்ட பெர்சிய-அரபு ஸ்கிரிப்ட்**

வரலாறு
மொழிபெயர்ப்பு
ஹவாய்
ஹம்சா
எண்கள்
தசமபிரிப்பு

குர்முக்கி மற்றும் சாமுக்கி பஞ்சாபில் எழுத இரண்டு வழிகள் உள்ளன. குருமுக்கி என்பதைக் 'குருவின் வாயிலிருந்து' என்றும், சாமுக்கி என்பதை 'ராஜாவின் வாயிலிருந்து' என்றும் மொழி பெயர்க்கலாம்.

பாகிதான் நாட்டின் பஞ்சாப் மாநிலத்தில் பயன்படுத்தப்படும் எழுத்து சாமுக்கி. இதில் உள்ள 4 எழுத்துக்கள் உருதிலிருந்து வேறுபடுகிறது. இந்தியாவில் உள்ள கிழக்கு பஞ்சாப் மூன்று பகுதியாகப் பிரிக்கப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் குருமுக்கி எழுத்து பயன்படுத்தப்படுகிறது. பஞ்சாபி ஒரு தனி மொழியாக கி.பி. 11 ஆம்நூற்றாண்டில் உருவானது. சௌரசேனி மற்றும் பைசாசி பிராகிருத மொழிகளின் தாக்கம் இதன் வளர்ச்சிக்கு உதவின. இம்மொழியின்

வட்டார வேறுபாடுகள் மஞ்சி, பாட்டியானி, புவாதி, மால்வி, தோபி, தோக்ரி, போதோகரி, தண்ணி, சாச்சி ஆகியனவாகும்.

**குர்முகி எழுத்து**

முனைவர் தர்ஷன்சிங் மெய்னி என்பார் மற்ற இந்தோ ஆரிய மொழிகளைப் போலவே இம்மொழியும் கி.பி. பத்தாவது நூற்றாண்டில் உருவானது என்றும் ஹடயோகப் பயிற்சியாளரால் கோரக்நாத் காலத்தில் *(940 1030)* உருவானதென்றும் கூறுகிறார். ஆனால் செம்மையான மொழி முகமதியரின் வருகைக்குப் பின்னர்தான் உருவாகி வளர்ந்து சிறப்புற்றது.

## 17. சமஸ்கிருத மொழி

| | |
|---|---|
| பேசப்பட்ட இடம் | : ஆசியா |
| இடம் | : தென் ஆசியா, தென்கிழக்காசியாவின் சில பகுதிகள் |
| பேசுபவர்களின் எண்ணிக்கை | : *14,000 (2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு)* |
| மொழிக் குடும்பம் | : இந்தோ ஆரிய மொழிக் குடும்பம் |
| மொழி மரபு இன வகைப்பாடு | : இந்தோ ஐரோப்பியன் |
| | இந்தோ ஈரானியன் |

**இந்தோ-ஆரியன்**

முதல் நூறு மொழிகளுள் சம கிருதம் அடங்கவில்லை. சம கிருதம் ஏற்புபெற்ற நாடு இந்தியா மட்டுமே.

இந்தியாவின் மிகப் பழைய மொழிகளுள் ஒன்று சம கிருதம் ஆகும். இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மொழி தற்போது பெரும்பாலும் பொது பேச்சு வழக்கில் இல்லாத மொழியாகும். இந்து சமயத்தின் நான்கு வேதங்களான ரிக், யசூர், சாமம், அதர்வனம் ஆகியவையும், பல சமய நூல்கள் உட்பட ஏராளமான தொன்மையான இந்திய இலக்கியங்கள் பலவும் இம்மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. இந்தியாவின் அலுவல் மொழிகள் பதினைந்தனுள் இதுவும் ஒன்றாகும். இந்தி, வங்காளி, குஜராத்தி, மராட்டி, காசுமீரி, அரியான்வி, நேபாளி, ஒரியா, கொங்கனி, மைத்திரி, சிந்தி, பஞ்சாபி, உருது முதலிய நவீன வடஇந்திய மொழிகள் பலவற்றிற்கும் இதுவே மூலமொழியாகக் கருதப்படுகின்றது. தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்றவற்றிலும் சம கிருத வார்த்தைகள் இருப்பதைக் காணமுடிகிறது.

**வரலாறு**

சம கிருதம் என்பதன் பொருள் லட்சணம் (இலக்கணம்/செம்மை)

கொண்டது; அல்லது செம்மொழி என்பதாகும். (செம்மை) + கிருதம் (உடையது). எனவேதான் சம கிருதம் செம்மை உடையது எனும் பொருள் படுகிறது. சம கிருதம் பிராகிருதத்தின் (பிராகிருதம் மக்கள் பேச்சு வழக்கில் முதன்மை கொண்டது). செம்மையான மொழி வடிவம் என்று கருதப்படுகின்றது. பிராகிருதம் என்பது மகதி, மகாராஷ்டிரி, ஸௌரசேனி, பைஸாச்சி முதலிய நான்கு அமைப்புகளுள் அடங்கும் மொழிகளைக் குறிக்கும். இதேபோல் பாலியும் ஒரு பிராகிருத மொழியாகும். சம கிருத்திலிருந்து தோன்றி பிறகு கி.மு. முதலாம் ஆயிரம் ஆண்டில் பேச்சுவழக்கில் திரிந்து வெவ்வேறு மொழிகளாக ஆனவைகளே பிராகிருதம் என்ற பெயர் பெற்றது.

இம்மொழியில் பல கட்டங்களில் இலக்கணங்கள் ஏற்றப்பட்டுச் செம்மைபடுத்தப்பட்டது. இதன் பழைய வேதகால வடிவம், எல்லா பிற்கால இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கும் மூலமான முதல்நிலை இந்தோ ஐரோப்பிய மொழிக்குக் கிடைத்ததாகும். வேதகால சம கிருதம் ஈரானின் அவெதன் மொழியை ஒத்தது. இதன் இலக்கணமும் சொல்லாக்கமும் உறுதியான பின்னர், இது ஒரு அழகியல் ஒழுங்கமைவுக்கு உட்பட்ட மொழியானதுடன் நாடகம், மருத்துவம், அரசியல், வானியல், கணிதம் முதலியவை சார்ந்த இலக்கியங்களும் இம்மொழியில் உருவாயின.

பல நவீன ஐரோப்பிய மொழிகளுடனும் கிரேக்கம், இலத்தீன் முதலிய செம்மொழிகளுடனுமான சம கிருதத்தின் பொது உற்பத்தியை, சம கிருத மொழியில் தாய் (மாத்ரி), தந்தை (பித்ர்) என்பவற்றுக்கான சொற்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும். ஹெயின்றிச்ரோத் மற்றும் ஜொஹான் எர்னெட் யெங் லெடன் என்பவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஐரோப்பிய சம கிருத ஆராய்ச்சியானது வில்லியம் ஜோன் இம்மொழி எந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது எனக் கண்டுபிடிக்க வித்திட்டதுடன் மொழியியலின் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகித்தது.

சம கிருதம் இந்தோ ஆரியனின் ஒரு கிளையான இந்தோ ஈரானியனின் மிக மூத்த உறுப்பு மொழியாகும். வேதங்களும், தொன்மையான சம கிருத நூல்களும் எழுதப்பட்ட வேதகால சம கிருதமே இம்மொழியின் மிகப் பழைய வடிவமாகும். மிகப் பழைய வேதமான ரிக்வேதம் கி.மு. இரண்டாம் ஆயிரம் ஆண்டின் மத்தியில் இயற்றப்பட்டது. வேதகால வடிவம் கி.மு. முதலாவது ஆயிரம் ஆண்டின் நடுப்பகுதி வரை வழக்கிலிருந்தது. ஏறத்தாழ இக்காலப் பகுதியில்தான் சம கிருதம் சமயம் மற்றும் கல்வியைப் பொறுத்தவரை

தனது முதல் நிலையிலிருந்து இரண்டாவது நிலைக்கு இறங்கியது. இக்காலப்பகுதியில் நிகழ்ந்த சம கிருதத்தின் அமைப்புப் பற்றிய ஆய்வுகள் மொழியியலின் தொடக்கத்திற்கு வழியாய் அமைந்தன. இருப்பினும் இப்பொழுது கிடைக்கும் மிகத் தொன்மையான சம கிருத இலக்கணம் பாணினியின் அஷ்டாத்தியாயி ஆகும். காப்பிய சம கிருதம் என்று அழைக்கப்படும் ஒரு சம கிருத வடிவத்தை மகாபாரதம் மற்றும் ஏனைய இந்து காப்பியங்களில் காணலாம்.

கீழ்மட்ட சம கிருதமே பிராகிருதமாகவும் (ஆரம்ப கால பௌத்த நூல்கள் இம்மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன). நவீன இந்திய மொழிகளாகவும் வளர்ச்சியடைந்திருக்கக்கூடும். இந்நிலையில் அன்று சம கிருதத்துக்கும் தென்னிந்தியாவின் திராவிட மொழிகளுக்கு இடையேயும்கூட இருவழிச் செல்வாக்கு இருந்துள்ளது.

**எழுத்து**

வரலாற்று நோக்கில் பார்க்குபோது சம கிருதத்துக்கு என்று ஒரு எழுத்து முறை இருந்ததாகத் தெரியவில்லை. பண்டைய பிராமி எழுத்துக்கள் அசோகச் சக்கரவர்த்தியின் தூண் கல்வெட்டுகளின் காலம் வரை புழக்கத்தில் இருந்தது. பின்னர் கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டதோடு தெற்கே கன்னடம் போன்ற எழுத்துகளும், வடக்கே வங்காளம் மற்றும் ஏனைய வட இந்திய எழுத்துகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. எனினும் பல ஆண்டுகளாகச் சிறப்பாக அண்மைக் காலங்களில் தேவநாகரி எழுத்துக்களே பரவலாக சம கிருதத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சில சூழல்களில் குறிப்பாகத் தேவநாகரி எழுத்துக்கள் உள்ளூர் எழுத்து முறைமையாக இல்லாத பகுதிகளில் கிரந்த எழுத்துக்கள் அல்லது உள்ளூர் எழுத்துக்களே பயன்பாட்டிலுள்ளன.

பிற்காலத்தில்தான் சம கிருதத் தொடர்பில் எழுத்து அறிமுகப்படுத்தப் பட்டது. பரம்பரை பரம்பரையாக அறிவு வாய்மொழி மூலமாகவே கடத்தப்பட்டு வந்தது. எழுத்து நடுகிழக்கிலிருந்து வந்த வணிகர்களூடாக இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ரை டேவிட் (Rhys Davids) என்பார் கருதுகின்றார். எனினும் சம கிருதம் தொடர்ந்து பல காலம் வாய்மொழியாகவே புழங்கி வந்தது. எனினும், ஒலிகள் தொடர்பான வேத தத்துவங்களும், எழுத்திலக்கணமும் இந்து குறியீட்டு முறையில் வகிக்கும் பங்கு கவனிக்கத்தக்கதாகும். 51 எழுத்துக்களைக் கொண்ட வர்ணமாலா என்று அழைக்கப்படும் ஒலிமாலை, காளியின் 51 மண்டையோடுகளைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது.

**செல்வாக்கு**

சம கிருதத்தின் சொற்றொகுதியையும், இலக்கண அடிப்படையையும் கொண்டு உருவான தற்காலத்து மொழிகள் மீதான அம்மொழியின் தாக்கம் மிகவும் பெரியது, சிறப்பாக இந்தியச் சமுதாயத்தில் உயர்மட்டத்தில் உள்ளவர்களின் மத்தியில் சம கிருதம் இந்து சமய நூல்களின் களஞ்சியமாகவும், வழிபாட்டுக்குரிய மொழியாகவும் போற்றப்படுகின்றது. வழிபாடுகளில் நாட்டார் மற்றும் பிரதேச வழக்காறுகளும் பரவலாகக் காணப்பட்டபோதிலும் இன்றும் பல இந்துக்கள் சம கிருத மந்திரங்களை ஓதி வருவதுடன், பெரும்பாலான கோயில்களில் கிரியைகளும் சம கிருத மொழியிலேயே நடைபெற்று வருகின்றன. இந்தியாவின் பிரதேச மொழிகளான வங்காளி, குஜராத்தி, இந்தி முதலியவற்றின் தூய நிலை எனக் கருதப்படும் உயர்நிலை வடிவங்கள் பெருமளவில் சம கிருதப் படுத்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. தற்கால இந்திய மொழிகளில் இந்தி மொழி பேச்சு வழக்கில் அரபி மற்றும் பாரசீக மொழிகளின் தாக்கத்தைப் பெருமளவு கொண்டிருந்தபோதும் வங்காளி, மராத்தி போன்ற மொழிகள் கூடிய அளவில் சம கிருத சொல் மூலங்களைத் தக்கவைத்துக் கொண்டுள்ளன. இந்தியாவின் தேசியப் பாடலாகக் கருதப்படும் ஜனகனமன' என்ற பாடல் பெருமளவில் சம கிருதப்படுத்தப்பட்ட வங்காள மொழியின் உயர்நிலை வடிவில் இயற்றப்பட்டது. 'வந்தே மாதரம்' என்ற சுதந்திரப் பாடல் முழுமையாக சம கிருதத்தில் இயற்றப்பட்டதே ஆகும். இந்து சமயம் சார்ந்த கல்வியைப் பொறுத்தவரை சமுதாயத்தின் உயர்மட்டத்திலுள்ள படித்தவர்கள் மத்தியில் சம கிருதம் கற்கை மொழியாகப் போற்றப் பட்டது. இருப்பினும் இது தற்போது இறந்துபோன மொழியாகவே கருதப்படுகிறது.

சீன மொழியிலும் பண்பாட்டிலும்கூட சம கிருத மொழியின் தாக்கங்கள் காணப்படுகின்றன. பௌத்த சமயம் சீனாவுக்குப் பரவியபோது சம கிருதம் கலந்த பிராகிருத மொழி நூல்களூடாகவே பரவியது. பௌத்த நூல்கள் சீனமொழியில் எழுதப்பட்டபோது சம கிருத சொற்களை ஒலி மாற்றம் செய்தே எழுதினர். இதனால் பல சம கிருத மொழிச் சொற்கள் சீன மொழியிலும் கலந்தன.

இந்திய மொழிகளல்லாத வேறுபல மொழிகளிலும் சம கிருதச் சொற்கள் கலந்திருப்பதைக் காணலாம். (எ கா.) தாய் மொழியிலும் மலேயா மொழியிலும், ஜப்பானிய மொழியிலும், திபெத்திய மொழியிலும், பர்மிய மொழியிலும் பல சம கிருத சொற்கள் உள்ளன. பிலிப்பைன் நாட்டில் அவர்களது தகாலாக் (Tagalog) மொழியிலும்

குரு (ஆசிரியர்) போன்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

**ஒலியனியலும் எழுத்து முறைமையும்**

சமஸ்கிருதம் 48 ஒலியன்களைக் கொண்டது. (வேத காலத்தில் 49 ஒலியன்கள் இருந்தன). பெரும்பாலான இந்திய மொழிகளின் எழுத்து வடிவங்கள் சமஸ்கிருதத்தின் அசையெழுத்து வடிவத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். உருது மற்றும் தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவற்றின் எழுத்துவடிவங்கள் இதற்கு விதிவிலக்காகும். ஒலிகள் அவற்றின் மரபுவழி வரிசைப்படிகீழே தரப்படுகின்றன.

உயிர்கள், வெடிப்பொலிகளும் (stops), மூக்கொலிகளும் (nasals), வாயின் பின்பகுதியிலிருந்து முன்னோக்கி நகர்பவை, இறுதியாக இடையொலிகளும் (liquids), குழிந்துரசொலிகளும் (sibilants) ஆகும்.

நெட்டுயிர்கள், ஒத்த குறில்களிலும் இரண்டு மடங்கு கால அளவு கொண்டவை. இவற்றுடன் மேலதிகமாக நீண்டொலிக்கும் உயிர்களும் உள்ளன. இவை அழைத்தல், வாழ்த்துதல் போன்ற சந்தர்ப்பங்கள் உள்ளிட்ட பல இடங்களில் பயன்படுகின்றன.

**ஒலிபெயர்ப்பு**

சமஸ்கிருதத்தை ஒலிபெயர்ப்பதற்கு இலத்தீன் வரிவடிவங்களைப் பயன்படுத்தும் பல முறைகள் உள்ளன. பெருமளவு பயன்பாட்டிலுள்ளது IAST (International Alphabet of Sanskrit Transliteration) என்னும் அனைத்துலக சமஸ்கிருத ஒலிபெயர்ப்பு முறை ஆகும். கல்வி சார்ந்த தேவைகளுக்கான தரநிலையான இம்முறை, ஒலியடிக் கூறுகளை (discritical marks) உள்ளடக்கியது ஆகும். கணினிகளில் இம்முறையைப் பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக வேறு முறைகளும் உருவாக்கப்பட்டன. இவற்றுள் ஹார்வார்ட் கியோட்டோ (Harvard-Kyoto) ITRANS என்பனவும் அடங்கும். ITRANS இணையத்தில் பயன்பாட்டில் உள்ளது.

**உயிரெழுத்துக்கள்**

अ

आ

इ

ई

उ

ஊ

ரி ரு என்பவற்றுக்கு இடையில்

ரீ, ரூ என்பவற்றுக்கு இடையில்

லிலு என்பவற்றுக்கு இடையில்

லீலூ என்பவற்றுக்கு இடையில்

**கூட்டுயிர்கள்**

எளிய உயிரெழுத்துகளின் சேர்க்கை (Diphthongs)

ஏ

ஐ

ஓ

ஔ

உயிரெழுத்துக்கள் மூக்கொலி சாயல் (nasalization) பெறுவதுண்டு.

**மெய்யெழுத்துக்கள்**

சம கிருதம் பின்வரும் ஒலிப்பிடங்களில் (places of articulation), அதிர்வில் ஒலி (voiceless) ஹ் இணையொலியுடன் கூடிய அதிர்வில் ஒலி (voiceless aspirate), அதிர்வுடை ஒலி (voiced) ஹ் இணையொலியுடன் கூடிய அதிர்வுடை ஒலி (voiced aspirate) மற்றும் மூக்குத் தடையொலி (nasal stop) என்பவற்றைக் கொண்டுள்ளது.

மெல்லண்ணவொலி (velar) மெல்லண்ண நிலை (k, kh, g, gh, n, as in ing)

அண்ணநிலை ஒலி (palaltal) வல்லண்ண நிலை (c, ch, j, jh, n)

வளை நாவொலி (Retroflex-t, th, d, dh, n)

பல்லொலி (Dental t, th, d, dh, n)

இதழினவொலி (Labial p, ph, b, bh, m)

இந்தியாவில் வடமொழி என்று அழைக்கப்பட்ட சம கிருதம் கி.மு. 1500 முதல் கி.மு. 200 வரை வேதகால இலக்கியமாகவும், அதற்குப் பின் கி.மு. 500 முதல் கி.பி. 1000 ஆண்டுகளில் இராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்கள் செம்மொழிக்கான நிலையைப் பெற்றது. சர். வில்லியம் ஜோன் என்பவர் கல்கத்தாவில் 1784 இல் ஆசியக் கல்விச்சங்கம் எனும் நிறுவனத்தை உருவாக்கினார். இந்நிறுவனம் மூலம் மார்க் முல்லர், கேல்புரூக் போன்றோர் வடமொழி நூல்களை ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு போன்ற ஐரோப்பிய மொழிகளில் வெளியிட்டார்கள். கீழை உலகின் புனித நூல்கள் என்ற வரிசையில்

மார்க் முல்லர் பதிப்பித்த 50 தொகுதிகளில் பெரும்பாலானவை வடமொழி நூல்களாகும். இலக்கியம், தத்துவம், அரசியல் போன்ற துறைகளில் பெரும்பான்மையாகக் கிரேக்க, உரோமானியப் பங்களிப்புகளையே பார்த்துக் கொண்டிருந்த ஐரோப்பியர்களுக்கு வேதம், உபநிடதம், இதிகாசங்கள், காப்பியங்கள், நாடகங்கள், தத்துவ நூல்கள், நீதிநூல்கள் போன்றவை வடமொழி இலக்கியத்தைச் செம்மொழியாகக் கருதச் செய்தது.

**இலக்கியம்**

சமகிருத மொழியில் சிறந்த பல இலக்கியங்கள் இருந்தன. மிக முக்கிய இந்திய நாட்டின் பேரிலக்கியங்கள் என்றும் பெரும் காப்பியம் என்றும் கருதப்படுவன இராமாயணமும் மகாபாரதமும் ஆகும். ஏனெனில் இந்திய மொழிகள் இராமாயணக் கதையும், மகாபாரதப் போரும் ஆட்சி செய்திருப்பதைக் காணமுடியும்.

இராமனின் கதையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இராமாயணம் ஏழு காண்டங்களையும் 2400 சுலோகங்களையும் கொண்டது. இந்நூலின் ஆசிரியர் வால்மீகி ஆவார். ஒரு தலைவனையும் தலைவியையும் பிற காப்பிய மாந்தர்களையும் கொண்டு ஒரு லட்சிய காப்பியமாக உருவாக்கியுள்ளார். மகாபாரதம் விரிந்துபட்டது. 100000 சுலோகங்களைத் தன்னகத்தே கொண்டது. போரை மட்டுமின்றி இன்னும் எத்தனையோ கதைகளையும் அறிவும் ஆன்மீகமும் தரும் பல்வேறு கதைக் கருக்களையும் கூறிச் செல்கிறது. மகாபாரதத்தை அளித்தவர் வியாசர் ஆவார்.

இம்மொழியின்கண் காணப்படும் பகவத்கீதா உலகப் புகழ்பெற்றது. உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சமகிருத மொழி வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றைப் படைத்ததோடு மட்டுமின்றி பல்வேறு விதமான காவியங்கள், சிறந்த நாடகங்கள், செம்மையான உணர்ச்சிப் பாடல்கள் போன்ற எல்லாத் துறைகளிலும் தன்னுடைய முத்திரையைப் பதித்து சிறந்த இலக்கிய மொழியாக வளர்ந்தது. புத்தமதக் காவியங்கள், நாடகங்கள் ஆகியவற்றையும் உருவாக்கித் தந்தது இம்மொழியாகும்.

காவியப் பேரறிஞர்களாகக் கருதப்படும் அஷ்வகோஷா, காளிதாசன், பாரவி, இலங்கையைச் சேர்ந்த குமாரதாசா, மகா, ஹர்ஷா போன்ற கவிஞர்கள் அழியாத அரும்பெரும் காப்பியங்களை ஆக்கித் தந்தவர்கள் ஆவர். காளிதாசா எழுதிய ரகுவம்சா, குமாரசம்பவம், பாரவி எழுதிய கிரார் தார்ஜினியா, மகா எழுதிய சிசுபாலவதா, ஹர்ஷா எழுதிய நைசதா ஆகியவை பெரும் காவியங்கள் என்றழைக்கப்பட்டன.

இம்மொழியில் காவியங்களைப் போன்று நாடகங்களும் பண்டைக் காலம் முதலே ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன. கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் நாட்டிய சா திரம் பண்டைக்காலத்திலிருந்து வழங்கிவரும் செவிவிழிச் செய்தியிலிருந்து கிடைக்கும் தகவல் அடிப்படையில் நாடகம் பற்றிக் கூறும் இது பண்டைக் காலத்தில் நாடகம் பற்றிய இந்தோ ஆரிய மக்களின் எண்ணத்தினை நன்கு விளக்கும்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவரான பாசா 13 நாடகங்களை எழுதியுள்ளார். இதுபோல காளிதாசர் விக்ரமோர்வசியா, மாலவிகாக்னி மித்திரா, சகுந்தலா ஆகிய நாடகங்களை எழுதியுள்ளார். இவரது சகுந்தலா உலக நாடகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

சம கிருத மொழியில் காணப்படும் மிகச் சிறந்த நாடகங்களில் மிருச்சிகடிகாவும் ஒன்றாகும். இதன் ஆசிரியர் சூத்ரகா, தண்டின் இவர்களில் யார் என்பது வாதத்திற்கு ஒன்றாக இருக்கிறது. சாருதத்தா என்ற பிராமண வணிகனுக்கும் வசந்தசேனா என்ற தேவதாசிப் பெண்ணுக்கும் இடையில் நடந்த காதல் பற்றிய கதையாகும். சிறந்த நாடக ஆசிரியரான காளிதாசனின் நாடகங்களுடன் ஒப்பவைத்து எண்ணப்படுவது இந்நாடகமாகும். இதனைப் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் 'மண்ணியல் சிறுதேர்' என்ற தலைப்பில் மிக அருமையாக மொழிபெயர்த்துள்ளார்.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹர்ஷா ஒரு மன்னனாக மட்டுமின்றி சிறந்த நாடக ஆசிரியராகவும் விளங்கினார். ரத்னாவலி இவர் நாடகங்களில் மிகச் சிறந்ததாகும். இதுதவிர பிரியதர்சிகா, நாகானந்தா ஆகியவையும் இவரால் எழுதப்பட்டவை. மகேந்திரவர்மா வால் மத்தவிலாசா என்ற நாடக நூலும் எழுதப்பட்டது.

காளிதாசனுக்குப் பின்னால் வந்த நாடக ஆசிரியர்களில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பவபூதி சிறந்தவர் ஆவார். இவர் மாலதி மாதவா, மகாவீர சரிதா, உத்தாராமசரிதா என்ற மூன்று நாடகங்களை எழுதியுள்ளார். இவர்கள் தவிர விசாகதத்தா, முராரி, இராஜசேகரா, தாமோதரா மி ரா, பட்ட நாராயணா, கிருஷ்ணமி ரா போன்ற பல நாடக ஆசிரியர்கள் நாடகங்கள் பலவற்றை உருவாக்கி இலக்கியத்திற்கு வளம் சேர்த்தனர்.

சம கிருத இலக்கிய வரலாற்றில் உணர்ச்சிப் பாடல்களுக்குத் தகுந்த இடம் உண்டு. நீண்ட நெடிய பாடல்களையும் மிகுதியாக உருவாக்கா விட்டாலும் சிறந்த உணர்ச்சிப் பாடல்களை உருவாக்கிய பெருமை இம்மொழிக்கு உண்டு. இத்துறையில் மிகச் சிறந்தவராகக்

கருதப்படுபவர் கவிஞர் காளிதாசனே ஆவார். இவருடைய மேகதூது 115 பாடல்களைக் கொண்டது. தலைவியைப் பிரிந்துவிட்ட தலைவன் தலைவி மேகத்தைத் தூதுவிட்ட கதையே இதுவாகும். தூது இலக்கியங்களுக்குப் பெயர்பெற்ற சமகிருத மொழியில் ஐம்பதுக்கும் அதிகமான தூது இலக்கியங்கள் உள்ளன. இதுபோன்றே காளிதாசனின் ருதுசம்காராவும் சிறந்த கவிதை நூல். 153 கவிதைகளைக் கொண்டது. கவிதைநயமும் இயற்கையோடு இணைந்த போக்கும் சிறந்த சொற்களையும் செம்மையான பல்வேறு கவிதை உத்திகளையும் கொண்ட சிறந்த கவிதைகள் பலவற்றைக் கொண்டவை இந்நூல்களாகும். இவற்றையொட்டிப் பின்னர் கடாகற்பாரா, பாத்துருஹரி, மயூரா, அமரு, பில்கணா, ஜெயதேவா போன்ற பல கவிஞர்கள் உணர்ச்சிப் பாடல்களை எழுதியுள்ளனர்.

சமகிருத மொழி கவிதை நடையில் மட்டுமன்றி உரைநடையிலும் சிறந்த வளர்ச்சி கண்ட மொழியாகும். பொதுவாக இந்திய நாட்டில் பழங்காலங்கள் செய்யுள் நடையிலேயே சிறந்த நூல்களும் பிறவும் தோன்றின. இந்நடைக்கே கவிஞர்களும் உரையாசிரியர்களும் முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். பாணினியின் நூலுக்கு உரையெழுதிய பதஞ்சலி உரைநடையிலேயே தம் உரையை எழுதினமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது உரைநடை செறிவும் செம்மையும் அழகும் அலங்காரமும் நிறைந்த சிறந்த நடை என்பர். எனினும் இவருடைய காலத்துக்கு முன்பு தோன்றிய பல நூல்களில் ஆங்காங்கே உரைநடைகளைக் காணலாம். வேதங்கள் செய்யுள் நடையில் எழுதப் பட்டிருந்தாலும் கிருஷ்ண யஜுர்வேதம், அதர்வ வேதம், பிராமணங்கள், சூத்திரங்கள், மகாபாரதம், புராணங்கள் ஆகியவற்றில் காணப்படும் உரைநடைப் பகுதிகள் பண்டைக் காலத்திலேயே உரைநடையும் இருந்துள்ளமையைக் காட்டும். இதுபோன்றே பின்னர் தோன்றிய மீமாம்ச சூத்திரங்களுக்கு எழுதப்பட்ட உரை போன்றவை எல்லாம் உரைநடை வளர்ச்சியைக் காட்டுவன ஆகும். எனினும் செய்யுள் நடை ஆக்கத்தின் முன்னர் உரைநடையின் வாழ்வை ஒப்பவைத்து எண்ணுவது மிகமிகக் குறைவே ஆகும்.

உரைநடை சமகிருத மொழி வரலாற்றில் முன்னமே கால் கொண்டிருந்தாலும் கி.பி. 6, 7 ஆம் நூற்றாண்டுகளில்தான் முழு அளவில் காவியங்களிலும் பிறவகை இலக்கியங்களிலும் காலூன்றி வளர ஆரம்பித்தது. பல்வேறு வகையான காவியங்கள் தோன்றின. எனினும் இவற்றை ஆக்யாயிகா என்றும், கதா என்றும் இருபெரும் வகைகளாகப் பிரிப்பர் அறிஞர்கள். இதில் முன்னது வரலாற்று அடிப்படையில் உருவானது என்றும், பின்னது கவிஞர்களின் கற்பனையில் உருவானது

என்றும் கூறுவர். தண்டின் போன்றவர்கள் இவற்றினிடையே அதிக வேறுபாட்டைக் காண்பதில்லை ஆயினும் அமிர்தசிம்கா போன்ற அறிவு பிரிவு காண்பர்.

உரைநடையில் புதிய காவியங்கள் மட்டுமின்றி நீதிக்கதைகள், பழங்கதைகள் போன்ற இலக்கியங்கள் தோன்றின. புதிய காவியங்கள் என அழைக்கப்படுவனவற்றில் மிகச் சிறந்து விளங்குவன தண்டின், சுபந்து, பாணபட்டர் ஆகிய மூவரும் எழுதிய காவியங்களே ஆகும். சம கிருத மொழியில் தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டு வரையிலும் பல்வேறு பாவியல் அல்லது கவிதையியல் நூல்கள் தோன்றியுள்ளன. நாற்பதுக்கும் அதிகமான நூல்கள் காணக்கிடைக்கின்றன.

அபிதாவிர்த்தி மாத்திரிகா, வக்ரோத்தி ஜீவிதா, தசரூபகா, ஔசசிய விசாரா, கவிகண்டாபணா, சர வதி கண்டாபரணா, சிருங்கார பிரகாசர், வியுக்திவிவேகா, காவியபிரகாசா, பாவப் பிரகாசணா, அலங்கார சர்வ வா, காவியாநுசாசனா, சந்திராலகா, ரசமஞ்சரி, ரகதரங்கிணி போன்ற பல நூல்கள் பாவியல் நூல்களாக உள்ளன.

பரதாவின் நாட்டிய சா திரம் முதல் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ரச கங்காதரா வரையிலும் எத்தனையோ நூல்கள் சம கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன. ஜெயதேவாவின் சந்திராலோகா, பாண தத்தாவின் ரசமஞ்சரி, ரசதரங்கினி, வாக்படாவின் காவியனுசாசனா, வி வனதாவின் சாகித்திய தர்ப்பணா, குவலாயநந்தாவின் சித்திர மீமாம்சா போன்ற நூல்கள் எழுந்துள்ளன.

சம கிருத மொழியில் காணப்படும் கவிதையியல் நூல்கள் பல்வேறு கவிதைக் கூறுகளை ஆராய்ந்து நிற்பதைக் காணலாம். உலகக் கவிதையியல் நூல்களில் இவற்றிற்கும் ஓர் இடம் உண்டு.

**இலக்கணம்**

சம கிருத மொழி எவ்வளவு பழமையான மொழியோ அதைப் போலவே சம கிருத மொழி இலக்கணமும் பழமையானதாகும். வேதமொழி என்பதால் வேதங்களை உச்சரிக்கும்போது பிழையின்றி உச்சரிக்க வேண்டும். அதுவே நன்மை பயக்கும். இல்லையெனில் தீமை விளையும் என்ற கருத்தால் பிராமணர்கள் மிகக் கவனமாக உச்சரிப்பதையும் அதற்குரிய வழிமுறைகளைக் காணுவதை மிக அவசியமாகக் கருதினர். இதனால் சாகல்யா என்பவரால் உருவாக்கப்பட்ட பதபாடம் போன்றவை சொற்களைப் பிரிப்பதிலும் அவற்றிடையே காணப்படும் சந்தி விதிகளை உணர்ந்து கொள்வதிலும் அவர்களுக்குரிய அறிவைப் புலப்படுத்துகின்றன.

இவ்வாய்வினால் மிகப் பண்டைய இலக்கணிகள் ஒருசில இலக்கணக் கூறுகளை இனம்கண்டிருந்தனர். பெயர்ச்சொற்கள், பதிலிடுபெயர்கள், பயனிலைச் சொற்கள் மற்றும் வினைச்சொற்கள், முன்னொட்டுக்கள், இடைச் சொற்கள் என்ற நான்கு இலக்கணக் கூறுகளை முதன்முதலில் இனங்கண்டது. இவ்வாறாக இலக்கணக் கூறுகளை இனம்கண்டு ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்து அறிதல் என்ற பொருளிலேயே முதன்முதலில் வியாகரணம் என்ற சொல் உருவாயிற்று என்றும், ஆனால் பிற்காலத்தில் சொற்களைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்து அறிதலைக் குறிக்கும் பொருளில் பயன்படுத்தப் பட்டதாகவும் கூறுவர்.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த யா கா தன்னுடைய காலத்திற்கும் முன்பு வாழ்ந்த இருபது இலக்கணிகள் பெயரைக் குறிப்பிடுவார். சாகடாயனா போன்றவர்கள் இதில் குறிப்பிடத் தக்கவர்கள். வேதத்தைச் சார்ந்த பிராமணங்களில் இலக்கணக் கலைச்சொற்களான எழுத்து, ஆண்பால், எண், வேற்றுமை போன்றவை உள்ளன. இதைப் போன்றே ஆரண்யகங்களிலும் உபநிஷத்துக்களிலும் பல இலக்கணக் குறியீடுகள் உள்ளன.

சம கிருத இலக்கண வரலாற்றில் பன்னிரண்டுக்கும் அதிகமான இலக்கணக் கோட்பாட்டுப் பள்ளிகள் இருந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு இலக்கணப் பள்ளியும் சிறந்த இலக்கண அறிஞர்களால் உருவாக்கப்பட்டு பல்வேறு கோணங்களில் இலக்கண ஆய்வுகள் நடத்தியது. இவற்றுள் பழமையானவற்றுள் ஒன்று ஐந்திரக் கோட்பாட்டுப்பள்ளி; மற்றொன்று பாணினி கோட்பாட்டுப் பள்ளி ஆகும்.

சாகடாயனா, ஜினேந்திரா, சந்திரகோமின் ஆகியவர்களின் இலக்கணங்கள் திபெத்திய மொழியில் காணப்படுகின்றன. பாணினியின் இலக்கணம் தெரிந்த ஒன்று. ஆனால் மீதி உள்ளவை (காஸகிரித்னா, ஆபிசலி, அமரா) வெறும் பெயரளவிலேயே தெரிந்தவை ஆகும். இங்கு எட்டு இலக்கணக் கோட்பாடுகளே குறிக்கப்படுகின்றன என்ற கருத்தும் நிலவுகிறது.

இலக்கணம் பற்றிய குறிப்புகளும் இலக்கணக் குறியீடுகளும் இலக்கணக் கூறுகளும் அவை பற்றிய விவரண விளக்கங்களும் மிகப் பழங்காலத்திலிருந்தே காணப்படினும் யா காவின் நிக்ருதாவே கிடைப்பவற்றுள் முதல் நிகண்டாகவும் சிலரால் இலக்கணமாகவும் கருதப்படுகின்றன. பல்வேறு இலக்கணக் குறிப்புக்களும் விளக்கங்களும் காணப்படுவதுடன் பாணினியின் காலத்திற்கு முன்னால் உள்ள

நூல்களுள் கிடைத்தது இது ஒன்றே ஆகும். இவருடைய காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டு ஆகும். பாணினிக்கு 50 அல்லது 60 வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று கிடைக்கும் சம கிருத மொழி இலக்கணங்களில் மிகப் பழமையானது பாணினியால் எழுதப்பட்ட அஷ்டாத்யாயி. இது பழமையானது மட்டுமன்று; உலகப்புகழ் வாய்ந்த ஓர் இலக்கணமும் ஆகும். அஷ்டாத்தியாயி என்பது எட்டுப் பகுதிகள் அடங்கிய இலக்கண நூல். இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் நான்கு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பாணினியின் நூலின் பரப்பு பற்றிக் கூறும் மெக்டானல் இதிலுள்ள நான்காயிரம் சூத்திரங்களையும் ஒன்றாக இடம்விடாமல் தொடர்ந்து எழுதினால் கிரௌன் அளவுள்ள 35 பக்கத்தில் அடக்கிவிடலாம் என்பர். இச்சூத்திரங்கள் மூன்று அல்லது நான்கு சொற்களுக்கு மேல் கொண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சம கிருதம் மிக விரைவில் வழக்கற்றுவிட்ட நிலையில் இதன்கண் நூல்களும் காப்பியங்களும் கவிதைகளும் நாடகங்களும் தோன்றுவதற்குப் பாணினியின் இலக்கணமே மிகத் துணை புரிந்தது. அவரது மொழியே பின்னர் தோன்றிய நூல்களின் மொழியாக இருந்தது. இதன்கண் தோன்றிய நிகண்டுகளும் பாணினியை ஒட்டி எழுந்த இலக்கணங்களும் பிறவுமே மொழிநிலையை ஒத்துப் பார்த்துச் சரிபார்ப்பதற்குரிய வழிநடத்து ஏடாக விளங்கியது குறிப்பிடத்தக்கது. இந்நூலுக்குப் பதஞ்சலி, பர்த்ருஹரி போன்றோர் உரை எழுதியுள்ளார். இருப்பினும் ஐயாதித்தியா, வாமனா இருவராலும் எழுதப்பட்ட காசிகவிருத்தியே அஷ்டாத்தியாயிக்கு எழுதப்பட்ட முழு உரைநூல் ஆகும்.

கையாடா, ஹரதத்தா, இராமச்சந்திர பட்டோஜி, நாகேசபட்டா, சாகடாயனா, கரம்மதீ வரா, பாப்பதேவா, பத்மனாப தாத்தா போன்றே பல இலக்கணிகளில் பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார். கி.பி. 1668 இல் ஆக்ராவில் இறந்த ராத் என்ற செர்மானிய பாதிரியாரால் எழுதப்பட்ட ஒரு சம கிருத இலக்கணம் அச்சில் வரவில்லை என்றும் கூறுவர்.

முதலில் வெளிவந்த சம கிருத இலக்கணம் இலத்தீன் மொழியில் கி.பி. 1790 இல் உரோமில் வெளியிடப்பட்டது என்பர். இதன் பின்னால் கோல்டு புரூக், கரே, வில்கின் , பாப், பென்பே போன்றவர்களால் (ஒப்பிலக்கண முறையில்) எழுதப்பட்ட இலக்கணம் 1879 இல் வெளிவந்தது. பின்னர் வெக்கர் நெகல் எழுதிய இலக்கணமும்

குறிப்பிடத்தக்கதாகும்.

மோனியர் வில்லியம் , மேக் முல்லர் போன்றவர்கள் மிகச் சிறந்த இலக்கணங்களை உருவாக்கியுள்ளனர். இவற்றைப் போன்றே மக்டானல் எழுதிய Vedic Grammar : Sanskrit Grammar for Students என்ற இலக்கணங்களும் இதன் பின்னர் அமைப்பு முறையில் எழுதப்பட்ட பல இலக்கணங்களும் உள்ளன. இருப்பினும் உலகில் வேறு எந்த மொழியிலும் காணப்படாத அளவுக்கு ஒரு கீழைநாட்டு மொழிக்கு மிக அதிகமாக எழுதப்பட்ட இலக்கணங்கள் காணக்கிடைக்கும் மொழி சமகிருத மொழியேயாகும்.

## 18. சந்தாலி மொழி

| | |
|---|---|
| பேசப்படும் நாடுகள் | : இந்தியா, பங்களாதேஷ் |
| தாய் மொழியாகக் கொண்டோர் | : நேபாளம், பூடான் |
| இனம் | : சந்தால் |
| பேசுவோர் எண்ணிக்கை | : 6.2 மில்லியன் (2001 11) |
| மொழிக்குடும்பம் | : ஆட்ரோ ஆசியாடிக்<br>முண்டா<br>வடக்கு முண்டா<br>கேர்வாரி<br>சந்தாலி |
| வட்டாரம் | : மகலி (மஹ்லி) |
| எழுத்துமுறை | : லத்தீன், 01 சிக்கி |

சந்தாலி மொழி முண்டாவின் கிளைக்குடும்பமான ஆட்ரோ ஆசியாடிக் குடும்பத்தைச் சார்ந்தது. மேலும் ஹோ மற்றும் முண்டாரிக்கும் தொடர்புடையது. இம்மொழி 6.2 மில்லியன் மக்களால் இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளிலும், இந்திய நாட்டில் ஜார்கண்ட், அசாம், பீகார், ஒடிசா, திரிபுரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் பேசப்படுகிறது.

### வரலாறு

சந்தால் எண்ணிக்கையில் ஜார்கண்ட் மாநிலத்தில் இந்தியாவின் மிகப் பெரிய பழங்குடி குழுக்களில் இருக்கின்றனர். ஜார்கண்ட் மாநிலம் இந்தியாவின் மிக அடர்ந்த பழங்குடியினர் மக்கள்தொகை மிகுந்த பகுதி ஆகும். இப்பகுதியில் மிகப் பெரிய பழங்குடி குழுக்களான சந்தால், ஓரோன், முண்டா, காரிய, ஹோ, கோன்டு, புமிஜி, கோண்டு ஆகிய இனத்தவர்கள் உள்ளனர். இந்தியாவில் உள்ள பிற ஆதிவாசி குழுக்களுடன் ஒப்பிடும்போது இந்தப் பகுதியில் உள்ள ஆதிவாசிகள் கல்வி பெற்றும் அவர்களின் பிரச்சனைகளை நன்கு அறிந்தும் உள்ளனர். சந்தால் மற்றும் மற்ற பழங்குடியின இனங்களும் ஜார்கண்டின் சோட்டா நாக்பூர் பீடபூமி பகுதியிலும், பழைய மத்தியபிரதேசம், ஓரிசா, மேற்கு

வங்காளம், அசாம், திரிபுரா மாநிலங்களில் அருகிலுள்ள பகுதிகளில் குறிப்பாக மொழி, கலாச்சாரம் ஆகியவற்றில் ஒன்றுபட்ட பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இந்தியா எங்கிலும் உள்ள மற்ற பழங்குடி சமூகங்கள் போல இந்தப் பழங்குடியினர் நீண்டகாலம் ஒப்பீட்டுத் தனிமை மூலம் வாழ்ந்தனர். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியின் போது, தகவல் தொடர்பு வசதிகள் பெருகியதன் காரணமாக, பல்வேறு சாதி குழுக்களுடன் ஒரு நிலையான தொடர்பு ஏற்பட்டது. இவ்வாறு அப்பகுதியில் சிறுக சிறுக நாகரிகம் வளர்ச்சியடைந்தது. அதே காலத்தில் கைவினைஞர்கள், சாதி சார்ந்து தொழில்புரிவோர், பழங்குடியினர் ஆகிய அனைவரும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே வாழத் தொடங்கினர். சந்தால் மக்களின் தாய்மொழி சந்தாலி. 1981 மக்கள் தொகை கணக்கெடுக்கின்படி இந்த மொழி பேசுவோரின் எண்ணிக்கை 43,32,511 ஆகும். ஜார்கண்ட் மாநிலத்தில் 9 முக்கிய மொழிகள் 3 மொழி குழுக்களுடன் அதாவது ஆ திரிய ஆஸியாடிக், திராவிட இந்தோ ஆரிய மொழிக் குழுவுடன் இணைந்து காணப்பட்டது.

சந்தாலி, முண்டாரி, ஹோ, காரியா ஆகியவை ஆ திரிய ஆஸியாடிக் குழுவைச் சேர்ந்தது. குரூக், மால்டோ ஆகியவை திராவிடக் குழுவைச் சேர்ந்தது. நாக்புரி, குர்மாலி, கோர்தா, பஞ்ச்பர்கானியா ஆகியவை இந்தோ ஆரிய குழுவைச் சேர்ந்தது.

இம்மொழி இந்தப் பகுதியில் குறிப்பாகப் பழங்குடியினர் இல்லாத மக்களால் பேசப்படுகிறது. இவர்கள் சாதனி என அழைக்கப் படுகின்றனர். ஆ திரிய ஆசியாடிக், திராவிட குழுக்கள் ஆகியவை இப்பகுதியில் உள்ள பழங்குடியினரால் பேசப்படுகிறது. இந்திய ஆ திரிய மொழிகள் பலவிதமான வகைப்பாட்டுடன் அதாவது முன்னொட்டு, பின்னொட்டு, இடையமை ஆகிய கூறுகளைக் கொண்டு காணப்படுகின்றன. ஆனால் சில வார்த்தைகள் நீண்டதாகக் காணப்படுகின்றன.

**இலக்கண வரையறை**

இந்தக் குருக்கமான இலக்கண வரையறை கோஷ் 2008 ஐ அடிப்படையாகக் கொண்டது. இதில் மொழியின் இலக்கண அமைப்பு மற்றும் தோற்றம் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒலியியல்**

சந்தாலி 8 உயிரெழுத்துக்களையும் 35 மெய்யெழுத்துக்களையும் 5 அரை மெய்யெழுத்துக்களையும் கொண்டுள்ளது. சந்தாலி 8 ஒலியமைப்புகளைக் கொண்டுள்ளது. இவை மூக்கொலிகளையும்

கொண்டுள்ளது. சில சமயங்களில் இவை பயன்படுத்தப்படும். ஆனால் நீண்ட உயிரெழுத்தில் இதில் காணப்படவில்லை.

## உயிரெழுத்துக்கள்

| | | Bilabial | Alveolar | Retroflex | Palatal | Velar | Glottal |
|---|---|---|---|---|---|---|---|
| Stops | voiceless | p (ph) | t (th) | ṭ (ṭh) | c (ch) | k | |
| | voiced | b (bh) | d (dh) | ḍ (ḍh) | ɟ (ɟh) <j jh> | ɡ (gh) | |
| Fricatives | | | s | | | | h |
| Nasals | | m | n | | ɲ | ŋ | |
| Trill | | | r | | | | |
| Flap | | | | ɽ | | | |
| Lateral | | | l | | | | |
| Glides | | w | | | j <y> | | |

சந்தாலி 8 நாசி ஒலியற்ற மற்றும் 6 நாசி ஒலியுடைய எழுத்தைக் கொண்டுள்ளது.

## மெய்யெழுத்துக்கள்

| | Front | Central | Back |
|---|---|---|---|
| High | i ĩ | | u ũ |
| Mid-high | e | ə ə̃ | o |
| Mid-low | ɛ ɛ̃ | | ɔ ɔ̃ |
| Low | | a ã | |

## சந்தாலி எழுத்துமுறை

சந்தாலி எழுத்து பெங்காலி மற்றும் ஒரியா எழுத்தில் எழுதப்பட்டது. கிறித்தவ மிஷனரிகள் சந்தாலியை இலத்தீன் எழுத்து

முறையில் எழுதினர். சந்தாலி அல்லது முண்டா மொழி 5.8 மில்லியன் மக்களால் பேசப்படுகிறது. இம்மொழி பேசுவோர் இந்தியா, பங்களாதேஷ், நேபால், பூடான் பகுதிகளில் உள்ளனர். சந்தாலி எழுத்து முறை சந்தாலி தென் வட்டாரப் பகுதியினரால் வடிவமைக்கப்பட்டது. சந்தாலி இந்திய மாநிலமான மயூர்பஞ்ச் மாவட்டத்தில் பேசப்படுகிறது. சந்தாலி, ஒரியா, பெங்காலி, தேவநாகரி, இலத்தீன் எழுத்துக்களிலும் எழுதப்படுகிறது.

**சந்தாலி எழுத்துக்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ᱚ | a<br>a [ɔ] | ᱛ | at<br>t [t] | ᱜ | ag<br>g [k', g] | ᱝ | ang<br>ng [ŋ] | ᱞ | al<br>l [l] |
| ᱟ | aa [a] | ᱠ | aak<br>k [k] | ᱡ | aaj<br>j [c', j] | ᱢ | aam<br>m [m] | ᱣ | aaw<br>a [w] |
| ᱤ | i [i] | ᱥ | is<br>s [s] | ᱦ | ih<br>h [?, h] | ᱧ | iny<br>ny [ɲ] | ᱨ | ir<br>r [r] |
| ᱩ | u [u] | ᱪ | uch<br>ch [c] | ᱫ | ad<br>d [t', d] | ᱬ | unn<br>nn [ɳ] | ᱭ | uy<br>y [j] |
| ᱮ | e [e] | ᱯ | ep<br>p [p] | ᱰ | edd<br>dd [ɖ] | ᱱ | en<br>n [n] | ᱲ | err<br>rr [ɽ] |
| ᱳ | o [o] | ᱴ | ott<br>tt [t] | ᱵ | ob<br>b [p', b] | ᱶ | ov<br>v [w̃] | ᱷ | oh<br>(K)h [ʰ] |

**எண்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ᱐ | ᱑ | ᱒ | ᱓ | ᱔ | ᱕ | ᱖ | ᱗ | ᱘ | ᱙ |
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

**சந்தால் கிளர்ச்சி**

*1855* சூன் *30* எழுச்சித் தலைவர்கள் சிடோ முர்மு, கான்ஹூமுர்மு ஆகியோர் *30*ஆயிரம் சந்தால் கிளர்ச்சியாளர்களை பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகத் திரட்டினர். சில முடிவுகளுக்குப் பின் சந்தாலியினர் கிராமங்களில் ஜமீன்தாரி வரி வசூலிப்பவர்களைக் கொன்றனர். வெளிப்படையான புரட்சி பிரிட்டிஷ் நிர்வாகத்தில் ஏற்பட்டது. ஆரம்பத்தில் சில அடக்குமுறைகள் பின்பற்றப்பட்டன. இதனால் மேலும் பல அடக்குமுறைகள் தோன்றின. சட்டம் ஒழுங்கு நிலைமை கைமீறியது. இதனால் பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்தது. உள்ளூர் ஜமீன்தாரர்கள் கலகத்தை அடக்குவதற்காக

மூர்ஷிதாபாத் நவாப் படைகள் அனுப்பப்பட்டன.

மோதல்களில் பல ஆதிமனித இழப்புகள் நிகழ்ந்தன. ஆதி மனிதர்களிடம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் இருந்த கைத் துப்பாக்கிகள், பீரங்கி ஆகிய எதுவும் இல்லை. இவர்களது தரைப்படை, காலாட்படை, துருப்பு பிரிவுகள் அனைத்தும் வரவழைக்கப்பட்டன. பெரிய மோதல்கள் கஹால்தான், சூரி ரகுநாத்பூர், முன்கட்டோரா போன்ற இடங்களில் ஏற்பட்டன.

கிளர்ச்சிக் கொடூரமாக இருந்ததனால் சித்து மற்றும் கானு ஆகிய முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர். மூர்ஷிதாபாத் நவாப் படைகள் வழங்கப்பட்ட யானைப் படைகள் குடிசைகளை இடித்தும், பல ஆழமான அட்டூழியங்களைச் செய்தன. பிரிட்டிஷ் இராணுவமும் இதில் பயன்படுத்தப்பட்டது.

**கலைகள்**

சந்தாலி நடனம் மற்றும் இசை ஆகிய அனைத்தும் சமூக விழாக்களில் பயன்படுத்தப்பட்டன. மூன்று முக்கிய கருவிகள் இசையில் பயன்படுத்தப் பட்டன. சந்தாலி இசை இரண்டுவிதமான மேளங்கள் தம்டக், தமாக் ஆகியவையும், காற்றுக்கருவிகள், பிரியோ மற்றும் புல்லாங்குழல் ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன.

**கவிதை கலாச்சாரம்**

கவிதை கலாச்சாரம் பல தசாப்தங்களாகப் பல அறிஞர்கள் மற்றும் மானுடவியலாளர்களை ஈர்த்தது. இந்திய துணைக் கண்டத்தில் பல பழங்குடி குழுக்கள் போலல்லாமல் ஆதிமனிதன் போன்ற சூரிய, ஹீன், முகலாயர்கள், ஐரோப்பியர்கள் குடியேற்றங்கள், படையெடுப்புகள் ஆகியவை இருந்த போதிலும் அவர்கள் தங்கள் சொந்த மொழியைப் பாதுகாத்து வந்தனர். கவிதை, கலாச்சாரம், வீடுகளின் சுவர்களில் ஓவியங்கள், கலைப்படைப்புகள் சித்திரிக்கப் படுகின்றன. உள்ளூர் புராணங்களில் சந்தாலி முன்னோர்கள் பில்ச்சுஹராம் மற்றும் பில்ச்சு கதைகள் அடங்கும்.

ஆதிமனிதர்கள் முக்கியமான இந்தியாவில் பழங்குடி மக்கள் அவர்களின் கலை, இலக்கிய, பாரம்பரியத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தனர். சந்தாலி மக்கள் பல கிளர்ச்சிகளுக்குப் பின்னரும் தனக்கான பெருமை மற்றும் தன் அடையாளத்துடன் வாழ்ந்தனர். இவர்களே பழங்குடியின மக்களின் தனக்கான ஒரு தனி சுதந்திரத்தைப் பெற்ற முதல் இனமாக கருதப்படுகிறது. முண்டா மொழிகளில் எழுத்துமொழியாக இருக்கும் பெருமையுடைய மொழி சந்தாலி ஆகும்.

## 19. சிந்தி மொழி

பேசப்படும் இடங்கள் : சிந்து, பாகிதான், கட்ச், இந்தியா. மேலும் புலம் பெயர்ந்த இந்தியா, ஹாங்காங், ஓமன், பிலிப்பைன், இந்தோனேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, இங்கிலாந்து, ஆப்கானிதான், இலங்கை.

பகுதி : தெற்கு ஆசியா

பேசுவோர் எண்ணிக்கை : 25 மில்லியன் 92007)

மொழிக் குடும்பம் : இந்தோ ஐரோப்பியன்
இந்தோ ஈரானிய
இந்தோ ஆரிய
தென்மேற்கு மண்டலம்
சிந்தி மொழிகள்
சிந்தி

எழுத்துமுறை : அரபி, தேவநாகரி, குடபாடி எழுத்துக்கள், லண்டா, குர்முகி

அதிகாரப்பூர்வ மொழி : பாகிதான் (சிந்து), இந்தியா

சிந்தி மொழி வரலாற்றுச் சிந்துப் பகுதியில் உள்ள மக்களால் பேசப்படுகிறது. சிந்தி பாகிதான் மாகாணத்தின் ஆட்சி மொழியாக உள்ளது. இந்தியாவில் சிந்தி அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் ஒன்றாக உள்ளது. வெளிநாட்டில் கிட்டத்தட்ட 2.6 மில்லியன் சிந்தி மொழி பேசுவோர் உள்ளனர்.

சிந்தி இந்தோ ஆரிய மொழி, இந்தோ ஈரானிய கிளை மற்றும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. பலுசிதான் மாகாணத்தின் அருகில் பேசப்படும் சமகிருத பேச்சு வடிவம் மற்றும் பலூச்சி ஆகியவற்றின் தாக்கங்கள் இருந்தன. பெரும்பாலான சிந்தி பேச்சாளர்களின் ஈடுபாடு சிந்தி மாகாணத்தில் உள்ள கட்ச், குஜராத், இந்திய ஆகிய பகுதிகளில் பேசப்படும் பேச்சு வழக்கில் இருந்தது. மீதமுள்ள இந்திய சிந்திப் பேச்சாளர்கள் பாகிதானிற்குப் புலம் பெயர்ந்தனர். இவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள் உலகம் முழுவதும் சிந்தி மொழியைக் கொண்டிருக்கின்றனர்.

**வரலாறு**

சிந்து மொழித் தோற்றம் இந்தோ ஆரிய பேச்சு வழக்கு அல்லது முதன்மைப் பிராகிருதம் ஆகியவற்றிலிருந்து அறியப்படுகிறது. இம்மொழி சிந்துப்பகுதியில் பேசப்படுகிறது. மேலும் சிந்தி மொழி வேதங்கள் 1500 1200 கி.மு.) தொகுக்கப்பட்டன. பேச்சு வழக்கில் ரிக் வேதத்தின் பாடல்கள் மற்றும் இலக்கிய மொழிகளும் ஓரளவிற்குக் காணப்பட்டன.

இந்தக் குடும்பத்தின் மற்ற மொழிகளைப் போல சிந்தி பழைய இந்தோ ஆரிய (சம கிருதம்), மத்திய இந்தோ ஆரிய (பாலி, இரண்டாவது பிராகிருதம் மற்றும் அப்ஃகாப்ரம்ஷா) மொழிகளைப் போன்று வளர்ச்சிக்கட்டங்களைக் கடந்து புதிய இந்தோ ஆரிய வளர்ச்சிக் கட்டத்திற்குள் 10 ஆம் நூற்றாண்டில் இம்மொழி நுழைந்தது.

சிந்தியின் உடனடி முன்னோடியாகச் சுப்பப்ராம்ஷா பிராகிருதம் இருந்தது. இது ‘விராசதா’ எனப்பட்டது. அரபு மற்றும் பாரசீக பயணிகள் குறிப்பாக அபு ரேஹான் பைரூனி தனது புத்தகமான ‘தாஹிக் மா இல்ஹிந்த்’ சிந்தி (கி.பி. 711) இசுலாமியர் வருகைக்கு முன்னதாகவே இம்மொழி அதிகமாக இருந்தது என்று அறிவித்துள்ளார். இது பரவலாகப் பேசப்படுவது மட்டுமல்லாமல் எழுத்து முறையில் மூன்று வேறுபாடுகளைக் கொண்டு காணப்படுகிறது. அவை 1. அர்த்தநாகரி, 2. சைந்து, 3. மல்வாரி ஆகியவையாகும்.

பைருனி சிந்தி மொழியில் அதிகமாகப் பேசப்படும் பல சொற்களை வரையறுத்தார். மேலும் நூற்றாண்டின் முடிவுகளில் சிந்தி கலாச்சாரம் அரபு மற்றும் பாரசீக வார்த்தைகளால் உறிஞ்சப்பட்டது. சிந்தி 14 18 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் ஒரு பிரபலமான இலக்கிய மொழியாக இருந்தது. பல மனிதர்கள் மற்றும் சூஃபிக்கள் போன்ற ஷா அப்துல் லத்தீப், ஷாச்சல் சர்மா ட், லால் ஷாபா குய்லெண்டர் (இன்னும் பலர்) எழுதிய கவிதைகள் அனைத்தும் மனிதர்களுக்கும் அல்லாஹ்விற்கும் இடையிலான உறவைச் சித்திரிப்பதாகவே இருந்தது.

1868 ஆம் ஆண்டு பம்பாய்வாசியான நாராயண் ஜெகன்நாத் வைத்யா சிந்திக்குப் பதிலாக அப்ஜாத்தைக் கடபாடி எழுத்துடன் பயன்படுத்தினார். இது பம்பாயின் பெரும்பான்மையான முசுலீம் பகுதியில் அராஜகத்தைத் தூண்டியதால் ஒரு நிலையான எழுத்துமுறை விதிக்கப்பட்டது. ஒரு சக்தி வாய்ந்த அமைதிமுறை மற்றும் பனிரெண்டு வீர சட்டங்கள் ஆகியவை பிரிட்டிஷ் அதிகாரிகளால் அங்குத் திணிக்கப் பட்டது. இசுலாமிய சிந்தி மரபுப்படி, சிந்தி குரானின் முதல்

மொழிபெயர்ப்பு மற்றும் இம்மொழிபெயர்ப்பு கி.பி. 883/270 AH இல் முடிக்கப்பட்டது. முதல் விரிவான சிந்தி மொழிபெயர்ப்பு அக்குந்த் அசா அல்லாஹ் மட்டாலவி (கி.பி. 1747 1824) (1160 1240 AH) என்பரால் செய்யப்பட்டது.

**புவியியல் பகிர்மானம்**

சிந்தி பாகி தானில் உள்ள சிந்து மற்றும் பலுசி தானில் பேசப்படுகிறது. சிந்தி முதன்மை மொழியாகப் பாகி தான் மாகாணமான சிந்துவிலும் முக்கியமாக மாகாணத் தலைநகரான கராச்சியிலும் கற்றுத் தரப்படுகிறது. இம்மொழி பாகி தானில் உள்ள கராச்சி மற்றும் பலுசி தானில் உள்ள அரசுப் பள்ளிகளில் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. மேலும் இம்மொழி கட்ச் பகுதியில் வாழும் சிந்து பழங்குடியினராலும் பேசப்படுகிறது. கராச்சி நகரம் மிகுதியாக 3 4 மில்லியன் சிந்தி மொழி பேசும் மக்களைக் கொண்டுள்ளது. ஹைதராபாத் நகரம் இரண்டாவதாக 1 மில்லியன் சிந்தி பேசும் மக்களைக் கொண்டுள்ளது. லர்கானா அரை மில்லியன் சிந்தி பேசுவோரைக் கொண்டு மூன்றாவது இடத்தில் உள்ளது.

சிந்தி மொழி இந்தியாவில் முக்கியமாக ராஜ தான், குஜராத், மகாராடிரா மாநிலங்களில் பேசப்படுகிறது. இம்மொழி மேலும் மும்பைக்கு அருகில் உள்ள உல்ஹா நகரில் பேசப்படுகிறது. இவ்விடம் இந்தியாவின் மிகப் பெரிய சிந்தி உறைவிடமாக உள்ளது.

**சொற்பிறப்பியல்**

சிந்தி என்ற வார்த்தை சம கிருத மொழியான சிந்து என்ற வார்த்தையிலிருந்து உருவானது. இதன் பொருள் 'ஆறு' என்பதாகும். சிந்து என்பது 'இந்து ஆறு' என்பதின் நிலையான பெயராகும்.

**முக்கியத்துவம்**

சிந்தி ஒரு பரந்த சொல்லகராதி மற்றும் மிகப் பழமையான இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இந்தப் போக்கு எழுத்தாளர்களை மிகவும் கவர்ந்தது. இதன் விளைவாக எழுத்தாளர்கள் சிந்தி மொழியில் ஏராளமான கவிதைகள் மற்றும் இலக்கியங்களை எழுதினர்.

**ஒலியியல்**

சிந்தி மற்ற மொழிகளைவிட உயிர் மற்றும் மெய்யெழுத்துக்களை அதிகமாகக் கொண்டுள்ளது. சிந்தி 46 மெய் ஒலிகளையும் 16 உயிர் எழுத்துக்களையும் கொண்டுள்ளது. உலக மொழிகளில் உள்ள உயிர் மெய்களின் சராசரி 2.8 ஆகும். இது அனைத்து மூக்கொலி, உரசொலி,

நா மடல் ஒலி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## வட்டார மொழி

### சிந்தி வட்டாரம்

சிந்தி சராய்கி சிந்தியின் ஒரு கிளையாகக் கருதப்படுகிறது.

விச்சோலி, விச்சோலா மத்திய சிந்து விச்சோலி அடிப்படையில் நிலையான சிந்து எனப்படுகிறது.

லாரி மற்றும் லாரு ஆகியவை சிந்தி வட்டாரமாகும்.

லாசி, லாசிபெல்லோ வட்டாரம் பலுசி தானில் உள்ள கோஹி தான் பகுதியில் உள்ளது.

தாரி அல்லது தாரலி இது தாக்கி அல்லது தாறு என்றும் அறியப் படுகிறது. இது சிந்தின் தென்கிழக்கில் உள்ள இராஜ தான் பாலைவனப் பகுதியில் உள்ள ஜெய்சல்மார் மாவட்டம் ஆகும். இப்பகுதியிலும் சிந்தி வட்டார மொழியாக உள்ளது.

கட்ச் அல்லது கட்ச்சி என்பது குஜராத்தில் கத்திவார் பகுதி. இது சிந்தின் தென்பகுதியாகும்.

### எழுத்துமுறை

மகாபாரதத்தில் ஒரு சிந்தி பதிப்பு குறிப்புகள் தோன்றும்போது சிந்தி எழுதப்பட்டது என 8 ஆம் நூற்றாண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சிந்தியின் முந்தைய சான்றொப்பப் பதிவுகள் 15 ஆம் நூற்றாண்டு ஆகும். முன்னதாகச் சிந்தி ஒலியமைப்பைத் தரப்படுத்துவதற்கு முன் பலவகையான தேவநாகரி மற்றும் லண்டா எழுத்து வர்த்தகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. இலக்கிய மற்றும் மத காரணங்களுக்காக அரபு பாரசீக எழுத்துக்களான அபுல் ஹசான் சிந்தி மற்றும் குர்முகி எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. மற்ற இரண்டு எழுத்துக்களான குடபாடி மற்றும் சிக்கர்புரி ஆகியவை லண்டா எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்தன. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷ் ஆட்சியின்போது தேவநாகரி மீது பாரசீக எழுத்துக்கள் ஒரு நிலையாக விதிக்கப்பட்டது.

இடைக்கால சிந்தி பக்தி இலக்கியங்கள் (1500 1843) சூஃபி கவிதைகள் மற்றும் அத்வைத வேதாந்த கவிதைகளை உள்ளடக்கியதாக இருந்தது. சிந்தி இலக்கிய நவீன காலத்தில் (1843 முதல்) தழைத்தோங்கியது. பாகிதான் மற்றும் இந்தியாவில் சமகாலத்தில் சிந்தி எழுத்துக்களில் மொழி மற்றும் இலக்கிய நடையில் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சில மாறுதல்கள் ஏற்பட்டபோதும் நவீன காலத்தில் தழைத்தோங்கியது. பல முன்னணி நாடுகளில் உள்ள எழுத்தாளர்கள் பாரசீக மற்றும் அரபுச்

சொற்களிலிருந்து ஏராளமான வார்த்தைகளைக் கடனாகப் பெற்றனர். அதிலும் அதிகமாக இந்தியின் தாக்கம் காணப்பட்டது.

**லண்டா எழுத்து**

லண்டா அடிப்படை எழுத்துக்கள் மற்றும் அதே போன்ற குர்முகி, கோக்கி, கடபாடி எழுத்து ஆகியவை சிந்தியில் வரலாறு எழுதப் பயன்படுத்தப்பட்டன.

**கடபாடி எழுத்து**

கடபாடி எழுத்துக்கள் கி.பி. *1550* இல் கண்டுபிடிக்கப்பட்டன. இத்துடன் இணைந்து அரபு எழுத்து இந்து மதத்தினரால் காலனித்துவ காலத்தில் பயன்படுத்தப்பட்டது. உத்தியோகப்பூர்வ நோக்கத்திற்காக அரபு எழுத்தில் ஒரே பயன்பாட்டுச் சட்டமும் இயற்றப்பட்டது. மேலும்




**கோஜ்கி எழுத்து**

கோஜ்கி எழுத்து முதன்மையாக ஷியா முலிம் தரப்பு மற்றும் ஷியா இமாயில் தரப்பு சமய இலக்கியத்திலும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

**குர்முகி எழுத்து**

குர்முகி எழுத்து சிந்தி எழுதப் பயன்பட்டது. அத்துடன் சிந்தியின்

வடக்குப் பகுதி, இந்துமதப் பெண்களும் இம்மொழியைப் பயன்படுத்தினர்.

## அரபு எழுத்து

வரலாற்று ரீதியாக அரபு எழுத்துக்களின் பல்வேறு பதிப்புகள் இந்து மற்றும் மு லீம் சமூகத்தால் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் மாறுபட்ட பாரசீக எழுத்துக்களுடன் சிந்தி 19 ஆம் நூற்றாண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த எழுத்து இன்றும் பாகி தானில் பயன்படுத்தப்படுகிறது. இதில் மொத்தம் 52 எழுத்துக்கள் உள்ளன. சிந்தி மற்றும் பிற இந்தோ ஆரிய மொழிகளைக் குறிப்பிட பதினெட்டு புதிய ஒலிகள் பயன்படுத்தப்பட்டன. சில எழுத்துக்கள் அரசு

**Sindhi-Arabic script:** سنڌي ٻولي انڊو يورپي خاندان سان تعلق رکندڙ آريائي ٻولي آهي، جنهن تي ڪجهه دراوڙي اثرات پڻ موجود آهن. هن وقت سنڌي ٻولي سنڌ جي مک ٻولي ۽ دفتري زبان آهي.

**Devanagari script:** सिन्धी ॿोली इण्डो यूरपी ख़ान्दान सां ताल्लुकु रखन्दड़ आर्याई ॿोली आहे, जिंहन ते कुझ द्राविड़ी उहुञाण पण मौजूद आहिनि. हिन वक़्तु सिन्धी ॿोली सिन्ध जी मुख बोली ऐं दफ़्तरी ज़बान आहे.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| अ | आ | इ | ई | उ | ऊ | ए | ऐ | ओ | औ |
| ə | a | ɪ | i | ʊ | u: | e | ɛ | o | ɔ |
| क | ख | ख़ | ग | ॻ | ग़ | | घ | | ङ |
| k | kʰ | x | g | ɠ | ɣ | | gʱ | | ŋ |
| च | छ | | ज | ॼ | ज़ | | झ | | ञ |
| c | cʰ | | ɟ | ʄ | z | | ɟʱ | | ɲ |
| ट | ठ | | ड | ॾ | ड़ | | ढ | ढ़ | ण |
| ʈ | ʈʰ | | ɖ | ɗ | ɽ | | ɖʱ | ɽʱ | ɳ |
| त | थ | | द | | | | ध | | न |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| t | tʰ | | d | | | dʱ | | n |
| प | फ | फ़ | ब | ॿ | | भ | | म |
| p | pʰ | f | b | ɓ | | bʱ | | m |
| य | र | ल | व | | | | | |
| j | r | l | ʋ | | | | | |
| श | ष | स | ह | | | | | |
| ʃ | ʂ | s | h | | | | | |

**குஜராத்தி எழுத்து**

குஜராத்தி எழுத்து இந்தியாவின் கட்ச் வட்டாரத்தில் எழுதப் பயன்படுகிறது.

**சிந்தி எழுத்து - சொற்களஞ்சியம்**

வரலாற்று ரீதியாகச் சிந்துப் பகுதியில் அடிக்கடி படையெடுப்புகள் நடைபெற்றன. முகமதுபின் காசிம் காலத்தில் தில்லி சுல்தான்களின் கட்டுப்பாட்டில் பின்னர் முகலாயப் பேரரசின் கீழ் இருந்தது. முகமதுபின் காசிம் காலத்தில் அரேபியர்கள் சிந்து பகுதியில் *1843* இலும் பின்னர் பிரிட்டிஷ்காரர்களும் வெற்றிபெற்றனர். இவ்வாறு பல மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும் சிந்தியின் அடிப்படை சொற்கள் மற்றும் இலக்கண கட்டமைப்பில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

கூடுதலாகச் சிந்தியில் ஆங்கிலம் மற்றும் இந்து தானியிலிருந்து கடனாகப் பெறப்பட்ட வார்த்தைகள் காணப்பட்டன. இன்றும் பாகி தான் சிந்தியில் உருது அதிகமாகக் காணப்படுகிறது. மேலும் பாரசீக அரபு மற்றும் இந்திய சிந்தியில் இந்தியின் தாக்கமும், சம கிருதத்திலிருந்து பெறப்பட்ட தாட்சம் வார்த்தைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.

## 20. தமிழ்

நாடுகள் : இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, புதுச்சேரி, மொரீசிய , இந்தோனேசியா, பிலிப்பைன் , அந்தமான் நிக்கோபார் தீவுகள்.

பேசப்படும் பிரதேசங்கள் : ஆசியா மற்றும் உலகெங்கனும் ஆங்காங்கே பேசப்படுகின்றது.

பேசுபவர்கள் : 85 மில்லியன் (1996 கணக்கெடுப்பின்படி)

நிலை : 18 (1996)இல்

மொழிக் குடும்பம் : திராவிட மொழிக் குடும்பம்

மொழி மரபு இன வகைப்பாடு

தென்பகுதி : தமிழ் கன்னடம்
தமிழ் குடகு
தமிழ் மலையாளம்

தமிழ் அரச ஏற்புநிலை : அரச அலுவல் மொழியாக ஏற்பு இந்தியா, இலங்கை மற்றும் சிங்கப்பூர்.

**வரலாறு**

திராவிட மொழிகளுள் காலத்தால் முந்தைய மிக நீண்ட நெடிய இலக்கண, இலக்கிய மரபுகளைக் கொண்டது தமிழ் மொழியாகும். தமிழ் இலக்கியங்களில் சில இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானவையாகும். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து தனக்கென ஒரு தனி அடையாளத்தோடு தனி வாழ்வையும் வரலாற்றையும் கொண்டு தொடர்ச்சியாய் இன்றும் தலைசிறந்து விளங்குகிறது.

திராவிட மொழிகளில் காணப்படும் மிகவும் பழமையான நூல்களுள் முதன்மையானது தொல்காப்பியம் ஆகும். இந்தியாவில் கிடைத்துள்ள ஏறத்தாழ 1,00,000 கல்வெட்டுகளும் மற்றும் தொல்லெழுத்துப் பதிவுகளில் 55,000க்கும் மற்றும் தொல்லெழுத்துப் பதிவுகளில் 55,000க்கும் அதிகமானவை தமிழிலேயே உள்ளன.

பனையோலைகளில் எழுதப்பட்டு அதனைப் பல படிகள் எடுத்ததன் மூலம் அல்லது வாய்மொழியாக பலர் சொல்லிக் கேட்டுக் கேட்டு அடுத்த தலைமுறையினரால் பாதுகாக்கப்பட்டு வந்ததால் மிகப் பழைய தமிழ் ஆக்கங்களின் காலங்களை இக்காலத்தது எனக் கணிப்பது கடினமான செயலானது. இருப்பினும் மொழியியல் உட்சான்றுகள் மிகப் பழைய ஆக்கங்கள் கி.பி. 2 ஆம் அல்லது 3 ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டிருக்கலாம் எனக் கணிக்கப் பட்டுள்ளன. இன்றும் தமிழின் இலக்கணத்தை உணர்த்தும் உயரிய நூலாக நமக்குக் கிடைத்துள்ளது தொல்காப்பியமே ஆகும். இதன் சில பகுதிகள் கி.மு. 200 ஆம் காலக்கட்டத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது. கி.பி. 2005 இல் காணக்கிடைத்த அகழ்ந்தெடுக்கப் பட்ட அகழ்வாராய்ச்சி சான்றுகள் தமிழ் எழுத்து மொழியின் காலத்தை கி.மு. 500 அளவுக்கு முன்னிறுத்தியுள்ளன. பண்டைத் தமிழில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க காப்பியம் கி.பி. 200 300 ஆம் காலப் பகுதியைச் சார்ந்த சிலப்பதிகாரமே ஆகும்.

இத்தகு சிறப்புப்பெற்ற தமிழ் இலக்கியத்தினுடைய தமிழ் மொழியினுடைய வரலாற்றைத் தமிழறிஞர்களும், மொழியியலாளர் களும் ஐந்து காலப்பகுதிகளாகப் பிரித்துள்ளனர். அவை

| | |
|---|---|
| சங்க காலம் | கி.மு. 300 கி.பி. 300 |
| சங்கம் மருவியகாலம் | கி.பி. 300 கி.பி.700 |
| பக்தி இலக்கிய காலம் | கி.பி. 700 கி.பி.1200 |
| மத்திய காலம் | கி.பி.1200 கி.பி.1800 |
| இக்காலம் | கி.பி. 1800 இன்று வரை |

பக்தி இலக்கிய காலத்திலும் மத்திய காலத்திலும் பெருமளவு வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. இதனால் பிற்காலத்தில் பரிமாற்கலைஞர், மறைமலையடிகள் முதலானோர் வடமொழிச் சொற்கள் கலப்பு தமிழில் இருந்து நீக்கப்பட உழைத்தனர். இவ்வாறு தமிழ்மொழியில் வடமொழி கலப்பின்றி தூய்மையாக வளர தோன்றிய இயக்கம் தனித்தமிழ் இயக்கம் என்று அழைக்கப்பட்டது. இதன் விளைவாக முறையான ஆவணங்களிலும் மேடைப்பேச்சுகளிலும் அறிவியல் எழுத்துகளிலும் வடமொழி கலப்பில்லாத தமிழ்ப் பயன்பாட்டிற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

**மொழிக் குடும்பம்**

தமிழ் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு மொழியாகும். இக்குடும்பத்தில் இருளா, பேட்டா, குறும்பா என்னும் மொழிகள் அடங்கும். தமிழ்மொழிக் குடும்பம் தமிழ் மலையாளம் மொழிகளின்

ஒரு துணைக் குடும்பமாகும். தமிழ் மலையாளம் மொழிகள், தமிழ் குடகு மொழிக் குடும்பத்தின் துணைப் பிரிவாகவும், தமிழ் குடகு மொழிக் குடும்பம் தமிழ் கன்னடம் குடும்பத்தின் துணைப் பிரிவாகவும் உள்ளன. தமிழ் கன்னடம் மொழிக் குடும்பம் திராவிட மொழிக் குடும்பத்தின் துணைப் பிரிவுகளுள் ஒன்றான தென்திராவிட மொழிக் குடும்பத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றாகும்.

தமிழ்நாட்டை எல்லையாகக் கொண்டுள்ள கேரள மாநில மக்களால் பேசப்படும் மலையாளம் சொற்கள், வசன அமைப்பு ஆகிய அம்சங்களில் தமிழை நெருக்கமாக ஒத்துள்ள மொழியாகும். ஏறத்தாழ ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழும் மலையாளமும் ஒரே மொழியின் இரு வட்டார வழக்குகளாகவே இருந்து வந்தன. இரு பகுதியினருமே இம்மொழியினைத் தமிழ் எனவே வழங்கி வந்துள்ளனர். தமிழுக்கும் மலையாளத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் சில வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டே கிழக்குத் தமிழ் வழக்கிற்கும் மேற்குத் தமிழ் வழக்கிற்கும் இடையே பிரிவு ஏற்படத் தொடங்கியதைக் காட்டுவதாக அமைகின்றபோதும், தெளிவாக இரண்டு தனி மொழிகளாகப் பிரிந்தது 13 ஆம் 14 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியிலேயே ஆகும்.

**சொற்பிறப்பு**

உலக நாடுகளின் பழமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்பது மொகஞ்சதாரோ அரப்பா அகழ்வாய்வுக்குப் பிறகு நிறுவப்பட்டுள்ளது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னரே பரந்து விரிந்திருந்த அப்பழம்பெரு நாகரிகத்தையே திராவிட நாகரிகம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழியாகும். திராவிடம் என்னும் சொல் திராவிட நாடு என்னும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் என்னும் சொற்றொடர்களுள் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல் தனது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். குமரிலபட்டர் திராவிடம் என்ற சொல்லை உருவாக்கினார். கால்டுவெல் அதனைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார். திராவிட சொற்பிறப்பு இவ்வாறு அமைய தமிழ் என்னும் சொல்லின் மூலம் பற்றிப் பலவிதமான கருத்துக்கள் உள்ளன. தமிழ் என்ற சொல் த்ரவிட என்னும் சம கிருத சொல்லின் திரிபு எனச் சிலரும், தமிழ் என்பதே த்ரவிட என்ற சம கிருத சொல்லின் மூலம் என வேறு சிலரும் கூறுகின்றனர். இவ்வாதம் இன்றும் முடிவின்றி தொடர்ந்தே வருகிறது. இவை தவிர இச்சொல்லுக்கு வேறு

மூலங்களைக் காண முயல்பவர்களும் உண்டு. தமிழ் என்ற இச்சொல்லுக்கு த்ரவிட என்பதே மூலம் என்ற கருத்தை முன்வைத்தவர்களுள் கால்டுவெல் முக்கியமானவர். இவர் த்ரவிட என்பது திரமிட என்றாகி அது பின்னர் த்ரமிள ஆகத் திரிந்து பின்னர் தமிள, தமிழ் என்று ஆனது என்கிறார். தமிழ் என்னும் திராவிடச் சொல்லே மூலச்சொல் என்பவர்கள் மேலே குறிப்பிட்டதற்கு எதிர்பக்கமாகத் தமிழ் தமிள த்ரமிள த்ரவிட ஆகியது என்பர்.

வோர்ட் வர்த் என்பவர் தமிழ் என்பதன் ஆறு தம் மிழ் எனப் பிரித்துக் காட்டி 'தனது மொழி' என்று பொருள்படும் என்று தெரிவிக்கிறார். கமில் சுவலபில் தம் இழ் என்பது தின்னிலிருந்து மலர்ந்து வரும் ஒலி என்ற பொருள் தரவல்லது என்கிறார். மாறாக

தமிழ் > தம் ழ் > தவ் ழ் > tak-il
tamiz > tam-iz tavi-iz < தக் ழ்

என்ற கிளவியாக்கம் நடந்திருக்கலாம் என்றும் அதனால் அது சரியான (தகுந்த) (பேச்சு) முறை என்ற பொருளிலிருந்து துவங்கியிருக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்.

### தமிழ் பேசப்படும் இடங்கள்

தமிழ் தென்னிந்தியாவின் மாநிலமான தமிழ்நாட்டின் பெரும்பான்மையினரதும், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களது முதன்மை மொழியாகும். தமிழ்மொழி தமிழ்நாடு மாநிலத்தில் மட்டுமின்றி இந்தியாவின் பிற மாநிலங்களான கர்நாடகம், கேரளம் மற்றும் மகாராட்டிரத்திலும் இலங்கையில் கொழும்பு மற்றும் மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலும் வழங்கி வருகிறது.

தமிழ் மக்கள் 19 ஆம் நூற்றாண்டிலும் 20 நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒப்பந்தக்கூலிகளாகவும் கீழ்நிலைப் பணியாளர் களாகவும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பிரிட்டானிய பேரரசின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்ட அவர்கள் சென்ற இடங்களில் ஒன்றாக வாழ முனைந்ததால் அங்கே தமிழ் பேசும் சமுதாயங்கள் உருவாயின. இவர்களின் வழிவந்தவர்கள் இன்று சிங்கப்பூர், மலேசியா, மொரீசிய போன்ற நாடுகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். தென்னாப்பிரிக்கா, குயானா, பிஜி, சுரினாம் மற்றும் ட்ரினிடாட்டும் டொபாகோவும் போன்ற நாடுகளிலும் பலர் பூர்வீகத் தமிழராய் இருந்தும் அந்நாடுகளில் அவர்கள் தமிழ் பேசுவதில்லை.

மிக அண்மைக் காலங்களில் இலங்கையின் இன முரண்பாடுகள் காரணமாக அகதிகளாக அங்கிருந்து இடம்பெயர்ந்தவர்களும், பொருளாதார காரணங்களுக்காக இடம்பெயர்ந்தவர்களும் எனப் பல தமிழர்கள் ஆ திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்து வந்த அவர்கள் தமிழை உயிர்ப்புள்ள மொழியாக வழங்கி வந்துள்ளனர்.

**ஆட்சிமொழி அங்கீகாரம்**

தமிழ் இந்திய மாநிலமான தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாகும். அத்துடன் இந்திய அரசியலமைப்பின் கீழ் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 22 மொழிகளுள் ஒன்றாகும். இலங்கையில் மூன்று ஆட்சி மொழிகளுள் தமிழும் ஒன்று. இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்திலும் அந்தமான் நிக்கோபார் தீவுகள், பாண்டிச்சேரி ஆகிய ஒன்றிய பகுதிகளிலும் தமிழ் அரச அலுவல் மொழியாக இருக்கிறது. சிங்கப்பூர் நாட்டிலும் தேசிய மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் இடம்பெற்றுள்ளது. தென்னாப்பிரிக்காவிலும் தமிழுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் உள்ளது. மலேசியாவிலும் முதல் நான்கு முகமை மொழிகளிலும் தமிழும் இடம்பெற்றுள்ளது. மலேசியாவில் தொடக்க இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. நாடு முழுவதும் 523 தமிழ்த் தொடக்கப்பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக இயங்குகின்றன.

**பேச்சுத்தமிழ்-உரைநடைத் தமிழ் வேறுபாடுகள்**

தமிழ்மொழியானது அதன் வேறுபட்ட வட்டார வழக்குகளுக்கு மேலதிகமாக இலக்கியங்களில் பயன்படும் செந்தமிழுக்கும் கொடுந்ததமிழ் என வழங்கப்படும் பேச்சுத் தமிழுக்கும் இடையே தெளிவான இரு வடிவத்தன்மை காணப்படுகிறது. இங்குக் கொடுந்தமிழ் என்பது அனைத்து வட்டாரப் பேச்சுத்தமிழ் வழக்குகளையும் பொதுவாகக் குறிக்கும் ஒரு சொற் பயன்பாடே ஆகும். இவ் இருவடிவத் தன்மை பண்டைக்காலம் முதலே தமிழில் இருந்து வருவதைக் கோயில் கல்வெட்டுகளில் காணப்படும் தமிழ் சமகால இலக்கியத் தமிழினின்று குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்டு காணப்படுவதிலிருந்து அறிந்துகொள்ள முடியும். இவ்வாறாகச் செந்தமிழ் எந்த வட்டார வழக்கையும் சாராது இருப்பதனால் எழுத்துத் தமிழானது தமிழ் வழங்கும் பல்வேறு பகுதிகளிலும் ஒன்றாகவே இருப்பதைக் காணலாம்.

தற்காலத்தில் எழுதுவதற்கும் மேடைப் பேச்சுக்கும் செந்தமிழே பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாகச் செந்தமிழ்ப் பாட நூல்களுக்குரிய மொழியாகவும், பெருமளவுக்கு இலக்கிய

மொழியாகவும் மேடை பேச்சுகளுக்கும் விவாதங்களுக்கும் உரிய மொழியாகவும் விளங்கி வருகிறது. அண்மைக் காலங்களில் மரபுவழியில் செந்தமிழுக்குரிய துறைகளாக இருந்து வந்த பகுதிகளிலும் கூட இன்றைய காலக்கட்டத்தில் கொடுந்தமிழ் பயன்பாடு அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. பெரும்பாலான திரைப்படங்கள், மேடை நாடகம், தொலைக்காட்சி, வானொலி முதலியவற்றிலும் இடம்பெறும் மக்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் பலவற்றிலும் கொடுந்தமிழ் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். அரசியல்வாதிகள் பலரும் மக்களுக்கு நெருக்கமாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் நோக்கில் தங்களது மேடைப்பேச்சுகளிலும் கொடுந்தமிழைப் பயன்படுத்தி வருகின்றனர்.

செந்தமிழுக்கான இலக்கணம் இறைவனால் உருவாக்கப்பட்டது என்ற நம்பிக்கை நிலவுவதால் செந்தமிழே சரியான மொழியாகக் கருதப்பட்டது. இதனால் பேச்சுத்தமிழ் வழக்கிற்குச் சிறப்பு கிடைக்க வில்லை. ஏனெனில் ஐரோப்பிய மொழிகளில் காணப்படுவதற்கு மாறாகத் தமிழில் அதன் வரலாற்றின் பெரும்பகுதியிலும் ஒரு பொதுவான பேச்சுமொழி இருந்ததில்லை. தற்காலத்தில் அதிகரித்து வரும் கொடுந்தமிழ் பயன்பாடே அதிகாரப்பூர்வமற்ற முறையில் பொதுப் பேச்சுத்தமிழ் வழக்குகள் தோன்றுவதற்குக் காரணமாகவுள்ளது. இந்தியாவில் பொதுக் கொடுந்தமிழ் படித்த பிராமணரல்லாதவர்களின் பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனினும் தஞ்சாவூர் மற்றும் மதுரை பேச்சு வழக்குகளே அதிகம் செல்வாக்கு பெற்றுள்ளது. இலங்கையில் அதிக மக்கள்தொகையைக் கொண்ட யாழ்ப்பாணப் பேச்சு வழக்கையே பெரும்பாலான வெளியார் இலங்கை தமிழ்ப் பேச்சாக இனங்கண்டு கொள்கின்றனர்.

**வட்டார மொழி வழக்குகள்**

பெரும்பாலும் சொற்களை ஒலிப்பதிலேயே தமிழில் வட்டார வழக்குகள் மாறுபடுகின்றன. இம்மாற்றமானது பல வேறுபட்ட செந்தமிழ் சொற்களினின்றும் பிறந்தவை ஆகும். எடுத்துக்காட்டாக 'இங்கே' என்ற சொல் தஞ்சாவூர் பகுதிகளில் 'இங்க' என்றும், யாழ்ப்பாணம் (இலங்கை) பகுதிகளில் 'இங்கை' என்றும், திருநெல்வேலி பகுதிகளில் 'இங்கனெ' என்றும் இராமநாதபுரம் பகுதிகளில் இங்குட்டு/இங்கிட்டு என்றும் வழங்கும் சொற்கள் 'இங்கே' என்ற சொல்லில் கிளைத்தவை அல்லாமல் வேறு செந்தமிழ்ச் சொற்களினின்றும் பிறந்தவை ஆகும். இங்கனெ என்பது இங்கணே அல்லது இங்கனே என்பதன் மாற்றமும் இங்குட்டு/இங்கிட்டு என்பது

இங்கட்டு என்னும் செம்மொழிச் சொல்லின் மாற்றமும் ஆகும். 'கண்' என்னும் சொல்லின் பொருள் இடம் ஆகும். கொங்கு நாட்டார் 'அக்கட்டாலே போய் உட்கார்' என்று சொல்வதைக் கேட்கலாம்.

பெரும்பாலான வட்டார மொழி வழக்குகளின் சொல் அகராதியில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை என்றாலும், சில வழக்குகள் பெரிதும் மாறுபடுகின்றன. இலங்கையில் பேசப்படும் தமிழின் பல சொற்கள், தமிழகத்தில் அன்றாட வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை. 'பாலக்காடு ஐயர்' தமிழில் பல மலையாளச் சொற்கள் கலந்திருக்கும். சில இடங்களில் மலையாள வாக்கிய அமைப்பும் காணப்படும். இறுதியாக ஹப்பர் மற்றும் மாண்டையம் வட்டாரங்களில் பதினாறாம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்த வைணவ கோட்பாட்டைப் பின்பற்றும் தமிழர்களால் பேசப்படும் தமிழில் வைணவ பரிபாஷையின் எச்சம் காணப்படுகிறது. வைணவ பரிபாஷை என்பது ஒன்பது மற்றும் பத்தாம் நூற்றாண்டுகளில் உருவான வைணவ சமய மரபுகள் மற்றும் பண்புகளை உள்ளடக்கிய மொழி வழக்காகும்.

எத்னொலோக் (Ethnologue) என்ற உலக மொழிகள் பற்றிய பதிப்பு நிறுவனம் தமிழில் 22 வட்டார வழக்குகள் இருப்பதாகத் தெரிவிக்கிறது. அவையாவன: ஆதிதிராவிடர், ஐயர், ஐயங்கார், அரவா, பருகண்டி, கசுவா, கொங்கர், கொரவா, கொர்சி, மதராஸி, பரிகலா, பாட்டு பாஷை, இலங்கை தமிழ், மலேசியா தமிழ், பர்மா தமிழ், தென்னாப்பிரிக்க தமிழ், திகாலு, அரிஜன், சங்கேதி, கெப்பார், மதுரை, திருநெல்வேலி, கொங்கு மற்றும் குமரி ஆகியன வேறிரு தெரிந்த வட்டார வழக்குகள்.

புவியியல் தொடர்பான வட்டார வழக்குகள் ஒருபுறமிருக்க சமுதாய அடிப்படையிலும் பல்வேறு மட்டங்களில் தமிழ் மொழி பயன்பாட்டில் வேறுபாடுகளைக் கவனிக்கலாம். புதிய வழக்காகத் தொலைக்காட்சி முதலான தொடர்புச் சாதனங்களும் இன்று பெருமளவுக்கு ஆங்கிலம் கலந்த தமிழைத் தமிழ் மக்கள் மத்தியில் புழக்கத்துக்கு விட்டுள்ளன. மேனாட்டுக் கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சித் தொடர்பில் புதிய சொல்லாக்கம், கலைச்சொல்லாக்கம் முதலிய அம்சங்களில் ஒருங்கிணைவு அற்ற முயற்சிகள் வேறுபட்ட மொழி வழக்குகளை உருவாக்கியுள்ளன. முக்கியமாக இலக்கியம் மற்றும் அது போன்ற பண்பாட்டு மற்றும் மரபுவழிப் பயன்பாடுகளுக்கு அப்பால், கல்வி, அறிவியல், நிர்வாகம் மற்றும் இன்னோரன்ன நவீன துறைகளிலும் தமிழ் பயன்படுத்தப்பட்டுவரும் தமிழ்நாடு, இலங்கை போன்ற நாடுகளில் உருவாக்கப்படும் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள், ஒரு பகுதியினர்

பயன்படுத்தும் தமிழை இன்னொரு பகுதித் தமிழர் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு வேறுபாடுள்ள மொழி வழக்குகள் உருவாகக் காரணமாக உள்ளன.

**எழுத்து முறை**

தமிழ் எழுத்து முறைமை ஒலிப்பியல் அடிப்படையிலானது. குறுக்கம், அளபெடை, புணர்ச்சி நெறிகளுக்கு உட்பட்டே எழுத்துக்கள் ஒலிக்கப் படுகின்றன. தற்போதைய தமிழ் எழுத்து முறையானது தமிழ் பிராமியில் இருந்து தோன்றியதாகும். தமிழ் பிராமி காலப்போக்கில் வட்டெழுத்தாக உருமாறியது. ஆறாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் வட்டெழுத்து முறை உருவானது. அவை ஓலைச்சுவடிகளிலும் கல்லிலும் செதுக்குவதற்கேற்ப அமைந்திருந்தன.

சமகிருத ஒலிகள் வட்டெழுத்தில் குறிப்பிட்ட சில கிரந்த எழுத்து முறை கிரந்த எழுத்துக்களைப் பயன்டுத்தினர். இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்துவதற்கு மாறாகத் தொல்காப்பியக் கூற்றுப்படி அச்சொற்களைத் தமிழ்ப்படுத்துதல் நலம்பயக்கும் என்ற கருத்து ஆய்வுலகில் நிலவியது. இருப்பினும் வீரமாமுனிவரின் அறிவுரைப்படி இரட்டைக்கொம்பு போன்ற மாற்றங்கள் செய்யப்பட்டன. 1977 ஆம் ஆண்டு எம்.ஜி.இராமச்சந்திரன் ஆட்சியில் அச்சில் ஏற்றுவதை எளிமைப்படுத்தும் வகையில் தந்தை பெரியார் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட ஆகார மற்றும் ஐகார உயிர்மெய் எழுத்துக்களில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. எனினும் பெரியாரது உகர சீர்திருத்தம் செயல்படுத்தப்படவில்லை.

**தமிழ் எழுத்துக்கள்**

**உயிரெழுத்துக்கள் 12**

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

**மெய்யெழுத்துக்கள் 18**

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

**உயிர்மெய் எழுத்துக்கள்-216**

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப | ம | ய | ர | ல | வ | ழ | ள | ற | ன |
| கா | ஙா | சா | ஞா | டா | ணா | தா | நா | பா | மா | யா | ரா | லா | வா | ழா | ளா | றா | னா |
| கி | ஙி | சி | ஞி | டி | ணி | தி | நி | பி | மி | யி | ரி | லி | வி | ழி | ளி | றி | னி |
| கீ | ஙீ | சீ | ஞீ | டீ | ணீ | தீ | நீ | பீ | மீ | யீ | ரீ | லீ | வீ | ழீ | ளீ | றீ | னீ |
| கு | ஙு | சு | ஞு | டு | ணு | து | நு | பு | மு | யு | ரு | லு | வு | ழு | ளு | று | னு |
| கூ | ஙூ | சூ | ஞூ | டூ | ணூ | தூ | நூ | பூ | மூ | யூ | ரூ | லூ | வூ | ழூ | ளூ | றூ | னூ |
| கெ | ஙெ | செ | ஞெ | டெ | ணெ | தெ | நெ | பெ | மெ | யெ | ரெ | லெ | வெ | ழெ | ளெ | றெ | னெ |
| கே | ஙே | சே | ஞே | டே | ணே | தே | நே | பே | மே | யே | ரே | லே | வே | ழே | ளே | றே | னே |
| கை | ஙை | சை | ஞை | டை | ணை | தை | நை | பை | மை | யை | ரை | லை | வை | ழை | ளை | றை | னை |
| கொ | ஙொ | சொ | ஞொ | டொ | ணொ | தொ | நொ | பொ | மொ | யொ | ரொ | லொ | வொ | ழொ | ளொ | றொ | னொ |
| கோ | ஙோ | சோ | ஞோ | டோ | ணோ | தோ | நோ | போ | மோ | யோ | ரோ | லோ | வோ | ழோ | ளோ | றோ | னோ |
| கௌ | ஙௌ | சௌ | ஞௌ | டௌ | ணௌ | தௌ | நௌ | பௌ | மௌ | யௌ | ரௌ | லௌ | வௌ | ழௌ | ளௌ | றௌ | னௌ |

| | |
|---|---|
| *ஆய்த எழுத்து* | ஃ |
| *உயிர் எழுத்துக்கள்* | *12* |
| *மெய்யெழுத்துக்கள்* | *18* |
| *உயிர்மெய் எழுத்துக்கள்* | *216* |
| *ஆய்த எழுத்து* | *1* |
| *மொத்தம் தமிழ் எழுத்துக்கள்* | *247* |

**கிரந்த எழுத்துக்கள்**

கிரந்த எழுத்துக்கள் தென்னிந்தியாவில் குறிப்பாக/, தமிழ்நாட்டில் சம கிருத மொழியை எழுத பயன்பட்ட வரிவடிவங்களாகும். தற்காலத்தில் தேவநாகரி எழுத்துக்கள் பிரபலமடைந்ததால் கிரந்த எழுத்துக்களின் பயன்பாடு பெருமளவு குறைந்துவிட்டது. தமிழில் மணிப்பிரவாள எழுத்துநடை செல்வாக்கு செலுத்திய பொழுது கிரந்த எழுத்து பரவலாகப் பயன்படுத்தப்பட்டு இன்று மணிப்பிரவாள எழுத்துநடை மறைந்தாலும் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ போன்ற கிரந்த எழுத்துக்கள் ஆங்கிலம் மற்றம் அறிவியல் சொற்களையும் குறிக்க பயன்படுத்தப் படுகின்றன.

ஜja, ஜாjaa, ஜிji, ஜீjii, ஜுju, ஜூoo, ஜெje, ஜேjae, ஜைjai, ஜொjo, ஜோjoa, ஜௌjow, ஜ்.

ஷாshaa, ஷிsha, ஷிshi, ஷீshii, ஷுshu, ஷூshoo, ஷெshe, ஷேshae, ஷைshai, ஷொ sho, ஷோ shoa, ஷௌ show/shou, ஷ் sh

ஸsa, ஸாsaa, ஸிsi, ஸீsii, ஸுsu, ஸூsoo, ஸெse, ஸே sae, ஸை sai, ஸொ so, ஸோ soo, ஸௌ sow, ஸ்.

ஹha, ஹா haa, ஹிhi, ஹீhii, ஹுhu, ஹூhoo, ஹெ he, ஹே hae, ஹை hai, ஹொ ho, ஹோ hoa, ஹௌ how, ஹ் h.

க்ஷ ksha, க்ஷா kshaa, க்ஷி ksi, க்ஷீ ksu, க்ஷு kuhu, க்ஷூ kshu, க்ஷெ kshe, க்ஷே kshae, க்ஷை kshai, க்ஷொ ksho, க்ஷோ kshoa, க்ஷௌ kshow, க்ஷ் ksh.

**தமிழ் ஒலிப்புமுறை**

**உயிரெழுத்துக்கள்**

உயிரெழுத்துக்களில் குறுகிய ஓசையுடைய எழுத்துக்களான அ, இ, உ, எ, ஒ ஆகிய எழுத்துக்கள் குற்றெழுத்துக்கள் (குறில்) எனவும், நீண்ட ஓசையுடைய எழுத்துக்களான ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் (நெடில் எனவும் வழங்கப்படுகிறது.)

குறிலெழுத்துகள் ஒவ்வொன்றையும் ஒரு மாத்திரை நேரத்திலும், நெட்டெழுத்துகள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரை நேரத்திலும் ஒலிக்க வேண்டும்.

**குறில் நெடில்**

| | முன் | நடு | பின் | முன் | நடு | பின் |
|---|---|---|---|---|---|---|
| அண்மை | i | | u | i | | u |
| | இ | | உ | ஈ | | ஊ |
| இடை | e | | o | e | | O: |
| | எ | | ஒ | ஏ | | ஓ |
| திறந்த | | a | | (ai) | a: | (aw) |
| | | அ | | ஐ | ஆ | ஔ |

**மெய்யெழுத்துக்கள்**

மெய்யெழுத்துக்களில் மென்மையான ஓசையுடைய எழுத்துக்கள் மெல்லினம் என்றும், வன்மையான ஓசையுடைய எழுத்துக்கள் வல்லினம் என்றும் இவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துக்கள் இடையினம் என்றும் அழைக்கப்படும்.

| | |
|---|---|
| வல்லினம் | க் ச் ட் த் ப் ற் |
| மெல்லினம் | ங் ஞ் ண் ந் ம் ன் |
| இடையினம் | ய் ர் ல் வ் ழ் ள் |

மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றையும் அரை மாத்திரை நேரத்தில் ஒலிக்க வேண்டும்.

**தமிழ் மெய்யெழுத்துக்கள் அனைத்துலக ஒலிப்பெழுத்துக்களுடன் ஒலிப்பு வகைகள்**

**இதழ் பல் நுனி அண்ணம் வளை னா இ டை ட**
**அண்ணம் இடை அண்ணம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெடிப்பு | p(b) ப | t(d) த | | t(d) ட | t (d3) ச | k (g) க |
| மூக்கு | m ம | n ந | n ன | n ண | n ஞ | n ங |
| உருட்டு | | r ர | r ற | | | |
| மருங்கு | | l ல | | l ள | | |
| உயிர்ப் போலி | u வ | | | l ழ | j ய | |

சிறப்பெழுத்து ஆய்த எழுத்து ஃ

ஃ எனும் ஆயுத எழுத்து தமிழில் உள்ள சிறப்பு எழுத்தாகும். ஆய்த எழுத்தை தனியே பயன்படுத்தவது அரிதானது. பழந்தமிழில் பரவலாக ஆய்த எழுத்து பயன்படுத்தப்பட்டிருப்பினும் தற்காலத்தில் ஆய்த எழுத்தின் பயன்பாடு அரிதேயாகும். சில நேரங்களில் பகரத்துடன் சேர்த்து (ஃப) ஆங்கில f ஐக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. ஆய்த எழுத்தை அஃகேனம் என்றும் அழைப்பர்.

**ஒலிப்பியல்**

தமிழில் மூச்சைக் கொண்டு ஒலிக்கும் (aspirated) மெய்யெழுத்துக்கள் கிடையாது. பேச்சில் வழங்கிவரினும் தமிழ் எழுத்து மிடற்றொலிகளையும் (voiced sounds) பிற ஒலிகளையும் வேறுபடுத்து வதில்லை. மிடற்றொலிகளும் அவற்றின் இனமான பிறவிகளும் தமிழில் வகையொலிகள் (allophones) அல்ல. தமிழில் பொதுவாக இவ்வேறுபாட்டை உணர்ந்திருக்கின்றனர். மேலும், தொல்காப்பியத்தில் ஒரு எழுத்தை எப்பொழுது மிடற்றிலிருந்து ஒலிக்க வேண்டும் என்பது பற்றிய வரைமுறை விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 'த' எனும்

மெய்யொலி சொல்லின் முதலில் வரும்பொழுது மிடற்றொலியாகவும், பிற இடங்களில் ஒற்றித்தோ இரட்டித்தோ வேறொரு வல்லெழுத்தால் தொடரப்பட்டோ அல்லது மிடறு நீங்கியோ ஒலிக்கும்.

சொல்லின் முதலில் சகரம் வரும்பொழுது அது எவ்வாறு ஒலிக்கப்பட வேண்டும் என்ற நெறியைத் தவிர பிற நெறிகள் செந்தமிழில் பொதுவாகப் பின்பற்றப்படுகின்றன. கொடுந்தமிழ் அல்லது வழக்குத் தமிழில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்ப ஒலிப்புமுறை வேறுபடுகிறது. தென் வட்டார வழக்குகளிலும் இலங்கை வழக்குகளிலும் இம்முறை பெரும்பாலும் ஆனால் முழுமையாக அல்லாமல் பின்பற்றப்படுகிறது. வடபகுதி வட்டார வழக்குகளில் ஒலிப்பெயர்வு ஏற்பட்டுள்ளன. இவை தவிர சம கிருதம் மற்றும் பிற வடமொழிகளிலிருந்து பெறப்பட்ட சொற்கள் தமிழில் பெரிதும் உள்ளபடியே பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ் எழுத்தில் ஏன் மிடற்றொலி மற்றும் பிறவொலி வேறுபாடுகள் இல்லையென்ற கேள்விக்கு ஒலிப்பியலாளர்கள் நடுவே ஒருமித்த கருத்து இல்லை. ஒருசாரார் தமிழ் மொழியில் கூட்டு மெய்களும் மிடற்றொலிக்கும் வல்லெழுத்துக்களோ அடிப்படையில் இருந்ததில்லை என்றும் சொற்புணர்ச்சி மற்றும் குறுக்கத்தினா்ல் மட்டுமே இவ்வொலிகள் ஏற்படுகின்றன என்றும் குறிப்பிடுகின்றனர். அதனால் இந்திய, ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் மற்றும் பிற திராவிட மொழிகளைப் போலன்றி தமிழில் இவ்வொலிகளுக்கென தனியெழுத்துக்கள் தேவைப்படவில்லை என்று கருதுகின்றனர். இக்கருத்திலிருந்து மாறுபட்டு மிடற்றொலிகள் அவற்றை ஒத்த பிற ஒலிகளின் வகையொலிகளாகவே தமிழில் இருந்துள்ளன என்றும் அதனாலேயே அவற்றிற்கென தனியான எழுத்துக் குறிகள் இல்லையெனவும் ஒரு கருத்தை சிலர் முன்வைக்கின்றனர்.

**குறுக்கம்**

சில ஒலிப்பியல் கூறுகள் சில குறிப்பிட்ட ஒலிகளையடுத்து வரும்போது தத்தம் இயல்பான ஒலி அளவுகளிலிருந்து குறைந்து ஒலித்தலே குறுக்கம் எனப்படும். அவை,

*1. குற்றியலுகரம் உயிர் உ*

*2. குற்றியலிகம் உயிர் இ*

*3. ஐகாரக்குறுக்கம் கூட்டுயிர் (dipthong) ஐ*

*4. ஔகாரக் குறுக்கம் கூட்டுயிர் ஔ*

*5. ஆய்தக்குறுக்கம் சிறப்பெழுத்து ஃ (ஆய்தம்)*

6. மகரக்குறுக்கம் மெய் ம்

## எண்குறிகள்

தமிழைப் பொறுத்தவரை தற்காலத்தில் பெரும்பாலும் அனைத்துலக எண் குறியீடுகளே பயன்பாட்டில் உள்ளன. ஆனால் சில பத்தாண்டுகளுக்கு முன்புவரை தனியான எண் குறியீடுகளே பயன்படுத்தப்பட்டு வந்தன. ஒன்று தொடங்கி ஒன்பது வரையான எண்களுக்கு மட்டுமின்றி பத்து, நூறு, ஆயிரம் ஆகியவற்றிற்கும்

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 100 | 1000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௦ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ | ௱ | ௲ |

## எண் ஒலிப்பு

ஒன்றிற்குக் கீழான அளவுள்ள எண்களும் அதற்கான ஒலிப்புச் சொற்கள் என்று தொடங்கி ஒன்று (ஏகம்) முதல் கோடிக்கோடி முக்கோடி (பிரமகற்பம்) வரையில் எண் ஒலிப்பு முறைகள் தமிழில் இடம்பெற்றுள்ளன. இவை மட்டுமின்றி ஒன்றிற்குக் கீழான அளவுள்ள எண்களும் அதற்குரிய ஒலிப்புச் சொற்கள் தமிழில் உள்ளன.

## இலக்கியம்

திராவிட மொழிகளில் பழமையான இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கொண்டது தமிழ்மொழி. பிற திராவிட மொழிகளின் இலக்கியங்கள் பிந்தைய நிலையில் இருக்க கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதலே தனக்கென ஒரு இலக்கிய பாரம்பரியத்தை உருவாக்கி இருந்தது.

கி.மு. முதல் நூற்றாண்டில் தனித்தனிப் பாடல்களாக வாழ்ந்தது தமிழ் இலக்கணம். எத்தனையோ புலவர்கள் பல்வேறு செய்திகளைப் பாடிச்சென்ற நிலையில் தமிழ் இலக்கியம் பிறந்தது. முன்னரே நாட்டுப்புறப் பாடல்களாகவும், நாகரிகமற்ற நாட்டு இலக்கியங்களாகவும் நாட்டு மக்களிடையே வளர்ந்து இருந்திருக்கலாம். கல்லையும் புல்லையும் காட்டு வளத்தையும் நாட்டு வளத்தையும், நாட்டுச் செழிப்பையும் பரம்பரை பரம்பரையாகப் பாடிச்சென்ற புலவர்கள் பலர் பிற்கால புலவர்களுக்கு அடியெடுத்து கொடுத்ததன் மூலம் வாய்வழியே வாழ்ந்த வாய்மொழி இலக்கியங்கள் வற்றாத வளமாகவும் வளர்ச்சி ஊட்டும் பாடல்களாகவும் வளர்ந்தது. எனினும் சங்கப் பாடல்களே தமிழ் இலக்கியத்தின் முதல் கட்டமாகவும் முழுமையான பொக்கிஷமாகவும் இன்றும் திகழ்கிறது.

பின்னர் தனிப்பாடல்களில் வளர்ந்த தமிழ் தொடர்நிலைச்

செய்யுள்களின் துவக்கத்தைக் கண்டது இளங்கோவடிகளின் கைவண்ணத்தில் தான் தமிழ்க் காப்பியம் பிறந்தது. இதை அடுத்துதான் மணிமேகலை பிறந்தது; தமிழும் வளர்ந்தது.

அடுத்து பக்தி இலக்கியக் காலம் ஆகும். அப்பரும் சுந்தரரும் ஆளுடைப்பிள்ளையும் அறம் வளர்த்ததோடு தமிழையும் வளர்த்தனர். இக்காலத்தில்தான் தேவாரமும் திருவாசகமும் தோன்றின. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை இத்தகைய நூல்கள் வளர்ந்து நின்றன. இந்நிலையிலும் காப்பியங்கள் பல வளர்ந்தன. இலக்கண நூல்கள் பலவும் பிறந்தன. சிந்தாமணியும் வளையாபதியும் பெருங்கதையும் இன்னும் பல காப்பியங்களும் இக்காலத்தில் தோன்றியவைதான். இதையடுத்து தோன்றியது தான் கம்பராமாயணம். காப்பிய காலத்தின் பொற்காலமாகக் கருதப்படுவது கம்பனின் காலம்.

கம்பனின் காலத்திற்குப் பின்னர் ஒரு தேக்கத்தைக் கண்டது. பல்வேறு பிரபந்தங்கள் தோன்றின எனினும் தமிழின் வளர்ச்சியில் ஒரு தேக்கம் 14, 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் பல இலக்கியச் சூழல்களைப் பெற்றிருந்தன எனினும் தமிழ் அத்தனை வளர்ந்தது என்று கூறமுடியாது. எனினும் ஐரோப்பியரின் வரவில் ஒருவித ஆக்கத்தைக் கண்டன. உரைநடை வளர்ச்சியும் நாடக வளர்ச்சியும் தலைகாட்டி நின்றன. இந்நிலையில்தான் தற்கால இலக்கியங்கள் என்று கூறப்படும் பல்வேறு இலக்கியங்கள் தோன்றின.

உரைநடை தமிழுக்குப் புதிதன்று; எனினும் அச்சுப்பொறியின் வரவு குறிப்பிடத்தக்கதாம். கி.பி. 1577 இல் 'கிருத்துவோபதேசம்' என்னும் நூலே முதல் தமிழ் அச்சுநூல் எனக் கருதப்படுகிறது. கி.பி. 17 18 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பல்வேறு மேனாட்டு அறிஞர்கள் உரைநடைக்கு வித்திட்டவர்களாவார். இந்நிலையினால் பல்வேறு இலக்கிய வகைகளும் தமிழ்நாட்டில் வளர்ந்தன. கி.பி. 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் புதினம், சிறுகதை போன்ற இலக்கியத் துறைகள் வளர்ந்தன. தேசியக் கவிதைகளும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவிபுரிந்தன. இலக்கியத் திறனாய்வும், மொழி ஆராய்ச்சி நூல்களும் வளர்ந்தன. பாரதி, பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், தேசியவிநாயகம் பிள்ளை போன்ற பல்வேறு கவிஞர்களைப் பெற்றெடுத்தது தமிழ் உலகம். இருபதாம் நூற்றாண்டு இவர்களின் கைவண்ணத்தில் தமிழ்க் கவிதைகள் நல்ல ஒரு வாழ்வும் வளர்ச்சியும் பெற்றன. இங்ஙனமே நாடகத் தமிழ் இக்காலத்தில் நல்லதொரு வளர்ச்சியைப் பெற்றது. பம்மல் சம்பந்த முதலியார் இத்துறையில் குறிப்பிடத்தக்கவர் ஆவார். படித்தற்குரிய நாடகங்களில் சுந்தரனாரின் மனோன்மணீயம் என்றும்

நினைவில் நிற்கும் சிறந்தநூலாகும்.

இசைத்தமிழிலும் 20 ஆம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க ஒரு காலப் பகுதியாகும். எத்தனையோ நூற்றாண்டுகளாக இசைத்தமிழ் வாழ்ந்த நிலையில் 20ஆவது நூற்றாண்டிலும் இது வளர்ந்தது. பாரதியும் பாரதிதாசனும் நாமக்கல்லாரும் கவிமணியும் இசையோடு பாடி அந்நிலைக்கேற்றப் பாடல்கள் பலவும் எழுதியுள்ளனர். 20 ஆம் நூற்றண்டின் நடுப்பகுதியில் தோன்றிய தமிழிசை இயக்கம், இசைத்தமிழ் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. இதையொட்டித் தோன்றிய எழுச்சியில் தமிழிசையும் தமிழ்ப் பண் ஆராய்ச்சியும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இன்றும் தமிழ் இலக்கியம் புதுக்கவிதை, ஹைக்கூ என்று பல பரிமாணங்களில் தொடர்ந்த சிறந்த பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

**இலக்கணம்**

இலக்கண அடிப்படையில் தமிழ் ஒரு ஒட்டுநிலை மொழியாகும். தமிழ்ப்பெயர், வகை, எண், வேற்றுமை, காலம் போன்றவற்றை விளக்கச் சொற்களுடன் பின்னொட்டுகள் சேர்க்கப்படுகின்றன. தமிழின் பொதுவான கருவி (metalinguistic) சொற்களும் கலைச்சொற்களும் தமிழாகவே உள்ளன.

தமிழ்ச் சொற்கள் வேர்ச்சொற்களை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒற்றுகளைச்சேர்ப்பதன் மூலம் புதிய சொற்கள் உருவாக்கப்படுகின்றன. இம்மொழியில் பெரும்பாலான ஒட்டுகள் பின்னொட்டுக்களாகும். பின்னொட்டுகள் இலக்கண வகையில் மாற்றங்களை உண்டாக்குகின்றன. அல்லது அவற்றில் பொருளை மாற்றுகின்றன. இவை சொற்களுக்கு இடம், எண், பால், காலம் போன்றவற்றை உணர்த்துகின்ற பொருளையும் கொடுக்கின்றன. இதேபோன்று சொற்களுக்கு ஒட்டுகளைச் சேர்ப்பதில் எவ்வித எண்ணிக்கை கட்டுப்பாடும் கிடையாது. இதனால் தமிழில் பல ஒட்டுக்களைக் கொண்ட நீளமான சொற்கள் இருப்பதைக் காணமுடியும்.

தமிழில் பெயர்ச் சொற்கள் இரண்டு திணைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அவை உயர்திணை, அஃறிணை என்பவை ஆகும். உயர் திணையானது கடவுளர், மனிதர் ஆகியோர்களைக் குறிக்கும் சொற்களைக் கொண்டது. இவர்களேயன்றி ஏனைய பொருட்களைக் குறிக்கும் ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பால்களாகவும், அஃறிணை, ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டு பால்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன. உயர் திணைக்குள் அடங்கும் ஆண்பால்,

பெண்பால் என்பன ஒருமைப்பொருளைச் சுட்டுகின்றன. பலர்பால் பன்மைப் பொருளைச் சுட்டுவது மட்டுமின்றி மதிப்புக் கொடுப்பதற்காக ஒருமையாகவும் பயன்படுகிறது.

தமிழில் வேற்றுமைகள் எட்டுவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை எனப் பெயரிடப்பட்டுள்ளன. இப்பகுப்பு சம கிருத இலக்கண அடிப்படையிலானது என்று தற்கால மொழியியலாளர் சிலர் கூறுகின்றனர்.

**இலக்கண நூல்கள்**

தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பெருங்கலம், யாப்பெருங்கலக்காரிகை, வீரசோழியம், நேமிநாதம், தண்டியலங்காரம், பன்னிருபாட்டியல், நன்னூல், பிரயோக விசேகம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்ற பல இலக்கண நூல்களைத் தன்னகத்தே கொண்டது தமிழ் மொழியாகும்.

**சொல் வளம்**

தமிழ் சொல்வளம் நிறைந்த மொழி. நவீன தமிழ்மொழி பழந்தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான சொற்களை இன்றும் பயன்படுத்துகின்றது. இதனால் சற்றுப் பயிற்சியுடன் பழந்தமிழ் இலக்கியங்களை ஒரு தமிழர் படித்து அறியமுடியும். திருக்குறள் போன்ற சிறந்த பழந்தமிழ் படைப்புகளைச் சிறப்பாகக் கற்றுணர்வதற்கு இத்தொடர்ச்சியான சொற் பயன்பாடு பேருதவி புரிகின்றது.

தமிழின் நீண்ட நெடிய வரலாற்றில் பல பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்து, தமிழ்ப்படுத்தப்பட்டு தமிழை வளமாக்கியுள்ளன. பாரசீக, அரபு போன்ற செம்மொழிகளிலிருந்தும், இந்தி, சிங்களம், மலாய் போன்ற தமிழருடன் தொடர்புடைய பிற இனங்களின் மொழிகளிலிருந்தும், ஆங்கில மொழியில் இருந்தும் தமிழ்மொழிக்குப் பல சொற்கள் வந்தடைந்துள்ளன.

பிறமொழிச் சொற்கள் அளவோடு இருப்பது தமிழ்மொழியின் தொடர்சசிக்கும் தனித்துவத்திற்கும் அவசியமானது. ஆகையால் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்மொழியின் அடிச்சொற்களில் இருந்து உருவாக்கப்படும் சொற்களைப் பயன்படுத்துவது நன்று என்ற கருத்தைப் பல எளிய தமிழ் ஆதரவாளர்கள்

முன்வைக்கின்றனர். இக்காலத்தில் குறிப்பாக ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ் அடிச்சொற்களில் இருந்து உருவாக்கப்பட்ட சொற்கள் பயன்படுத்தப்படவேண்டும் என்பது பல தமிழ் ஆர்வலர்களின் வேண்டுகோளாக அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

தமிழ்மொழியில் அறிவியலைப் படைக்க கலைச்சொல்லாக்கம் மிக முக்கியமான ஒன்றாகும். இது தமிழ்மொழியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஒரு செயல்பாடாகவே உள்ளது. இக்காலத்தில் தமிழக இலங்கை அரசுகளின் பல்கலைக்கழகங்கள் ஊடாகவும் தமிழ் தன்னார்வலர்களாலும் இப்பணி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

**செம்மொழி ஒப்புதல்**

கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு, பாரசீகம், அரேபியம் ஆகியவற்றைக் காட்டிலும் தமிழ் இலக்கியங்கள் அதிக கருத்துக்களை உடையது. இருப்பினும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல தமிழ் அமைப்புகள் மற்றும் அறிஞர்களின் நீண்டகால முயற்சிகளைத் தொடர்ந்தே இந்திய அரசினால் தமிழ் ஒரு செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாறு அங்கீகாரம் பெற்றுள்ள முதல் இந்திய மொழி தமிழாகும். இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டமொன்றில் 2004 ஆம் ஆண்டு சூன் 6 ஆம் நாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களால் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டது.

## 21. தெலுங்கு மொழி

| | |
|---|---|
| நாடு | : இந்தியா |
| பேசப்படும் இடம் | : ஆந்திரப்பிரதேசம் மற்றும் இம்மாநிலத்தின் அண்டை மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா போன்ற மாநிலங்கள். |
| பேசுபவர்கள் | : 75 மில்லியன் (2007) |
| மொழிக்குடும்பம் | : திராவிட மொழிக் குடும்பம்<br>மத்திய தெற்கு<br>தெலுங்கு மொழிகள்<br>தெலுங்கு |
| எழுத்துமுறை | : தெலுங்கு எழுத்துக்கள் (பிராமி)<br>தெலுங்கு பிரெய்லி |
| அதிகாரப்பூர்வ மொழி | : இந்தியா |

திராவிட மொழிகளுள் ஒன்றான தெலுங்கு மொழி இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றான ஆந்திராவின் ஆட்சிமொழியாக உள்ளது. இம்மொழி சட்டீகர், கர்நாடகா, தமிழ்நாடு, ஒடிசா, ஏனாம், மகாராஷ்டிரா, மற்றும் மத்திய ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரியிலும் குறைந்த அளவு பேசப்பட்டு வருகிறது. இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் அதிகமான எண்ணிக்கையில் தெலுங்கு மூன்றாவது இடத்திலும் வரலாற்று வரிசையில் உலக அளவில் பேசப்படும் மொழிகளில் அதிகமான எண்ணிக்கையில் தெலுங்கு பதிமூன்றாவது இடத்திலும் உள்ளது. தெலுங்குமொழி குடியரசு அட்டவணை மொழிகளுக்குட்பட்ட 22 மொழிகளில் இதுவும் ஒன்றாகும்.

**வரலாறு**

தெலுங்கு என்பது திராவிட மொழிக் குடும்பங்களிலிருந்து கி.மு. 1500 100 வது வருடங்களில் சிதறிய மொழிகளில் ஒன்றாகும் என ரஷ்ய மொழியியலாளர் M.S.ஆண்ட்ரோவ் குறிப்பிட்டுள்ளார். ஆரம்பக்

காலத்தில் தெலுங்கு மொழிகள் மகாராஷ்டிர மொழி கவிதைகளிலும் இடம் பெற்றுள்ளன. கல்வெட்டுகளிலும் தெலுங்கு வார்த்தைகள் கி.மு. 400களில் இடம்பெற்றுள்ளன. இடைக் காலத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. 13 ஆம் நூற்றாண்டில் பேச்சு மொழியில் உள்ளவற்றைக் கவிதைகளில் எழுதுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் கன்னட மொழி படிவத்திலிருந்து தெலுங்கு படிவங்கள் தனித்தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டது.

**மொழிக் குடும்பம்**

தெலுங்கு திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். திராவிட மொழியினைத் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூவகையாகப் பிரிப்பர். இதில் தெலுங்கு நடுத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

தொன்மை சிறப்பிலும் சொல் வளத்திலும் தெலுங்கு மொழியைத் தமிழுக்கு அடுத்த நிலையில் குறிப்பிடலாம். இதன் இனிமை கண்டே இதனைச் சுந்தரத் தெலுங்கு என்று பாரதியாரும், 'களி தெலுங்கு' என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் பாராட்டிச் சென்றுள்ளனர். ஐரோப்பியர்கள் இம்மொழியினை ஜெண்டு (gentiles என்ற போர்த்துக்கீசிய சொல்லின் திரிபு) என்று அழைத்தனர். தமிழ்நாட்டின் வடக்கேயுள்ள ஆந்திரப் பகுதியில் இம்மொழி பேசப்படுகின்றது. வடமொழியியாளர்கள் இம்மொழியினை 'ஆந்திரம்' என்றே அழைத்து வந்தனர். இம்மொழியின் பெயர்க் காரணத்தை ஆராய்பவர்கள் இம்மொழியானது த்ரிலிங்கள் (trilinga மூன்று கோயில்கள்) என்பதிலிருந்து உருவாக்கப்பட்டது என்பர். மேலும் அது மூன்று லிங்க தேசமாகக் கருதப்பட்டது. இந்துக் கடவுளான சிவன் லிங்கமாக மூன்று மலையிலிருந்து உருவானதாகவும், அந்த மலைகளான காளீ வரா, ஸ்ரீஷைலா, பீமே வரா ஆகிய மலைகளின் எல்லைப் பகுதியே தெலுங்கு நாடாகவும் கருதப்பட்டது

தெலு (Telu) என்றால் 'வெள்ளை' என்றும், யுங்கா (Unga) என்றால் 'கொண்டி' என்பதன் பன்மை என்றும் மேற்பள்ளி ராமசந்திர சா திரி கூறுகிறார்.

**பேச்சு வழக்கு**

வேதர், வேடா, சேன்ச்சு, சவாரா மற்றும் மன்னா டோரா ஆகியவை தெலுங்கோடு ஒன்றுபட்டு காணப்படுகிறது. தெலுங்கானது பேச்சு மொழியாகப் பிராட், தசரி, தமோரா, கொளாரி, கமாத்த, காம்டௌ, கோண்டா, ரெட்டி, சாலிவெரி, தெலுங்கானா, வாரங்கல், மகபூப்நகர் (பாலுமுரு) காட்வால் (ராயசீலிமா) நாராயண்பேட்டை (கன்னட

மற்றும் மராத்தி செல்வாக்கு, விஜயவாடா, வடகா, ஸ்ரீகக்குளம், விசாகப்பட்டினம், டூர்பு (கிழக்கு) கோதாவரி, பா சிமா (மேற்கு) கோதாவரி, கண்டுலா, (ராயசிலிமா, நெல்லூர், பிரகாசம், குண்டூர், திருப்பதி, வடரி மற்றும் எயனடி ஆகிய பகுதிகளில் தெலுங்கு பேச்சு வழக்கு மொழியாக உள்ளது.

தமிழ்நாட்டில் தெலுங்கானது பரவலாகச் சேலம், கோயம்புத்தூர், வேலூர், திருவண்ணாமலை, சென்னை ஆகிய பகுதிகளில் பேசப்பட்டு வருகிறது. விருதுநகர், தூத்துக்குடி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது.

**புவியியல் பகிர்வு**

தெலுங்கு மொழியானது அதிக அளவில் ஆந்திரபிரதேசம் மற்றும் புதுச்சேரியில் உள்ள ஏனாம் மாவட்டத்திலும் பேசப்படுகிறது. அதேபோல் அண்டை மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, ஒரிசா, சட்டீ கர், ஜார்கண்டின் சில பகுதிகள் மற்றும் சாராபூர் நிலப்பரப்பான மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகிறது. இது மேலும் மிகப் பெரிய மாநிலங்களிலும் பேசப்படுகிறது. தெலுங்கு பேசப்படும் மக்களின் எண்ணிக்கை 800000ஐ தாண்டியுள்ளது. இம்மொழி நியூஜெர்சி, ஆ திரேலியா, நியூசிலாந்து, பஃரைன், கனடா, பிஜி, கனடா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசிய , அயர்லாந்து, தென் ஆப்பிரிக்கா, ட்ரைனிடாடு மற்றும் டொபாகோ, அரபு நாடுகள், இலண்டன் மற்றும் ஐரோப்பிய பகுதிகளிலும் பெருமளவில் பேசப்பட்டு வருகிறது.

7.2 விழுக்காடு மக்கள் பேசும் மொழியாகவும், அதிகமாகப் பேசப்படும் மொழிகளில் ஹிந்தி மற்றும் பெங்காலி மொழிகளுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் தெலுங்கு உள்ளது. கர்நாடகாவில் 7 விழுக்காடு மக்களும். தமிழ்நாட்டில் 5.6 விழுக்காடு மக்களும் தெலுங்கு மொழியைப் பேசுகின்றனர்.

**எழுத்து முறை**

**உயிரெழுத்துக்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| అ | ఆ | ఇ | ఈ | ఉ | ఊ | ఋ |
| a | ā | i | ī | u | ū | ṛ |
| [ʌ] | [a:] | [i] | [i:] | [u] | [u:] | [ri/ru] |
| ౠ | ఎ | ఏ | ఐ | ఒ | ఓ | ఔ |
| ṝ | e | ē | ai | o | ō | au |
| [ri:, ru:] | [e] | [e:] | [aj] | [o] | [o:] | [aw] |

## மெய்யெழுத்துக்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| క | ఖ | గ | ఘ | ఙ | చ | ఛ | జ | ఝ | ఞ |
| ka | kha | ga | gha | ṅa | ca | cha | ja | jha | ña |
| [kʌ] | [kʰʌ] | [gʌ] | [gʱʌ] | [ŋʌ] | [ʧʌ] | [ʧʰʌ] | [ʤʌ] | [ʤʱʌ] | [ɲʌ] |
| ట | ఠ | డ | ఢ | ణ | త | థ | ద | ధ | న |
| ṭa | ṭha | ḍa | ḍha | ṇa | ta | tha | da | dha | na |
| [ʈʌ] | [ʈʰʌ] | [ɖʌ] | [ɖʱʌ] | [ɳʌ] | [tʌ] | [tʰʌ] | [dʌ] | [dʱʌ] | [nʌ] |
| ప | ఫ | బ | భ | మ | య | ర | ల | వ | ళ |
| pa | pha | ba | bha | ma | ya | ra | la | va | ḷa |
| [pʌ] | [pʰʌ] | [bʌ] | [bʱʌ] | [mʌ] | [jʌ] | [rʌ] | [lʌ] | [ʋʌ] | [ɭʌ] |
| శ | ష | స | హ | | | | | | |
| śa | ṣa | sa | ha | | | | | | |
| [ɕʌ] | [ʂʌ] | [sʌ] | [hʌ] | | | | | | |

## இணைப்பு மெய்யெழுத்துக்கள்

### Conjunct consonants

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| క్క | క్ఖ | క్గ | క్ఘ | క్ఙ | క్చ | క్ఛ | క్జ | క్ఝ |
| kka | kkha | kga | kgha | kṅa | kca | kcha | kja | kjha |
| క్ఞ | క్ట | క్ఠ | క్డ | క్ఢ | క్ణ | క్త | క్థ | క్ద |
| kna | kṭa | kṭha | kḍa | kḍha | kṇa | kta | ktha | kda |
| క్ధ | క్న | క్ప | క్ఫ | క్బ | క్భ | క్మ | క్య | క్ర |
| kdha | kna | kpa | kpha | kba | kbha | kma | kya | kra |
| క్ల | క్వ | క్ళ | క్శ | క్ష | క్స | క్హ | | |
| kla | kva | kḷa | kśa | kṣa | ksa | kha | | |

**எழுதும் முறை**

தெலுங்கு எழுத்தானது இடப்புறமிருந்து வலப்புறம் நோக்கி எழுதப்படுகிறது. இது மேலும் எளிய மற்றும் பல பாகங்களைக் கொண்டு காணப்படுகிறது. எழுத்தானது உயிர் எழுத்துகளையும் மெய் எழுத்துக்களையும் கொண்ட சொற்தொகுதியாகவும் உள்ளது. இச்சொற்றொகுதி அடிப்படையில் உயிரெழுத்துகளைக் கொண்டே அமைந்துள்ளது. மெய்யெழுத்தானது ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் காணப்படும். இது சுத்த மெய்யெழுத்து எனப்படுகிறது. ஏனெனில் உயிரெழுத்து எதுவும் இல்லாமல் எழுத்துக்கள் எவையுமே இல்லை எனலாம். மெய்யெழுத்துகள் 'ய' உயிரெழுத்துக்கள் ஓசையில் பொருள் தொக்கி நிற்குமாறு அமைந்துள்ளது. மேலும் மெய்யெழுத்துக்கள் பல உயிரெழுத்துகளின் குறியீடுகளைச் சுட்டிக்காட்டுவனவாகவே உள்ளன. இந்த வடிவத்தில் உள்ள உயிரெழுத்துக்கள் ஆயயவசயள எனப்படுகின்றன. இது மேலும் பல்வேறு வடிவத்திலும் காணப்படுகிறது.

பொதுவாக இவை *60* குறியீடுகளையும், *16* உயிரெழுத்துக்களையும், சிறு மாறுதல் கொண்ட *3* உயிரெழுத்துக்களையும் மற்றும் *41* மெய்யெழுத்துக்களையும் கொண்டுள்ளன. இடைவெளிகள் வார்த்தைக்கு இடையிலும் தனி வார்த்தைகளிலும் பயன்படுத்தப் படுகின்றன.

வாக்கியங்களின் முடிவில் எப்பொழுதும் ஒற்றைக்கோடு (Purna Vivamam) அல்லது இரட்டைக் கோடு (Deergha Vivamam) உள்ளது. பாரம்பரியமாகக் கையெழுத்துகளில் தெலுங்கு வார்த்தையானது இடைவெளியைத் தனியாகக் குறிப்பிடுவதில்லை. புதிய காற்புள்ளி, முற்றுப் புள்ளி, முக்காற்புள்ளி ஆகியவை அச்சுப் பதிவுகளில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் எண்ணிக்கையில் குறிப்பிட்ட எண்கள் உள்ளன. இருப்பினும் அரேபிய எண்கள் அச்சுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**எண்கள் முறை**

தெலுங்கானது தனிப்பட்ட வரிசை முறையைக் கொண்டுள்ளது. அவை பின்வருமாறு:

**எழுத்துத் தொகுதி**

தெலுங்கு மொழியானது *60* குறியீடுகளையும், *16* உயிரெழுத்துகளையும் *3* சிறு உயிரெழுத்துகளையும், *41* மெய்யெழுத்துகளையும் கொண்டுள்ளது.

சமகிருதமும் தெலுங்கும் எழுத்துத் தொகுதியில் பல ஒற்றமைகளுடன் காணப்படுகின்றன. தெலுங்கு ஒரு முழுமைபெற்ற சொல் தொகுதியாகவும், பலவிதமான ஓசையுடையதாகவும் காணப்படுகிறது.

தெலுங்கில் முழு பூஜ்யம் (anusvara-o, அரை பூஜ்யம் (arthanusvara or andrabindu-c) மற்றும் visarga *(:)*. இவை மாறுபட்ட நாசி ஒலியைக் கொண்டு காணப்படுகின்றன. லா, ரா, றா ஆகியவையும் மாறுபட்டுக் காணப்படுகின்றன.

**இலக்கியங்கள்**

திராவிட இலக்கிய மொழிகளில் இதுவும் ஒன்று. இம்மொழி பற்றியும் இம்மொழி பேசும் மக்களைப் பற்றியும் உள்ள குறிப்புகளை இராமாயணம், மகாபாரதம் ஆகிய காப்பியங்களில் காணமுடியும். இந்தக் காப்பியங்கள் இம்மக்கள் தண்டகாரணியப் பகுதிகளில் வாழுகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளது. அசோகனுடைய கல்வெட்டுகளிலும் மௌரியப் பேரரசின் நினைவுச் சின்னங்களிலும் இம்மக்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் மிக வலிமை பெற்று அரசு ஒன்றினை நிறுவினர்.

இத்தகைய ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டிருந்த போதிலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் இம்மொழியின் முதல் எழுத்துருவைக் காணமுடிகிறது. எனினும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இது தனியொரு மொழியாக வளர்ந்திருத்தல் வேண்டும். கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சாதவாகன அரசர்கள் தெலுங்கு மொழியினர் என்பதும், ஒரிசாவில் வாழ்ந்த சேதி அரச வம்சத்தினரின் கல்வெட்டொன்றில் பழைய தெலுங்கு சொல் காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. கி.மு. இரண்டாவது நூற்றாண்டில் எழுதப்பட்ட பிராகிருத, சமகிருத கல்வெட்டுக்களில் தெலுங்குச் சொற்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலே இம்மொழிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்காலக் கல்வெட்டுகளில்தாம் தெலுங்கு மொழியின் முதல் எழுத்துருவங்களாக இக்கல்வெட்டுகளைக் கருதுகின்றனர்.

தெலுங்கு மொழி வரலாற்றைப் பழைய காலம், இடைக்காலம், தற்காலம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

கி.பி. 1000 வரையுள்ள காலப்பகுதியைத் தெலுங்கு மொழியின் பழைய காலம் எனக் கூறலாம். இக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்கள் எவையும் இல்லையாயினும் பல கல்வெட்டுகள் பல

எழுதப்பட்டன எனவும் பல நாட்டுப் பாடல்கள் வழக்கிலிருந்தன என்று எண்ணுவதற்கு ஏற்ற நிலை இருந்தது எனவும் பலர் கருதுகின்றனர்.

கி.பி. 1000க்கும் 1800க்கும் இடைப்பட்ட காலப்பகுதியே இம்மொழி வரலாற்றின் இடைக்காலமாகக் கருதுகின்றனர். இக்காலப்பகுதியில் தான் இம்மொழியின் முதல் இலக்கியம் உருவாயிற்று. நன்னய பட்டர் என்பவரால் 1020 ஐ ஒட்டி எழுதப்பட்ட பாரதமே இம்மொழியின் முதல் நூல் ஆகும். இது சம்பு இலக்கிய வகையில் அமைந்தது. உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய இந்நூலில் காணப்படும் உரைநடை மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நன்னய்யாவின் காலத்தில்தான் இலக்கியத் தெலுங்கு என்றும் பேச்சுத் தெலுங்கு என்றும் இரண்டு வகைக் கிளை மொழிகள் இருந்தன என்றும் அதில் நன்னய்யா இலக்கியத் தெலுங்கிலேயே தம் நூலை யாத்தார் என்றும் கூறுவர். இவருடைய பாரதத்தில் சம கிருதச் சொற்களே அதிகம் காணப்படுகின்றன. மூன்றில் ஒரு பகுதியே தூய சொற்கள் காணப்படுகின்றன. இவர் தன்னுடைய நூலைச் சம கிருத கவிதை ஒன்றைக் கூறியே தொடங்குவதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வைணவமும் சைவமும் (வீரசைவம்) மிக்க செல்வாக்குடன் விளங்கின. இந்த நிலையில் இச்சமயங்களைச் சார்ந்த நூல்கள் பல உருவாகின. நீதிசாரம், பசவபுராணம், அனுபவபுராணம், குமார சம்பவம் போன்றவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள் நீதிசாரம் சோமனதா என்பவரால் இயற்றப்பட்டது.

திக்கண்ணா 13 ஆம் நூற்றாண்டிலும், எறன்னா 14 ஆம் நூற்றாண்டிலும் மகாபாரதத்தை மொழிபெயர்த்ததைத் தொடர்ந்து பாரதக் கதையை நிறைவு செய்தனர்.

இக்காலத்தில் தெலுங்கு மொழி மேலும் செழிப்படைந்தது எனலாம். நாச்சன்ன சோமா, ஸ்ரீநாதா, வேமுல பாட பீமகவி, வித்தியாரணிய மாதவா போன்ற கவிஞர்கள் இந்நூற்றாண்டில் வாழ்ந்தனர். இவர்களுள் நாச்சன்ன சோமா, உத்தர ஹரிவம்சா, வசந்தவிலாசம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

சிறந்த அறிவும் கவிதையாற்றலும் கொண்ட ஸ்ரீநாதா சிருங்கார நைஷதா, பல்நாட்டி வீரசரித்திரம், வீதி நாடகம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். நளதமயந்தி கதையைக் கூறும் நைஷதா இவரது கவிதைத் திறனுக்கும் கற்பனை வளத்திற்கும் பெயர் பெற்றது.

இந்தக் காலக்கட்டத்தில் தெலுங்குக் கவிஞர்கள் சம கிருதக் கவிதை மற்றும் நாடகங்களை மொழிபெயர்த்தனர். அதே சமயத்தில் சிலர்

தெலுங்கு மொழியிலேயே சில கவிதைகளை எழுதினர். பிரபலமான தெலுங்கு இலக்கியமான 'பிரபந்தா' இக்காலத்தில் உருவாக்கப்பட்டது. ஆரம்பக் காலத்தில் எழுதப்பட்ட இராமாயணம், இரங்கநாதா இராமாயணம் எனப்பட்டது. இதை எழுதியவர் கோன புத்த ரெட்டி ஆவார். கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரையிலும் தெலுங்கு இலக்கியம் மொழிபெயர்ப்பு இலக்கியமாகவே இருந்தது.

கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டு தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலம் ஆகும். ஏனெனில் அக்காலக்கட்டம் கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக் காலம் ஆகும். கிருஷ்ண தேவராயரே சிறந்த அறிஞராக இருந்ததால் இலக்கியங்கள் இக்காலக்கட்டத்தில் நல்லதொரு வளர்ச்சியை அடைந்தன. இவரது காலத்தில்தான் பிரபந்தங்களும் காவியங்களும் எழுந்தன. இதனால் இக்காலப் பகுதியைப் பிரபந்தகாலம் என்றழைப்பர்.

கிருஷ்ண தேவராயர் சிறந்த கவிஞராக விளங்கினார். ஆமுக்த மாலியதா (சூடிக்கொடுத்த நாச்சியார்) போன்ற காவியங்களை இயற்றினார். மேலும் இவரின் அவையில் இருந்த அல்சானி பெத்தனா தெலுங்கு இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒருவர் ஆவார். இவருடைய 'மனு சரித்திரம்' இன்றும் சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது.

இத்தகைய வளர்ச்சிகளைக் கண்ட தெலுங்கு இலக்கியம் இன்று பல துறைகளிலும் முன்னேறியிருக்கிறதைக் காண முடிகிறது. பிற மொழிகளைப் போன்றே ஐரோப்பியர்களின் வரவால் இதுவும் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டது. இம்மொழியில் முதல் அச்சுப் புத்தகம் கி.பி. 1796 இல் உருவானதைத் தொடர்ந்து பல நூல்கள் தோன்றின.

மேனாட்டுப் பாணியில் பல உரைநடை நூல்களும் நாடக நூல்களும் உருவாகின. சின்னய்ய சூரியின் கைவண்ணத்தில் புதியதோர் உரைநடை உருவாயிற்று. இந்நடையில்தான் வீரசலிங்கம், பந்தலு போன்றவர்கள் வந்தனர். இவருடைய உரைநடை பழமையைத் தழுவியிருந்த போதிலும் புதுமையும் சேர்ந்து விளங்கிற்று எனலாம். பேச்சுத் தமிழைப் புகுத்தி வெற்றி கண்ட எழுத்தாளர்கள் புதியதொரு நடையை உருவாக்கினர். பழைய தெலுங்கினைப் பயன்படுத்துவதா அல்லது புதிய பேச்சு மொழியினைப் பயன்படுத்துவதா என்ற வாதம் இன்றும் ஓய்ந்த பாடில்லை. எனினும் புதிய பேச்சுமொழி மெல்ல மெல்லப் புகுந்து இலக்கியத்தில் ஏறிவிட்ட நிலையை இன்று காணலாம். கிடுகி ராமமூர்த்தி பந்துலு இதற்கு வித்திட்டவர் ஆவார்.

சிறுகதை, புதினம் போன்ற துறைகளில் எல்லாம் இன்று பேச்சுமொழி புகுந்துள்ளது. அத்துறைகளும் நன்கு வளர்ந்துள்ளன. யூதாசரதி, நோரி நரசிம்ம சா திரி, ராய்புரோலு சுப்பராவ், குடும்பராவ் போன்றவர்கள் தெலங்கு இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். பிரபலமானவர் களின் பெயர்களின் முன் ஸ்ரீஸ்ரீஸ்ரீ எனச் சேர்க்கப்படுவது தெலுங்குப் பேச்சு வழக்கில் அதிகம் காணப்படுகிறது.

வி வநாத சத்யநாராயணா இலக்கியத்திற்கான ஞானபீட விருது பெற்றுள்ளார். சி.நாராயண ரெட்டியும் இலக்கியத்திற்கான விருதைப் பெற்றுள்ளார். மேலும் குண்டுர ஷேசாந்திர சர்மாவும் மிகச்சிறந்த தெலுங்குக் கவிஞர் ஆவார். இவரும் சாகித்ய அகாதமி விருது பெற்றுள்ளார். இவரது மற்றொரு சிறந்த படைப்பு நாதேசம், நா பிரஜாலு (My Country, My People என் நாடு என் மக்கள்). 2004 ஆம் ஆண்டு நோபல் பரிசுக்கு இப்படைப்புப் பரிந்துரை செய்யப்பட்டது. இந்நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**இலக்கணம்**

தெலுங்கு இலக்கணம் வியாக்கரணம் என்று அழைக்கப்படுகிறது. முதல் தெலுங்கு இலக்கணம் ஆந்திர சப்த சிந்தாமணி ஆகும். தெலுங்கு மொழி எண்களில் ஒருமை பன்மை மற்றும் பாலினத்தில் ஆண்பால், பெண்பால் மற்றும் ஆண் பெண் வேறுபாட்டிலும் அமைப்பு முறையை உருவாக்கியுள்ளது. எழுவாய் முதல் வேற்றுமை, செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமை, கருவிப்பொருள் 3 ஆம் வேற்றுமை, மறைமுகச் செயப்படு பொருள் 4 ஆம் வேற்றுமை, நீங்கற்பொருள் வேற்றுமை 5 ஆம் வேற்றுமை, உடைமை வேற்றுமை ஆறாம் வேற்றுமை, இட வேற்றுமை 7 ஆம் வேற்றுமை ஆகியவற்றையும் தெலுங்கு மொழி அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**பிரதிப் பெயர்ச் சொற்கள்**

தெலுங்கில் உள்ள பிரதிப்பெயர்ச் சொல்லானது, மனிதன் தான் பேசுவது, பிறரைப் பற்றிப் பேசுவது, தன்னைப் பற்றிப் பேசுவது என்ற அமைப்பில் பலவாறு காணப்படுகிறது.

தெலுங்கு மொழியானது ஒருமையில் பெண்பால் மற்றும் (ஆண், பெண் வேறுபாடற்ற பாலின) இந்தப் பாலினம் என்பது விலங்கினங்களைக் குறிக்கிறது. எழுவாய் வேற்றுமை (கார்டா) என்றும், வினைச் சொல்லின் பொருள் (கர்மா) என்றும், மற்றும் வினைச்சொல் வரிசையையும் வாக்கியங்களையும் உருவாக்குகிறது. வினைவேற்றுமை (விபாக்தி), வினை வேற்றுமை (பிரத்யாயமுலு) வார்த்தைக்கான வேர்ச் சொற்களின் மூலம் மற்றும் பழங்கால மொழி

அமைப்புகள் அனைத்தும் மொழி வளர்ச்சி அமைப்பில் அமைந்துள்ளன. (விபாக்தி) தெலுங்கு அமைப்பானது (Du) (Mu) (Vu) (1U) ஆகிய வேறுபட்ட அமைப்புகள் சம கிருத மொழிகளிலும் பல நாள்கள் பயன்படுத்தப்பட்டன.

## சொற்றொகுதி (Vocabulary)

தெலுங்கில் சம கிருதத்தின் செல்வாக்கானது சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததற்கான ஆதாரம் பழைய மூலங்களில் காணப்படுகிறது. கி.பி. 1000 1100 நன்னய்யாவால் மகாபாரதம் தெலுங்கில் திருத்தி எழுதப்பட்டது.

தெலுங்கின் சொற்றொகுதியானது பெர்சியன் அரபிக் பகுதியிலிருந்து பெறப்பட்டது. முக்கியமாகத் தெலங்கானா நிலப் பரப்பிலிருந்து மேலும் பலி ஒலி ஓசைகள் மாறிக் காணப்படுகின்றன. இதற்கான காரணம் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து மு லீம்களின் ஆட்சி அமைப்பே ஆகும்.

புதுத் தெலுங்குச் சொற்றொகுதிகளானவை பல மாற்றங்களோடு காணப்படுவதற்கான காரணம் சம கிருத மொழியின் செல்வாக்கே ஆகும். ஏனெனில் சம கிருத மொழி பெரும்பாலும் இந்துக் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் கற்பிக்கப்படுகிறது. இருப்பினும் தெலுங்கானது பல விதங்களில் பல்வேறுபட்ட மாறுதல்களைப் பெற்றுக் காணப்படுகிறது.

## ஒலி அமைப்பு

தெலுங்கு மொழி பொதுவாக உயிரெழுத்துகளின் முடிவில் பாலி மொழியை ஒத்துள்ளது. பழைய தெலுங்கு முழுவதுமாக இதே போன்று உள்ளது. ஆனால் புதுத் தெலுங்கானது அ, ே, ல, ற ஆகிய எழுத்துகளில் முடிகிறது. திராவிட மொழிகளில் பெரும்பாலும் மெய்யெழுத்துகள் தெளிவாகப் புரியும் வகையில் அமைந்துள்ளன. சம கிருத மொழியில் மெய்யெழுத்தானது தெளிவற்ற முறையில் உள்வாயில் உச்சரிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

தெலுங்கு ஒலி அமைப்பில் பேசுபவர்கள் வேறுபடுத்திக் காண்பதற்கேற்ப அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்தும் உயிரெழுத்துகளைச் சார்ந்தே அமைந்துள்ளன.

## இலக்கண நூல்கள்

தெலுங்கு மொழி இலக்கண நூல்கள் சம கிருதம் அல்லது தமிழ் மொழியின் இலக்கணம் போன்று விரிவானவை அல்ல. தமிழில் ஐந்து வகை இலக்கணங்கள் சொல்லப்படினும் (எழுத்து, சொல், பொருள்,

யாப்பு, அணி) எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் முதன்மை பெற்று விளங்குவதைக் காண்கிறோம். ஆனால் தெலுங்கு இலக்கண நூல்களில் இந்நிலையைக் காண முடிவதில்லை. பல நூல்கள் யாப்பு அமைதியைப் பற்றியே விரிவாகக் கூறுவதும் அந்நூல்களின் ஒரு பகுதியாக எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் பேசப்படுவதும் இந்நிலையினை நன்கு காட்டும்.

தெலுங்கு மொழி இலக்கணங்கள் பொதுவாகச் சம கிருத இலக்கணங்களின் தழுவல்களாகவும் அவற்றை அடியொற்றியன வாகவும் காணப்படுகின்றன. இவ்விலக்கணங்கள் அனைத்துமே சொல்லினை வகைப்படுத்திக் கூறுவதிலும் அவற்றின் வரலாற்றைத் தெளிவுபடுத்துவதிலும் சம கிருதத்தோடு அதற்குரிய தொடர்பினைச் சுட்டிக் காட்டுவதிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளமையைக் காணலாம். பொதுவாக இவ்விலக்கண நூல்கள் சொற்களை

1. தற்சமம்
2. தற்பவம்
3. தேசியம்
4. கிராமியம்

என்று நான்கு வகையாகப் பிரித்துப் பேசுகின்றன. இவற்றுள் தேசியம் என்பது தனித் தெலுங்குச் சொற்களைக் குறிக்கும். ஆனால் கிராமியச் சொற்களோ தெலுங்குச் சொற்களாயினும் இலக்கியப் பெருமை இல்லாத பேச்சுச் சொற்களைக் குறிப்பனவாகும். இச்சொற்களைக் கவிதைகளில் பயன்படுத்தலாமா பயன்படுத்தலாகாதா என்ற விவாதத்திலும் இவ்விலக்கண நூல்கள் இறங்கி உள்ளன.

தெலுங்கு மொழி இலக்கணங்கள் சந்தி பற்றிப் பேசினும் இதில் அத்துணைக்குத் தெளிவு இல்லாமையைக் காணலாம். ஆந்திரசப்த சிந்தாமணி போன்ற நூல்கள் சந்தி என்றால் என்ன என்பதைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பர். எனினும் அதற்குப் பின்னர் வந்த இலக்கண நூல்கள் ஓரளவுக்குச் சந்தி பற்றித் தெளிவுபடுத்தியுள்ளன.

பண்டைக் காலத்தில் தெலுங்கில் பாணினியம் மிகச் செல்வாக்குடன் விளங்கியது. பாணினியின் அஷ்டாத்தியாயி பதஞ்சலியின் மகாபாஷ்யம், யா காவின் நிருத்தா ஆகிய மூன்று நூல்களும் தெலுங்கு இலக்கணக்காரர்களின் உள்ளத்தினை ஊடுருவி நின்றன. ஆந்திரசப்த சிந்தாமணியை எழுதிய நன்னய்யாவைப் பாணினியுடனும், அதர்வண கரிகாவளியை எழுதிய அதர்வணாவைக் கார்த்தியாயணாவுடனும், அகோபலதியைப் பதஞ்சலியுடனும் ஒப்பிட்டுப் பேசுவர். இந்த மூன்று இலக்கண நூல்களும் சம கிருத

மொழியில் எழுதப்பட்டவை என்பதும் சம கிருத மொழி இலக்கண நூல்களைப் பின்பற்றிச் செல்வது என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இம்மூவரும் சம கிருத மொழியிலும் தலைசிறந்தவர் களாவர். இவர்கள் கூறியுள்ள பல்வேறு இலக்கணக் கூறுகளின் விளக்கங்களும் தெலுங்கு எழுத்துமுறை பற்றிய செய்திகளும் சொற்களை வகைப்படுத்தியுள்ள முறைமையும் வினைச் சொற்களை விளக்குகின்ற பாணியும் சம கிருத மொழி இலக்கணங்களின் செல்வாக்கினைக் காட்டும்.

மேலும் தெலுங்கு இலக்கண நூல்களில் காணப்படும் கலைச்சொற்களும் சம கிருத மொழியின் செல்வாக்கினை நன்கு காட்டுவனவாக உள்ளன. சந்தி, சமாசா (compound), விபக்தி (case), கிரியா (verb), அச்சு (vowel), ஹல்லு (consonant), அவ்வியயம் (Indecinables), மாத்ரா (Mora), அந்த த்தா (Semi-vowel), கர்த்தா (Subject), கர்மா (Object), கர்ணா (Instrumental) போன்ற பல்வேறு கலைச்சொற்கள் இந்நிலையைத் தெளிவுபடுத்தும்.

தெலுங்கு இலக்கண நூல் ஆசிரியர்கள் எல்லா மொழிக்கும் சம கிருதமே மூலம் என எண்ணினர். எனவே தெலுங்கு இலக்கண நூல்களில் சொல்லப்படாத விதிகள் பலவற்றைச் சம கிருத இலக்கண நூல்களிலும் காணலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய கருத்தினை ஆந்திர சப்த சிந்தாமணி, அகோபல பண்டிதீயம், அதர்வணகாரிகாவளி, தெலுங்கு சப்தானுசாசனம் போன்ற பல நூல்களில் காணலாம்.

சம கிருதம் மட்டுமின்றிப் பிராகிருத இலக்கண நூல்களும் தெலுங்கு மொழியில் செல்வாக்கு பெற்றுள்ளன. வரருசி, ஹேமச்சந்திரா, வால்மீகி அல்லது த்ரிவிக்கிரமா, மார்க்கண்டேயா போன்றவர்கள் பிராக்கிருத மொழியில் இலக்கணம் வகுத்தவர்கள் ஆவர்.

அதர்வணா, இலக்குச்சி, பாலசர வதி, அகோபலபதி, அப்பகவி போன்றவர்கள் இவ்விலக்கண நூல்கள் பற்றிக் குறிப்பிட்டு இருப்பதுடன் அவற்றில் காணப்படும் பல சூத்திரங்களையும் கையாண்டுள்ளனர். இது போன்றே ஹேமச்சந்திரா போன்ற ஆசிரியர்களைப் பற்றியும் தெலுங்கு இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பிராக்கிருத இலக்கணங்களில் காணப்படும் நியாய சூத்திரங்கள் எடுத்தாளப் படுவதும் சூத்திர நடை பின்பற்றப்படுவதும் பிராக்கிருத நூல்களில் காணப்படுகின்ற தற்சமம், தற்பவர், தேசியம் என்ற மூவகை பகுப்பு காணப்படுவதும் அவற்றின் செல்வாக்கினைக் காட்டும்.

தெலுங்கு மொழியில் காணப்படுகின்ற இலக்கண நூல்களைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை சம கிருத மொழியில் எழுதப்பட்டவை சில. தெலுங்கு மொழியில் எழுதப்பட்டவை இன்னும் சில. இந்நூல்களைக் கவிதை நடையில் எழுதப்பட்டவை என்றும், சூத்திர நடையில் எழுதப்பட்டவை என்றும் பகுக்கலாம். ஆந்திர சப்த சிந்தாமணி, அதர்வண காரிகாவளி போன்றவை சம கிருதக் கவிதை நடையில் தோன்றியவை. வாசுதேவ விருத்தி, அகோபல பண்டிதீயம், வைக்குருத சந்திரிகா போன்றவை சூத்திர நடையிலும் உரைநடையிலும் தோன்றியவை ஆகும். ஆந்திரபாஷா பூஷணம், காவியாலங்கார சூடாமணி, ஆந்திர கௌமதி, கவிசம்சயவிச்சேதம் போன்றவை தெலுங்கு கவிதை நடையில் உருவானவை. ஆனால் பாலவியாகரணம், பிரௌட வியாகரண், ஆந்திரசப்தானு சாசனம் போன்றவை தெலுங்கு சூத்திர நடையிலும் தோன்றியவையாகும்.

## 22. உருது மொழி

நாடுகள் : பாகி தான், இந்தியா
பேசுபவர்கள் : 65 மில்லியன் (2007) கணக்கெடுப்பின்படி
மொழிக்குடும்பம் : இந்தோ ஐரோப்பிய
இந்தோ இராணிய
இந்தோ ஆரிய
மத்திய மண்டலம் (இந்தி)
மேற்கத்திய இந்தி
இந்து தானி
கரிபோலி
உருது
எழுத்துமுறை : உருது எழுத்துக்கள் (அரபு கிரிப்ட்)
தேவநாகரி
இந்திய உருது பிரெய்லி (பாரதி)
பாகி தான் உருது பிரெய்லி
அதிகாரப்பூர்வநிலை
உத்தியோகப்பூர்வநிலை : பாகி தான், இந்தியா (உத்திரபிரதேசம்), பீகார், ஆந்திர பிரதேசம், ஜம்மு, காஷ்மீர், புதுதில்லி மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில்.

உருது என்ற சொல் துருக்கி மொழியின் ஊர்து என்ற வார்த்தையிலிருந்து தோன்றியது. டெல்லி சுல்தானா மற்றும் முகலாய மன்னர்களில் காலம் உருதுமொழியில் எழுதப்பட்ட பிரிட்டிஷ்ராஜ், இந்து தானி ஆகியவை இந்து மற்றும் மு லீம்களுக்கு உரியதாய் இருந்தன. இம்மொழி ஹிந்தி, ஹிண்டாவி மற்றும் டோக்லாவி என அறியப்பட்டது. 1837 ஆம் ஆண்டில் உத்யோகபூர்வ மொழியான பாரசீகத்திற்குப் பதிலாக ஆங்கிலம் சேர்ந்தது. இது இனவாத பண்பை நீட்டித்தது.

இந்நிலையில் வடமேற்கு இந்தியாவில் இம்மொழியானது தேவ நாகரியில் எழுதப்படவேண்டும் என்று வாதிட்டனர். இதனால் இந்து

மதத்திற்குப் பின்னடைவு ஏற்படும் என்று கருதியதால் எழுந்த புதிய இலக்கியப் பதிவே இந்தி ஆகும். எனவேதான் உருதுமொழி ஒரு இந்து மு லீம் பிரிவிற்கான இனவாத நிறுவியாக அமைந்தது. 1881 இல் பீகாரில் அதிகாரப்பூர்வ மொழியாகப் பாரம்பரிய இந்து தானி பயன்படுத்தப்பட்டது. இந்தியச் சுதந்திரத்திற்குப் பின் உருது பாகி தானின் தேசிய மொழியாகவும் உள்ளது.

தூய்மையான உருது மற்றும் இந்திச் சொற்றொகுதியில் அதிகமாகப் பாரசீகம் மற்றும் சம கிருதத்தில் இருந்து சொற்களைக் கடன்பெற்றுள்ளன. தொடக்கத்தில் புதிய எழுத்துக்கள் பாரசீக அரபிய மொழியின் தாக்கம் உருதிலும் சம கிருதத்தின் தாக்கம் இந்தியின் சொற்றொகுதியிலும் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்த இரு மொழிகளிலும் பாரசீக மற்றும் சம கிருதத்தின் செல்வாக்கு மிகமிக அதிகமாகவே இருந்தது. ஆங்கிலம் துணை அதிகாரப்பூர்வ மொழியாக (உத்தியோகபூர்வ மொழி) இருந்து இவ்விரண்டு மொழிகளிலும் அதிகமான செல்வாக்கைப் பெற்றிருந்தது.

**புவியியல் பகிர்வு**

உருதுமொழியை 60 முதல் 70 மில்லியன் வரை மக்கள் பேசுகின்றனர். இதில் 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவில் மட்டும் 52 மில்லியன் மக்கள் பேசுகின்றனர். இது இந்திய மொத்த மக்கள் தொகையில் 6% ஆகும். பாகி தானில் 13 மில்லியன் மக்கள் 2008 கணக்கெடுப்பின்படியும் இது பாகி தானின் மொத்த மக்கள் தொகையில் 8 சதவீதமும் ஆகும். இலண்டன், சவுதி அரேபியா, அமெரிக்கா, பங்களாதேஷ் ஆகிய பகுதிகளிலும் இம்மொழி பேசப்படுகிறது.

மாண்டரின், ஆங்கிலம், பானிஷ் மொழிகளுக்கு அடுத்தபடியாக உலகில் அதிக அளவில் பேசப்படும் மொழிகளில் இந்தி மற்றும் உருது நான்காவது இடத்தில் உள்ளன. இந்தி மற்றும் உருது மொழியை ஒரு கணிசமான அளவு மக்கள் இரண்டாவது மொழியாகவும் கொண்டுள்ளனர்.

பாகி தான் உருது மொழியானது சமீபத்தில் சில மாற்றங்களைக் கொண்டுள்ளது. பஷ்தூ, பஞ்சாபி, சிந்தி, பால்டி சில சொற்களைப் பெற்று மாற்றம் கண்டுள்ளது. இந்தியாவில் பேசப்படும் உருது சமீப காலங்களில் தென் இந்திய தக்ணி (டெக்கான்) மற்றும் பஞ்சாப் பகுதியின் கரிபோலி போன்ற வட்டார வழக்குகளிலிருந்து வேறு பட்டுள்ளது. எனினும் இந்தி மற்றும் உருது மொழியும் ஒற்றுமையுடன் காணப்படுகின்றன. இரண்டு மொழிகளின் பேச்சாளர்களும் எளிதாக

இவ்விருமொழிகளையும் புரிந்துகொள்ள முடியும். தொடரியல் (இலக்கணம்) அமைப்பியல் மற்றும் சொல்லகராதி அடிப்படையில் இம்மொழி ஒரேமாதிரியானவை. இதனை வல்லுநர்கள் பொதுவாக ஒரு ஒற்றை மொழி என எண்ணினாலும் சமூக அரசியல் காரணங்களுக்காக இவை இரண்டு வெவ்வேறு மொழிகளாகக் கருதப்படுகின்றன.

உருது மொழியானது தாய்மொழியாகவும், இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாக 93% மக்களால் பாகி தானில் பேசப்படுகிறது. உருது நகர் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பேசப்படுகிறது. கராச்சி, லாகூர், சியாகோட், ராவல்பிண்டி, இ லாமாபாத், முல்தான், பைசலாபாத், ஹைதெராபாத், பெஷாவர், குவெட்டா, ஜாங், சர்கோதா போன்ற நகர்ப்புற வாசிகள் பெரும்பான்மையாகப் பேசுகின்றனர். ஒவ்வொரு மாநிலத்திற்கென்று அடிப்படை மாநில மொழி மற்றும் பழங்குடி மொழிகள் இருந்தபோதிலும் பாகி தானின் அனைத்து மாநிலங்களிலும் உருது பயன்படுத்தப்படுகிறது. இந்தக் காரணத்திற்காகவே உருது மற்றும் ஆங்கில மொழியானது கட்டாயப் பாடங்களாக மேல்நிலைப்பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. அது மட்டுமின்றி இங்குச் சிறந்த பல செய்தித் தாள்களும் உருது மொழியில் வெளியிடப்படுகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை உருது மு லீம் சிறுபான்மையினரால் பேசப்படுகிறது. கடந்த காலத்தில் மு லீம் பேரரசுகள் இருந்த நகரங்களிலும் பேசப்படுகிறது. குறிப்பாக உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, லக்னோ, தில்லி, மீரட், பரேலி, சஹாரான்புர், முசாபர்நகர், ரூர்க்கி, தேவ்பாக், மொரதாபாத், அசம்கார்வர், ராம்பூர், அலகாபாத், கோரக்பூர், ஆக்ரா, கான்பூர், பாடாவுன், போபால், ஹைதராபாத், அவுரங்காபாத், பெங்களூர், கொல்கத்தா, மைசூர், பாட்னா, குல்பர்கா, மாலேகான், பிதார், அஜ்மீர், ஆகமதாபாத் ஆகிய இடங்களில் பேசப்படுகிறது. சில இந்தியப் பள்ளிகளில் உருது முதல்மொழியாகச் சொந்த பாடத்திட்டத்தின் மூலம் கற்பிக்கப்படுகின்றது. இந்தியாவிலுள்ள மதரசாக்களில் அரபுடன் உருதுமொழியும் கற்பிக்கப்படுகிறது. இந்தியாவில் 405 தினசரி செய்தித்தாள்கள் உட்பட 3000 வெளியீடுகள் உள்ளன.

தெற்கு ஆசியாவிற்கு வெளியே பாரசீக வளைகுடா நாடுகள் மற்றும் சவுதி அரேபியாவில் புலம்பெயர்ந்த தெற்கு ஆசிய தொழிலாளர்களால் பெரும் எண்ணிக்கையில் பேசப்படுகிறது. மேலும் உருது ஐக்கிய ராஜ்யம், அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, நார்வே, ஆ திரேலியா

மற்றும் முக்கிய நகர்ப்புற மையங்களில் புலம்பெயர்ந்தோர் மற்றும் அவர்களது குழந்தைகள் என அதிக எண்ணிக்கையில் பேசப்படுகிறது. புலம் பெயர்ந்த கட்லோனியா மக்களாலும் அரபு மற்றும் உருது பேசப்படுகிறது.

**அதிகாரப்பூர்வ நிலை**

உருது பாகி தானின் தேசிய மொழியாகும். இம்மொழி பாகி தானின் அதிகாரப்பூர்வ மொழி இரண்டனும் ஒன்றாகும். ஆங்கிலம் நாட்டு மக்கள் அனைவருக்கும் பேசவும் புரிந்து கொள்ளவும் கூடியதாக உள்ளது. பாகி தானில் 8% மக்களுக்கு மட்டுமே சொந்த மொழியாக இருப்பினும் அனைத்துத் தரப்பிலும் புரிந்துகொள்ளப்பட்ட மொழியாக இது விளங்குகிறது. இது கல்வி, இலக்கியம், அலுவலகம் மற்றும் நீதிமன்ற, வணிக மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. இம்மொழி நாட்டு கலாச்சார, சமூகப் பாரம்பரியத்தின் களஞ்சியமாக உள்ளது. ஆங்கிலம் மிக மேல்தட்டு வட்டாரங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

உருது இந்தியாவில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் ஒன்றாகும். உத்திரப்பிரதேசம், பீகார், ஆந்திரப்பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர், புதுதில்லி ஆகிய இந்திய மாநிலங்களில் உத்தியோகப்பூர்வ தகுதியைப் பெற்றுள்ளது.

காஷ்மீர் அரசியலமைப்புச் சட்டம் 145 இன்படி அரசின் அலுவல்நிலை மொழி உருது. ஆனால் ஆங்கில மொழியும் மாநில அலுவல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம் என அரசியலமைப்புத் தீர்வாயம் அறிவித்துள்ளது.

மு லீம் உலகில் உருது மிக முக்கியமானதாகும். மு லீம்களின் புனித நகரமாகிய மெக்கா, மெதினா, சவுதி அரேபியா ஆகிய பகுதிகளில் அரபு, உருது, ஆங்கிலம் பயன்பாட்டில் உள்ளன. சில நேரங்களில் மட்டுமே பிற மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**வட்டார வழக்கு**

உருதில் குறிப்பிட்ட சில வட்டார மொழிகள் மட்டுமே உள்ளன. அவை தக்ணி, ரேக்தா (நவீன வர்ணாகுலர்) கரிபோலியை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவழக்காகும். தக்காணி, தக்கண, தேசிய, மிர்கன் எனவும் அழைக்கப் படுகிறது. தக்ணி தென் இந்தியாவின் டெக்கான் பகுதியில் பேசப்படுகிறது. இது மராத்தி மற்றும் கொங்கனியின் சொல்லகராதி கலவையேயாகும். அதேபோல் உருது நிலையான பேச்சுவழக்கு அன்று. அரபு, பாரசீக மற்றும் துருக்கியிலிருந்துச் சில சொல்லகராதி மூலம் வேறுபட்டதாகும். தக்ணி

பரவலாக ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகாவின் அனைத்து பகுதிகளிலும் பேசப்படுகிறது. சில பகுதிகளில் உருது பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் உள்ளது. உருது தினசரி பத்திரிக்கைகள் மற்றும் பல மாதப் பத்திரிக்கைகள் பல மாநிலங்களில் வெளியிடப்பட்டது.

ஒடிசா மாநிலத்தில் பேசப்படும் உருதும் மற்ற பகுதிகளில் பேசப்படும் உருதும் வேறுபட்டதாகும். அது ஒரியா மற்றும் பிஹாரியின் ஒரு கலவையாகும்.

**சொற்களஞ்சியம்**

உருது மத்திய கிழக்குப் பகுதியில் தோற்றத்தின் வார்த்தைகள் நிறைந்த சொல்லகராதியைக் கொண்டுள்ளது. இம்மொழி இந்தோ ஆரிய அடிப்படை பாரசீக மற்றும் அரபு மொழிகளிலிருந்து சொற்களைக் கடனாகப் பெற்று வளம் பெற்றுள்ளது. ஷகதை, போர்த்துக்கீசியம் மற்றும் மிக சமீபத்தில் ஆங்கிலத்தில் இருந்தும் சிறிய எண்ணிக்கையிலான சொற்களைக் கடனாகப் பெற்றுள்ளது. பாரசீகத்தில் இருந்து அரபி வார்த்தைகளைப் பெற்றாலும்கூட உச்சரிப்புப் பொருளும் அரபில் வேறுபட்டு காணப்படுகிறது.

**எழுத்து முறை - உருது எழுத்துக்கள் மற்றும் உருது பிரெய்லி**



| د | خ | ح | چ | ج | ث | ٹ | ت | پ | ب | ا |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| دال | خے | حے | چے | جیم | ثے | ٹے | تے | پے | بے | الف |
| dāl | khe | ḥe | che | jīm | se | ṭe | te | pe | be | alif |
| d | kh | ḥ | c | j | s | ṭ | t | p | b | - |
| [d] | [x] | [h] | [ʧ] | [ʤ] | [s] | [ʈ] | [t] | [p] | [b] | [ɑ/ə] |

| ط | ض | ص | ش | س | ژ | ز | ڑ | ر | ذ | ڈ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| طوے | ضاد | صاد | شین | سین | ژے | زے | ڑے | رے | ذال | ڈال |
| toe | zvād | svād | šin | sīn | že | ze | ṛe | re | zāl | ḍāl |
| t | z | s | š | s | ž | z | ṛ | r | z | ḍ |
| [t] | [z] | [s] | [ʃ] | [s] | [ʒ] | [z] | [ɽ] | [r] | [z] | [ɖ] |

| ں | ن | م | ل | گ | ک | ق | ف | غ | ع | ظ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| نونِ غنہ | نون | میم | لام | گاف | کاف | قاف | فے | غین | عین | ظوے |
| nūn-e ğunnah | nūn | mīm | lām | gāf | kāf | qāf | fe | ğain | 'ain | zoe |
| ṅ | n | m | l | g | k | q | f | ğ | ' | z |
| [~] | [n] | [m] | [l] | [g] | [k] | [q] | [f] | [ɣ] | C_[ɑ]; [Ø/ʔ/ə] | [z] |

**உருது எழுத்துக்கள்**

உருது எழுத்து வலமிருந்து இடமாக எழுதப்படுகிறது. இது பாரசீக மற்றும் அரபு எழுத்து முறையில் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. உருது நா தாலிக் பாணியில் உருவாக்கப்பட்டுள்ள பெர்சியன் பத்திரிக்கையுடன் தொடர்புபடுத்தப்பட்டது. அரபு பொதுவாக நா தாக் மற்றும் ரூகாக் முறையில் எழுதப்பட்டதாகும்.

**காய்தி ஸ்கிரிப்ட்**

உருது காய்தி எழுத்து முறையில் எழுதப்பட்டது. உருது மிகவும் உயர்ந்த பாரசீக தொழில்நுட்ப வடிவத்தில் லிங்காபிராங்கா எனப்படும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் உள்ள நீதிமன்றங்களில் பீகார், பெங்கால் மற்றும் வடமேற்கு மாகாணங்களில் பயன்படுத்தப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை அனைத்துப் பதிவு நடவடிக்கைகள் மற்றும்

நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் பாரசீக எழுத்துமுறையில் அதிகாரப்பூர்வமாக எழுதப்பட்டன. *1880* ஆம் ஆண்டு வங்காள லெட்டினன்ட் கவர்னராக சர் ஆஷ்லே ஈடன் பீகார் நீதிமன்றத்தில் பாரசீக எழுத்துமுறை தவிர்த்து காய்தி எழுத்து முறையைப் பயன்படுத்த உத்தரவிட்டார். காய்தி எழுத்துமுறை இந்தியும் உருதும் இணைந்த எழுத்துமுறையாகும். அரசியல் சார்ந்த உரைகள் ஆகியவற்றில் மேற்காணும் எழுத்து முறை தவிர்க்கப்பட்டு பிரபலமான பிரத்தியேக எழுத்துமுறையைப் பயன்படுத்த உத்தரவிட்டார். அதன்படி பாரசீக எழுத்துமுறையிலான உருது பயன்படுத்தப்பட்டது.

### தேவநாகரி எழுத்துமுறை

இந்தியாவில் சமீபகாலமாக உருதுப் பேச்சாளர்கள் தாம் வெளியிடும் பருவ இதழ்களில் புதிய உத்திகளை மேற்கொள்ள எண்ணினர். அதன்படி அவ்விதழ்களில் உருது தேவநாகரி, இந்தி தேவநாகரி முறையைப் பயன்படுத்தினர். சில வெளியீட்டாளர்கள் தேவநாகரியில் புதிய உத்திகளைக் கொண்டுவர பெர்சிய மற்றும் அரபிய சொற்பிறப்பியலைப் பயன்படுத்தினர். பெர்சிய அரபு வார்த்தைகளைக் குறிக்கும் புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தினர்.

### ரோமன் எழுத்துமுறை

உருது எப்போதாவது ரோமானிய எழுத்துமுறையில் எழுதப்பட்டது. இது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகிறது. ரோமானிய முறையில் அச்சுவேலைகள் மிகக் குறைந்த விலையில் செய்யப்பட்டது. இன்று உரை செய்தி மற்றும் இணைய சேவைகள் அதன் சொந்த பாணி மற்றும் மரபுகளைக் கொண்டு வளர்ந்து செல்வாக்குப் பெற்றுள்ளது.

பாகிதானிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உருது பேசும் இளைய தலைமுறை இணையமொழி ஆங்கிலம் என்பதால் இண்டர்நெட் பயன்பாட்டிற்கு ரோமானிய உருது முறையையே பயன்படுத்துகிறார்கள். பாகிதானின் இலாமாபாத், இந்தியாவில் டில்லி ஆகிய பகுதிகளில் இணையப் பயன்பாட்டிற்கு ரோமானிய உருது முறையையே பயன்படுத்துகின்றனர். இவர்களது பேச்சுமுறை ஒரேமாதிரியானவை ஆனாலும்கூட எழுத்துமுறையில் வேறுபாடு காணப்படுகிறது. இன்றைய இளம் தலைமுறையினர் ஆங்கிலவழிக் கல்வி கற்பவர்களாலும், மேற்குப் பகுதியில் வசிப்பவர்களாலும் உருதுமொழி பேசமுடிகிறது. ஆனால் பாரம்பரிய அரபுமுறையில் அதனை எழுதமுடிவதில்லை.

பாகி தானின் கராச்சி, லாகூர் மற்றும் வட இந்தியாவில் மத்திய பிரதேசம், உத்திரப்பிரதேசம், ராஜ தான் ஆகிய பகுதிகளில் வசித்துவரும் கிறித்தவர்கள் ரோமன் எழுத்து முறையையே பயன்படுத்துகிறார்கள். 1960 முதலே பாகி தான் மற்றும் இந்தியாவில் வாழ்ந்துவரும் கிறித்தவர்களால் ரோமன் உருதுமுறை பயன்படுத்தப் படுகிறது. விவிலிய அமைப்பானது ரோமன் உருது விவிலியத்தை 1960 இல் வெளியிட்டது. கிறித்தவ ஆலயங்களில் பாடல் புத்தகங்களும் ரோமானிய உருது முறையிலேயே இருந்தது. இதனால் ஆங்கில மற்றும் இந்தி அளவு ரோமன் உருது முக்கியத்துவம் பெற்றது.

**இலக்கியம்**

சமீப நூற்றாண்டுகளாக உருது இலக்கிய மொழியாகக் கருதப் படுகிறது. பாரசீக மொழி வட இந்திய மு லீம்களின் நீதிமன்ற மொழியாக இருந்தது. இருப்பினும் பிற்கால வளர்ச்சிக்குப் பின் உருது இலக்கியம் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டது.

**உரைநடை**

உருது அதிகமாக இசுலாமிய இலக்கியம் மற்றும் சாரியா காணப்பட்டது. இந்த மொழியில் குரான் மொழிபெயர்க்கப்பட்டது. ஹாதித் ஃபை, வரலாறு, ஆன்மீகம், சூஃபிசம் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களும் இம்மொழியில் இடம்பெற்றன. அரபி மற்றும் பாரசீக மொழியின் புத்தகங்கள் அதிகமாக உருதில் மொழிபெயர்க்கப்பட்டன.

தெற்கு ஆசியாவில் உள்ள மு லீம்களால் மலிவுவிலை பதிப்புகள் உருது மொழியில் வெளியிடப்பட்டன. இப்பகுதியில் இசுலாம் தொடர்புடைய இலக்கியங்கள் அனைத்தும் பிறமொழியைக்காட்டிலும் உருது மொழியிலேயே இடம்பெற்றன. முக்கியமான இசுலாமிய நூல்கள் அனைத்தும் உருது மொழியிலேயே காணப்பட்டன.

பண்டிட் ரூப் சந்தர் அவர்களால் சோதிட நூல்கள் 18 ஆம் நூற்றாண்டில் உருது மொழியில் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் லால்கிட்டாப் என்று அறியப்படுகிறது. இது வட இந்தியாவில் உள்ள சோதிடர்கள் மத்தியில் மிகவும் பிரசித்திபெற்ற நூல் ஆகும். இதனால் அப்பகுதியில் வாழ்ந்த பிராமணர்கள் அனைவரும் உருதுமொழியைப் பேசவும் எழுதவும் தொடங்கினர்.

உருதுமொழிக் கதைகள் உரைநடையில் இருந்தன. இம்மொழியில் சிறுகதைகள் சிறந்து விளங்கின. இவ்வளர்ச்சி இன்றைய காலப் போக்கில் குறைந்து காணப்படுகிறது. முன்சிபிரேம்சந்த், சாரட் ஹசன் மண்டோ, ரஞ்சிந்தர்சிங்பேடி, கிருஷ்ணன் சந்தர், குலாம் அப்பா ,

அகமது நாசிம் அப்பா ஆகியோர் இம்மொழியில் சிறந்த எழுத்தாளர்கள் ஆவர்.

**கவிதை**

18 ஆம் நூற்றாண்டில் முகலாய மற்றும் நவாப் பேரரசின் அரசவையில் அரசவைக் கவிஞராக விளங்கியவர் மிர்தாகிமிர் (1723 1810) ஆவார். இதேபோல் அல்மா முகமது இக்பால் பாகி தானின் தேசிய கவிஞர் ஆவார். தென் ஆசியாவில் உள்ள கவிதைகளில் உருதுமொழி கவிதைகள் முக்கியத்துவம் பெற்றவை. இம்மொழியில் கவிதை கலாச்சாரம் மிக பிரசித்திப் பெற்று விளங்கியது. 20 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த அறிஞர்களான ஹாலா அசரத், இமாம் அகமது ராசாகான் பாரல்வி ஆகியோர் எழுதிய கவிதைகள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவர்களுடைய கவிதைகள் ஒன்பது சரணங்களுக்கு மேல் காணப்பட்டன. ஒவ்வொரு சரணங்களும் அரபு, பாரசீக, இந்தி, உருது மொழிகளைக் கொண்டுள்ளன.

1947 இல் இந்தியா சுதந்திரம் அடைந்தபின் இந்தியாவின் முதன்மை மொழியாக இந்தி ஆனதுபோல் உருது மேற்குப் பாகி தானின் முதன்மை மொழியானது. இரு மொழிகளையும் இந்து தானி எனக் கூறும் மரபும் மாறிவிட்டது. உருது மொழியில் மிகச் சிறந்த கவிஞராக முகமது இக்பால் கருதப்படுகிறார். இவர் உருதில் எழுதிய கவிதைகள் பல பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பாகி தானின் முதல் அதிபராய் வந்த முகமது அலி ஜின்னாவும் இக்கவிஞரும் சமகாலத்தவர் ஆவர்.

## துணைநூற்பட்டியல்

### தமிழ்

அகத்தியலிங்கம், ச., 1987, **உலக மொழிகள் II**, பொன்னகம், அண்ணாமலைநகர்.

அகத்தியலிங்கம், ச., 1999, **திராவிட மொழிகள்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

அகத்தியலிங்கம், ச., 2000, **திராவிட மொழிகள்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

அகத்தியிலிங்கம், ச. 2000, **இந்திய மொழிகள்**, மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை.

இயக்குநர், 1999, **தமிழ்மொழி வரலாறு**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

இரத்தினசாமி, 2002, **இந்திய மொழிகள் வரலாறு**, ஸ்ரீவேலவன் பதிப்பகம், சிதம்பரம்.

கோவிந்தன் (மொ.ஆ.), 2011, **உலக மொழிகளில் தமிழ்ச் சொற்களும் இலக்கணக் கூறுகளும்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மனோன்மணி, **ஜப்பானிய மொழியும் தமிழும்**.

சண்முகநாதன், அ., 1997, **தமிழ்மொழி இலக்கண நூல் இயல்புகள்**.

சுப்பிரமணியன், ச.வே., 2004, **திராவிட மொழி இலக்கியங்கள்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

சுப்பிரமணியன், 1938, **பண்டைத் தமிழ் எழுத்துக்கள்**.

சுப்பையா, அரங்க, 2003, **உலக மொழிகளின் வரலாறு**, குகன் பதிப்பகம், வடுவூர்.

சீனிவாசன், ரா., 2012, **மொழி ஒப்பியலும் வரலாறும்**, சாரதா பதிப்பகம், சென்னை.

டேவிட் பிரபாகர், ப., 2004, **தமிழ் மொழி அறிமுகம்**, வி.வி.வெளியீடு, சென்னை.

பொற்கோ, 1973, **இலக்கண உலகில் புதிய பார்வை**.

மனோகரன், ச., 2012, **திராவிட மொழிகளும் திராவிட மொழி ஆய்வுகளும்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மாகறல் கார்த்திகேயனார், 2001, **மொழிநூல்**, சாரதா பதிப்பகம்,

சென்னை.

மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., *2013* **தமிழ்மொழி வரலாறு**, சாரதா பதிப்பகம், சென்னை.

மோசசு பொன்னையா, *1972*, **தமிழ்மொழி வரலாறு**.

வரதராசன், மு., **மொழி வரலாறு**.

**ஆங்கில நூல்கள்**

Andronov, M.S., 1970, **Dravidian Languages**, Nanka Publishing House.

Berkeley, 1965, **Sumerian A Dravidian Language**.

Breton, L., Ronald, J., 1997, **Atlas of the Languages and Ethnic Communities of South Asia**, New Delhi, Sage Publications.

Caldwell, Robert, 1961, **A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages**, University of Madras, Chennai.

Emeneau, M.B., 1967, **Dravidian Linguistics, Ethnology and Folktales**.

Gray, Louis, H., 1939, **Foundations of Language**, New York.

Jayaram, B.D. and Rajyashree, K.S., 2000, **State Official Languages Policy Implementation**, CIIL, Mysore.

Pope, G.U., 1895, **Tamil Grammar**, S.S.S.W., Tinevelly.

